FORMULA HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

தாய் வீடு
THAIVEEDU ஒக்டோபர் 2010 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




படம்: கணா ஆறுமுகம்

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

வீடு வியாபார நிலையம் வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
PROPERTY MAX Realty Inc. Brokerage
Buying - Selling - Investing
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடயங்களுக்குமான பத்திரிகை



"MAKING YOUR DREAM HOME COME TRUE"

HOMELIFE HIGHER STANDARDS

மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"



## HomeLife Today Realty Ltd., Brokerage*


*Independently Owned and Operated


31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6

Phone: 416-298-3200 Fax: 416-298-3440

Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com

Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com


### Simcoe/Conlin

**$279,000**
3+2 Bedrooms, 4 Washrooms Great Location. Walking Distance To U of Ontario & Durham College. Close To All Amenities, Parks & Public Transit.

### Middlefield/Denison


**$359,000**
Sold for $369,000


### Middlefield/Denison

**$429,000**
4 + 2 Bedrooms, 4 Washrooms Absolutely Well Maintained Detached House. Ext Driveway With 4 Car Park. RenoKitchen. Throughout! close to all amenities.

### Warden/Steeles

**$389,000**
3+1 Bedrooms, 3 Washrooms **#18**Immaculate**Renovated From Top To Bottom**Upg Maple Hardwood *Rich Dark Oak Strcse *Pot Lights Ground Flr & Bsmt

### Birchmount/Ellesmere


**$349,000**
4 Bedrooms, 2 Washrooms,Quiet Neighbourhood, Eat-In Kitchen Walk-Out To Large DeckCloseTo Ttc, Highway, Shopping, School, Library&Church. 2-Yr Old Roof.


### Brimley/Highglen

**$399,999**
3+1 Bedrooms, 4 Washrooms Good Family Home In A Demand Area of Markham, Direct Access to A 2 Car Garage.Centrally Loc Close To Schools & Shopping.

### Steeles/Mccowan

**$415,000**
3 Bedrooms, 3 Washrooms Location! Location! Location! *Ready To Move In* In Desirable Area, All Brick detached Home Close to all amenities and more.

### Steeles Ave / Markham Rd

**$419,900**
3+1 Bedrooms, 3 Washrooms, Very Well Maintained,Bright & Gorgeous Detached Corner House Wth Fin Basement, Backing To Strip Plaza No House On The Back .

### Mccowan/Denison

**$439,900**
4+2 Bedrooms, 4 Washrooms ***Good Investment Property*** Demand Location Exclnt Floor Plan Bsmnt Apartment with sep Ent Near To School, Transit, Park .

### Elson/Coppard

**$445,000**
4+2 Bedrooms, 4 Washrooms Detatched House. Prime Location! Double-Car Garage, Fin Bsmt !. Steps To School, Park And Ttc! Near To Wal-Mart, Super-Market.

### Meadowvale/Sheppard/401

**$159,900**
2 Bedrooms, 2 Washrooms 1240 Sq Ft. Bright And Spacious. Two Entrances To Eat-In Kitchen Close To Shopping, Ttc, Hwy 401, Rouge Valley Park, Metro Zoo.

### Mclevin/Neilson

**$164,900**
2 Bedrooms, 2 Washrooms Sub Pent House 2 B/R With A Open Balcony !Unobstructed View from all Rms! Newer Carpet,Range Hood Close To All The Amenities.

### Hwy 10 / Bovaird

**$344,900**
3+2 Bedrooms, 3 Washrooms Semi In Sought After Location, Oak Spiral Staircase. Master Has Ensuite & His & Her Closets, Upstairs Hallway Hrdwd Flr.

### Neilson/Mclevin

**$169,500**
2 + 1 Bedrooms, 2 Washrooms Bright & South West Corner Unit Ceramic Floor Solarium,Can be Converted To Bdrm,New Laminate Flr, close to all amenities.

### Neilson / Morning Side / Finch

**$439,900**
4 Bedrooms, 3 Washrooms All Brick Two Storey Detached Family Home*Immaculately Kept* Hardwood Floors In Lr+Dr*Grand Foyer*Large Front Porch*.

### Meadowvale/Sheppard

**$449,000**
4 Bedrooms, 3 Washrooms Spacious Family Home Built By Chiavatti! Loaded With Recent Upg,SS Appliances,Roof (2001). Steps to the Ttc & all Amenities.

### Markham / Steeles

**$456,800**
4 Bedrooms, 3 Washrooms 5 Years Old House, On the Rouge, Backs Onto A Ravine, Close To 401, Schools And Golf Course, 5 Pc Master Ens. With Jaquzi.

### Neilson / Finch

**$473,900**
4+2 Bedrooms, 4 Washrooms Nicely Located Next to School & Park, Move In Condition, Close to all Amenities, Large Eat In Kitchen & Full Bsmt Appartment.

### Morningside / Finch Ave E.

**$474,900**
4 + 3 Bedrooms, 3 Washrooms Spacious Brick Home With 2 Bdrs Sep Laundry for Bsmt, W/O to backyard, New Hardwood & Laminate Floors, Prof Landscape.

### Kennedy / Eglinton

**$429,500**
4 Bedrooms, 3 Washrooms Spectacular 2 Storey End-Unit, 'Pacifica' Model, 4 Pc Ensuite With Oval Tub,One Minute to Hwy 403, 410 & 401 & more.

www.Homelifetoday.com

Thinking of a career change?
Or just starting out in Real Estate?



**HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU**

Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com

**VN Financial Service** Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

## 'ஊழல்' பதக்கம்

பொதுநலவாய விளையாட்டுப் போட்டி நடக்கப்போகிறதென்றால் எந்த நாடு, எந்தப் பதக்கத்தை வெல்லப்போகிறது என்ற பரபரப்பு நிலவுவது வழக்கம். ஆனால் இந்தியாவில் நடைபெறும் பொதுநலவாயப் போட்டி இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அதுவும் போட்டி நடக்குமா நடக்காதா என்று விவாதிக்கும் அளவுக்கு போட்டி ஏற்பாடுகள் போட்டிபோட்டுக்கொண்டிருக்கின்றன.

போட்டி நடைபெறுமுன்பே 'ஊழல்' பதக்கத்தை பெற்றுக்கொண்டது இந்தியா.

ஏழாண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டன பணிகள். மலைக்க வைக்கும் அளவுக்கான ஊழல்கள் அம்பலமாயின.

பத்துக்கோடி ரூபா செலவில் கட்டிய நடைபாலம் போட்டி துவங்கும் முன்பே இடிந்து விழுந்தது. குத்துச்சண்டை அரங்கில் உள்ள அலுமினிய கூரைகள் விழுந்திருக்கின்றன. அறுநூறு கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட நேரு விளையாட்டரங்கத்தின் கூரை, அரங்கு திறக்கப்பட்ட நாளில் இருந்து மழைக்கு ஒழுகிக்கொண்டிருக்கிறது.

கட்டிமுடிக்கப்பட்ட வீரர்கள் தங்குமிடங்கள் பாவனைக்குதவாதவை என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது.

சில வீரர்கள் போட்டியிலிருந்து விலகியிருக்கிறார்கள். சில நாடுகள் போட்டிக்கு வீரர்களை அனுப்புவது குறித்து மறுபரிசீலனை செய்யப்போவதாகச் சொல்லியிருக்கின்றன.

வீரர்கள் தங்கும் விடுதியினுள் நாகபாம்புகள் பிடிபட்டிருக்கின்றன. பாம்புகளைப் பிடிப்பதற்கும் குரங்குகளை விரட்டவுமென, பாம்பு பிடிப்பவர்களையும் குரங்குகளையும் இந்திய அரசு வேலைக்கமர்த்தியுள்ளது.

ஆரம்பத்தில், 655 கோடி செலவாகும் என்று கருதப்பட்ட பொதுநலவாய போட்டியின் செலவுக்கணக்கு இப்போதைக்கு 17,000 கோடி. அதிகரிப்பு இன்னும் முடிந்தபாடில்லை.

ஒன்றன்பின் ஒன்றாக வரும் ஊழல்களும் அரைகுறையாக முடிக்கப்பட்டுக் கிடக்கும் பணிகளும் வெளிநாட்டவர் முன்னால் இந்தியாவை ஏளனத்துக்கும் கேலிக்கும் உள்ளாக்கி இருக்கும் சுகாதாரக் குறைவான ஏற்பாடுகளும் அதிர்ச்சியில் உறைய வைக்கின்றன.

இவை எல்லாவற்றிற்குமான முதன்மைக் காரணம் நாம் சமூகமாகச் சிந்திப்பதில்லை. நாம் நமக்காகமட்டுமே சிந்திக்கின்றோம். இப்படிச் சிந்திப்பதென்பது பலரிடமும் பல அமைப்புக்களிடமும் பல்கிப் பெருகியிருக்கின்றது.

நாம் எப்போது சமூகமாகச் சிந்திக்கத் தலைப்படுகின்றோமோ, அப்போதுதான் ஊழல் இல்லாத தனியாளாக, அமைப்பாக, இனமாக, நாடாக வாழமுடியும்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

அட்டைப் படம்: கணா ஆறுமுகம்

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி), கருணா (கனடா).

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல், பிரணவன்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.


வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

ரொறன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியல் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## புற்றுநோய்... விழிப்புணர்வு!




சிவாஜினி பாலராஜன்


**உடலானது பலவிதமான கலங்களினால் ஆக்கப்பட்டது. கலங்கள் ஒவ்வொன்றுள்ளும் நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. கலங்கள் பிரிவதற்கும் புதுப்பிக்கப் படுவதற்கும் ஜீன்கள் தான் உத்தரவு வழங்குகின்றன. கலங்கள் தேவைக்கு அதிகமாகப் பிரிந்து கட்டுப்பாடின்றி பெருகிவிடுவதால் கட்டிகள் வளர்கின்றன. எல்லாக் கட்டிகளும் புற்று நோய்க் கட்டிகள் அல்ல...**




### இலையுதிர்கால...

- வேலா சுப்ரமணியம்

மாறிவரும் பருவகால நிலைக் கேற்றவாறு வீட்டுப்பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கவனயீனமாக இருந்துவிட்டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ளவேண்டி வரலாம்.




### உடல் உறுப்புகளின் தானம் -

- சிவ பஞ்சலிங்கம்


மரணத்தின் பின்பு, அழிந்துபோகும் உங்கள் உடல் உறுப்புக்களைத் தானமாகக் கொடுப்பதனால், இறந்தும் இறவாமையைப் பெறுகின்றீர்கள்.




### கணினி ஒரு கைவந்த கலை

- ஜிப்றி உதுமாலெப்பை

உலகின் பல்வேறு மொழிபேசும் மக்கள் இணைய வலையம் மூலமாக இணைக்கப்படுகிறார்கள். பலரின் கருத்துக்களை வேறு மொழியில் மொழியாக்கம் செய்யக் கூடியதாக சில வசதிகளை Microsoft 2007 கொண்டுள்ளது.




### உள்ளூராட்சித் தேர்தல்: சிறுபான்மையினரின் அக்கறையீனம்

- கந்தசாமி கங்காதரன்

குடியுரிமை பெற்ற ஒவ்வொருவரும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்கள். யாருக்கு வாக்களிப்பது என்பதை விட வாக்களிக்கவேண்டும் என்பதே முக்கியம்.

இராணுவக் குடியிருப்புக்கள்! இனப் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?
அ. கணபதிப்பிள்ளை 4

புகைப் பழக்க தோசம்
கந்தையா செந்தில்நாதன் 9

கனடிய வீட்டு சந்தையில் நேற்று இல்லாத மாற்றம்... என்னது?
கருணா கோபாலபிள்ளை 11

நீங்கள் முகவருக்கூடாகத் தொழில்...
என். மிலான் 12

அரசாங்கமும் பொருளாதாரமும்
அலன் சிவசம்பு 20

காப்புறுதியில் மாற்றங்கள்
செந்தூரன் புனிதவேல் 22

நிகழ்வுகள்நிலைதனிநபர் மதிப்பீடு (Perspective)
கந்தையா பரநிருபசிங்கம் 28

உலக அரங்கில் சீனா
மாறன் செல்லையா 31

ஈரப்பதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்
பிரபா சின்னா 44

அதிமேதையான பிள்ளைகள்
ஜீவா திசைராஜா 62

உங்களுக்கும் பாராட்டுதல் தேவை
ராகுலன் 67

மகிழ்ச்சிகரமாக சாலைப்பயணங்கள்
அதீசன் சர்வானந்தன் 69

வானத்திலிருந்து எரிகல்மழை பொழிந்தது
பொன் குலேந்திரன் 77

நாமே மூலமும் முதலும்
சி.சண்முகநாதன் 83

இரண்டு தாய்கள்
தமிழில் - என்.கே. மகாலிங்கம் 88

நான்கு பெரும் கிரேக்க நாடகாசிரியர்கள் - ஈக்கிலஸ் (Aeschylus) -
ஞானம் லேம்பட் 87

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# இராணுவக் குடியிருப்புக்கள்! இனப் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

- அ. கணபதிப்பிள்ளை -

விடுதலைப் புலிகளுடனான நிலமீட்புப் போர் முடிவடைந்து ஒன்றரை வருடங்களாகிய நிலையில் மீட்கப்பட்ட நிலத்தில் அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலேயே இலங்கை அரசு அங்கறை செலுத்திக் கொண்டிருக்கிறது. மீண்டும் ஒரு போர் ஏற்படுமானால் அதன் மூலம் அரசாங்கம் அடையப்போகும் இழுக்கு சிங்கள மக்களின் ஆதரவைப் பின்தள்ளிவிடுமோ என்ற ஆதங்கம் தான் இன்னமும் நடப்பு அரசியலாளர்களிடையே இருந்து வருகிறது.

தமிழர்களுக்கு இருக்கும் பிரச்சினையினை அரசாங்கம் விளங்கியிருக்கிறதோ இல்லையோ தனது ஆயுளைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்பவர்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதில் வியப்பேதுமில்லை.

இராணுவத்தைப் பலப்படுத்துவதில் இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் புதிய உத்தியாக இருப்பது இராணுவக் குடியிருப்புக்கள். இதனை நிரந்தர இராணுவ முகாம்கள் என்பதாக வரைவிலக்கணம் செய்து கொள்ளலாம்.

ஆரம்ப காலங்களில் இலங்கை அரசாங்கங்கள் கேந்திர முக்கியம் வாய்ந்த பகுதிகளில் படைத்துறை முகாம்களை ஏற்படுத்துவதில் மாத்திரம் கவனம் செலுத்தியிருந்தன. திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், கொழும்பு, காலி, வல்வெட்டித்துறை, காரைநகர், ஆனையிறவு போன்ற பகுதிகளில் படையினரின் முகாம்கள் இருந்தன படைத்துறையில் 1956ன் பின்பாகச் சிங்களவர்களின் ஆதிக்கம் அதிகமாகியதும் பொதுமக்களிடமிருந்து விலகிச் சற்று வேறுபட்ட தனித்தியங்கும் போக்கினைக் கொண்ட முகாம்கள் தமிழ்ப்பகுதிகளில் உருவாக்கப்பட்டன.

நிரந்தர முகாம்கள் என்றழைக்கப்படத்தக்க அத்தகைய முகாம்கள் தமிழர் விடுதலை இயக்கங்களின் தாக்குதல்களை அடுத்து அளவில் பெரியதாக மாற்றப்பட்டன நகர் காவலர் அதிரடிப்படை, கடற்படை, தரைப் படை ஆகியன மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்பட ஆரம்பித்தன.

விடுதலைப்புலிகளின் விரைவான வளர்ச்சியினை அடுத்து பாதுகாப்பு வலயம் என்பதன் அடிப்படையில் முகாம்கள் பெரிதாக அமைந்தன. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் 15 சதவீதமான நிலம் உயர் பாதுகாப்பு வலயம் என்பதனுள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக புள்ளி விபரம் காட்டியிருக்கிறது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற கொள்கை நீண்ட காலமாக கண்டனக் குரலெழுப்புதலுக் குட்பட்டதாக இருந்து வந்துள்ளது. சமாதான ஒப்பந்தங்களிலும் கூட உயர் பாதுகாப்பு வலயத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையே பிரதானமாக முன் வைக்கப்பட்டிருந்தமை மீண்டும் போர் வருமோ என்று சந்தேகத்துடன் செயற்பட்ட அரசாங்கங்களுக்கு ஒரு சவாலாக இருந்தது. இது கூடச் சமாதானம் ஏற்படுவதனைத் தடைசெய்த காரணியாகக் கொள்ளத்தக்கது.

தமிழர்களுக்கான தீர்வினைக் கேட்டு நிற்பவர்கள் எல்லோருமே பலப்படுத்தப்பட்ட படைத் தளங்களின் உருவாக்கங்களையே முதலில் எடுத்தாக வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கத் தவறவில்லை. உண்மையில் இப்படைத்தளங்கள் குடியிருப்புக்களுக்கு நடுவே இருந்தது மாத்திரமன்றி இருவேறு இனங்களின் பகைமையினைப் பிரதி பலிக்கும் கேந்திரங்களாகவும் உருவாக்கம் பெற்றிருந்தன.

இத்தகைய வழியில் உருவாக்கம் பெற்ற வெறுப்புணர்வுகளும், படைத்தளங்களில் இளைஞர்கள்பட்ட அவஸ்தைகளும் அவற்றினை அகற்ற வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை உருவாக்கியிருந்தன. ஆனால் அது நடைமுறையில் சாத்தியமானதொன்றல்ல என்பது தெளிவாகிற்று. அரசங்கங்களின் பண ஒதுக்கீடுகள் மேலும் மேலும் இராணுவத்தைப் பலப்படுத்துவதிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்தமை அவதானிக்கத்தக்கது.

இத்தகைய இராணுவ ஆக்கிரமிப்பானது வெளிப்படையாகத் தமிழர் மீது ஏவப்பட்ட இராணுவம் என்றதொரு பெயரினை பெற்றிருந்தது. யாழ்பாணக்குடா நாட்டில் இருந்த தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு ஒரு இராணுவ வீரன் என்ற விகிதாசாரத்தில் குடாநாட்டில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது. இது குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தையும் ஊடுருவலையும் தடைசெய்யும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்தியிருந்தாலும் வன்னியில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியினை தடுக்க முடியாத நிலையில் அரசுகளிருந்தன.

வன்னியைக்காக்க வல்லரசுகளின் உதவிகளை நாடிய அரசாங்கங்கள் பல்வேறு சமாதான உத்திகளை ஏற்படுத்தியிருந்தாலும் இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதிலும் இராணுவ தளபாடங்களை இறக்குமதி செய்வதிலும் கவனத்தைச் செலுத்தி வந்திருந்தன. தொடர் இராணுவ முகாம்களை அமைப்பதற்கும் அதற்குக் கடல் வழியிலும் ஆகாய வழியாலும் பாதுகாப்புக் கொடுப்பதற்கும் ஏற்படும் செல வினைவிடப் படையினரின் தொகையினை அதிகரிப்பது புதிய உத்தியாகப் பயன்படுத்தப்பட்டது. இது இந்திய அமைதிப்படை வருகையால் இலங்கையில் ஏற்பட்ட விளிப்புணர்வும் கற்பிக்கப்பட்ட பாடமும் எனக் குறிப்பிடலாம்.

விடுதலைப் புலிகள் தமது படைபலத்தினை உயர்த்துவதற்காக எத்தகைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்களோ. அதே மாதிரியான ஒரு முறையினை அரசாங்கமும் பின்பற்றத் தொடங்கியிருந்தன. சர்வ சேதத்துக்குப் புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பு சிறார்படையிற் சேர்கப்படுதல் ஆகியன மேற்கொள்ளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளைக் காட்டிக் கொண்டே அரசாங்கம் பணமும் சலுகையும் கொடுத்து சிங்கள இளைஞர்களைப் படைகளில் சேர்த்திருந்தது.

விவசாயப்படை என்ற அமைப்பு இளைஞரின் வேலையில்லாப் பிரச்சினையினைத் தீர்க்க வென 1965களில் முன்வைக்கப்பட்டிருந்தன. இவற்றின் அடிப்படையில் ஒருபுறம் இளைஞர் விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கம் பெற்றிருந்தன. இத்தகைய குடியேற்றங்கள் ஒருபுறம் வளர்ச்சியடைந்து இருந்தாலும் தொடர்ந்த அரசாங்க உத்தியோக மோகம் மறுபுறமாக இடதுசாரிப் புரட்சி போர் ஒன்றினைச் சிங்கள இளைஞர்களிடையே தோற்றுவித்தது. இலவசமாகக் கொடுக்கப்படும் எத்தகைய நடவடிக்கைகளும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் புதியதிருப்பத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. இலவச அரிசி கொடுத்து வாக்குப் பெறும் உபாயத்தைப் போட்டி போட்டுக்கொண்டு அரசாங்கங்கள் வாக்குக் கேட்ட காலங்கள் படிப்படியாக மாற்றம் பெற்றிருந்தன.


போர் என்றதன் பின்னணியில் இளைஞர்களை ஒன்றுபடுத்தும் ஒரு காரணியாக இதுவரை இருந்த இன உணர்வுகள் தொடர்ந்துப் பேணப்படுமா. இரு இனங்களின் மத்தியிலும் இளைஞர்கள் போரின் தாக்கத்தினை உணந்திருந்தார்களாயினும் அண்மைய போர் இனத்தின் மேலாகத் திசைதிருப்பப்பட்டது இளைஞர்களின் இனப்பகைக்குக் காரணமாயிற்று. பேரின் நிரந்தரத் தீர்வுக்கு எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அரசாங்கங்கள் தீர்மானிக்கின்றன என்பதனைப் பொறுத்து இளைஞர்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்பது ஒருபுறமும் பொதுவாகத் தமிழர்களின் வாழ்வுக்கு ஒரு விடிவு கிடைக்கும் என்பது மறுபுறமும் முக்கியம் பெற்றிருக்கிறது.

படையில் சேர்ந்த இளைஞர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர்களுக்கு மாத வருமானத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் பாதீட்டில் பணம் ஒதுக்கியிருந்தது. மேலும் ஒரு லட்சம் இளைஞர்களைப் படையிற் சேர்த்துக் கொள்ளுவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இராணுவத்தில் சேர்ந்தவர்கள் வெளியே விடப்பட்டு தொழில் துறையில் அல்லது அரசநிர்வாக சேவைகளில் வேலைக்கு அமர்த்துவற்குப்பதில் தொழிலற்றவர் வரிசையில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதும் அரசாங்கம் மீதான வெறுப்பு என்ற விளைவையே ஏற்படுத்தும் என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கிறது. அதற்கு இராணுவக் குடியிருப்புக்கள் ஒரு தீர்வாக அமையுமா என்றும் சிந்தித்தது.

இராணுவப்புரட்சி, இடதுசாரிகளின் புரட்சி, விடுதலை இயக்கங்களின் போராட்டம் என்பன தீர்க்கப்படாத பிரச்சினைகளின் வழியால் ஏற்பட்ட விளைவுகள் என்பது எல்லா அரசாங்கங்களும் உணர்ந்திருக்கின்றன. அத்தகைய விளைவுகளைத் திசை திருப்பக் கூடிய நடவடிக்கைகளில் இளைஞர்களினதும் இராணுவத்தினரதும் கவனத்தை ஒன்றில் களியாட்டத்தில் ஈடுபடுத்துவது அல்லது கட்டாய சேவையில் உட்படுத்துவது என்பது பொதுவாகக் கையாளக் கூடிய முறைமை. அத்துடன் இவ்விடயத்தில் அரசாங்கங்களின் மென்போக்கு பலவித குற்றத்துக்கும் வழிவகுக்கும் என்பது தவிர்க்கமுடியாது. இளைஞர்களுக்கு அனுபவிக்கும் உரிமையைக் கொடுப்பதும் ஆயுதம் கையாளும் உரிமையைக் கொடுப்பதும் கற்பழிப்பு, களவு போன்ற சமூகவிரோதச் செயல்களையே ஊக்கிவிக்கும்.

இவற்றிலிருந்து முற்றாக வேறுபட்டது வன்னியில் இராணுவக்குடியிருப்புக்கள் அதிகரிக்கப்படுதலாகும். முருகண்டிக்குக் கிழக்காக படையினருக்கென நூற்றுக் கணக்கான வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு விட்டதாக செய்திகள் வெளிவந்துவிட்டன. வன்னியில் ஐம்பதுகளில் ஏற்படுத்தப்பட்ட குடியானவர் குடியேற்றத்திட்டங்களில் இவ்விதம் ஒவ்வொரு திட்டத்-

10ம் பக்கம் பார்க்க...



# புற்றுநோய்... விழிப்புணர்வு தேவை!



சிவாஜினி பாலராஜன்

நீரிழிவு, இதய நோய், இரத்த அழுத்தம் இவ்வாறு பல்வேறு நோய்களுக்கிடையில் அடிபட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு தற்போது மிகவும் அதிருப்தியையும் பயத்தினையும் அளிப்பது புற்றுநோயாகக் காணப்படுகின்றது. வயது பேதம் பாராது ஆண் பெண் இருபாலரையும் மிகவும் சிக்கலுக்கு ஆளாக்கிவிடும் ஓர் ஆட்கொல்லியாக இந் நோய் பார்க்கப்படுகின்றது. இதனால் தற்போது உலகெங்கிலும் புற்றுநோய்க்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் கடந்த செப்டெம்பர் மாதம் 19ம் திகதி பிறிம்லி லோறன்ஸ் சந்திப்பில் அமைந்துள்ள தொம்சன் மெமோரியல் பார்க்கில் கனடியத் தமிழர் பேரவை ஒரு நிதி சேர்க்கும் நடையினை நடாத்தி இருந்தது. இந்நிகழ்விற்கு பெரும எவிலான மக்கள் தங்கள் பங்களிப்பினை வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அதுமட்டுமன்றி 35,000 டாலர்கள் நிதி சேர்க்கப்பட்டது. இவ்வாறான விழிப்புணர்வு ஏன் மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு முதலில் நாம் இந்த நோய்களைப் பற்றியும் அதற்குரிய பரிகாரங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

## புற்றுநோய் என்றால் என்ன?

உடலானது பலவிதமான கலங்களினால் ஆக்கப்பட்டது. இவ்வாறு பலகலங்கள் இணைந்து இழையங்களையும் இழையங்கள் பல சேர்ந்து இதயம், நுரையீரல் போன்ற உறுப்புகளையும் உருவாக்குகின்றது. கலங்கள் ஒவ்வொன்றுள்ளும் நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இந்த ஜீன்கள் தான் கலங்கள் பிரிவதற்கும் புதுப்பிக்கப் படுவதற்கும் உத்தரவு வழங்குகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் போல பழைய கலங்கள் அழிக்கப்பட்டு புதிய கலங்கள் உற்பத்தியாக்கப்படும். அதேபோல் சிதைந்த அல்லது பாதிக்கப்பட்ட கலங்கள் புதுப்பிக்கப்படும். இவ்வாறாக பழைய கலங்கள் புதுப்பிக்கப்படும் போது எத்தனை கலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. இவ்வகையான கலப்பிரிவு அல்லது பழைய தோல் உரிந்து புதியது உருவாக்கப்படுவதை தெள்ளத் தெளிவாக உள்ளங்கைகளிலும் உதடுகளிலும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஒரு கலத்திற்குள் எவ்வளவு பிரிய வேண்டும், எவ்வளவு வளரவேண்டும் எப்போது இறக்க வேண்டும் என்பது நிறமூர்த்தங்களினால் DNA கட்டுப்படுத்தப் படுகின்றது. நிறமூர்த்தங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களினால் அல்லது குழப்பங்களினால் இந் நிறமூர்த்தங்கள் கலப்பிரிவினைக் கட்டுப்படுத்தும் தன்மையினை இழந்து விடுகின்றன. இதனால் கலங்கள் தேவைக்கு அதிகமாகப் பிரிந்து கட்டுப்பாடின்றி பெருகிவிடுவதால் கட்டிகள் வளர்கின்றது. எல்லாக் கட்டிகளும் புற்று நோய்க் கட்டிகள் அல்ல. வளரும் கட்டிகள் அல்லது வளர்ச்சிகள் benign or malignant என இரண்டு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. இதில் முதல் கூறப்பட்ட benign எனப்படுவது புற்றுநோய்க் கட்டி அல்ல. இவ்விதமான கட்டிகள் பொதுவாக அகற்றப்பட்ட பின்னர் மீண்டும் வளர்வதில்லை. அத்துடன் இவற்றிற்கு உடலின் மற்றைய பாகங்களுக்கும் பரவும் தன்மை இல்லை. இரண்டாவது வகையான கட்டிகள் malignant எனப்படும். இவை புற்றுநோய்க்கான கட்டிகளாகும். இவ்விதமான கட்டிகள் உடலின் ஒரு பாகத்திலிருந்து சுலபமாக இன்னொரு பாகத்திற்குப் பரவக் கூடியன. இது metastasis என அழைக்கப்படும். எல்லாவிதமான புற்று நோய்களும் கட்டிகளை உருவாக்குவதில்லை. உதாரணமாக இரத்தப் புற்றுநோயில் கட்டிகள் வளருவதில்லை. மேலும் இவ்வாறு வளரும் கட்டிகள் அருகிலுள்ள இழையங்கள் கலங்களிலிருந்து தங்களுக்குத் தேவையான ஊட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும். சில சமயங்களில் இவை தங்களுக்கு குருதியினைப் பெற்றுக் கொள்வதற்குரிய பிரத்தியேக குருதிக் குழாய்களைக் கூட உண்டாக்கும் வல்லமை கொண்டவை.


## புற்றுநோய்க் கலங்களுக்கும் சாதாரண கலங்களுக்குமிடையிலுள்ள மிகப் பெரிய வித்தியாசங்களாவன:

- மற்றைய கலங்களின் பிரிவு வரையறுக்கப்பட்டது. புற்றுநோய்க்கலங்களின் பிரிவு வரையறுக்கப்படாத்து.
- மற்றைய கலங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளுக்கு இவை கீழ்ப்படிய மாட்டாது.
- கூட்டத்தில் இருப்பது கடினம். சுலபமாக விடுபடக் கூடியது.

## ஒரு கலத்தினை புற்றுநோய்க் கலமாக்குவதற்கு மூன்று விதமான பரம்பரை அலகுகள் உண்டு:

- கலங்களைப் பிரியத் தூண்டும் oncogenes.
- கலப்பிரிவினைக் கட்டுப்படுத்தும் tumour suppressor genes.
- அழிந்த கலங்களைச் சரிசெய்யும் DNA repair genes.

கலப்பிரிவானது வெவ்வேறு காரணங்களுக்காக ஏற்படலாம். நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு கலப்பிரிவினை இரண்டு விதமாகக் கூறலாம். இன விருத்தியுடன் தொடர்பான கலப்பிரிவானது மயோசிஸ் என்றும் வளர்ச்சி, கலம் புதுப்பித்தல் போன்றவற்றுடன் தொடர்பான கலப்பிரிவு மைற்ரோசிஸ் எனவும் அழைக்கப்படும். தாய்க்கலத்தினை ஒத்த மகள் கலங்கள் மைற்றோசிசின்போது உருவாக்கப்படும். கலப்பிரிவு இடம் பெறும்போது சாதாரணமாக ஒரு கலத்தின் பிரிவில் ஏற்படும் விகாரத்தின் விளைவினை இப் படம் காட்டுகின்றது





புற்று நோயானது ஆரம்பிக்கும் இடத்தை வைத்து பாகுபடுத்தப் படுகின்றது:

- **Carcinoma:** தோல் அல்லது உள்ளுறுப்புக்களின் திசுக்களில் ஆரம்பிப்பவை காசினோமா எனப்படும்.
- **Sarcoma:** எலும்பு, கசியிழையம், தசை, குருதிக்கலங்கள் அல்லது இணையங்கள் போன்றவற்றில் ஆரம்பிப்பவை சார்கோமா எனப்படும்.
- **Leukemia:** குருதியினைத் தோற்றுவிக்கும் கலங்களில் (blood-forming) ஆரம்பிப்பவை லூக்கேமியா எனப்படும்.
- **Lymphoma and myeloma:** immune system எனப்படும் பிறபொருள் எதிரிகளைச் சுரக்கும் இடங்களில் ஆரம்பிப்பவை லிம்போமா அல்லது மைலோமா எனப்படும்.
- **Central nervous system cancers:** மூளை அல்லது முள்ளந்தண்டு சம்பந்தப்பட்ட இடங்களில் ஆரம்பிப்பவை.

புற்றுநோய் உடலின் வெவ்வேறு பாகங்களில் ஏற்படுவதால் அப்பாகத்தின் பெயரைக் கொண்டே அழைக்கப்படுகின்றது. நுரையீரலில் ஆரம்பிக்கும் புற்றுநோயானது நுரையீரல் புற்று நோய் எனப்படும். பல்வேறு இடங்களில் புற்றுநோய் ஆரம்பிக்கின்றது. Bladder Cancer, Breast Cancer, Colon and Rectal Cancer, Endometrial Cancer, Kidney (Renal Cell) Cancer, Leukemia, Lung Cancer, Melanoma, Non-Hodgkin Lymphoma, Pancreatic Cancer, Prostate Cancer , Thyroid Cancer போன்று இன்னும் பல்வேறுபட்ட புற்றுநோய்கள் உண்டு.

## ஒரு இடத்தில் ஆரம்பித்த புற்று நோய் எவ்வாறு உடல் முழுவது பரவுவது சாத்தியமாகின்றது?

இந்தக் கட்டிகள் கீழ்வரும் வழிகளில் தீமைகளை ஏற்படுத்தலாம்.

- பக்கத்திலுள்ள இழையங்களுக்கும் கலங்களுக்கும் அழுத்தங்களைக் கொடுக்கலாம்
- நேரடியாக மற்றைய இழையங்களையும் அங்கங்களையும் தாக்கி அவற்றின் இயக்கத்தைக் குழப்பலாம்.
- தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட இழையங்களிலும் கலங்களிலும் தொற்றுக்களை ஏற்படுத்தலாம்.
- கட்டிகள் சில விதமான பொருட்களை வெளிவிடலாம் இந்தப் பொருட்கள் அருகாமையிலுள்ள கலங்களையும் இழையங்களையும் தாக்கி அழித்துவிடலாம்.

புற்றுநோயில் மிகவும் பயத்தை அளிக்கக் கூடிய நிகழ்வு பரவுகை metastasis எனப்படும். அதாவது பல ஆயிரக்கணக்கான malignant கலங்கள் அந்தக் கட்டிகளிலிருந்து குருதித் தொகுதிக்குள் விடப்படும். குருதித் தொகுதியில் இவை பிரயாணம் செய்துகொண்டிருக்கும் போதிலேயே பெரும்பான்மையான இக் கலங்கள் குருதி ஓடும் நாளங்களின் சுவர்களிலேயே அழிக்கப்படும். இத்துடன் எங்கள் உடலிலுள்ள பிறபொருளெதிரிகளின் Natural Killer (NK) கலத்தினால் அழிக்கப்படும். இவ்வாறு அழிக்கப்படாத கலங்கள் குருதியுடன் உடல் முழுவதும் சென்று வெவ்வேறு இடங்களில் கலப்பெருக்கத்தினைத் தூண்டி விடுவதாலேயே புற்றுநோய் உடலெங்கும் பரவுகின்றது. அத்துடன் புற்றுநோய்க்குரிய malignant கலங்கள் பக்கத்தில் இருக்கும் கலங்கள் அல்லது இழையங்களை ஊடுருவும் தன்மை கொண்டவை. இவ்வாறு இவை ஏனைய பாகங்களுக்கும் பரவக் கூடியதாக இருந்த போதிலும், எங்கு ஆரம்பித்தனவோ அந்தப் பெயர்கொண்டுதான் அழைக்கப்படும். நுரையீரலில் ஆரம்பித்து உடல் முழுவதும் பரவினாலும் நுரையீரல் புற்றுநோய் என்று தான் அழைக்கப்படும்.

புற்றுநோயின் பரவும் தன்மையானது என்ன விதமான புற்றுநோய், அதன் படிநிலை (ஆரம்ப நிலையா, முற்றிய நிலையா), எங்கு ஆரம்பித்தது (மூலம்) போன்ற இடத்தைப் பொறுத்துத் தான் இதன் பரவும் தன்மை இருக்கும். வெவ்வேறு வகையான புற்றுநோய்கள் வெவ் வேறு விதமாக தொழிற்படும். சில கலங்கள் இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். அப்படியான இடங்களில் புற்றுநோய் ஏற்பட்டால் மிக விரைவில் பரவி விடும்.

தொடரும்..

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|
| அலமண்டா Allamanda | செல்லையா சந்திரசேகரி | 17 |
| எவ்வளவு பொறுப்பற்ற செயல்? | மஞ்சுளா ராஜலிங்கம் | 19 |
| உங்கள் வீட்டை விற்பது எப்படி? | எஸ்.கே. பாலேஸ் | 24 |
| மருத்துவக் கேள்வி - பதில் | இராஜசேகர் ஆத்தியப்பன் | 26 |
| உங்கள் வெற்றி உங்கள் கையில் | சொக்கலிங்கம் பிரபாகரன் | 34 |
| கனடாவில் வீட்டுவிலை எத்திசையை நோக்கிச்...? | இரஞ்சன் பிரான்சிஸ் | 38 |
| காப்புறுதியில் ஏற்படும்... | சக்திவேல் | 42 |
| இதயத்தில் இடம் பிடிக்கும் இல்லம் | இலகுப்பிள்ளை சிறீநாதன் | 48 |
| முகப் பராமரிப்பும் சந்தேக நிவர்த்தியும் | சசி நரேன் | 51 |
| ஹோமியோபதி மனிதநேய மருத்துவம் | போல் யோசேப் | 52 |
| உலகின் ஒரேயொரு சொர்க்கபுரி | திரு மகேசன் | 57 |
| விழி திறக்கும் விஞ்ஞான சிந்தனை | சிவவதனி பிரபாகரன் | 58 |
| வன்னியில் சுயதொழில் வாய்ப்புச் சிறுகடன் திட்டம் | இராமநாதன் லம்போதரன் | 60 |
| மகாஜனாவின் குழந்தைக் கவிதைகளின் பாரம்பரியம் | குரு அரவிந்தன் | 70 |
| சிங்கள இனமும் சிங்கள... | முருகேசு பாக்கியநாதன் | 78 |
| இன்பம் எங்கே? | குமார் புனிதவேல் | 81 |
| வேலிக்குக் கிட்ட வரிசையாய் தென்னைமரம் | பொ. கனகசபாபதி | 89 |
| எதிர்பார்க்காத 'பளார்' | கே.எஸ். பாலச்சந்திரன் | 92 |
| குழந்தைகள் பாவம் | நிமால் நாகராஜா | 97 |
| நம்பமுடியாது! | அ. முத்துலிங்கம் | 99 |
| மணம் செய்வதே மருந்து! | வி. கந்தவனம் | 100 |
| 'நடிக மன்னன்' P. சண்முகலிங்கம் | ப. ஸ்ரீஸ்கந்தன் | 103 |
| கலைஞர் S.C. துரைசிங்கம் | | 105 |
| ஆயுட் காப்புறுதி! தேவைகளும் தீர்வுகளும் | சிறீதரன் துரைராஜா | 106 |

# LONDON LIFE

## With strong ratings for claims paying ability & financial strength.

## YOUR MORTGAGE PROTECTION POLICY

**Before you sign up for the Mortgage life policy you should shop around. The banks offer convenience, but individual insurance sold by life insurance companies offer portability, flexibility and a better deal.**

Freedom 55 Financial — A division of London Life Insurance Company

QUADRUS — Quadrus Investment Services Ltd.

**Offers Insurance & Banking Solutions**

***To help our clients reach their goals and dreams.***

**Jeganathan Balasundaram (Bala) B. Eng**



FINANCIAL SECURITY AND INVESTMENT REPRESENTATIVE
NATIONAL QUALITY AWARD WINNER
SERVING CANADIANS FOR THE PAST 15 YEARS

**Tel: (416) 291-0451, ext. 227**
**Cell: (416) 518-9489**
**Fax: (416) 291-3779**
Email: bala.balasundaram@freedom55financial.com

**Toll Free: 1-877-566-5433**

2075 Kennedy Road, Suite 300, Scarborough, ON M1T 3V3

**Representing London Life, Manulife & Sun life**

Freedom 55 Financial and design are trademarks of London Life Insurance Company. Quadrus Investment Services Ltd. and design are trademarks of Quadrus Investment Services Ltd. used with permission by London Life Insurance Company.

| *Questions to Ask Yourself* | *Bank Mortgage Insurance* | *London Life Insurance* |
|---|---|---|
| 1. Who owns the policy? | 1. The bank owns the insurance policy. | 1. Client owns their own Policy. |
| 2. Who controls the policy? | 2. The bank controls all the options. | 2. Insured has control of all the options. |
| 3. Can I guarantee I will always be covered? | 3. Your policy will lapse if your mortgage goes into arrears. | 3. Policy will not lapse if you miss a Mortgage payment. |
| 4. Who is my beneficiary? | 4. Your Beneficiary is the Bank. | 4. You can **name** any Beneficiary you want. |
| 5. What kind of coverage do I have? | 5. Your coverage is decreasing term with level cost. | 5. Level term coverage with fixed premiums. |
| 6. Can I be covered if I change mortgage holders? | 6. Moving the mortgage means reapplying for insurance. | 6. Your covered regardless of which institution you choose. |
| 7. How much insurance do I have? | 7. Face amount of the policy cannot exceed the value of the outstanding mortgage. | 7. Your coverage is determined by your needs and wants. |
| 8. What options do I have if I or my spouse dies? | 8. No option but to pay off the mortgage. | 8. Survivor can invest the money and use returns to pay the mortgage and still keep the capital. |
| 9. Can I convert my insurance to a permanent plan at any time? | 9. Not extendible. | 9. Your policy is renewable and convertible. |
| 10. Am I penalized for casual deposits? | 10. Penalizes casual deposits. | 10. Rewards casual deposits. |
| 11. Who guarantees that I am covered if I die? | 11. Underwriting is done at time of death and research can date back to birth. | 11. Underwriting is done at time of application and before a second premium is paid. |
| 12. Who is more expensive? | 12. Can be very expensive. | 12. We are very competitive. |



# RBC MORTGAGE SPECIALIST



- 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
- Switch your mortgage to RBC and save
- We will pay your legal & Switch fees on Switches*
- Builder rate hold up to 18 months
- Cash back options available*
- New Immigrants Programs
- Self-Employed? No income verification*
- Consolidate your debts to one low monthly payment

As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the **time** and **place** that is **convenient** for you.

RBC

# Ram Krish

Mobile Mortgage Specialist

Tel: **416-526-4996**

Email: ram.krish@rbc.com

* Some conditions apply.



- digi Media -

# இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு

## (Fall - House Maintenance)

நாம் எமது வாழ்நாளில் செய்திருக்கக்கூடிய பாரிய முதலீடு 'வீடு' என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே அத்தகைய முதலீட்டைப் பேணி உரிய முறைப்படி பராமரிக்க வேண்டியது மிக அவசியமானது. தவறும் பட்சத்தில் அல்லது கவனயீனமாக இருந்துவிட்டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ள வேண்டி வரலாம். மறுவார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள் போட்ட முதலீட்டிற்கு ஏற்ற முழுப் பலாபலனையும் அடைய முடியாதுபோகலாம். இதனைக் கருத்திற்கொண்டே வீட்டுப் பராமரிப்புப் பற்றி பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றது.

கனடாவில் மாறிவரும் பருவகால நிலைக்கேற்றவாறு நாமும் வீட்டுப்பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பருவ கால மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பராமரிப்பு வேலைகளை, முக்கிய 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

- வசந்தகாலப் பராமரிப்பு (Spring)
- கோடைகாலப் பராமரிப்பு (Summer)
- இலையுதிர் கால பராமரிப்பு (Fall)
- குளிர்காலப் பராமரிப்பு (Winter)

கடந்த இரு மாதங்களிற்கு முன்னர் இப்பகுதியில் 42வது தொடர் கட்டுரையில் கோடைகாலப் பராமரிப்பு பற்றி விளக்கப்பட்டிருந்தமை பலருக்கும் நினைவிருக்கலாம். காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு இந்தத் தொடரில் இலையுதிர் கலத்திற்குரிய பராமரிப்பு பற்றி பார்ப்போம்.

வழமைக்கு மாறாக இவ்வாண்டு குளிர்காலம் நேரகாலத்திற்கே தொடங்கிவிட்டதுபோலத் தெரிகிறது. எனவே அதற்கேற்றபடி எமது பராமரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். கோடைகாலத்தில் ஓடியாடித் திரிந்த நாம் வரப்போகும் 4-5 மாதங்களுக்கு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைபட்டுக் கிடப்பது மட்டுமல்லாது எமது நடவடிக்கைகளையும் குறுகிய வட்டத்துள் அடக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாது. அத்தகைய குளிர்காலத்திற்கு எற்றவாறு முன்கூட்டியே வீட்டினை, வீட்டுச் சூழலைத் தயார்படுத்துவதையே இலையுதிர்காலப் பராமரிப்பு குறித்துநிற்கின்றது. மறுவார்த்தைகளில் கூறுவதானால் வெள்ளம் வருமுன்னரே அணைகட்டுதல் அவசியமல்லவா?

### வெப்பமாக்கி Furnace

வீட்டில் இருக்கக்கூடிய இயந்திர கருவிகளில் வெப்பமாக்கி (Furnace) மிக முக்கியமானது. எதிர்கொள்ளப்போகும் குளிர்காலத்திற்கு ஏற்ப அதனை தயார்நிலையில் வைத்துக்கொண்டால் பெருங்குளிர்நேரத்தில் ஏற்படப்போகும் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான வீடுகளில் எரிவாயுவில் இயங்கும் (Gas Furnace) வெப்பமாக்கிகளே பயன் பாட்டில் உள்ளன. இத்தகைய வெப்பமாக்கிகளை குறைந்தது இரண்டு வருடத்திற்கொரு முறை தகுதிவாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் (Qualified Technician) மூலம் சரி-





பார்த்துக்கொள்வது நல்லது. சிலர் 'Winter Tune up' என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் தயார்படுத்திக்கொள்வதும் உண்டு.


எண்ணெயில் இயங்கும் (Oil Furnace) ஆக இருந்தால் ஒவ்வொருவருடமும் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.


### வீடும் விடியலும் - 55

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



- வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filter) 3 மாதத்திற்கொருமுறை மாற்ற வேண்டும். வெப்பமாக்கியின் தொழிற்பாடு குளிர்காலத்தில் தொடர்ச்சியாக இருக்கப்போவதால் முன்கூட்டியே இதனை மாற்றி தயார் நிலையில் வைத்திருத்தல் மிகப் பொருத்தமானது. ஆரோக்கியமான வாழ்விற்கு இச்செயற்பாடு மிக இன்றியமையாதது. தொய்வு, ஒவ்வாமை (Ashma, Alergy) போன்ற நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீட்டில் இருந்தால் வடிகட்டியை மாற்றும் போது ஏற்ற தரமான வடிகட்டிகளை






மாற்றுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதிய வடிகட்டியைப் போடும் போது வடிகட்டியில் போடப்பட்டிருக்கும் அம்புக்குறி குளிர்காற்றுப் பகுதியில் இருந்து வெப்பமாக்கி நோக்கி போகும் விதத்தில் போடப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- முதன்மை விளக்கு (Pilot Lamp) அணைக்கப்பட்டிருந்தால் அந்த விளக்கினைக் கொழுத்தி தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வெப்பமாக்கி 6-7 வருடத்திற்குட்பட்டதாக இருந்தால் Pilot Lamp இல்லாமல் இருக்கலாம். அதாவது புதிய வெப்பமாக்கிகளில் பொருத்தப்பட்டிருக்கும் Electronic Ignitor' தேவையான போது மட்டும் இயங்கி பொறியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தமை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### Heat Register

இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Duct Cleaning செய்வது நல்லது. தவறினால் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு அறைகளிலும் மற்றைய வீட்டுப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய வெப்பமூட்டும் வழிகளுக்கான தடைகளைத் (Heat Register) திறந்து சுத்தம் செய்து (Vacum) வைத்துக்கொள்வது நல்லது.

### தண்ணீர் குழாய்கள் (Pipes)

கோடைக்காலத்தில் முன்வளவு, பின்வளவு போன்ற இடங்களுக்கு இருக்கக்கூடிய தண்-





ணீர்க் குழாய்கள் மூலம் நீர்ப்பாய்ச்சி இருப் போம். தற்போது அவற்றின் பயன்பாடு அடுத்த கோடைகாலம் வரை இருக்காது. எனவே இவற்றுக்குரிய கட்டுப்படுத்திகள் (Control Valve) வீட்டிற்குள் உள்ள நிலக்கீழ் அறையில் இருக்கும். பொதுவாக முன்பக்கத்திற்கு ஒன்றும் பின்பக்கத்திற்கு ஒன்றுமாக 2 கட்டுப் படுத்திகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து இறுகப்பூட்டிவிடுதல் மிக அவசியம். தவறும் பட்சத்தில் குளிர்காரணமாக தண்ணீர் உறை நிலைக்குச் செல்லும் போது குழாய்கள் வெடித்து வீட்டிற்குள் வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

அத்துடன் வெளியில் உள்ள பிளாஸ்ரிக் குழாய்களில் இருக்கும் தண்ணீரைத் திறந்து வடியவிடுதல் வேண்டும். அல்லது அத்தகைய குழாய்களிலும் வெடிப்பு ஏற்படுவதால் அடுத்த வருடம் பாவிக்க முற்படும்போது ஒழுக்கு ஏற்படுவதைக் கண்டு புதிதாக அவற்றை மாற்ற வேண்டிய நிலை உருவாகும்.

### குளிரூட்டி (AC)

20ம் பக்கம் பார்க்க...

Home Inspection
✓ Purchase & sale Inspection
✓ Problem solving Inspection
✓ New home - Warranty inspection
Optimal Home Inspection Services
Vela Subramaniam
Certified Home Inspector
Tel: 416-786-0760
416-299-0700
E-Mail:homeinspectorvela@gmail.com



ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்
Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed








# ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090

# ஜூடி ஞானேந்திரன்
416.629.9797

Sales Representatives

HOMELIFE HIGHER STANDARDS



| | | | | | |
|---|---|---|---|---|---|
| AJAX | MARKHAM | TORONTO | S'BOROUGH | MARKHAM | MARKHAM |
|  |  |  |  |  |  |
| $ 359,000 | $ 529,000 | $ 749,000 | $ 399,000 | $ 519,000 | $ 429,900 |
| Detached 4 Bedroom 2 Full Washroom 7 Yrs Old Brick Home | Detached 4 Bedroom Home 3 Full Washroom On Highglen, Superb Loc... | New Detached 4 Bedroom 3 Full W/R Fin. Basement Superb Location....... | Cul De Sac Detached 3 Bed Room Fin. Basement Superb Location....... | Detached 4 Bedroom 3 Full W/R Fin. Basement Superb Location....... | Semi Detached 3 Bedroom 2 Full W/R 16th Ave. Corner Lot Superb Loc..... |
| MARKHAM | S'BOROUGH | MARKHAM | S'BOROUGH | S'BOROUGH | S'BOROUGH |
|  |  |  |  |  |  |
| $ 479,000 | $ 340,000 | $ 495,000 | $339,000 | $405,000 | $339,000 |
| Link 3 Bedroom Home 3 Full Washroom Beautifully Decorated.... | Semi Detached 3 Bedroom 2 Full W/R W/O Bsmt.. Superb Location..... | Detached 4 Bedroom 3 Full W/R Fin.Bsmt / 2 Br Superb Location....... | Perfect Family Home 3 Bed Room 2 Full W/R Newer &Superb Location. | Detached Bungalow.. 3 Bed Room Fin. Basement Totally Updated............ | Semi Detached Bungalow.. 3 Bed Room Fin. Basement Top To Bottom Updated.. |
| Queen St. E | Queen St. S | Queen St. S | Woodbine Ave. | S'BOROUGH | S'BOROUGH |
|  |  |  |  |  |  |
| $ 399,000 | $ 2.18 mill | $ 795,000 | $ 1.5 mill | $ 1.5 mill | $1800.00 |
| Elegant Thai Restaurant Profitable Business 49 Seats Totally Updated ..... | Fully Leased Plaza.... Anchor Tenant is RBC.... 7.5% Cap Rate... | 3 Acre Parcel Land with Huge Bungalow... Rural Residential Zoning. | 1.5 Acre Parcel Land with Bungalow & 30x40 W/Shop HWY Commercial Zoning. | Good Established Plaza.. Good Investment.... Totally Updated............ | New Plaza Located at High Traffic area. Fully Finished Location... Location... |

முதல் பரிசு BMW 300 SERIES CAR

இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE

மூன்றாம் பரிசு 42" LCD TV

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

# நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?

எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன

## அதிஷ்ட குலுக்கல் November 29, 2010 GTA Square at 4pm

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3, OFFICE: 416.321.6969

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

# புகைப் பழக்க தோசம்

## இதயம் மலர்கிறது - 26



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

புகைப் பழக்கம் தொன்றுதொட்டே பல சமுகங்களின் கலாச்சாரங்களுடன் இணைந்து விட்ட பழக்கமாக இருந்து வருவதைக் காணலாம். தமிழர்களின் திருமண வைபவங்கள், வீடு குடிபுகுதல், மரணச் சடங்குகளில் வெற்றிலை, பாக்கு என்பனவற்றுடன், புகையிலை பீடி, சுருட்டு, சிகரட் என்பன பரிமாறப்படுகின்றன. பல வீடுகளில் வெற்றிலைத்தட்டத்தில் நறுக்கப்பட்ட புகையிலைத் துண்டுகள் இருப்பதைக் காணலாம்.

வெற்றிலையை எடுத்து அதன் காம்பு, நுனி என்பனவற்றை அகற்றிவிட்டு சுண்ணாம்பு தடவி மடித்து அதன் மீது பாக்குச் சீவல் இட்டு மீண்டும் மடித்தபின்பு அதை ஒரு கலை உணர்வுடன் பல பெரியவர்கள் உண்பதை அவதானித்திருப்பீர்கள். உணவின் பின்பு வாய் மணத்தைப் போக்குவதற்காக அத்துடன் ஏலரிசி அல்லது கராம்பு என்பனவற்றைச் சேர்த்தும் இருப்பார்கள் புகையிலைத் துண்டுகளைத் தவிர்த்து வெற்றிலையை மாத்திரம் சுண்ணாம்பு, பாக்குடன் உண்ணும் பொழுது சில சத்துக்கள் உடலில் சேருகின்றன. மாதம் ஒரு தடவை பாவிப்பது தீங்கைத்தராது. தினமும் பாவிக்கும் பொழுது பாக்கில் உள்ள சில குணாதிசயங்கள் தீங்கை ஏற்படுத்தலாம்.

புகையிலையில் உள்ள ‘நிக்கொற்றீன்’ என்ற பதார்த்தம் பழக்க தோசத்தை ஏற்படுத்திவிடுகின்றது. சுருட்டு, சிகரட் என்பனவற்றைப் புகைக்கும் பொழுது அதில் இருந்து வெளியேறும் நூற்றுக்கணக்கிலான நச்சுப் பதார்த்தங்கள் புகைப்பிடிப்பவரை மட்டும் பாதிப்பதில்லை. அருகில் நிற்கும் எல்லோரது சுவாசப்பைக்குள்ளும் அவரால் வெளியிடப்படும் புகை மூலம் பல நஞ்சுகள் சென்றடைகின்றன.

வாகனம், வீடு, வேலையிடங்கள், வைத்திய சாலைகள் என்பனவற்றில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. காற்றோட்டமில்லாத மூடப்பட்ட வாகனத்தில், வீட்டில் புகைக்கும் பொழுது அப்புகை வாகனத்தினுள்ளும், வீட்டினுள்ளும் தேங்கி அங்கு பயணிப்பவர்கள், வாழ்பவர்களின் சுவாசத்தை அடைகின்றது. வீட்டினுள் ஒருவர் புகைத்தாலே அவ்வீட்டில் உள்ள எல்லோரும் புகைத்தத்திற்குச் சமன்.


புகையில் உள்ள நஞ்சுகள் மகப்பேற்றை எதிர் பார்த்திருக்கும் தாயின் சுவாசப்பையினுள் சென்றடையும் பொழுது அந்நஞ்சுகள் இரத்த ஓட்டத்தில் கரைந்து கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையைப் பாதிக்கின்றது. புகைப்பதனால் வரும் நச்சுப்பதார்த்தங்கள் சுவாசப்பையில், தொண்டையில் புற்றுநோயை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் சில சமயங்களில் அந்நச்சுப் பொருட்களால் உடலின் வேறு பகுதிகளும் பாதிக்கப்படுகின்றன.

புகைப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டவர்கள் இலகுவில் அப்பழக்கத்தை விடமாட்டார்கள். சில சமயங்களில் மனதைக் கட்டுப்படுத்தி புகைப்பதை நிறுத்தினாலும், வேறொருவர் புகைப்பதைப் பார்க்கும் பொழுது அல்லது ஒருவர் சிகரட்டைப் பகிர்ந்து கொள்வதற்காக சிகரட்பெட்டியை நீட்டினாலோ தனது கட்டுப்பாட்டை மறந்து உடனே மீண்டும் புகைப்பிடிக்கத் தொடங்கிவிடுவார். அடிப்படைக் காரணம் ‘நிக்கொற்றீன்’ என்ற பதார்த்தமாகும். புகைக்கும் பொழுது இப்பதார்த்தம் அன்னாரின் குருதியில் கரைந்து குருதிக் குழாய்களின் விட்ட அளவைச் சற்றுக் கூட்டுகிறது. இதனால் மூளைக்கு சற்றுக் கூடுதலாகக் குருதி விநியோகம் நடைபெறுகிறது. இதன் காரணத்தால் அவரது மூளை நல்லபடியாகத் தொழிற்படுகிறது. இது தற்காலிகமானதே. ஏனெனில் அந்த நிக்கொற்றீன் பதார்த்தம் குருதியில் இருந்து ஈரலினாலும், சிறுநீரகத்தாலும் அகற்றப்படுகின்றது, நிக்கொற்றீன் பதார்த்தத்திற்குப் பழக்கப்பட்ட மூளை மீண்டும் அதை எதிர்பார்க்கிறது. அப்போது தான் மூளைக்குருதிக்கலன் சற்று விரிவடைந்து குருதி விநியோகத்தைப் பெறும் பொழுது மீண்டும் திறம்படத் தொழிற்படுகிறது. மீண்டும் மூளை நன்றாகத் தொழிற்படுகின்றது என்பதை தவறாக விழங்கிக் கொள்ளக்கூடாது.

மூளையில் பழக்கதோசம் ஏற்பட்ட காரணத்தால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மறத்தலாகாது.

சில அலுவலகங்களில் தமது வேலைப் பழுவைச் சரிவரச் சிந்தித்து தீர்மான மெடுக்க முடியாத கட்டத்தில் காரியாலயத்திற்கு வெளியே சென்று புகைத்துவிட்டு வருவதை அவதானித்திருப்பீர்கள். அவர்கள் புகைப்பிடித்த பின்பு எத்தீர்மானங்களையும் நல்லபடி எடுக்கக் கூடியவர்களாகி விடுவதையும் அவதானித்திருப்பீர்கள். பழக்க தோசத்தால் அவர்கள் திறம்படத் தொழிற்பட மீண்டும் நிக்கொற்றீன் தேவைப்படுகின்றது.

## சிகரட் இருமல்




புகைப்பவர்கள் அடிக்கடி இருமுவதைக் கவனித்திருப்பீர்கள். ஏன் என்ற காரணத்தைக் கூற முதல் சுவாசப்பை பற்றிய சிறு விளக்கம் தேவைப்படுகிறது.

நாம் உள்வாங்கும் அல்லது வெளிவிடும் மூச்சு, மூக்கினூடாகவோ அல்லது வாயினூடாகவோ பரிமாறப்படுகின்றது. மூக்கினூடாகச் சுவாசிப்பது மிகவும் நல்லது. காற்று மூக்கினூடாக உள்ளே செல்லும் பொழுது மூக்கினுள் உள்ள மயிர்கள் பெரிய தூசுகளைத் தடுக்கின்றது. மேலும் உள்ளோக்கிச் செல்லும் பொழுது குளிர்காற்றுச் சூடாக்கப் படுகின்றது, சூட்டுக்காற்று உடல் வெப்ப நிலைக்குக் கொண்டு வரப்பட்டு காற்றின் ஈரப்பதன் சமன் செய்யப்பட்டு உள்ளே செல்லும் காற்றானது பெருவாதனாழி, சிறு வாதனாழி, சுவாசப்பைகள் போன்ற மென்மையான பகுதிகள் காற்றின் தட்ப, வெப்ப நிலைகளால் பாதிக்கப்படாதவாறு ஆக்கப்படுகின்றது. பெருவாதனாழி, சிறுவாதனாழி ஆகியவற்றின் உட்பகுதியில் சிறு சிறு மயிரிழைகள் கவிந்து காணப்படுகின்றன. காற்றில் நெற்பயிர்கள் ஆடுவது போல் இவை மேல் நோக்கி அதாவது தொண்டையை நோக்கி அதன் நுனிகள் அசைந்த வண்ணம் இருக்கும். நாம் உட்சுவாசிக்கும் பொழுது காற்றுடன் வரும் தூசுகள், கிருமிகள் என்பன இம்மயிரிழைகளில் தங்கிவிடுகின்றன அல்லது தடைப்படுத்தப்படுகின்றன. இதன் காரணத்தால் தூசுகளோ அல்லது கிருமிகளோ மேற்கொண்டு உள்ளே சென்று மென்மையாக சுவாசப்பைகளைத் தாக்கமாட்டாது.

மயிரிழைகளில் இப்படியாகத் தேங்கும் தூசுகள், கிருமிகள் என்பன மயிரிழைகளின் மேல்நோக்கிய அசைவினால் தொண்டைக்குள் கொண்டுவரப்பட்டு எம்மை அறியாமலேயே அவற்றை விழுங்கி விடுகிறோம் அல்லது துப்பிவிடுகிறோம். விழுங்கிய பகுதி வயிற்றினுள் செல்லும் பொழுது அங்குள்ள அமிலம் கிருமிகளைக் கொல்வதனால் எமக்குக் கிருமிகளால் பாதிப்பு ஏற்படுவதில்லை. எவ்வளவோ பல நன்மைகளைச் செய்யும் இந்த மயிரிழைகள் எம்மைக் காத்து நிற்கின்றன. இவற்றை நல்லபடியாகப் பேணுவதற்குச் சமபல உணவு தேவை. உயிர்ச்சத்து ‘A’ம் பிரதானமானது. அளவோடு பாவிப்பது நல்லது.

புகைத்திலின் பொழுது அநேகமாகப் பத்து அல்லது அதற்கு மேற்படச் சுருட்டு, சிகரட் என்பனவற்றைத் தினமும் புகைப்பவர்களின் மயிரிழைகள் நாட்கள் செல்ல இறந்து விடுகின்றன. இதன் காரணத்தால் இவர்கள் சுவாசிக்கும் காற்றில் உள்ள தூசுகள், கிருமிகள் என்பன வாதனாழிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு அவற்றை வெளிக்கொணர முடிவதில்லை. இவர்களது உட்சுவாகத்தில் சேரும் தூசுகளும், கிருமிகளும் சிறிது, சிறிதாக சுவாசப்பைகளை நோக்கி நகரும். அப்பொழுது அவற்றின் உட்பகுதிகள் உறுத்தல்களுக்கு உள்ளாகி, இத்தகைய பிறபொருட்களை சுவாசப்பையானது வெளிக் கொணர முயலும்பொழுது இருமல் உருவாகிறது. இவ் இருமல் தொடர்ந்து பல வருடங்களுக்கு இருக்குமாயின் உள்உடல் பிதுங்கும் நோய்கள் (Hernia), மூலந்தள்ளுதல் (Piles) வாதனாழி விரிந்து அகலுதல் (Bronchiectasis) போன்ற பல சிரமங்களுக்கு ஆளாகலாம்.

புகைப்பிடிப்பவர்களின் சுற்றயல் குருதிக் குழாய்களில் கொழுப்புப்படிவது கூடுதலாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கால்களில் இவ்வாறு படியும் பொழுது Intermittent Claudication என்ற PVD நோயினால் அவதியுறுகிறார்கள். அதாவது நடந்தோ, துவிச்சக்கர வண்டியிலோ செல்லும் பொழுது காற்தசைகளுக்குப் போதிய இரத்தம் போகாமையால் இடையில் நின்று சற்று ஆறுவார்கள் பின்பு குருதிச் சுற்றோட்டம் சரிவர மீண்டும் நடப்பார்கள். ஆனால் அப்படி நடந்து செல்லும் பொழுது மீண்டும் தசைகளுக்குரிய குருதியைச் சரிவரப் பாச்ச முடியாமல் மீண்டும் இடையில் நின்று ஆறுதல் எடுத்தபின்பு நடக்கவோ, துவிச்சக்கர வண்டியில் மீண்டும் ஏறிப் பயணிக்கவோ செய்வார்கள்.

புகைப்பிடிப்பவர்களை அப்பழக்க தோசத்தில் இருந்து காப்பாற்றுவதற்கு வைத்தியர்கள் செயற்கை முறையில் நிக்கொற்றீன் படையை (Nicotine Patch) தோலில் ஒட்டிவிடுவார்கள். இதில் இருந்து தோலினூடாக Nicotine என்ற பதார்த்தம் உடலிலுள் செல்லும் பொழுது புகைக்க வேண்டும் என்ற ஆவல் குறைந்து வரும். இந்த மருந்துடன் படிப்படியாகத் தகுந்த ஆலோசனைகளும் வழங்கப்படும். புகைத்தலுக்குச் செலவாகும் பணம், குடும்ப வருமானம் பற்றிய பல ஆலோசனைகள் மூலம் படிப்படியாக அந்நபரை மீட்டுவரலாம். புகைத்தலால் ஏற்பட்ட பாதிப்பு சிறிதாக இருந்தால், இறந்து போன மயிரிழைகள் மீண்டும் முளைத்துக் தொழிற்படத் தொடங்கும். புகைத்தல் பற்றி எழுத நிறைய உண்டு. இங்கு பிரதானமானவற்றை மட்டும் முன்வைத்துள்ளேன்.

போதை மருந்துகள், மதுசாரம், புகைத்தல் என்பனவற்றால் ஏற்படும் தீமைகளைக் குறிப்பிட்டுள்ளேன் வாசித்து உணர்ந்து செயற்படுங்கள்.

மதுப்பழக்க தோசம் பற்றிய கட்டுரையை வாசித்த வாசகங்கள் சிலர் இறுதிப் பகுதியை வாசித்து விட்டு, சிறிது மது அருந்தலாம். அது எவ்வளவு என்று கேட்டிருந்தார்கள்.

அதன் அளவுகளைத் தருகிறேன்.

### ஒருமுறை குடிக்கும் அளவு:

| | | |
|---|---|---|
| பியர் | - | 12 அவுன்சுகள் |
| வைன் | - | 5 அவுன்சுகள் |
| மதுசாரம் | - | 1.5 அவுன்சுகள் |

பெண்ணாயின் ஒரு நாளைக்கு ஒரு தடவையும், ஆணாயின் ஒரு நாளைக்கு இரு தடவைகளும் பாவிப்பது பெரிய தீங்கைத் தரமாட்டாது. ஏற்கனவே மூக்கு முட்டக் குடிப்பவர்களுக்குக் கூறும் ஆலோசனை இது. அவர்கள் மதுவின் அளவை மட்டுப் படுத்தும் பொழுது ஈரல் அழற்சி நோய் ஏற்படாது.

மற்றும் வாகனம் ஓட்டும் பொழுது, மகப்பேற்றின் பொழுது, நீண்ட நாள் வியாதிகளுக்கு மருந்துகள் குடிக்கும் பொழுது மது அருந்தலே கூடாது.

மதுப்பழக்கம், வெறுப்பு, குரோதம், குடும்பத்தில் சச்சரவு, பொருளாதாரச்சரிவு, அமைதியின்மை, துர்க்குணம் என்பனவற்றை ஏற்படுத்துமாயின் அறவே மறப்பது மிகவும் நல்லது. புற்றுநோயால் அவதியுறுபவர்கள் மதுவை தவிர்த்தல் வேண்டும்.

மதுப்பழக்கக் கட்டுரையில் விடுபட்ட சில உண்மைகளைச் சுட்டிக்காட்டிய நேயருக்கு எனது நன்றி.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
Dr. Kandiah Senthilathan

● Standard First Aid & CPR Level "C" - 2 Days Program ● Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program ● CPR Level "A" - 4 Hours Program (Adult)
● CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant) ● CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**





**Brimley & Denison**
3+1 Bedrooms 4 Washroom



**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




**Morningside & Finch**
4 Bedrooms 3 Washroom




HomeLife Higher Standards

## HomeLife Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

RBC Financial Group

Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

## கனடிய வீட்டு சந்தையில்

# நேற்று இல்லாத மாற்றம்... என்னது?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

உலக வளர்ச்சி என்பது நாகரிக வளர்ச்சி எனலாம். இந்நாகரிக வளர்ச்சியின் படிக்கற்கள் பற்பல திசைகளில் வளர்ந்துகொண்டே வருகின்றது. மாற்றங்களை விரும்பியோ அன்றி வேறு வழியின்றியோ மனிதம் ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டது. இந்த வகையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் என்பதும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே செல்கின்றது. இது பற்றிய எத்தவொரு விழிப்புணர்ச்சியோ அல்லது அக்கறையோ இன்றி ஒரு சாரார் பாராமுகமாக தமது அன்றாடங்களை நிம்மதியாக கழித்தவண்ணம் இருக்க, மறு சாராரோ முதலீடுகள், பங்குச்சந்தை, வட்டி விகிதம், பணவீக்கம் என்று தமது தலைகளை தாமே உருட்டிய வண்ணம் உள்ளனர். தமது வீடுகளை முதலீடுகளாக மாற்றவல்ல ஓர் பொருளாதாரச் சந்தை கனடியசந்தை. இதற்கு அமைவாக எம்மவர்களில் பலர் சிறந்த அனுகூலங்களையும் கண்டுள்ளனர். இருப்பினும் நீர்க்குமிழி என்பது என்றாவது ஓர் நாள் உடைந்துதானே ஆகவேண்டும். அவ்வாறு ஓர் சந்தர்ப்பமானது இன்றைய சூழ்நிலையில் எமக்கு எவ்வாறான அனுகூலங்களை ஏற்படுத்தும்? அல்லது இதற்காக நாம் முன்னெச்சரிக்கையாக எவ்வாறு செயற்படலாம் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்னர், நாமும் எமது கடந்த காலங்களும் இச்சந்தையின் பரிமாண போக்குகளும் இன்றைய நிலைமையையும் அறிந்து கொள்வதே இன்றைய நோக்கம்.

கனடிய வீட்டுச் சந்தையின் பலம் பெற்ற போக்கில் விரிசல் கண்டுள்ளது. சமீபத்தில் கனடாவில் விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகின்றது. கடந்த கோடை காலத்தில் ரொறன்ரோ மற்றும் வன்கூவர் பகுதிகளில் இச்சந்தை நகர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. கடந்த 16 வருடங்களில் முதல் முறையாக Condo விற்பனை பெரும் வீழ்ச்சியினை தழுவியுள்ளது. மீள்விற்பனை துறையிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட HST (Harmonized Sales Tax) என்கிறார்கள் பொருளாதார நிபுணர்களும் வீடு விற்பனை துறையினரும். இவ்வரி அமுலாக்கலின் விளைவு கடன் வழங்கும் நிறுவனங்களும் வட்டி விகிதங்களும் கடும் மாற்றத்தினையும் இறுக்கமான போக்கினையும் தளுவத் தொடங்கியது. இந்த ஆண்டின் முற்பகுதியில் அதாவது வரி அமுலாக்கத்திற்கு முன்னர் அவசர கதியில் வீட்டுக் கடன்களும் பிற வங்கிக் கடன்களும் வழங்கப்பட்டன. ஆனால் இன்றைய காலங்களில் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. 'மீள் விற்பனைக்கான விலைகள் வீழ்ச்சியை தொட்டாலும், அடுத்த வருடம் கனடிய மக்களுக்கு பொருளாதார ரீதியாக வங்கிகளில் சிறந்த திட்டங்கள் வகுக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இவ்வருடத்தின் ஆரம்பகாலங்களில் ஏற்பட்ட மிதமிஞ்சிய பரிமாற்றங்கள் குறிப்பிடத்தக்க ஓர் மாற்றத்தினை வீட்டுச் சந்தையில் ஏற்படுத்தியதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கனடா அடமானக் கடன் மற்றும் வீட்டு வசதி வாரியம் (CMHC) குறிப்பிடத்தக்க மற்றும் பயனுள்ள வழிகளில் மக்களை வழி நடத்திச் செல்கின்றது. அவர்களின் முக்கிய நோக்கம் கடனாளிகளிடமிருந்து முதலீட்டாளார்களையும் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களையும் காப்பதேயாகும். கனடிய சட்டத்தின்படி எந்த வொரு வீட்டு கடன் வாங்குபவரும் சொத்தின் விலையில் 80% மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும், மீதிப்பணம் காப்புறுதி முறையில் பெறப்படும். இத்திட்டம் 1954இல் இருந்து அறிமுகம் செய்யப்பட்டு கடன் வாங்குபவருக்கும் கடன் வளங்குபவருக்கும் பாதுகாப்பு அரனாக நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது.



CMHC சில விதிமுறைகளை வீடு வாங்குபவர்களுக்கு முன்வைத்தது. ஆனால் கடந்த பத்து வருடங்களில் அவற்றை எல்லாம் குறைத்துக்கொண்டது. ஆனால் வீட்டுக்கடன் தவணைகளிலும் சீரான இடைவெளிக் கட்டணங்களிலும் தனக்கான இடத்தினை தக்கவைத்துக் கொண்டது. நீண்ட கால தவணை முறையில் கிடைக்கும் கடன்களால் மக்கள் வீடு வாங்குவதையும் அதன் விலைகளைப் பற்றியும் கவலை கொள்வதில்லை காரணம் மாதாந்த கட்டணம் மிக குறைந்து காணப்படுவதே ஆகும். இதுவே வீடுகளின் விலை ஏற்றத்திற்கு ஒரு காரணமாக அமைகின்றது என்கிறார் கனடிய பொருளியல் வல்லுனர் ஒருவர்.

'Over Night Rate' அதாவது கடன்களுக்கான வட்டியைத் தீர்மானிப்பது Bank of Canada வினால் அறிமுகப்படுத்தப்படும் இவ்வட்டி விகிதமாகும். நாட்டின் பொருளாதாரத்தினை சீராக வழிநடத்தி செல்வதில் இதன் பங்கு அதிகம். பத்து வருடத்திற்கு முன்பாக 5.75% ஆக இருந்த வட்டி விகிதம் திடீரென்று சரிந்தது. வியாபார நுணுக்கங்களில் வட்டி விகிதம் குறைப்பு என்பது சிறந்ததோர் ஆயுதம். வட்டி விகிதத்தை குறைத்து அதிக விற்பனையை மனதில் வைத்து மக்களை கடனாளி ஆக்குவது ஒருவகை, வட்டியினை அதிகரித்து கடன் தரும் நிறுவனங்களை தவிக்க விடுவது இன்னொருவகை. இதில் Bank of Canada தன் பணியை சரியாக செய்கின்றது. அதிலும் வீட்டுச் சந்தை பெரிதும் வட்டி விகிதத்தை சார்ந்தே இருக்கின்றது.

2008 மற்றும் 2009 இடையே National Bank House Price Index 8.4%ஆக குறைந்த போது கனடிய வீட்டுச் சந்தையின் வளர்ச்சி முடிவுக்கு வந்ததாக கருதப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டின் முதல் பகுதியிலேயே யாரும் எதிர்பார்க்கா வண்ணம் விற்பனை களைகட்டியது. April 2010இல் சராசரி வீட்டு விலையானது $334,000 இருந்தபோதிலும் விற்பனை அபரிமிதமாகவே இருந்தது. இம்மேம்பட்ட நிலையே, வீட்டுச் சந்தையானது கனடிய பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் என கங்கணம் கூறியது.

கனடிய வீட்டுச் சந்தையின் (பொருளாதாரத்தின்) இன்றைய நிலைக்கு இரண்டு பெரிய காரணிகளாக விளங்குவது Bank of Canada இரண்டாவது CMHC. IMPP (Insured Mortgage Purchase Program) மூலமாக CMHC 125 பில்லியன் அடமானக் கடன் தொகையினை ஏனைய கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டது. இது வழிவழியாக வந்த கடனளிக்கும் நிறுவனங்களின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கு பெரிதும் உதவியது. அதே வேளையில் கனடிய மக்களின் கடன் வாங்கும் போக்கினை அதிகரிக்கவும் செயற்படுத்தப்பட்டது.

IMPP திட்டமானது 2008இன் முதல் பாகத்தில் சில சிக்கல்களை சந்தித்து இருந்தாலும் வட்டிகளின் லாப காரணங்களினால் CMHC $69.4 பில்லியன் வருமானத்தினை ஈட்டியது. இதனால் இவ்வளவு பொருளாதார நெருக்கடியிலும் கனடா பல விமானங்களை வாங்க முடிந்தது. மேலும் பல முதலீடுகளும் செய்தது.

நீர்க்குமிழி என்றைக்கும் உடையும் என்பதில் ஐயமில்லை விலைவாசிகளில் ஏற்ற இறக்கங்கள், மற்றும் பொருளாதார வகையில் இலாப நட்டங்கள் ஆகியனவற்றை கனடா இன்றளவும் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறது. வீட்டின் விலைகள் இரட்டிப்பு செய்யப்பட்டன. ஆனால் தனிநபர் வருமானமோ முடக்கப்பட்டே தான் காணப்படுகின்றது. இக்காலகட்டத்தில் $427 பில்லியன் ஆக இருந்த அடமானக் கடன் $930 பில்லியனாக உயர்ந்தது. தற்போது Bank of Canada தனது நிலையை உணரத் தொடங்கியுள்ளது.

RBCஇன் கருத்துக்கணிப்பின் பிரகாரம் இந்த ஆண்டில் 91%ஆன வீட்டு உரிமையாளர்கள். வீட்டுச் சந்தையை சிறந்த முதலீடாகவே கருதுகின்றனர். அதுவும் 12 ஆண்டுகளில் இந்த ஆண்டு மிக அதிகமாகும் என நம்புகின்றனர். அதில் 25%ஆனவர்கள் தங்களின் வீடானது அவர்களின் வயதான காலங்களில் சிறந்த வருமானம் தரும் சொத்தாக ஆகும் என கருத்து தெரிவித்துள்ளனர். தற்போதய நிலையின் படி

*"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மானப் பெரிது"*

எனும் குறளுக்கு அமைவாக, கனடா விழித்துக்கொண்டது. Ottawa, IMPPஐயும் அதன் திட்டங்களையும் கடந்த மார்ச் மாதம் விலக்கிக்கொண்டது. CMHCஇன் கடன் திட்டங்களும் வரைமுறைகுள் கட்டுப்படுத்தப்பட்டன. ஏற்கனவே அமெரிக்காவில் NINJA (No Income, No Job, No Assert) மூலமாக படித்துக்கொண்ட பாடத்தின் விளைவாக தற்போதய நிலையில் சூழ்நிலையினை சிறப்பாக கையாண்டு வருகின்றது.

எது எப்படி இருந்தாலும் வருமுன் காப்போன் எனும் திட்டத்தில் கனடிய பொருளியலாளர்கள் முன்னணியில்தான் திகழ்கிறார்கள். அதுவே எமது பொருளாதாரம் முதுகெலும்புள்ள பெருளாதாரமாக காணப்படுகின்றது.

நன்றி நேயர்களே மீண்டும் பல தகவல்களுடன் தொடருவோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

# இராணுவக் குடியி...

4ம் பக்கத் தொடர்ச்சி...

திலும் பல நூறு வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டிருந்தன. அதில் பெரிய குடும்பத்தினரின் நிலத் தேவையினையும் பொருளாதாரத் தேவையினையும் அவை பூர்த்தி செய்யும் என்ற அடிப்படை நோக்கம் முக்கியம் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் மானியங்களும் உதவிகளும் அவர்கள் குடியிருப்பு இடங்களிலிருந்து பூர்விக கிராமங்களுக்குச் செல்லாதிருப்பதற்காக வழங்கப்பட்டன.

வன்னிக் குடியேற்றத்திட்டங்களில் ஆரம்பத்தில் கட்டிடத் தொழிலாளர்களாக வந்த சிங்களவர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. 1957 இனக்கலவரத்தினைத் தொடந்து எல்லோருமே காணிகளை விற்றுவிட்டு அல்லது கைவிட்டுச் சென்றனர். ஆரம்பகாலத்தில் பின்பற்றப்பட்ட ஒரேகிராமத்தவர்களைக் கூட்டமாகக் குடியேற்றும் முறையே பலதலைமுறைகளாகப் பின்பற்றப்படுகிறது. இது ஒரு விதத்தில் இரண்டாம் தலைமுறையை தனி முயற்சியாளர்களாக மாற்றிவிட்டிருந்தது அல்லது ஒன்றுபட்ட கிராமிய உணர்வுக்கு வழிவகுத்தது.

அரச பணிமனை வீடுகளுக்குப் பதிலாக இராணுவத்தினரின் குடியிருப்பு என்ற நிலையில் குடியிருப்புகள் அமைக்கப்படுமானால் அதில் உரிமை கொண்டாடும் தன்மை வாங்க, விற்கக் கொடுக்கப்படும் சலுகையும் உள்ளடக்கப்பட்டிருக்கும். இது தொடர்ந்து அதே இனமக்களின் உள்வரவுக்கும் இடம் பெயர்வுக்கும் உதவி செய்வதாக இருக்கும்.

இது தனியாக இராணுவக் குடியிருப்பாக மட்டும் அமையப்போவதில்லை. ஆயுதம் தரித்த ஊர்காவற் படைகொண்ட பாதுகாப்புப் பிரதேசம் என்று வரையறை செய்யப்படுவதுடன் அப்பிரதேசத்துக்குத் சேவை வழங்கும் சேவை நிலையங்களும் அவர்றைச் சுற்றிய சேவையாளர் குடியிருப்புக்களும் படிப்படியாக வளர்ச்சி பெறக்கூடிய வாய்ப்பினை இந்தப் பகுதிகள் பெற்றிருக்கின்றன.

வன்னியின் குடியிருப்பு வடிவத்தில் கிழக்கு மாகாணக் குடியிருப்பு வடிவத்தின் பாதிப்பினை ஏற்படுத்துவதில் இந்த இராணுவக் குடியிருப்புக்கள் முக்கிய இடத்தை பெறக்கூடிய வாயப்பிருக்கிறது. சிங்களக்குடியிருப்பு முஸ்லீம் குடியிருப்பு தமிழ்க் குடியிருப்பு என்பன அடுத்தடுத்து ஏற்பட்டுள்ள வடிவம் கிழக்கு மாகாணத்தில் இருக்கிறது. இங்கு இயற்கையான மக்கள் தொகை அதிகரிப்பும் இடப் பெயர்வு அதிகரிப்பும் சார்ந்து இடையிடையே இருக்கும் குடியிருப்புக்களின் அளவினைப் பெரிதாக்குவதில் செல்வாக்கைச் செலுத்தியிருந்தன.

இத்தகைய போக்கு இனங்களுடைய பிரதேசச் சமநிலையினைக் கட்டுப்படுத்திப் புதியசமநிலையைத் தோற்றுவித்தது என்பது கிழக்கு மாகாணத்தில் கண்ட அனுபவ உண்மையாகும். இதேபண்பில் வடபகுதியில் அமைக்கப்படும் தமிழ் சிங்கள இடையிடைக் குடியிருப்புகளில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பேணப்பட்டிருந்தாலன்றி தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான ஊற்றுப்பிரதேங்களாக அவை மாற்றமடையத்தக்க போக்கு காணப் படுவதில் வியப்பேதுமில்லை.

kanapathipillai.a@thaiveedu.co

■ ■ ■

## நீங்கள் முகவருக்கூடாகத் தொழில் புரிபவரா?

# உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!


என். மிலான்

### நீங்கள் முகவரிற் (ஏஜென்சி) கூடாக தொழில் புரிபவரா? உங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுங்கள்!

ஏற்கனவே ஒரு தடவை ஏஜென்சிக்கூடாக தொழில் புரிபவர்களது உரிமைகள் பற்றி உங்கள் அபிமான 'தாய்வீடு' பத்திரிகையில் வெளிவந்திருந்தாலும் கூட, எம்மில் பலர் ஏஜென்சிக்கூடாக தொழில் புரிபவர்களாக இருப்பதனாலும் தற்போதைய வேலை தேடித் திண்டாடும் நிலையில் இருக்கும் நாம் பலர் வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த தற்காலிக ஏஜென்சிகளையே நாடிக் கொண்டிருப்பதாலும் அதன் முக்கியத்துவம் கருதியும், முன்பு வாசிக்கத் தவறியவர்க-ளிற்காகவும், இன்னும் கூடிய தகவல்களுடன் இது பற்றி தொழிலாளர் நடவடிக்கை நிலையம் என்ன கூறுகின்றது என்று இங்கே பார்ப்போம்.

தற்காலிக ஏஜன்சி தொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்களை போல வேலைதர நிர்ணயச் சட்டத்தின் (Employment Standard Act - ESA) கீழ் சலுகைகள் பெறமுடியும். நீங்கள் வேலை பார்க்கும் தற்காலிக ஏஜன்சி தான் சட்டப்படி உங்கள் முதலாளியே தவிர ஏஜென்சிக்-கூடாக நீங்கள் வேலை செய்யும் கம்பனி அல்ல. உங்கள் உரிமைகளை நிலை நாட்ட நீங்கள் முயற்சிக்கும் போது. இது சற்று குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் வேலை செய்யும் இடத்தில் ஏதவாது ஒரு பிரச்சினை ஏற்பட்டால், சட்டம் உங்களுக்கு எத்தகைய பாதுகாப்பு அளிக்கிறது மற்றும் இச்சட்டத்தை மதிக்காமல் உங்கள் தற்காலிக முகவர் நிறு-வனம் (ஏஜென்சி) நடந்தால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதையும் இங்கே பார்ப்போம்.

### நவம்பர் 2009லிருந்து அமு-லுக்கு வந்துள்ள சட்டத்தின் கீழ் கிடைக்கும் புதிய பாது-காப்புகள்:

Ontarioவில் உள்ள அனைத்து தற்காலிக ஏஜன்சி தொழிலாளர்களுக்கும் புதிய பாது-காப்புகள் கிடைக்கும் வண்ணம் வேலை தர நிர்ணங்கள் சட்டம் (ESA) 2009ல் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. உங்கள் ஏஜன்சி இந்த சட்டத்தை கடைப்பிடிக்கவில்லை என்றால் நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை தெரிந்துகொள்-ளுங்கள்.

### கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை:

நீங்கள் ஒரு தற்காலிக ஏஜன்சியில் வேலை சம்பந்தமாகவோ அல்லது உங்கள் கல்வித் தகுதி மற்றும் அனுபவம் முதலியவற்றிற்கு உதவவோ அல்லது நேர்காணல் காண்ப-தற்கோ, ஒப்பந்தம் செய்து கொள்ள நீங்கள் அவர்களுக்கு கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஒரு கம்பனியில் ஒரு நிரந்தரமான வேலை உங்களுக்கு தேடி தர 'வேலை வாய்ப்பு நிறுவனங்கள்' அல்லது 'வேலை ஆலோசனை நிறுவனங்கள்' அதற்-கென ஒரு கட்டணத்தை உங்களிடம் இருந்து அறவிடும்.

### ஒரு ஏஜன்சி, உங்கள் வேலை சம்பந்தமான தகவலை உங்க ளுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஒரு முகவர் தங்களுடைய பெயர் மற்றும் சகல தொடர்பு தகவல்களையம் எழுத்து மூலமாக உங்களுக்கு தெரிவிக்க வேண்டும். அவர்கள் உங்களுக்கு ஒரு வேலை வழங்-கும் போது, கம்பனியின் பெயர், உங்களு-டைய சம்பளம், வேலை நேரம், வேலை பற்றிய விபரம், வேலை முடிவுறும் காலம் (தெரிந்தால் மட்டுமே), சம்பளம் வழங்கப் படும் தேதி மற்றும் நாள் போன்ற விவரங்-களை அவர்கள் உங்களுக்கு அளிக்க வேண்டும். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு விரைவாக அவர்கள் இதை செய்ய வேண்டும். தொழிலாளர் அமைச்சகத்திலிருந்து உங்களுக்கு கிடைக்க இருக்கும் உரிமை-கள் பற்றிய தகவல்களையும் அவர்கள் உங்களுக்கு அளிக்க வேண்டும்.

> *மற்றய தொழிலாளர்களை போல, பொது விடுமுறைகளுக்கான உரிமை தற்காலிக ஊழியர்களுக்கும் உண்டு என்று ஜனவரி 2, 2009ல் அமுலுக்கு வந்த சட்டம் தெளிவாக குறிப்பிடுகின்றது.*

### வேலைநீக்கச் சம்பளம்: (Termination Pay)

நீங்கள் ஒரு முகவர்மூலம் குறைந்தது மூன்று மாதங்களாவது வேலை பார்த்திருக்கிறீர்கள் என்றால். உங்கள் வேலை தொடர்பு முடிவுறும் போது (வேலை முடிவடையும் அல்லது 20 வார காலத்தில் 13 வாரங்கள் வேலை இல்லாமல் இருப்பின்) உங்களுக்கு அது சம்பந்தமாக நோட்டீஸ் அல்லது அதற்கு பதிலாக சம்பளத்தைத் தர வேண்டியது, முகவரின் பொறுப்பாகும். நீங்கள் எவ்வளவு காலம் வேலை பார்த்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்களுக்கு எத்தனை வாரங்-ளுக்கான நோட்டீஸ் அல்லது எவ்வளவு சம்பளம் அளிக்க வேண்டும் என்பதை ஏஜன்சி தான் தீர்மானிக்கும்.

### பிரிந்து போகும் போது கிடைக் கும் சம்பளம் (Severance pay):

ஒரு ஏஜன்சியில் நீங்கள் ஒரு ஊழியராக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் வேலை பார்த்திருக்கிறீர்கள் என்றால், உங்கள் வேலையை முடிவுறச் செய்ய ஏஜன்சி விரும்புகிறது என்றால், வேலையிலிருந்து பிரிந்து போவதற்கான சம்பளத்தை பெறும் உரிமை உங்களுக்கு உண்டு இதற்கு உங்கள் ஏஜன்சி வருடாந்தரம் 2.5 மில்லியன் அல்லது அதற்கும் மேலான தொகையை அதன் ஊழியர்களின் ஊதியச் செலவாக கொண்-டிருத்தல் வேண்டும். அல்லது கடந்த 6 மாதங்-களில் 50 அல்லது அதற்கும் மேற்பட்ட ஊழியர்களை வேலையிலிருந்து பிரித்து-விட்டிருக்க வேண்டும். நீங்கள் பிரிந்து போகும் போது நீங்கள் வேலைபார்த்த ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு கிழமைச் சம்பளம் என்ற வகையில் ஆகக் கூடுதலாக 26 கிழமைகளிற்கு வழங்கப்படும்.

### உங்களுக்கு ஒரு நிரந்தரமான வேலை கிடைப்பதை ஒரு முக வர் தடுத்து நிறுத்த முடியாது.

ஒரு கம்பனி உங்களை நேரடியாக வேலைக்கு அமர்த்த விரும்பினால், உங்கள் முகவருக்கு அது ஒரு கட்டணத்தை செலுத்த வேண்டியது வரும். (நீங்கள் செலுத்த வேண்டியதில்லை). உங்களுக்கு கம்பனியில் வேலை கிடைத்த முதல் ஆறு மாதங்களுக்குள் இந்த கட்ட-ணத்தை கம்பனியிலிருந்து ஏஜன்சி பெற வேண்டும். ஒரு கம்பனி உங்களுக்கு ஒரு வேலை தர ஆலோசிப்பதை ஒரு ஏஜன்சி தடுத்து நிறுத்த முடியாது.

### உங்கள் உரிமைகளைக் கோர நீங்கள் அபராதம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை:

உங்கள் உரிமைகளை நீங்கள் கோர தற்-காலிக ஏஜன்சிகள் உங்களுக்கு அபராதம் எதுவும் விதிக்க முடியாது. நீங்கள் உங்கள் உரிமைகளை கேட்க அல்லது நிலைநாட்ட முயற்சிக்கும் போது, உங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டால் அதற்கான பொறுப்பு நீங்கள் அனுதினம் வேலை பார்க்கும் கம்பெனியை தான் சாரும்.

### உங்கள் உரிமைகள்...

தற்காலிக ஏஜன்சி ஊழியர்களுக்கு பொது விடுமுறைகளுக்கான உரிமை உண்டா?

மற்றய தொழிலாளர்களை போல, பொது விடுமுறைகளுக்கான உரிமை தற்காலிக ஊழியர்களுக்கும் உண்டு என்று ஜனவரி 2, 2009ல் அமுலுக்கு வந்த சட்டம் தெளிவாக குறிப்பிடுகின்றது. இப்போது Ontarioவில் தற்காலிக ஊழியர்கள் 9 விடுமுறை நாட்-களை சம்பளத்துடன் அனுபவிக்கும் உரிமை-யை பெற்றுள்ளார்கள்.

### தற்காலிக ஏஜன்சி ஊழியர்க ளுக்கும் சட்டப்படி பொது விடு முறைகளுக்குரிய உரிமை உள்ளது.

New Year, Family Day, Good Friday, Victoria Day, Canada Day, Labour Day, Thanksgiving Day, Christmas Day, Boxing Day ஆகிய நாட்கள் அரசு விடுமுறைகள்.

### ஒரு அரசு விடுமுறையன்று நீங்கள் வேலை பார்க்கவில்லை என்றால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

தற்காலிக ஏஜன்சி ஊழியர்களுக்கு வேலை எதுவும் இல்லை என்றாலும் அரசு விடுமுறைக்-கான சம்பளம் அவர்களுக்கு கிடைக்கும். அரசு விடுமுறைக்கு முன் வரும் நான்கு வாரங்களில் அவர்கள் வேலை பார்த்ததற்கு கணக்கிடப்படும் சம்பளத்தின் அடிப்படையில் அவர்கள் அரசு விடுமுறை சம்பளமும் மதிப்பிடப்படும்.

### அரச விடுமுறைதினத்திற்குரிய உங்களது சம்பளம் எவ்வளவு?

உங்கள் முந்தைய நான்கு வாரங்களின் மொத்த ஊதியம் (விடுமுறை கால சம்பளம் உங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தால் அதுவும் இதில் அடங்கும்). 20ஆல் வகுக்கப்பட்டு வரும் தொகைதான் உங்கள் அரசு விடுமுறை சம்பளம். ஒரு முழு நேர ஊழியருக்கு சுமார் ஒரு நாள் சம்பளமாக இது வரும். பகுதி நேர ஊழியர்கள் என்றால் சற்று குறைவாக வரும். ஆனால் அரசு விடுமுறைக்கு முன் வரும் நான்கு வாரங்கள் நீங்கள் ஏஜன்சியில் ஒரு வேலையும் பார்க்கவில்லை என்றால் இது 0 டொலருக்கு சமமாக ஆகிவிடும்.

### நீங்கள் அரசு விடுமுறையன்று வேலை பார்த்திருந்தால் உங்களிற்கு கிடைக்க கூடிய சம்பளத் தொகை எவ்வளவு?

உங்களுடைய ஒரு மணி நேர சம்பளம் மற்றும் 1.5 ஆகியவற்றின் பெருக்கல் தொகையை அன்றைய தினம் வேலை செய்ததற்குரிய சம்பளமாகவும் மற்றும் அரசு விடுமுறையன்று சம்பளத்தையும் பெறலாம் அல்லது உங்களுடைய வழக்கமான சம்ப-ளத்தொகையில் பொது விடுமுறையன்று வேலை பார்க்க முடியும். மேலும் அரசு விடுமுறை சம்பளத்துடன் ஒரு நாள் நீங்கள் விடுப்பு எடுக்கலாம்.

*(இது பற்றி மேலும் அறிவதற்கு இதன் தொடர்ச்சியை அடுத்த மாத இதழில் படியுங்கள்...)*

milan@thaiveedu.com

■ ■ ■

ARGENTUM LENDING DIRECT CORPORATION
Reg # 10466
3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7,Scarborough, ON M1P 3G9

வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...
OUR SERVICES:
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Commercial Loan
• Home Equity Mortgage
• Much more...
Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9? Not to worry
We will help you

Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca


5th Nov. 2010 Friday 6.30 pm
Midscarborough Centre
2467 Eglinton Ave, Scarborough
(Kennedy & Eglinton)
அம்ஷன்குமாரின்
ஒருத்தி
இவள் ஒருவனைத் தேடும் ஒருத்தி அல்ல!
தன் அடையாளத்தை தேடும் ஒருத்தி!!
Modern Art in Tamilnadu
(Documentary)
ஏ கே பிலிம்ஸ்
ஒருத்தி
தயாரிப்பு
தாரா
கோபால் ராஜாராம்
திரைக்கதை வசனம் இயக்கம்
அம்ஷன்குமார்
கி. ராஜநாராயணன் பி.எஸ். தரன் எல். வைத்தியநாதன் ஏ.சி. பிள்ளை சதீஷ்-ஹர்ஷா
சிறந்த தமிழ்ப் படம் & சிறந்த இயக்குனர் விருதுகள் பெற்ற படம்
குறும்படம், ஆவணப் படங்களுக்கான
இருதின பயிற்சிப் பட்டறை
நெறிப்படுத்துபவர்: அம்ஷன்குமார்
இப்பட்டறையில் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம்.
முன் அனுபவம் தேவை இல்லை.
திரைப்படங்கள் எடுக்க வேண்டும் என்கிற ஆர்வம் மட்டுமே தேவை.
6th & 7th Nov. 2010 9.00am to 8.00pm
Brimel Court Co-op Community Centre
1252 Brimley Road, Scarborough, Ont
இப்பயிற்சிப் பட்டறையில் கற்றுத்தரப்படுபவை:
• குறும்படம், ஆவணப்படம் ஆகியவற்றிற்கான திரைக்கதை உருவாக்கம்
• ஒளிப்பதிவுக் கருவிகளைக் கையாள்வது, லென்ஸ்கள் மற்றும் காட்சி அமைப்பு
• திரைப்பட மொழியை உருவாக்கும் வகையில் ஷாட்களை அமைத்தல்
• நேர்காணல்களுக்கான உத்திகள் மற்றும் அவற்றைப் பதிவு செய்கிற முறைகள்
• ஒலிப்பதிவு மற்றும் படத்தொகுப்பின் அடிப்படைக்கூறுகள் ஆகியன.
பயிற்சியின் ஒவ்வொரு கட்டமும் செய்முறைகளுடன் கூடியதாக இருக்கும்.
UYIRPPU
Contact:
647 - 351 2213
416 - 857 6406
தாய் வீடு


இலகுவாக மோட்கேஜ்
கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்
Mortgages
• First Time Buyers
• Refinaning
• Renewal
• Self Employed
• Pre-Aproval
• Bankruptcies
• Bad Credit
• Debt Consultant
• Non-verifiable Income
• New immigrant
We Will
• Simplify the entire process of mortgage financing
• Save you money and time
• Get you the most competitive rates
• Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
• Counsel you on credit and mortgage qualifications
• Provide maximum flexibility in financing choices
• Assist you every step of the way
Best Rates
We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.
VERICO TMP
Siva Ratnasingam
Lic: M08002133
Brokerage # 11156
SENIOR MORTGAGE CONSULTANT
2005,2006,2007,2008 Diamond Award Winner
416.520.1214

**Nanthini Singarajah, AMP**

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP THE MORTGAGE PRACTICE

"Quick and easy answer to your lending needs"

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**
- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP


**Specialize In**
- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

**RAPID SECURITY**
WE PROTECT YOU
"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

**New Midwest auto collision**
**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

TOYOTA BENTLEY CHRYSLER DODGE BUICK mazda VOLVO DAEWOO HYUNDAI

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com



**Contact Person:**
**Ruban or Shan**



Alphaweb 416-238 7222


Sesan Flooring Centre
Hardwood, Laminate, Stairs, Tiles, Natural Stone & Kitchen
Varieties of Travertine Stones are Available
WE ARE SPECIALIZED IN MOSAIC STONES
MORE THAN 40 COLOURS
LAMINATE
8.3mm from 89¢
12.3mm from $1.39
15.3mm from $1.85
EXOTIC WOOD
$4.99
CANADIAN MAPLE
$3.97
CANADIAN RED OAK
$4.19
MORE THAN 200 DESIGN
MOSAIC
$7.99
VISIT OUR SHOWROOM
Tel: 905-554-9199
9909 Highway 48, Unit #10. Markham. L6E 0B7
WE ARE THE OFFICIAL DEALER FOR
Satin Finish
Sunca
COSWICK


வெகு விரைவில்
கனேடிய ஈழத் தமிழன் ரவி வெற்றிவேல் இன் இயக்கத்தில், இந்தியாவில்
வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் திரைப்படம் கனேடிய திரையரங்ககளில்.........
AKSHAYA CINE FILMS
in association with
RAGHUL VARMA J MOVIES
என் கண்மணி பிரியா
ரவி வெற்றிவேல்


R & S AUTO SALES
TOP QUALITY USED CAR DEALER
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Repossed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
HONDA
TOYOTA
GM-MINI VANS
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8
416-412-3838
416-836-5825



வீடோ, வியாபாரமோ?
விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்
Homelife/Future
Realty inc. Brokerage
Higher Standard Agents... Higher Results!
Vivek Subramaniam
Sales Representative
Direct: 416 898 4846
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# அழகிய பூஞ்செடிகள்

# அலமண்டா

## Allamanda (Yellow Bell)

வீட்டுத் தோட்டம் - 32



செல்லையா சந்திரசேகரி


### அறிமுகம்:

**அலமண்டர்** எனும் பூஞ்செடிக் குடும்பம் அப்போசைனேசியைச் சேர்ந்தது. வெப்ப மண்டலங்களான தெற்கு, மைய அமெரிக்காவின் பூர்வீகமான, திராட்சை போன்று பற்றிப் படரும் செடியாகக் காணப்பட்டது. அலமண்டா எனும் பெயர் Swiss born Dr.Frederich Allamanda 1735-1803) அவரது பெயராகின்றது. பின்னர் இச்செடியானது ஏனைய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. மலேசியா, இலங்கையில் ஒவ்வொரு வீட்டிலும் முற்புறப் பந்தல்களில் அல்லது முற்புற வேலிகளில், அல்லது மதில்களில் பற்றிப் படர்ந்து பூக்களை வருடந்தோறும் கொட்டி அழகுபடுத்துகின்றன. செடிகள் நிழலையோ, உப்புத் தன்மையையோஷ. உறங்கு பனியையோ விரும்பமாட்டா.





சண்டிலிப்பாய் சீரணிநாகம்மாள் கோயில் வீதியில்



அலமண்டர் புற்றகாயாவிலுள்ள படம்

### பூக்கள்:

செடிகளில் முழுமையான பச்சைநிறமான இலைகளையுடைய. வைரமான தண்டுகள், செழுமையாக வளர்ந்து இருப்பது குறிப்பிடக்கூடியதொன்றாகும். பிரகாசமான பெரிய பூக்கள், ஏறக்குறைய 4-5 அடி உயரம்வரை பற்றி வளர்ந்திருக்கும் செடியில் காணப்படுவது, பலரது கண்களையும் பறிக்கக் கூடியவை. பூக்கள் அலங்காரத் தேவைகளுக்காக கோயில்களில், வீடுகளில், விழாக்களில் பயன்படும். இதனைக் கோயில் பூக்கள் என அழைப்பார்கள். மஞ்சள் நிறமான பூக்கள் குழலுருவில் காணப்படும். பூக்கள் ஐந்து இதழ்களையுடையவை, வெட்டுப்பூக்களாக பயன்படும். மலேசியாவின் தேசியப் பூவாக Alamanda putrajaya எனும் இனம் கருதப்படுகின்றது. இதற்கு சான்றாக தோட்டநகரம் ஆகும் 'புற்றகாயா' எனும் இடத்திலுள்ள பிரசித்தி பெற்ற 'அலமண்டா புற்றகாயா' எனப்படும் பொருள்கள் விற்கும் அங்காடியில் இப்பூவின் அலங்கரிப்பு ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. இது அதிஅற்புதமான ஓவியம்.

### பயிரிடும் முறை:

தடிகள் மூலம் இலேசாக வளர்க்கலாம். வெட்டிப்போட்ட தடிகள் விரைவில் வேர்களை விட்டுவிடும். வளர்க்கப்படும் செடிகளிலிருந்து வித்துக்கள் தோன்றுவது அரிதாயிருக்கும். செடிகளைத் தோட்டத்தில் மட்டும் வளர்ப்பதில்லை. ஆராய்ச்சிகள் நிமித்தம் மருத்துவ தேவைகளுக்காக பரவலாகப பயிரிடப்படுகின்றன. செடியானது நச்சுப் பதார்த்தங்களுக்கு எதிர்ப்பாக தாக்கும் அலமண்டின் எனப்படும் பதார்த்தம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இலைகள், வேர்கள், பூக்கள் ஆகியவற்றிலிருந்து ஒருவித பலம் வாய்ந்த மூலிகை மருந்து செய்யப்படுகின்றது தலையிடி, தேமல், சிரங்கு, பொக்களம் போன்றவற்றிற்கு பால் போன்ற இச்சாறு பயன்படும்.

அதிசயமான செடியின் இன்னோரு குணம், மொட்டுக்கள் உள்ள அதே தொகுதியில் அருகருகே இரு பூக்களைக் காணமுடியாது. இங்கேயுள்ள படத்தைப் பாருங்கள். பெரிய பூக்கள் தருவதைக் குறிப்பாகக் கொண்டு இயற்கை இவ்வாறு புலப்படுத்துவதும் ஒரு விந்தையாகின்றது. குழலுருவாக நீண்டு இருக்கும் நீளமான பூ, தேனீக்கள் இலேசாக உட்புகுவதற்கு வாய்ப்பாகவிருக்கின்றது.

பின்வரும் சில இனங்களைப் பார்க்கவும்:
Allamanda cathartica,
Allamanda nerifolia,
Allamanda blanchetii,
Allamanda angustifolia,
Allamanda polyantha,
Allamanda puberula

sekari.s@thaiveedu.comHelvetica

■ ■ ■



Family Saprotaceae

# மகிழமரம்

**(Botanical name: Mimusops elengi: Eng.Name: Spanish Cherry)**

**மகிழமரம்** என்றும் பச்சை நிறமாகவேயிருக்கும், ஏறக்குறைய 15மீ உயரம் வளரக்கூடிய மரமாகும். தெற்காசியா, தென் கிழக்காசியா, கிழக்கு அவுஸ்திரேலியா போன்ற வெப்ப மண்டல நாடுகளில் வளர்கின்றன. இலங்கை, இந்தியாவிலும் பரவலாக சில இடங்களில் காணப்படும். எனது ஊராகிய சண்டிலிப்பாய் சீரணிநாகம்பாள் கோயில் வீதிகளில் சில மரங்கள் இன்னும் பழமையாவே காணப்படுகின்றன. நான் ஏறக்குறைய 65 ஆன்டுகளுக்கு முன்னர் அருகேயுள்ள ராஜா பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது இடைவேளை நேரங்களில் அங்கு சென்று மகிழங்காய் பிடுங்கிச் சாப்பிடுவது இன்றும் ஞாபகமாகவிருக்கின்றது. அம்மரமொன்றின் தோற்றப்படம் இங்கும் தரப்படுகின்றது கிளைகள் அடர்த்தியாகவிருக்கும். தண்டுகளில் இலைகள் அடர்த்தியாகவும் பளிங்கு போல பச்சைநிறமாகவும் இருக்கும். பூக்கள் வாசனைகொண்டு மயிர்கள்போன்றவையாக, வெளிர் மஞ்சள் நிறமாயிருக்கும். காய், பழம் சாப்பிடக்கூடியவை. காய் ஆரம்பத்தில் பச்சை நிறமாயிருக்கும், பின்னர் கடும் சிவப்புக் கலந்த செம்மஞ்சளாக மாறும். மரப்பட்டைகள் மொத்தமாக கடும் மண்ணிறமுடையவை.

மரப்பட்டை, பூக்கள், பழங்கள், வித்துக்கள் எல்லாம் பல் தொடர்பான வியாதிகளுக்கு பயன்படும். பூக்களின் சாறு, எதிர்விஷம், இதயநோய் போன்றவற்றைக் குணப்படுத்தும். காய்ந்த பூக்களிலிருந்து செய்யப்பட்ட பொடி, கடுமையான காய்ச்சல், உடலுறுப்புகளின் நோக்கள் முதலியனவற்றை நீக்குகின்றன. நீருடன் சேர்த்து அரைத்த பழுத்த பழச்சாறு சுலபமான பிள்ளைப்பேற்றிற்கு உபயோகிப்பர். மரப்பலகை மிகவும் விலையுயர்ந்தது, டாம்பீகமானது, அதிபலமானது

மொழி பெயர்ப்பு
பிறப்புச் சான்றிதழ் உட்பட சகல விதமான மொழி
பெயர்ப்புகட்கும் அழையுங்கள்.
647-291-1357



***Full-time Real Estate Agent***

# Nada G. Nadarajah B.V.Sc

***Call Me @ 416 616 8751*** Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




**Markham & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**Dufferin & Rutherford**
2-Storey Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Basement Apartment




**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft

**HomeLife**
Landmark Realty Inc., brokerage
*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS




**Markham & Nashdene**
Commerical Condo. Unit
1440 + 900 Sq. Ft Mezzanine
Low Maintenace Fee




**Warden & Finch**
Condo. Townhouse
3 Bedrooms - 2 Washrooms
Completed Basement w/ walkout




**Kennedy & Eglinton**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Luxury Condo. Building





**Justin William**
*Broker*
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
*Broker*
**Cell: 416.817.8479**



**Sasi Chelvaratnam**
*Sales Representative*
**Cell: 416.858.4828**

## Yes ! You May WIN this
## Brand New BMW 3 series

On Sunday November 28, 2010
at GTA Square Mall.







- Bright & Spacious Town house
- 4+2Bedrooms
- Finished Basement W/Entrance
- Recently Updated Washrooms
- Call **SASI** For Details....




- Beautiful Semi Detached House
- Main Floor & 2nd Floor Only
- Spacious 3 Bedrooms
- Step To Ttc.
- Call **JUSTIN** For Details....




- Good Investment
- Excellent Location
- 3-Two Bdrm Apt On 2ndFloor
- Well Running Mexi Restaurant
- Call **RAVI** For Details....




- Beautiful House
- Excellent Location
- Spacious 4 Bedrooms
- Close To Schools & Ttc.
- Call **JUSTIN** For Details....




- 3+2 Bedroom House
- Well Maintained House
- Finished Basement
- Excellent Neighbourhood
- Call **RAVI** For Details....




- Great Stater Home
- 3 Bedroom House
- Large Back Yard
- Close to Schools, Shops & Ttc
- Call **SASI** For Details...





- 4 Bedroom House
- Great Location
- Lots Of Upgrades
- Family Room With Fireplace
- Call **SASI** For Details....




- Beautiful House
- 4 Bedrooms
- Child Safe Cul-De-Sac
- Approx 2850 Sq F
- Call **JUSTIN** For Details....




- 4 Bedroom House
- Finished Walk-Out Basement
- 5 Washrooms
- Prestigious Aurora Area
- Call **RAVI** For Details...




- Beautiful Cozy Home
- 4 Bedrooms.
- Prestigious Main St Unionville
- Renovated Home
- Call **JUSTIN** For Details...

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# எவ்வளவு பொறுப்பற்ற செயல்?



மஞ்சுளா ராஜலிங்கம்

இப்போதெல்லாம் விழாக்களில் முக்கிய விருந்தினரை மட்டும் கௌரவிப்பதுடன் நின்றுவிடாமல், தமக்கு நெருங்கியவர்களையும் உறவினர்களையும் மற்றொரு விதத்தில் திருப்திப்படுத்தவேண்டிய கட்டாயக் கடமை இருப்பதாக விழா நடத்துவோர் நினைக்கின்றனர். இதற்காகப் பல சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பலரும் புதிது புதிதாக உருவாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

அண்மையில் நம் மாநகரத்தில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவுக்குச் சென்றிருந்தேன். வழமைபோல் குத்துவிளக்குகள் ஏற்றி விழா தொடங்கப்பட்டது.

குத்துவிளக்குகள் என்று சொல்லப்பட்டதன் காரணம், விழா வாயிலில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டதுடன் நின்றுவிடாமல், விழாவுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரங்க மேடையிலும், இதைவிடப் பலமடங்கு பெரியதான குத்துவிளக்குகள் ஏற்றப்பட்டன. ஒவ்வொரு திரியிலும் தீபம் ஏற்ற ஒவ்வொருவர் அழைக்கப்பட்டனர். முன்னரே சொன்னதுபோல், பலரையும் திருப்திப்படுத்தும் நோக்கமாம்!

நல்லது. இங்கு குத்துவிளக்குகள் எத்தனை பேரால் எத்தனை திரிகள் வைத்து ஏற்றப் பட்டன என்பதல்ல முக்கியம்.

விழாவின் உள்வாசலின் வெளிப்பகுதியில், மேசையில், இரு குத்துவிளக்குகள் வைக்கப் பட்டிருந்தன. மேடையிலோ ஆளுயரக் குத்துவிளக்குகள் இரண்டு.

சரிதான்.

வளக்கம்போல், வாழ்த்துரை வளங்குபவர்களும் பேச்சாளர்களும் மேடையை அலங்கரிக்க, விழாவுக்கு வந்தவர்களுக்கு உபசரிப்பு, உதவி என்று ஓடியாடி பணியாற்றிக்கொண்டிருந்தனர் சில பதின்ம வயதுப் பெண் பிள்ளைகள்.

விழாவுக்கு ஏற்றாற்போல், அழகாக, கலாச்சார ஆடையணிந்து, தனது கூந்தலையும், அழகாக அலங்கரித்து வந்திருந்தனர் அந்தப் பிள்ளைகள்.

தன் காரியத்திலே கண்ணாக இருந்த ஒரு பெண், அபாயக் கட்டமொன்றைத் தாண்டினாள் என்றால் நம்புவதற்குக் கொஞ்சம் கடினம்தான். உபசரிப்பிலீடுபட்டிருந்த பெண்ணின் கூந்தலை, ஆளுயரக் குத்துவிளக்கின் சுவாலை மெதுவே பற்றிக் கொண்டது. அந்தப்

> “ *உபசரிப்பிலீடுபட்டிருந்த பெண்ணின் கூந்தலை,*
>
> *ஆளுயரக் குத்துவிளக்கின் சுவாலை*
>
> *மெதுவே பற்றிக் கொண்டது.*
>
> *அந்தப் பெண்ணுற்கு இது தெரியாது.* ”

பெண்ணுற்கு இது தெரியாது. அனைவரும் பார்த்து திகைத்துப்போயிருக்க, முன்வரிசையில் இருந்த ஒருவர் தீயை அணைக்க முற்படுகையில் மேடையில் இருந்த இளையபாரதியும் (C.T.B.C) இணைந்துகொண்டார். தீ அணைக்கப்பட்டது.

சற்றே சிந்தித்துப் பாருங்கள். தீ தன் வீரியத்தை முழுதாகக் காட்டியிருந்தால், அந்தச் சிறுபெண்ணின் நிலை? ஒன்றில் அந்தப் பெண்ணின் உயிரையே பறித்திருக்கும். அல்லது ஆறா வடுவாய், அந்தப் பெண்ணின் அழகை, வாழ்க்கையை, எதிர்காலத்தைப் பறித்திருக்கும்?

எத்தனை இடர்களுக்குள் எத்தனை குழந்தைகளைப் நாம் பறிகொடுத்திருக்கின்றோம்.

அவற்றையெல்லாம் தாண்டி ஒரு தாய், தகப்பன் தம் குழந்தையைப் பொத்திப்பொத்திக்கொண்டுவந்து இப்படியொரு ஆடம்பர நிகழ்வில் அந்தக் குழந்தைக்கு ஒன்று நடந்திருந்தால்...?

ஒரு நாள் கூத்து.

ஒரு குழந்தையின் வாழ்க்கையோடு விளையாட முனைந்திருக்கின்றது.

ஆனால் அதன் பின் விமர்சனங்கள், வேறு விதமாய் அமைந்தன.

ஒரு விழாவுக்கு, எப்படி ஆடையணிந்து, கூந்தல் அலங்காரம் செய்து வரவேண்டும் என்ற வகையில் பேசப்பட்டது.

அச்சிறுபெண்ணின் உயிருக்கே உலை வைக்கும் விதமாக வைக்கப்பட்ட குத்துவிளக்குகள் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, பெண்களின் நடையுடை, அலங்காரம், அவை கலாச்சாரத்திற்கு ஒத்துவருமா..., ஒத்து வராதா... என்றெல்லாம் கருதுக்கள் பகிரப்பட்டன.

இங்கு ஆளுயரக் குத்துவிளக்குகளின் பங்கென்ன?

குத்துவிளக்கை வைத்தவர்களைக் குறை சொல்வார் எவருமிலர். ஆனால், உண்மையில் எங்கிருந்து ஒன்றுக்கு நான்கைந்து குத்து விளக்குகள் வைக்கும் பழக்கம் வந்தது? குத்துவிளக்குகள் வெளியேயும் உள்ளேயும் ஏற்றப்பட்டமை ஒரு சரியான நடைமுறையாக யாருக்கும் தெரியவில்லை. ஆனால் ஒரு கலாச்சார நிகழ்விற்கு எப்படி ஓர் இளம் பெண், பண்பாடு குலையாமல் ஆடையணிந்து வரவேண்டுமோ, அப்படி வந்த அப்பெண்ணிற்கு, “இதுதான், நாங்கள் கவனமாக தலையெல்லாம் வடிவாகச் சீவி, பின்னி வரவேணும் எண்டு சொல்லுறது” என்று அறிவுரைகளுக்குக் குறைவில்லை.

அந்தப் பெண்ணின் உயிருக்கே ஆபத்து விளைந்திருந்தால்..., அதன்பின், விழாக்களில் குத்துவிளக்கு ஏற்றும் பழக்கமோ முடிவிற்கு வந்திருக்கும். உயிரைக் குடிக்கக்கூடிய இம்மாதிரியான சடங்குகள் சமூகத்திற்கு அவசியமா என்ற கேள்வி எழுந்திருக்கும்.

கலாச்சாரம் என்ற போர்வையில், நடக்கும் விழாவிற்கும் நம் செயலுக்கும் தொடர்பில்லாமல் பல புதுப்புதுச் சடங்குகளைப் புகுத்திக்கொண்டிருக்கின்றோம்.

வித்தியாசமாக இருக்கும் என்பதற்காக வினோதங்களையும் விகடங்களையும் நடத்தாமல், இடம், பொருள், ஏவல் அறிந்து விழாக்களை நடத்தப் பழகுவோம்.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■

MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

Kethes Sivasubramaniyam
Mortgage Agent - (Lic # M08006105)
Cell : 416.873.5780

Via Financial (Lic # 10669) Services Inc.



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




KETVAR
TAX & ACCOUNTING
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-548-8005
Email : ketvar@gmail.com

# அரசாங்கமும் பொருளாதாரமும்

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



ஒரு நாட்டில் உறுதியின்மையான பொருளாதாரத்தினால் தனிப்பட்ட நபர்களுக்கு பயம் அல்லது பேராசை உருவாகுவதற்கு இடம் உண்டு. இதன் அடிப்படியாக இருபத்தொராவது நூற்றாண்டை உற்று நோக்கினால் அரசாங்கம் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு பல வகையான வழி முறைகளைக் கையாண்டு பொருளாதார வட்டத்தை இயற்கையாக மேல்னோக்கியோ கீழ்னோக்கியோ இயங்க வைக்கலாம். இப்படியான செயல்பாட்டை மத்திய வங்கி அந்நாட்டு நாணயங்கள் சம்பந்தமான திட்டங்களை அந்தக் காலத்திற்கு ஏற்றவாறு செயல்திட்டம் மற்றும் கொள்கை களை வழிநடத்துவதாகும். இதனால் நிரந்தரமான வேலை வாய்ப்பையும் வளரும் பொருளாதாரத்தையும் உருவாக்க முடியும். அதனுடன் குறுகிய காலத்து வட்டிவீதத்தை சாதுர்யமாகக் கையாள்வதற்கு Open Market Operation, adjusting reserve equipments போன்ற சில கருவிகளை உபயோகிக்கலாம். வட்டி விதம் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்குக் கையாளப்படுகின்றது. உலக நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதும் வட்டி வீதத்தின் மூலம் கையாளும் முறையே மத்திய அரசாங்கங்கள் மேற்கொண்டன. அதாவது குறுகிய காலத்திற்கு வட்டி வீதத்தைக் கூட்டிக் குறைத்து உலகப் பொருளாதாரத்தை மெதுவாக/விரைவாக நகர்த்துவதற்கும் அத்துடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்துவார்கள்.

வட்டி வீதத்தைக் குறைப்பதனால் கடன் வாங்குவதற்கு மலிவாக இருப்பதுடன் இலகுவாக லாபம் அடையவும் முடியும். அதாவது தனி நபர்களையும் வியாபார நிலையங்களையும் பணத்தைப் பொருளாதாரத்தில் இலகுவாக முதலீடு செய்ய வைக்கலாம். இதனால் சேமிப்பு குறையும் ஆனால் பொருளாதாரத்தை வெகுவிரைவாக வளர்ப்பதற்குப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில் வட்டிவீதக் குறைப்பு பணவீக்கத்தை அதிகரிக்கலாம். காரணம் வட்டிவீதம் குறைந்த காலத்தில் மக்களின் தேவைக்கு ஏற்ப பொருட்களைக் கொடுக்க முடியாவிட்டால், பொருட்களின் விலை அதிகரிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு. இந்நிலையில் பணவீக்கம் பலவிதமான பொருளாதார நெருக்கடியை உருவாக்கலாம். இருந்தாலும் மத்திய அரசாங்கங்கள் இவ்வகையான செயற்பாடுகளின் முலமே பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கலாம்.

> “ பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை ஒரு நிலையில் வைத்திருப்பது மத்திய அரசாங்கத்தின் திறமையில் தங்கியுள்ளது. ”

இரண்டாவது வகையான ெருளாதாரக் கருவியாக Open Market Operation (OMO) என்னும் வழியைப் பயன்படுத்துவார்கள். அதாவது மத்திய அரசாங்கம் Treasury bondsஐ இலகுவான முறையில் வாங்குவதோ அல்லது விற்பதாகும். Treasury bond என்பது விற்பனை செய்யக்கூடியதும், மாறத வட்டிவீதத்துடன் இருப்பதும் மட்டுமல்லது அதனது முதிர்ச்சி காலம் பத்து வருடத்திற்கு அதிகமாக இருத்தல் வேண்டும். மத்திய அரசாங்கம் Bondஜ வேண்டும்.

Open Marketல் வாங்குவதால் மக்கள் மத்தியில் பணநடமாட்டம் அதிகரிக்கும் அதனால் விலைவாசி அதிகரிக்கும் வட்டிவீதம் குறையும். அதே நேரத்தில் Bondஜ விற்பதானால் மக்கள் மத்தியில் பணநடமாட்டம் குறையும் அதனால் விலைவாசியும் குறையும். வட்டி வீதம் கூடும். ஆகவே Open Market Operation ஐக்கொண்டு வட்டிவிதத்தைக் குறைத்து/கூட்டுவதற்கு ஒரு கருவியாக உள்ளது.

அடுத்த கருவியாக Reserve requirementஜ மத்திய அரசாங்கம் அமுல்படுத்தும். அதாவது வங்கிகள் தமது வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறும் பணத்தில் ஒரு தொகை வீதத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். உதாரணமாக ஒரு வாடிக்கையாளரிடம் 500 டொலர்கள் வங்கியின் இருப்பில் போட்டால் அதில் ஐந்து சதவீதத்தை reserve fundல் வைத்துக் கொண்டு மிகுதியை வேறு வாடிக்கையாளர்களிடம் கடனாகக் கொடுக்க முடியும். ஆகவே reserve fundஜக் கூடிக் குறைப்பதனால் மேலே குறிப்பிட்ட உதாரணங்கள் போன்று வட்டிவீதம் பணவீக்கம் போன்றவற்றைக் கூட்டிக் குறைக்க முடியும்.

கடைசிக் கருவியாக மத்திய அரசாங்கம் மக்களின் சந்தைநிலையில் மாற்றங்கள் ஏற் படலாம் எனனும் செய்தினை அறிவித்தல். இது ஒரு சிக்கலான முயற்சியாகும் இந்தச் செய்தியை மக்கள் ஏற்று அதனால் அவர்கள் செயற்படவேண்டும். அதாவது மத்திய அரசாங்கம் உண்மையான செய்தியாக பொருளாதாரம் வேகமாக முன்னேறுகின்றது அதனால் பணவீக்கம் அதிகரிக்கலாம் என எச்சரித்தல், வட்டி வீதத்தை அதிகரிக்கும் நிலையில், மத்திய அரசாங்கத்தின் Bond வைத்திருப்பவர்கள் bondஜ விற்பதற்கு வாய்ப்பு அதிகரிக்கும். இந்த முயற்ச்சியால் மத்திய அரசாங்கம் தனது எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியும்.

ஆகவே மத்திய அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை மாற்றங்கள், பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை ஒரு நிலையில் வைத்திருக்க உதவலாம். ஆகவே சரியான பொருளாதார மாற்றம் மத்திய அரசாங்கத்தின் திறமையில் தங்கியுள்ளது எனலாம்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

# இலையுதிர்கால...

7ம் பக்கத் தொடர்ச்சி...

இனி வரப்போகும் 6-7 மாதங்களுக்கு குளிரூட்டியின் தேவை இருக்காது எனவே அதனை உரிய முறையில் பேணினால் அதன் ஆயுட் காலத்தைக் கூட்ட வாய்ப்பு இருக்கும். குளிரூட்டிகளை கொட்டும் பனியில் மூழ்க விடுவதைவிட உரிய உறைகளைப் போட்டு மூடி வைத்தல் நல்லது. துருப்பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிப்பகுதிக்கு ‘Anti Rust Spray’ அடித்த பின்னர் மூடிவிடுதல் நல்லது. 4-5 டொலர்களுக்கு வாங்கக் கூடிய Anty Rust Spray பலதடவைகள் பாவிக்கப் போதுமானது.

## Weather Stripes

தலைவாசற்கதவு, பின்கதவு, கராஜ் கதவு என்பன குளிர் உட்புகாதவாறு மூடப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும். இடைவெளிகள் காணப்படும் பட்சத்தில் காலநிலைக்கேற்ற Weather Stripeஜ பொருத்தி விடுதல் அல்லது சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் ஏற்படும் வெப்பமாக்கலுக்கான செலவின் கணிசமான அளவு திருப்திகரமில்லாத வாசல்களின் ஊடாக ஏற்படுவதாக பல அறிக்கைகள் கூறுகின்றன.

## Central Humidifer ஈரப்பதனாக்கி

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னரே ஈரப்பதனாக்கிக்குரிய வடிகட்டிகளைச் (Evaporator grid) சுத்தம் செய்து வைத்திருப்பது நல்லது. ஒவ்வொருவருடமும் இலையுதிர்காலப்பகுதியில் இத்தகைய வடிகட்டிகளையும் மேலதிக நீர் வழிந்தோடும் குழாய்களையும் நீரினால் கழுவி சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.

## Garage Man-Door

கராஜ்ஜில் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானே இறுக்கமாக மூடவேண்டியது மிக அவசியம். குளிர்காலத்தில் ஊர்திகளை வெப்பமாக்குவதற்காக கராஜ்ஜின் உள்ளே இயங்க விடுவதும், நிறம், மணம் அற்ற காபனீரொட்சைட் வாயு பாதுகாப்பற்ற கதவுகளின் ஊடாக வீட்டிற்குள் செல்வதும், இதன் நச்சுத் தன்மை காரணமாக பலர் உயிர் இழப்பதும் நாம் வருடா வருடம் கனடாவில் அறியும் செய்திகள். இத்தகைய கதவுகள் தானே மூடப்படுவதற்காக பொருத்தப்பட்டிருக்கும் ‘Auto Closer’ சரியாக செயற்படுகின்றதா? என்பதைப் பரிசோதித்து அதன் விசையை உரிய நிலைக்குச் சரிசெய்து விட வேண்டியது மிக அவசியம்.

## Gutters கூரை வடிகால்

கூரைவடிகால்களில் சருகுகள் தேங்கிக் கிடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைச் சுத்தம் செய்து அத்துடன் தண்ணீர் ஒழுங்காக கீழ்நோக்கிச் செல்லும் குழாய் ஊடாக (Downspout) அகற்றப்படுகின்றதா? என்பதை உறுதிப்படுத்துதல் நல்லது.

**குறிப்பு:** சுற்றுப் புறங்களில் அதிக மரங்கள் உள்ளவர்கள் Guttersக்குரிய துவாரமிடப்பட்ட மூடிகளை பொருத்துவதன் மூலம் சுத்தம் செய்யும் மேலதிகப் பழுவைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஜன்னல்கள் மற்றும் கூரையில் கண்ணாடிகள் (Sky Light) பொருத்தப்பட்டிருந்தால் அவை இறுக்கமாக மூடப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கோடைக்காலத்திற்குரிய யன்னல் திரைச்சீலைகளை மாற்றி விட்டு குளிரை எதிர்க்கக்கூடிய திரைச்சீலையை மாற்றுபவர்கள் இக்காலபகுதியில் அதனையும் மறக்காது செய்தல் வேண்டும்.

வீடுகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக யன்னல் கண்ணாடிகளில் நீர்ப்படிவு ஏற்படுவதை அவதானித்திருக்கலாம். குறிப்பாக திறக்கக்கூடிய யன்னல் பகுதிக்கு உட்பக்கமாகப் போடப்பட்டிருக்கும் Netன் அடியிலேயே அதிகளவு நீர்ப்படிமானம் ஏற்படுவது, வழிந்தோடுவது, பங்கஸ் பிடிப்பது போன்ற பல இடர்களை காணக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்பவர்கள் முன்கூட்டியே அத்தகைய Netகளை எடுத்து வைத்து விட்டு மீண்டும் கோடைக்காலத்தில் போடலாம். இத்தகைய Netகள் காற்றோட்டத்திற்கு இடையூறு செய்வதாலேயே அத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால், உயர்ந்த மாடிகளில் இருப்பவர்கள் பாதுகாப்புக் காரணங்களை கருத்திற்கொண்டு அதனைத் தவிர்த்துவிட வேண்டும்.

Smoke Detectors + Carbon Monoxide Detectors என்பன உரிய முறையில் வேலை செய்கின்றனவா? என்பதனை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் இவற்றின் தொழிற்பாடு அதிகளவில் தேவைப்படும்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■




RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE
Monte Carlo Corporate Centre
7045 Edwards Blvd., Suite 201 Mississauga, ON L5S 1X2



ALAN SIVASAMBU
BROKER

OFFICE: 905-565-9200 • CELL: 647 504 2536 • FAX: 905 565 6677
alansivasambu@gmail.com • www.rightathomerealty.com
Facebook S T ALAN HOMES

**For sellers,**
• 1% rebate on listing commission
• Feature sheet • Staging • Open houses
**For buyers,**
• free home warranty available for 1 year

# தோழர் சி.கா. செந்திவேல்



(பொதுச் செயலாளர்
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி - இலங்கை)

**கலந்துகொள்ளும் உரையும், கலந்துரையாடலும்**

**Saturday, October 23rd, 2010 @ 4:30 P.M**
சனிக்கிழமை, ஒக்டோபர் 23, 2010 மாலை 4:30 மணி

## தீண்டாமை ஒழிப்புப் போராட்டமும் ஒக்டோபர் எழுச்சியும்

ஒரு போராளியின் பார்வையில்...

**Mid Scarborough Community Centre**
**(Don Montgomery CRC)**
2467 Eglinton Ave East (@ Kennedy)

## இலங்கையின் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் சவால்கள்

**Saturday, October 30th, 2010 @ 4:00 P.M**
சனிக்கிழமை, ஒக்டோபர் 30, 2010 மாலை 4:00 மணி

**Church Of St. Columba**
**2723, St Clair Ave. East (@ O'Conner)**
**East York, ON. M4B 1M8**

அனைவரையும் தோழமையுடன் அழைக்கின்றோம்!!

மேலதிக தொடர்புகளுக்கு: thedakam@gmail.com, 416•840•7335, www.trcto.org

- தமிழர் வகைதுறைவள நிலையம் -



# REAL ESTATE LAW CLERKS
# LEGAL SECRETARY

We are currently seeking Real Estate Law Clerks / Secretary. The successful candidates will be reliable, efficient and committed individuals, with a pleasant demeanor. You will have:

- Pleasant telephone manners, good interpersonal and organizational skills and neat work habits.
- Experienced in *Conveyancer* and *Teraview with exposure to PCLaw.*
- Excellent spoken and written skills in English.
- Experienced computer user with good keyboarding skills.
- Ability to converse in Tamil.

If you are otherwise qualified except for practice-specific software knowledge, please forward your resume to be considered for junior positions.

**Salary commensurate with education and experience.**


Please mail or fax your resume with handwritten cover letter asap to:

**Yaso Sinnadurai Professional Corp.**
2100 Ellesmere Road, Suite 202
Scarborough ON M1H 3B7
Fax: 905-306-1125

*We thank all applicants. Short-listed candidates will be contacted for an interview within three days after receipt.*



# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...







**Neilson / Finch**
4+1 Bedrooms
3 Washroom Finished Basement





**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom

CONVENIENCE/VARIETY
**$95,000**
**Plus Stock**
**IN OSHAWA**

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி வீகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor

# காப்புறுதியில் மாற்றங்கள்

2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒன்டாரியோ மாநிலத்தின் சட்டதிட்டங்களில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவற்றை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



### மாற்றம் 1:

வைத்தியம் மற்றும் ஆரோக்கிய மறுசீரமைப்புக்காக முன்னைய காப்புறுதிகள் $100,000இனையும் அனுசரனையாளருக்காக $72,000 தரப்படும் என இருந்தது. ஆனால் தற்போது அடிப்படை அளவுகளை $50,000 வைத்திய மறுசீரமைப்புக்காகவும் தரப்பட்டு அனுசரனையாளருக்கு தரப்படும் தொகை $36,000ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தொகைகளை $100,000 முதல் $1,100,000 ஆக மருத்துவத்திற்கு உயர்த்தவும் அனுசரனையளருக்கு கொடுக்கும் தொகை $72,000 முதல் $1,072,000 ஆக உயர்த்துவதற்கு சந்தர்ப்பம் வளங்கப்படும். இவையாவும் பாரியதல்லாத விபத்துகளுக்கு உரிய தொகை என்பதை குறிப்பிடவேண்டும்.

### மாற்றம் 2:

அடுத்த படியாக பாரிய அனர்த்தனங்களுடன் கூடிய விபத்துகள் முன்பு இருந்ததில் மாற்றம் ஏதும் இல்லாமல் வைத்திய மற்றும் மறுசீரமைப்புக்கான தொகை $1,000,000ஆகவும் பராமரிப்பாளருக்குறிய தொகையும் $1,000,000 ஆகவே இருக்கும். எனினும் வைத்திய மற்றும் மறுசீரமைப்புக்குமான தொகை மேலும் $1,000,000 அதிகரிக்கும் உரிமை வாடிக்கையாளருக்கு விடப்படும்.

### மாற்றம் 3:

முன்னைய காப்புறுதி எல்லா விபத்துகளுக்கும் வராம் $250 முதலாவது சார்ந்திருப்பவருக்கும் மேலதிகமாவர்களுக்கு $50 வாரத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் தொகையில் மாற்றம் எதுவும் இல்லாமல் இந்தச் சலுகை பாரிய விபத்துகளில் தாக்குப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். எனினும் வாடிக்கையாளர் எல்லா விபத்துகளுக்கும் இந்தச் சலுகையை பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் தரப்படும்.

### மாற்றம் 4:

வீட்டை கவனிப்பதற்கு வாரம் $100 எல்லா வகையான விபத்துகளிலும் தரப்பட்டது. செப்டம்பர் முதலாம் திகதிக்குப் பின் பாரிய அனர்த்தனங்களுக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்படும். எனினும் இச்சலுகையை வாடிக்கையாளர்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

### மாற்றம் 5:

முன்னைய காப்புறுதியில், வருவாயில் 80 விழுக்காடு $400 வரை வாரத்திற்கு கொடுக்கப்பட்டுவந்தது. புது திட்டப்படி 70 விழக்காடு, $400 வரை வாரத்திற்கு கொடுக்கப்படும். இங்கு 70 விழுக்காடு $600, $800 அல்லது $1000 வரத்திற்கு பெற்றுக்கொள்ள உரிமை வாடிக்கையாளருக்கு தரப்பட்டுள்ளது.

### மாற்றம் 6:

மரணம் சம்பவிக்கும் வேளைகளில் தரப்படும் $25,000 அவரது மனைவி அல்லது கணவனுக்காகும். இது ஒரு தொகையாக வழங்கப்படுவது. சார்ந்திருப்பவர் ஒவ்வொருவருக்கும் தலா $10,000 வழங்கப்படும். இதைவிட மரண வீட்டுச் செலவுக்காக ஒவ்வெருவருக்கும் $6,000 வரை தரப்படும். இத்தொகைகளில் ஏதும் மாற்றமில்லை. ஆனால் இத்தொகை போதியதல்ல என்பவர்கள் தமக்கோ இணையருக்கோ $50,000 வரை பெறவும், சார்ந்திருப்பவருக்கு $20,000 பெறவும் செய்யலாம். அத்துடன் மரண வீட்டுச் செலவுக்கு $8,000 வரை பெற்றுக் கொள்ளலாம்.

இங்கு பொதுவான விதியாதெனில் கூடிய தொகைகள் வேண்டுபவர்க்கு அவர் பெறும் தொகைக்கேற்ற கட்டணம் கணிக்கப்படும். இதனால் கூடிய தொகையை பெற விரும்புபவர்கள் அதி கட்டணம் கட்டுபவர்களாவார்கள்.

### மாற்றம் 7:

தற்போதுள்ள காப்புறுதியின் பிரகாரம் சமூக, சட்டரீதியாக நீங்கள் யாருக்காவது நஷ்டஈடு செலுத்தவேண்டிவரின் முதல் $30,000 நீங்கள் கட்டவேண்டும். அதனை $20,000ஆக குறைக்க முடியும். மேலும் குடும்பச் சட்டப்படி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டில் நீங்கள் கொடுக்க வேண்டிய தொகை $15,000தில் இருந்து $10,000ஆக குறைக்க முடியும். அதேவேளை வேறு ஏதாவது Claim வரும் வேளைகளில் அதில் உங்கள் பங்களிப்பை $50, $300 அல்லது நீங்கள் ஒன்றும் கொடுக்காமல் முழுத்தொகையை காப்புறுதி அமைப்பே பொறுப்பை எடுக்கச் சொல்லலாம்.



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

### பொதுவான சில விடங்களை இங்கு கவணிப்போம்:

பொதுவாக விபத்துகளில் ஏற்படும் காயங்கள் மிகச் சிறியவையாக இருக்கும். அப்படியான சிறு காயங்களுக்கு வைத்திய, மறுசீரமைப்புக்கு வழங்கும் தொகை $3,500ஆகவும் அது உங்கள் காப்புறுதியின் தன்மையினால் மாறுபடாமலும் இருக்கும்.

விபத்தில் உங்கள் தவறு 25% அல்லது அதற்கு குறைவாக கணிக்கப்படும் வேளைகளில் உங்கள் கட்டண்தில் தாக்கம் ஏதும் ஏற்படுத்தாது.

மரணம் சம்பவிக்கும் வேளையில் நீதிமன்ற தீர்பில் கழிவுக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

விபத்தின் பின் வைத்தி பராமரிப்பில் அல்லது மறுசீரமைப்பதற்காக இருக்கும் ஒருவருக்கு காலத்துக்குக் காலம் எவ்வளவு பணம் செலவிடப்பட்டுவிட்டது, இன்னும் எவ்வளவு உள்ளது என்பது வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும். இது தனித்தனியாக வைத்திய, சீரமைப்பு, பராமரிப்பு என விளக்கமாக வழங்கப்படும்.

ஒரு விபத்தில் உங்கள் வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள திருத்தத்துக்கான தொகை அல்லது எத்தனை விழுக்காடு உங்கள் தவறு எனக் கணிக்கப்படும் வேளைகளில் அதிருப்தி இருப்பின் நீங்கள் ஒன்டாரியே வாகன திட்டத்தின் பிரகாரம் (Ontario Auto Policy) தீர்வு செய்யப்பட வேண்டும். இந்த முடிவுக்கு காப்புறுதி அமைப்பும் கட்டுப்பட வேண்டும்.

விபத்துக்குப் பின் வாடகைக்கு பெறப்பட்ட வாகனம் 450 கிலோ கிறாமுக்கு அதிகமாக இருப்பினும் அவை ஏழுதினங்களுக்கு பெறப்படும் வேளைகளில் விபத்திற்கு முன் இருந்த காப்புறுதியே அந்த வாகனத்தை காப்புறுதி செய்யப்படும்.

வாகன காப்புறுதி கட்டணத்தை நிர்னயிக்கும் வேளைகளில் நம்பிக்கை சுட்டு எண் (Credit Score) பாவிப்பது தவிர்க்கப்படும்

மேற்கண்ட மாற்றங்கள் காப்புறுதி கட்டணங்கள் அதிகரித்துச் செல்வதை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. இவை காப்புறுதியில் களவுகளை முற்றும் தவிர்க்காவிட்டலும், ஓரளவிற்காவது உதவும்.

திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிப்பது எப்படி தம்பி.

*(தமிழாக்கம்: குமார் புனிதவேல்)*

senthuran.punithavel@thaiveedu.com


■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



416.200.5470


Buy and Sell Properties!
Dufferin/Hwy 9
$469,900
- 2+1 Bedrooms
- 2 Washrooms
- Finished.Basement
- Agricultural Land = Extra $$
Markham/14th Ave
$511,900
- 4 Bedrooms
- 3 Washrooms
- Beautiful Layout
- Close to all Amenities
Kennedy/Steeles
$569,500
- 4+2 Bedrooms
- 4 Washrooms
- Finished Basement
- Excellent Location
416-450-3984
lsundaram@trebnet.com
416-230-6462
kkathir@trebnet.com
HomeLife Future Realty*
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Lokan Sundaram
Broker
Kathir Kandiah
Broker
*Independently Owned and Operated
This is not intended to Solicit Properties Currently on Sale


Ken Kirupa's iPad Giveaway
Refer your Friends & Family.
Receive* an ipad!
Do you know any of your friends or relatives who are
thinking of Buying or Selling their home?
Refer them to Ken Kirupa and receive an iPad!
*
Ken Kirupa's
Sales Representative
416.830.8191
Re/Max Crossroads Realty Inc,
Brokerage 416.491.4002
416Homes.ca | 905areaHomes.ca
*After completion of the transaction. Offer ends Dec 31, 2011 Call for more detail.

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?

**'How to sell your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கொண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

## அலகு - 11



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

(சென்றமாதத் தொடர்ச்சி)

### உங்கள் வீட்டை விற்பதற்கு தயார் செய்தல்:

வீட்டிலுள்ள குறைகள் திருத்தங்கள் முதலியவற்றை பட்டியலிட்டு வைத்துக் கொண்டால் உங்களிற்கு பெரும் உதவியாக இருக்கும். உங்கள் வீட்டின் விலையை திருத்தும் செலவு அளவிற்கு சரி செய்யலாம்.

### வீட்டின் உட்புறம்:

- வீட்டுத் தரை – Carpet, Hard Wood, Tile முதலியன
- அழுக்கு, கறை.
- தேய்மானங்கள் அல்லது சேதம்.
- சிறு Carpetகள் (கறையில்லாமலும், துப்பரவாகவும் இருத்தல்.)

### சுவர்களும், சீலிங்கும்:

- அழுக்கு, கைவிரல் அடையாளங்கள், கறை.
- ஆணி போன்றன.
- வெடிப்புகள், நீரினால் ஏற்பட்ட சேதங்கள், உடைந்த சிதறல்கள்.
- புது வர்ணம் தீட்டுதல், அல்லது சுவர் பேப்பர் ஒட்டுவது போன்றன.
- மெல்லிய உற்சாகத்தை தரக்கூடிய இயற்கையான வர்ணங்கள்.

### கதவுகள்:

- புது வர்ணம் தீட்ட வேண்டியிருக்கும்.
- பூட்டித் திறப்பது சுலபமாக இருக்க வேண்டும்.
- கதவும் பூட்டுகளும், கைபிடிகளும், பிணைச்சல்களும் சரியாக வேலை செய்ய வேண்டும்.

### ஜன்னல்கள்:

இவையும் கதவுகளைப் போல வர்ணம், பூட்டுதல் திறத்தல், பூட்டு, கைபிடி, பிணைச்சல்கள் யாவும் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

### ஜன்னல் திரைச்சீலைகள்:

இவை அழகாகவும், நல்ல நிலையிலும் சரியாக வேலை செய்யக் கூடியனவாகவும் இருக்க வேண்டும்.

### ஒளி:

மின் குமிழ்களெல்லாம் ஒளிர வேண்டும். உடைந்த, வேலை செய்யாத மின் குமிழ்கள், Switches உடைந்து அல்லது பழுதடைந்து இருந்தால் அவை புதுப்பிக்கப்பட வேண்டும். மின் விசிறிகள், மேசை விளக்குகள் அழகாகவும், நவீனமாகவும் சரியாக வேலை செய்யக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

### வீட்டு வாசல்கள்:

வீட்டு வாசல்கள், மக்கள் நடமாடும் பகுதிகள் அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் தடங்கள் ஏதும் இல்லாமல் மக்கள் போய்வரக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

### சுவர் அலுமாரிகள், பொருட்கள் வைக்கும் இடங்கள்:

இவை சுத்தமாகவும், பலமான பலகை, அல்லது தகட்டினால் தட்டுக்கள் செய்யப்பட்டு பொருட்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### சமையல் அறை:

எப்போதும் பளிச்சென்று இருக்க வேண்டும் தினமும் உபயோகிக்கும் உபகரணங்கள் மட்டுமே வெளியிலிருக்க வேண்டும். குளிர் சாதனப் பெட்டி துப்பரவாக இருப்பதுடன், நல்ல நிலையில் இருக்க வேண்டும். மின் அடுப்புகள், கைகழுவும் தண்ணீர் தொட்டிகள், பொருட்கள் வைக்கும் சிறு சுவர் அலுமாரிகள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்கான பொருட்கள் உடனுக்குடன் வெளியேற்ற வேண்டும்.

### வரவேற்பறை, சாப்பாட்டறை, படுக்கை அறை, மேலதிக பொருட்கள் வைக்கும் அறை முதலியன.

இவ் அறைகளெல்லாம் தூசின்றி பொருட்கள் அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டு அழகாகவும், கவர்ச்சியாகவும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். யன்னல் திரைச்சீலைகள் மிக அழகாகவும், துப்பரவாகவும் இருத்தல் வேண்டும். அதே போல் குளியலறை, கழிப்பறை என்பன அழகாகவும், துப்பரவாகவும் இருக்க வேண்டும்.

### வீட்டின் வெளிப்புறம்:

வீட்டில் வெளிப்புற முன்கதவுகள் மிக அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்க வேண்டும். கதவுகள் சுலபமாக திறந்து பூட்டக் கூடிய நல்ல நிலையில் பேணப்பட வேண்டும். வீட்டின் முன்புறம், பின்புறம் உள்ள தோட்டங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். மரம் செடிகள் காலத்திற்கு காலம். அழகாக வெட்டிவிடப்பட வேண்டும். நடைபாதைகள், வாகனப்பாதை ஆகியன அழகாகவும், சுத்தமாகவும், பொருட்கள் ஏதும் குவிக்கப்படாமலும் இருத்தல் வேண்டும்.

கார் நிறுத்தும் இடம் (Caraga) அழகாக இருப்பதுடன் கதவுகள் சுலபமாக திறந்து மூடக்கூடியதாக இருக்க வேண்டும்.

### உங்கள் வீட்டை சந்தைப் படுத்துவதற்கான நல்ல ஒரு திட்டம்.

உங்கள் வீட்டை நீங்கள் விற்கத் தீர்மானித்ததுடன், உங்கள் விற்பனை முகவருடன் ஒரு Listing ஒப்பந்தம் செய்து கொள்கிறீர்கள், இதன் மூலம் உங்களுடைய வீட்டிற்கு நல்ல விளம்பரமும், விலையும் கிடைக்கும். உங்கள் வீட்டிற்கு, வீட்டுச் சந்தையிலுள்ள விலையைப் பார்த்து, ஒரு நல்ல விலையை நிர்ணயிக்க வேண்டும்.

தொடரும்.

skbales@thaiveedu.com

■ ■ ■

Sale Of Business

I PICTURE FRAMINING & HOME DECOR .OIL PAINTINGS, MIRRORS, FLOWERS,VASES & GIFT ITEMS.

Brampton


$35,000 For Sale




House for Lease

Ellesmere & Markham

1 Bedrooms Basement Apt.




Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
- CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

www.thaiveedu.com


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Mccowan & 401
$265,000
Condo Apt., Bed rooms 1 Washrooms 1, Steps To Scarborough Town Centre, To 401, 24 Hrs Security, Bright And Spacious 550 Sq Ft South View
Melevin/Tapscott
$285,000
Townhouse 2 Storey, Bed rooms 3, . Washrooms 3, Complete Brick House, Steps To Mal, 5 Mins To Hwy 401. Finished Basement With 4Pc
9th Line & Hoover Park
$308,800
Townhouse 3 Story Bed rooms 2, Washroom 3, Walkout To Balcony Combines Your Living, Upgraded Cabinets,
Markham/Lawrence
$319,900
Detached Bungalow, Bed rooms 3+1 Washrooms 2, Upgraded Oak Kitchen, Hardwood Floors,Separate Entrance To A High Basement
Mccowan / Denison
$338,000
Link 2 Story Bedrooms 3, Washrooms 2, Hardwood Floor, New Garage Door With Opener And Remote.
Hoover Park/ 9th Line
$379,800
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3, Brand New All Brick Detached Home,Close To School,Parks,Shopping Cen-
14th Av & Brimley
$399,900
Detached 2 Story, Bed rooms 4+2 Washromss 4,Close To Schools, Parks,Shopping,Hwy 7 & 407.Basement Is Partial Finished
Mccowan/Dennison
$439,900
Link 2 Story, Bed rooms 4+2 Washrooms 4,2 Bedroom Bsmnt Apt. Sep Entrance, Close To School, New Front Door, Custom Made Wash-
East Of 10th Line (Ressor Rd)
$444,888
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Hardwood Flooring. Gas Fireplace With Upgraded Mantle,Close To Schools And Public Transit
Mccowan/16th Ave
$468,000
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, Close To School - Shopping - Go Train! Fully Fenced! Door Thru Home To Garage!
Middlefield/Dennison
$479,900
Detached 2 Story, Bedrooms 4+1, Washrooms 4.Finished Basement Apartment With Sep.Entrance, Close To Hwy 407 And All Other Amenities
Cornell Centre Blvd/16th Ave
$489, 990
Detached 2 Story, Bed rooms 3+1, Washrooms 4, Hardwood Floors On Main Floor, Ceramic Floors In Kitchen Breakfast Area.
North Of 407/E Of 9th Line
$498,000
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Separate Front Entrance, Extra Parking Spaces, Lots Of Upgrade, Minutes To 407
Ninth Line / 14th Ave
$519,800
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Open Concept Eat-In Kitchen With Walk Out To A Fully Fenced In Yard With A Great Deck.
Markham & Steeles
$540,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3, thousands In Upgrades,Gas Fireplace, Modern Kitchen, Fenced Backyard
16th/Bur Oak
$589,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3, 4 Yrs New,Thousands Spent On Upgrds,Approx 2,750 Sqft Of Luxury,9' Ceilings On Main
14th Avenue/9th Line
$599,9000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4 *Gas Fireplace *Double Garage *Direct Access To Home Through Garage
1Mccowan/16th
$1,390,000
Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 4,Custom-Built Home, Approx. 3600 Sq. Ft, Stone Counter Tops, Halogen Pot Lights.
Audley Sth Bayly
$319,900
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Access To 401 And Yet Walking Distance To Lake, Schools, Park Etc. Open Concept 6 Yr Home.
9th Line/16th Cornell
$99,900
Semi Detached 2 Story Bed rooms 3, Washrooms 2, Fully Finished Basement Featuring Potlights, Built-In Garage
Gore Rd/Cottrelle Blvd
$389,900
Condo Apt. Bed rooms 3, Washrooms 3, With Walk In-Closet And FullEnsuite,Super Clean Condtion, Fully Fenced,Home
Sales of Business
$1,600,000
sale of business with Property, Self Serve Gas Station With Fibre Glass Tanks, Just 45 Mintues From Mississauga.
Sales of Business
ESSO
$129,000
sale of business with out Property, Esso Gas Station Plus Large Convenience Store With 6/49 Located On High Traffic Hwy
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# மருத்துவக் கேள்வி - பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**எனது வலது காதில் ஒரு ஒலி மூன்று மாதமாகக் கேட்கின்றது. அதில் இருந்து காது சரியாகக் கேட்கவில்லை.**

*- சந்திரன்*

முசு முசுக்கை இலைப் பொடியை வாங்கி கால் தேக்கரண்டி அளவு தேனுடன் கலந்து காலை மாலை இருவேளை எடுத்து வாருங்கள். காது வலி, சத்தம் கேட்டல் எல்லாம் சரியாகி விடும்.

**எனது மனைவி உடல் பருமனாக இருக்கிறார். எப்பொழுதும் கை கால் நோவு என்று குறைப்படுகின்றார். கொலஸ்ரோல் அளவும் அதிகமாக இருக்கின்றது, மாதவிடாய் சரியாக வருவதில்லை, கண் பார்வையும் குறைந்து கொண்டு வருவதாகச் சொல்கின்றார். என்ன செய்வதென்றே தெரியவில்லை.**

*- தில்லைநாதன்*

நீங்கள் சொல்கின்றதை வைத்துப் பார்த்தால். இன்னும் நிறைய பிரச்சினைகள் இருக்கும் போலத் தோன்றுகின்றது. இவை எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வு இருக்கின்றது. அதுதான் மூங்கில் அரிசி. நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை பூத்து அரிசியாக மூங்கிலில் இருந்து பெறப்படும் ‘மூங்கில் அரிசி’ மிகவும் சக்தி வாய்ந்தது. இதனை ஒரு கைப்பிடி அளவு எடுத்து கஞ்சியாகக் காய்ச்சிக் குடித்து வர எல்லாப் பிரச்சினைகளும் தீரும்.

**தினமும் தலைவலி தாங்கமுடியவில்லை. தலைவலிக்கு ஒரு எளிதான மருத்துவம் சொல்லுங்கள்.**

*- அனு*

வேளா வேளைக்கு சாப்பிட்டு அத்துடன் சீனத் தேநீர் (Chinise Tea) குடித்து வந்தால் போதும். சீனாவில் பாரம்பரியமாக தயாரிக்கப்படும் மூலிகை தேயிலை தலைவலி மற்றும் இருமல், வயிற்றுவலி போன்றவற்றை எளிதாக தீர்க்கும் என ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவத்தில் இந்த மூலிகை தேநீர் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட நோய்கள் இந்த மூலிகை தேநீரால் தீர்க்கப்பட்டுள்ளது.

**நெஞ்சில் சளி அதிகமாகி இருமலும் சேர்ந்து கொண்டது. இதயமே பலவீனம் அடைந்தது போல் இருக்கின்றது.**

*- சுகுமாரி*

ரோஜா பூவை பாலில் காய்சிக் குடியுங்கள். சளியும் குறையும். இதயமும் பலப்படும்.

**ஆரோக்கிய வாழ்விற்கு ‘அக்யுப் ரெஸ்’ காலணிகள் அணியலாமா?**

*- ஜெயதேவன்*

அணியலாம். கடற்கரை மணலில் வெறுங் கால்களில் தினமும் அரைமணி நேரம் நடந்தால் எந்த நோயும் அண்டாது.

**பல நாட்களாக நித்திரை சீராக இல்லை. நல்ல நித்திரை வர என்ன செய்ய வேண்டும்?**

**- சித்திரா**

வாரத்தில் ஒரு நாள் (பெண்கள் மட்டும்) எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். மாலை அல்லது இரவு கோபி அருந்துதல் கூடாது. எந்தக் காரணம் கொண்டும் இரவு 8 மணிக்கு மேல் கெம்பியூட்டரின் முன் இருக்காதீர்கள். 8 மணிக்கு கெம்பியூட்டர் முன்பிருந்து எழுந்தால் தான் 10.30 மணிக்கு ஆழ்ந்த நித்திரை செய்யமுடியும். 9 மணிக்குள் தொலைக்காட்சியை அணைத்து விட்டால்த் தான் 1 மணி நேரத்தில் தூக்கம் உங்களைத் தழுவும்.

குறைந்த வெளிச்சத்தில் தூங்குவது நல்லது. வெளிச்சமே இல்லாமல் இருளாக இருப்பதும் சரியல்ல. படுக்கை அறை காற்றோட்டமான, சுத்தமான அறையாக இருக்க வேண்டும். தூங்குவதற்காக தூக்க மாத்திரைகளை பயன்படுத்துவதை முழுவதுமாகத் தவிர்த்து விடுங்கள். படுப்பதற்கு இரண்டரை மணிநேரத்திற்கு முன்பு இரவு உணவை முடித்து விடுங்கள். தூங்குவதற்கு முன்பு எளிய நடைப்பயிற்சி அல்லது கால்களை சோர்வடையச் செய்யும் பயிற்சி செய்வது மிகவும் நல்லது. திருமணம் ஆனவர்கள், மனமும் உடலும் தளந்திடுமாறு உறவு கொள்ளவது அவசியம்.

**எனது கணவர் மது அருந்தும் பழக்கம் உடையவர். நான் தினமும் காலையில் தேசிக்கையை தண்ணீரில் கலந்து கொடுக்கின்றேன். இது உடம்பிற்கு நல்லதா?**

*- சரோஜினி*

அப்படியே கொடுங்கள், நல்லது தான். தயிர் கொடுங்கள் இன்னும் நல்லது. மதுபோதை அடிமைகளை மீட்கவும் கூட ஆப்பிள் உதவுகிறதாம். போதைப் பழக்கத்தில் இருந்து விடுபட்டு, நமது உடல் ஆரோக்கியம் மேம் படவும் நம் உண்ணும் உணவிலுள்ள நச்சுகளை நீக்கவும். ரத்தத்தில் கலந்துள்ள நுண் கிருமிகளை நீக்கி ரத்தத்தை சுத்தம் செய்யவும் பழங்களை உண்ணுதல் நல்லது. இந்த பழங்கள் என்று குறிப்பிட்டதில் முதலிடத்தை பிடிப்பவை அப்பிள் பழமே. அப்பிளுக்கு பல் வேறு அரிய குணங்கள் இருப்பது பல்வேறு ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர், எனது மகனுக்கு வயிற்றில் புழுத்தொல்லை. இது தீர இயற்கை வைத்தியம் என்ன?**

*- சாந்தா*

இதற்காக பெரிதாக கவலைப்பட வேண்டாம். மல்லிகைப் பூக்கள் சிலவற்றை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அதனை வடிவட்டி அருந்தி வந்தால் போதும், குடற்புழுக்கள் தானாக வெளியேறிவிடும்.

**தினமும் மூட்டுவலியால் அவதிப்படுகின்றேன். வலி தீர இயற்கை வைத்தியம் என்ன?**

**- ஷோபனா**

இரண்டு மேஜைக்கரண்டி விளக்கெண்ணெயை அடுப்பில் சூடேற்றி ஒரு கோப்பை ஆரஞ்சு சாற்றில் விட்டு காலையில் உணவிற்பு முன் சாப்பிட வேண்டும்.

மூன்று வாரங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

பிறகு மூன்று வாரங்கள் விட்டு விட வேண்டும். இரண்டு மேஜைகரண்டி விளக்கெண்ணெயை இரண்டு மேஜைக்கரண்டி இஞ்சி சாறுடன் கலந்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று வாரங்கள் எடுக்க வேண்டும்.

பிறகு மூன்று வாரங்கள் விட்டு விட வேண்டும். மீண்டும் மூன்று வாரங்கள் முதல் பக்குவத்தை தொடர வேண்டும். இதை நோய் தீரும் வரை செய்ய வேண்டும். இந்த மருந்தை சாப்பிடும் போது நாம் காரமான உணவு வகைகளை அதிகம் எடுத்துக் கொண்டு புளிப்பான உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

**இருமல், சளி தொடர்ந்து வருடக் கணக்கில் இருக்கின்றது. எப்படிக் குணமக்குவது?**

*- திலகவதி*

சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்படும் தூதுவளை நெய்யை 1 முதல் இரண்டு தேக்கரண்டியளவு சாப்பிட்டால், எலும்புருக்கி நோய்கள், ஈளை இருமல், கபநோய்கள், மேக நோய்கள், வெப்ப நோய்கள், இரைப்பு, இளைப்பு இருமல் நோய்கள், வாய்வு, குண்டல வாயு முதலியன தீரும்.

மேலும் தூதுவளையை அடிக்கடி பயன்படுத்தினால் புற்று நோய் வராமல் தடுக்கலாம். தொண்டைப் புற்று, கருப்பை புற்று, வாய்ப் புற்று ஆகிய வற்றிற்கு தூதுவளை மருந்து மிக நல்ல பலன் கொடுத்துள்ளது. ஆய்வு மூலம் தொண்டைப்புற்று, வாய்ப்புற்றுக்கு தூதுவளை நல்ல மருந்தென நிரூபிக்கப்பட்டுள்ளது.

புகைப்பழக்கத்தின் பின் விளைவான புற்று நோய் எனக்கண்டறியப்பட்டால் ஆரம்ப நிலையிலே தூதுவளை இலையைப் பயன்படுத்தி, பூரண சுகாதாரத்தைச் சில மாதங்களிலே மீண்டும் பெற்றுவிடலாம்.

**தினமும் உணவில் நெய் சேர்த்துச் சாப்பிடுகின்றேன் அதனால் உடம்பிற்குத் தீங்கேதும் உன்டா?**

**- கஜமாலினி**

பகல் பொழுதில் உண்ணும் முதல் சாதத்தில் சிறிதளவு நெய் சேர்த்து உண்பது உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து உஷ்ணத்தைக் குறைக்கும்.

மேலும், மலச்சிக்கல், பித்தம், வாதம், கப நோய்கள், சொறி முதலிய நோய்களும், சாதத்தில் நெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தீரும். மாணவர்களுக்கு நினைவுத்திறன் அதிகரிக்கும். மன உளைச்சல், வயிற்றெரிவு, எலும்புருக்கி, மூலரோகம், ரத்த வாந்தியும் நிற்கும் சருமம் பளபளப்பாகும். கண்களுக்கு அதிக திறனும் உண்டாகும்.

**பொதுவாக இயற்கை உணவு என்று கூறுவது மரக்கறி உணவை மட்டும்தானே?**

*- சரத்*

இதனை கொஞ்சம் விரிவாகப் பார்த்தல் அவசியம். பொதுவாக, இயற்கை உணவுகளை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை: 1. சாத்வீகம், 2. சக்தி விரய உணவுகள், 3. சக்தி விரயம் ஆகாத உணவுகள்.

சாத்வீக உணவுகள்தான் நமக்கு முழு சக்தியை கொடுக்கின்றன. பூசணிக்காய், கேரட், வெள்ளரி, புடலங்காய், பாகற்காய், கோலிபிளவர் உள்ளிட்ட காய்கறிகள் சாத்வீக உணவுகள் பட்டியலில் சேர்கின்றன. இந்த உணவுகளை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் நம்மிடம் சாத்வீக குணங்கள் வளரும். இந்த சாத்வீக காய்கறிகளின் முழுமையான பலன் நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் அவற்றை பச்சையாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை அதிக நேரம் வேகவைக்க வைக்க அவற்றின் செரிமான நேரமும் அதிகரித்துக்கொண்டே போய்விடும். எண்ணையில் போட்டு அதிகமாக வேக வைத்தால் அதன் செரிமான நேரம் இன்னும் கூடுதலாகும்.

சக்தி விரய உணவுகள் பட்டியலில் வெள்ளைப் பூண்டு, பெருங்காயம், வெங்காயம், மிளகாய், கோப்பி, தேனீர், புகையிலை உள்ளிட்டவை இம்பெறுகின்றன. இவற்றை முடிந்தவரை மிதமான அளவிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை அதிக அளவில் எடுத்துக்கொண்டால் கொடூரமான எண்ணங்கள், காம உணர்வு, சோம்பேறித் தனம் அதிகரிக்கும். நீங்கள் அடிக்கடி கோப்பி, தேனீர் குடிப்பவர் என்றால் அதை குறைத்து விட்டு, அதற்கு பதிலாக ‘சுக்கு கோப்பி’ குடிக்கலாம்.

சக்தி விரயம் ஆகாத உணவுகள் பட்டியலில் தக்காளி, முளைவிட்ட பயிறு வகைகள் இடம் பெறுகின்றன. தினமும் இரவு உணவில் தக்காளியை / ஆப்பிள் சேர்த்து வந்தால் மலச்சிக்கல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் வராது. புற்றுநோயை நிச்சயமாகத் தவிர்க்கலாம்.

**டாக்டர், மூலிகை செக்ஸ் மருந்துகள் ஆண்களுக்கு நல்லதா அல்லது பெண்களுக்கு நல்லதா?**

*- விஜி*

இருவருக்கும் நல்லதுதான். சமீபத்தில் தமிழக அரசு “லபூப் சகிர்” என்ற மூலிகை செக்ஸ் எண்ணெய் விற்பனையை துவங்கியுள்ளது. பதினாறு டன் எண்ணெய் விற்று தீர்ந்துவிட்டது. இதனை சட்ட சபையில் எல்லா உறுப்பினர்களுக்கும் இலவசமாகக் கொடுத்துள்ளார்கள். முக்கிய செய்தி என்னவென்றால் இது ஆண்களுக்கானது. இனி வரும் நாட்களில் பெண்களுக்காகவும் இது போன்ற தயாாிப்புகளை கொண்டுவர விஜியின் சார்பாக நான் பரிந்துரை செய்கின்றேன்.

**எங்களுக்குத் திருமணம் ஆகி ஐந்து வருடங்கள் ஆகின்றது. ஒரு பெண் குழந்தையும் இருக்கிறாள். எனது மனைவி அடிக்கடி உடல் உறவுகொள்ளக் கூடாது என்கிறார். உங்கள் ஆலோசனை என்ன?**

*- கனகரத்தினம்*

உடல் உறவைத் தவிர்த்தால். மனக் குழப்பம், சோர்வு, வெறுப்பு போன்ற பல பிரச்சினைகள் ஏற்படும். தேவைப்படும் போது புரிந்து கொள்ளுதலோடு கூடிய உறவு அவசியம். இதே தொழிலாக நாள்பூராவும் அலையவும் கூடாது. அடக்கி வைக்கவும் கூடாது.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

“தெய்வானை எதனின் அடையாளம்? அவள் சிதைந்தது எதனில்? கதிர்வேல் எதன் குறியீடு? மாணிக்கம் தாத்தா எதன் பிரதி?

இன்னும் இந் நாவலில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் நாமறிந்த சகவாசங்களின் குறியீடுகள்தான். ஆனால் நாம் அறிய மறந்த - புரிய விரும்பாத நிஜவாழ்வின் நிதர்சன சாட்சியங்களாக அவை நம் முன் நிற்கின்றன.”

நூல் பற்றிய குறிப்பில் பொன் விஜயன்

'Here comes a totally different novel that is going to chatter the readers complaisance… 'Vidhi' has the mesmeric quality to demand repeated reading.'

The Hindu, 9 Nov. 1994

தொண்ணூறுகளில் ஈழத்து நாவலாக பரவலான விமர்சன கவனங்களைப் பெற்றிருந்த தேவகாந்தனின் “விதி” நாவல் பதினாறு ஆண்டுகளின் பின் இலக்கு வெளியீட்டினரால் இப்போது மீள்பதிப்பாகியிருக்கிறது.

கனடாவில் கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை,
(GTA Square மிடில்பீல்ட் & பிஞ்ச் சந்திப்பு)



# கேரளா ஆயுர்வேதா

## KERALA AYURVETHA

www.ayurvetha.com




**மதுப் பழக்கத்தில் இருந்து விடுதலை.**

நான் 1981-ம் ஆண்டில் குடிக்கக் கற்றுக் கொண்டு, பின்னர் அந்தப் பழக்கத்தில் இருந்து விடுபட முடியாமல் மிகவும் சிரமப் பட்டேன். 2005-ம் ஆண்டு அந்த அதிசயம் நடந்தது. அதன் பின்னர் முற்றிலும் அந்தப் பாழாய்ப் போன மதுப் பழக்கத்தை விட்டு விட்டேன். இப்பொழுது மிகவும் சந்தோஷமான வாழ்க்கை. எனக்கு உதவி செய்தவர் உங்களுக்கும் உதவி செய்வார். - இரா. சேகர்.

கல்லீரலைப் பலப்படுத்தி என் உயிரைக் காப்பாற்றிய மருத்துவருக்கு நன்றி. - நடராஜன்.

**மதுவை மறந்தேன் - மகிழ்ச்சி அடைந்தேன்.**

நான் டாக்டரை சந்தித்த போது மதுப் பழக்கத்தை விடுவேன் என்று எனக்குத் தெரியாது.
நான் விட்டவுடன் என் மனைவியும், மகளும் ஆச்சரியத்தின் எல்லைக்கே போய் விட்டார்கள். - இராசலிங்கம்.

**மாரடைப்பு குணமானது.**

எனது இதய அறுவை சிகிச்சைக்கு மருத்துவர்கள் நாள் குறித்த நிலையில் நான் டாக்டரை சந்தித்தேன்.
Myodrops என்ற மருந்தை எடுக்கும்படி எனக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. என்ன ஆச்சர்யம் அறுவை சிகிச்சையில் இருந்து தப்பித்தேன். - வேதாசலமூர்த்தி



**மூல வியாதி குணமானது.**

எனது கை கால் நடுக்கம் அதிகமாகி எழுதக் கூட முடியாமல் சிரமப்பட்டேன்.
டாக்டரை சந்தித்த போது தீராத மூலத்திற்கும் எனது இதயத்திற்கும் ஆயுர்வேத மருந்து கொடுத்தார்.
21 நாட்களில் மூலவியாதி குணமாகியது. அதன் பின் படிப் படியாக எனது இதய பலவீனமும் குணமாகியது.- சக்திவேல்.

**மருந்தில்லாமல் குணமாகிய வியாதி.**

என்னுடைய கொலஸ்த்ரால் அளவு அதிகமாகியதால் எனக்கு ஆங்கில மருந்து பரிந்துரை செய்யப்பட்டது.
ஆனால் எனது நண்பர் மூலமாக இங்கு வந்தபொழுது சில வாழ்க்கை முறைகளையும் நல்ல கொலஸ்த்ரால் எடுக்கும் படியும் அறிவுறுத்தப் பட்டேன். நான்கு மாதத்திற்குள் முழுமையாக மாறியது. எந்த மருந்தும் தேவை இல்லாமல் போயிற்று - அற்புதா.

**குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெற்றோம்.**

நான்கு வருடங்களாக கரு தங்காமல் மிகுந்த வேதனை அடைந்தோம்.
இரண்டு மாத சிகிச்சையில் எனது மனைவியின் கர்ப்பத்தில் கரு தங்கியது. - கஸ்தூரி & இராஜன்.

**உயரமாக வளர முடிந்தது**

எனது மகன் வயதிற்கு ஏற்ற வளர்ச்சி இல்லாமல் குள்ளமாக இருந்தான்.
ஆறு மாத சிகிச்சையில் எட்டு சென்டிமீட்டர் உயரம் வளர்ந்து ஆச்சர்யப் படுத்தினான். - இராமானுஜம்.

**ஆஸ்த்மா சுகமாகியது.**

பத்து வருடங்களாக என்னை வேதனைப் படுத்திய ஆஸ்துமா ஆறு மாத தீவிர சிகிச்சையினால் முற்றிலும் குணமாகியது.
இப்பொழுது வாழ்க்கை சுகமாக இருக்கின்றது. - பத்மஜா ஆறுமுகம்.

**தோல் வியாதி மாறியது.**

பதிமூன்று வருட தோல் வியாதி முழுவதும் மாறியது. - கிஷான்.

**தாம்பத்திய நிறைவு கிடைத்தது.**

சில வருடங்களாக தாம்பத்யத்தில் ஆர்வம் குன்றிபோய் விரக்தி அடைந்து விட்டேன்.
டாக்டரை சந்தித்து, நட்போடு கூடிய ஆலோசனையும் சிகிச்சையும் பெற்று மீண்டும் இல்லற சுகத்தில் திளைத்தேன் நன்றி! - அப்துல் ரஹீம்.

**வெண் புள்ளி மாறியது.**

எனது மகனின் உதடு, கை, முதுகு ஆகிய இடங்களில் பரவிய வெண் புள்ளி மாறியது.
அருமையான ஆலோசனைகள். - ஜெய் பெர்னாண்டோ.


உங்கள் பிரச்சினைகளை இன்றே முடிவுக்குக் கொண்டுவந்து ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்திடுங்கள்.

1269 WARDEN AVENUE , SCARBOROUGH , ON , M1R 2R4
( ONE BLOCK NORTH OF LAWRENCE )
TEL : 416 995 0416 FAX : 416 946 1638 ayurvetha@gmail.com

# நிகழ்வுகள்நிலைதனிநபர்மதிப்பீடு

## (Perspective)

**கந்தையா பரநிருபசிங்கம்**



ஒருவர் தனது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சாவால்கள், முட்டுக்கட்டைகள் மற்றும் சந்தர்பங்கள் ஆகியவற்றிற்கு எவ்வாறு, தக்கவாறு இயங்குகின்றார் என்பதை அன்றும், இன்றும், என்றும் அவருடை நிகழ்வுகள்நிலை-தனிநபர்மதிப்பீடு நிர்ணயம் செய்து நிற்கும். அவருடைய நிகழ்வுகள்நிலைதனிநபர்மதிப்பீடு அவருடைய தற்போதைய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், பழக்கவழக்கங்கள், உணர் வுகள் மற்றும் சுயவாலோசனை ஆகியவற்-றால் செல்வாக்குக்கு உட்படுத்தப்படும். “ஒரு மனிதன் அவனது இருபத்தைந்து வயதில் இறந்து எழுபத்தைந்து வயதில் புதைக்கப்-படுகின்றான்” என்பது சில நூற்றாண்டுகள் முன்வாழ்ந்த ஒரு அறிஞரின் கூற்று. இதிலி-ருந்து நாம் எதை விளங்கிக் கொள்கின்-றோம்? மக்களில் அநேகமானோர் வாழ்க்-கையை அனுபவிக்கும்போது மிகவும் மட்டுப்-படுத்தப்பட்ட நிகழ்வுகள்நிலைதனிநபர்மதிப்-பீட்டை செய்கின்றனர். இதை இன்னொரு வகையில் கூறினால், அநேகமான மக்கள் தங்களின் பூரண மறைதிறமையை (Potential) விளங்கிக் கொள்வதில்லை அல்லது தங்கள் முன் இருக்கின்ற எல்லா சாத்தியங்களையும் தெளிவுறவறிவுதில்லை.

வாழ்க்கையின் சவால்கள், முட்டுக்கட்டைகள், சந்தர்பங்கள் ஆகியவற்றை சந்திப்பதற்கு உரிய வழி இவ்வகை மதிப்பீடேயாகும். அதிலும் சரியான நிகழ்வுகள்நிலைதனிநபர் மதிப்பீடு நாங்கள் கற்பனை செய்யக்கூடிய சாத்தியங்களிக்குச் செல்வதற்கான கதவுக-ளைத் திறக்கும். ஒருவரின் நிதர்சனம் பற்றிய இவ்வகை மதிப்பீடு நிதர்சனத்தைவிட முக்கியம் வாய்ந்தது. ஒருவரின் கற்பனை ஆற்றல் தொடர்ந்து அவரின் தற்போதைய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், உணர்வுகள், சுய ஆலோசனை ஆகியவற்றுடன் இனைந்-ததான அவர் வாழ்வு பற்றிய இந்தவகை ஆய்வினை வரவளைத்துக் கொண்டே இருக்கும். அத்துடன் இவ்வகையான செயற்-பாடு எமது மனவுணர்வுக்கு பிறம்பாகவே நடைபெற்றுவரும்.

மனிதர்கள் அநேக சந்தர்பங்களில் அவர்களின் வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளுக்குரிய பிரதிபலிப்பை அந்தக் கணத்தில் உள்ள தேர்வுகளின் (Choices) விழிப்புணர்வு சார்பாக-வன்றி அவர்களின் பழக்கவழக்கம் சார்பாகவே கொடுக்கின்றனர். எப்பொழுது நாங்கள் ஒரு தேர்வு உள்ளதாக ஞாபகமூட்டப்படுகின்றோ-மோ அப்பொழுது நாங்கள் எங்கள் விழாவில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு அதீத வலிமையுள்ள நிகழ்வுகள்மதிப்பீட்டை பிரதி-பலிப்பாகக் கொடுக்க முடியும். பிரதிபலிப்பு (response) என்பது பொறுப்புணர்வு (respon-sibility)இன் மூலமாக இருப்பதை இங்கு கவனித்தல் நன்மைபயக்கும். எங்கள் முன் நடைபெறுகின்றன நிகழ்வுகளுக்கு அதிக நேரம் எடுத்து பிரதிபலிப்புக்களைச் செய்யும் போது எங்கள் முன்னுள்ள எல்லா தேர்வுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படும். எங்கள் உண்மையான நோக்கங்களுடன் ஒரே நேர் கோட்டில் இணைந்துள்ள தேர்வுகள் பற்றிய விழிப்புணர்வு நாங்கள் சிறப்பான முடிவுகளைச் செய்யத் தூண்டி நாங்கள் எமது வாழ்வில் அதித வாழ்வோட்டத்தையும், சந்தோஷத்-தையும் பெற வழிவகை செய்யும்.

> “ ஒரு இலக்கை அடைய
> நோக்கமும் ஊக்கமும் மட்டும் போதாது.
> மனவழுத்தத்தைக் கொடுக்கும் சொற்களைத் தவிர்த்து,
> சாத்தியக்கூறுகளுடன் இணைந்ததான
> நிகழ்வுகள்நிலைமதிப்பீடுகளைச்
> செய்ய வேண்டும். ”

ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நாளும் எமது வாழ்வில் அடுத்து நடக்கக்கூடியவை தெடர்பான எல்லைகள் அற்ற சந்தர்பங்கள் வந்து போகின்றன. ஆனால் நிகழ்காலத்தில் பல மக்கள் தங்க-ளுடைய வாழ்க்கையை எல்லைகளுடைய சந்தர்ப்பங்கள் செல்வாக்குச் செலுத்த இடம் கொடுத்துவிட்டார்கள். இங்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு எதிர்பார்த்த விளைவை நாடி இருக்கின்றது. இந்நிலை எதனால்? எது உண்மையில் சாத்தியமானது என்பதை அறிந்து கொள்வதை எங்கள் நம்பிக்கைகள், எதிர்பார்புகள், பழக்கவழக்கங்கள், மற்றும் சுயவாலோசனைகள் மழுங்கடித்து விடுகின்றன! கீழத்தேய தத்துவ ஞானி கூறினார் ‘எவனொருவன் தன்னை முற்று முழுதாகப் புரிந்து செயற்படுகின்றானோ அவனே அதிக மனவலிமை கொண்ட போர்வீரனாகின்றான்’. இந்த முற்று முழுதான புரிதலுடன் கூடிய செயற்பாட்டின் முதற்படியாக சரியான நிகழ்வு-கள்நிலைதனிநபர்மதிப்பீட்டை விருத்திசெயக் கற்றுக் கொள்வதாக அமையலாம். அதாவது அந்த நிகழ்வுகள்மதிப்பீட்டில் ஒருவர் தானா கவே ஏற்படுத்திக் கொண்ட எல்லைகள் இருக்கக்கூடாது!

எல்லைகள் வகுக்கப்படாத நிகழ்வுகள் நிலையை விருத்தி செய்ய முதற்படியாக நாங்கள் எங்கள் அபிப்பிராயங்களை உரு-வாக்க வழமையாகப்பாவிக்கும் சொற்பதங்கள் பற்றிய விழிற்பினைப் பெறவேண்டும். ‘முடியாது’ ‘சாத்தியமற்றது’ போன்ற சொற் களை முறையே ‘முடியும்’ ‘சாத்தியமானது’ என்ற பதங்களால் பிரதியீடு செய்யும்போது

*30ம் பக்கம் பார்க்க...*



ஏற்கனவே வைத்திருக்கும்
மோட்கேச்சில் உள்ள
நிபந்தனைகளை வாசித்தும்
எனக்கு விளங்குதில்லையே

நிகழ்கால வட்டிவீத
அதிகரிப்பில் நான்
வைத்திருப்பது எனக்கு
பொருத்தமான மோட்கேச்சா ?

ஏற்கனவே உள்ள
மோட்கேச்சினை
பெனால்ட்டி கட்டி
பிரேக்பண்ணினால்
நன்மையுண்டா ?

வீட்டை உறவுகளுக்கிடையில்
பெயர்மாற்றம் செய்து
மோட்கேச்சினை புதுப்பிப்பதன்
மூலம் அதிகளவு வட்டி
செலுத்தும் அனைத்து
கடன்களையும் ஒன்றாக்கி
மாதாந்த தவணைக்கட்டணத்தில்
சேமிக்கலாமா ?

5 YRr பிக்ஸ்ட்
மோட்கேச்
3.49%

வேரியபில்
மோட்கேச்
2.25%

உங்களது கிறடிட் ஸ்கோர் குறைவாகவுள்ளதா ?

அல்லது கிறடிட்டே இல்லையா?

எவ்வாறு எங்களிடமே கிறடிட் காட் ஒன்றினை பெற்று
கிறடிட் ஸ்கோரினை அதிகரித்தக்கொள்வது ?

அல்லது உங்கள் கிறடிட் Bad ஆகவுள்ளதா ?

எவ்வாறு இவற்றினை நிவர்த்தி செய்வது ?

CENTUM Rapid Mortgages Inc.

FSCO Brokerage Lic # 10156
211-80 Nashdene Rd, Toronto, ON, M1V 5E4
www.centumrapid.com

Call: தயா PK கந்தையா BAS, ABR®, AMP
Principal Mortgage Broker
FSCO Broker Lic. # M08001083

Cell : 416-716-8707 Bus: 416-644-3555

Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply. Call for details.

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
www.computek.edu

## Food Handler Certification



Next Class
**Sept 11, Saturday**
9.30 AM - 3.30 PM
**Call for registration - 416.285.9941**

*If you have a job where you handle food you need Food Handler Training!*
*Increases your job skills.*
*Be more marketable!*

**Food Handler Training available for:**
*PSW's, Food Service Workers, Dietary Aides, cooks, Daycare providers, ECE/ECA workers, home care workers, nannies, restauranteurs, .*

*CITY OF TORONTO ACCREDITED PROGRAM*

## Bank Teller



**Next batch , Wednesday Sept. 8th 6 PM**
**Call for registration -**
**416.321.9911**

**Get ready for job in 6 - 12 months !**
*If you are :*
- *Currently receiving E.I. benefits*
- *Received E.I. within 3 yrs*
- *Received maternity benefits within 5 yrs*

*You may be eligible for HRDC funding*

*Are you not qualified for HRDC Funding Assistance ?*
*Is your HRDC funding REJECTED?*
*You may still qualify for other Financial Assistance*
*Please call us for details*

Diploma Programs



*Network Engineering*
*Personal Support Worker (PSW)*
*Early Childcare Asst.(ECA)*
*Computerized Accounting*
*Business Administration*
*Medical Office Admin (MOA)*

Financial assistance may be available to those who qualify

| Markham | Scarborough | Toronto |
|---|---|---|
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

# நிகழ்வுகள்நிலை...

28ம் பக்கத் தொடர்ச்சி...

எங்கள் நிகழ்வுகள்நிலையை உடனடியாக மாற்றிக் கொள்ளலாம். பின்வரும் சிறு உதாரணமே இதை விளக்கும். “என்னால் எனது சொந்த வியாபாரத்தை தொடங்கமுடியாது” என்பதை “என்னால் எனது சொந்த வியாபாரத்தை தொடங்க முடியும்”.
சரியான நிகழ்வுகள்நிலைமதிப்பீடு எங்களை எங்களின் எல்லா இலக்குகளையும் அடைய ஊக்குவித்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு இலக்கையும் சாத்தியம், நிச்சயம், என்பவற்றின் நிகழ்வுகள்நிலை மதிப்பீட்டின் மூலம் அணுகுதல் முக்கியமானது. முன்பு கூறியதுபோல் ‘முடியாது’ ‘சாத்தியம் அற்றது’ ‘ஒருபொழுதும் இயலாது’ என்ற வார்த்தைகள் மக்களை அவர்களது வாழ்வை அனுபவிக்க மட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வுகள்நிலைமதிப்பீட்டிற்கு உட்படுத்தும். இதனால் அவர்கள் மனவுணர்வு இல்லாமல் “எது சாத்தியமானது” என்பதைக் கருதும் போது குறைவான மாற்றுத் தெரிவுகளையே காண்கின்றனர்.

தற்காலத்தில் அனேகமாவர்கள் ஒரு இலக்கை கட்டாயம் அடைந்தே தீரவேண்டும். அடையவேண்டிய தேவை உண்டு என உணர்கின்றனர். இவ்வாறான சொற்கள் மனவுணர்வு இல்லாமலேயே அழுத்தம், மனவழுத்தம், அங்கலாய்ப்பு ஆகியவற்றை இலக்கு சார்பாக நாங்கள் உணரும் வகையில் தோற்றுவிக்கின்றன. இதனால் குறிப்பிட்ட இலக்குகள் பாதகமான உணர்வுகளுடன் இணைத்து கொள்கின்றன. நாங்கள் நாளாந்தம் செய்யும் தெரிவுகள் சார்பாக விழிப்புணர்வு அடைவதை விடுத்து இலகுவாகச் செய்யக்கூடிய பழக்க வழக்க விருத்திகளை மனவுணர்வுகள் பதிவு செய்து வருவதால் எங்கள் முன் விரிந்து பரந்துகிடக்கும் சாத்தியக்கூறுகளை விளங்கிக் கொள்ளாததிலிருந்து மறைக்கப்படுகின்றோம்.

இவ்வாறான விவரணநிலையில் இலக்குகளே கெடுபிடி, மனவழுத்தம், அங்கலாய்ப்பு போன்றவற்றை உற்பத்தியாக்கும் ஆதாரமாக மாறிவிடுகின்றன. இதனால் பல மக்கள் தங்கள் இலக்குகளிலிருந்தே விடுபடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிடுகின்றார்கள். ஒரு இலக்கை அடைய நோக்கமும், ஊக்கமும் மட்டும் போதாது மறுபுறத்தில் மனவழுத்தத்தைக் கொடுக்கும் சொற்களைத் தவிர்த்து சாத்தியக்கூறுகளுடன் இணைந்ததைதான் நிகழ்வுகள்நிலைமதிப்பீடுகளைச் செய்ய வேண்டும். அப்பொழுது எமது இலக்குகளைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம். உதாரணங்களுக்கு சில வாக்கியங்கள் பின்வருமாறு “என்னால் ஒரு நிலைக்கு வரமுடியும்”, “நான் எனது சொந்த வியாபாரத்தை நடத்துதல் சாத்தியமானது”, “நான் நாளுக்கு நாள் அதிக நம்பிக்கை கொண்டவனாக மாறிவருகின்றேன்”, “நான் எனது குடும்பத்துடன் அன்பான, உதவிசெய்கின்ற தொடர்பினைக் கட்டியெழுப்ப சிந்தமாகின்றேன்” அத்துடன் “நான் எனது இலக்குகளை அடைவதற்கு சரியான பாதையில் இப்போது செல்கின்றேன்”.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

**N.K.S**
Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**
**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# உலக அரங்கில் சீனா



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

கடந்த மாதம் சீனா உலகில் பெரிய ஏற்றுமதியாளராக வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுவரையில் அந்த பெயரைச் சுமந்த ஜேர்மனி கடந்த ஆண்டு 18 வீத வீழ்ச்சியை ஏற்றுமதியில் சந்தித்தாலும் சீனா 2008 பொருளாதார பின்னடைவில் இருந்து விரைவில் மீண்டு வழமைக்குத் திரும்பி 8–9 வளர்ச்சியைக் காட்டியதாலும் இது சாத்தியமானது. இது போன்ற மாற்றங்கள் இன்னும் தொடரும். அதாவது பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சீனாவின் பாதிப்பும் பலமும் அதிகரிக்கப் போகிறது. அத்துடன் உலக அரங்கிலே சீனாவின் பொறுப்பும் அதிகரிக்கப் போகிறது.

அண்டைநாடுகளுடன் நல்ல உறவையும் உலகில் நல்ல கௌரவமான நிலையையும் பேண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது. 2008இல் ஒலிம்பிக் போட்டியை மேற்கு நாடுகள் பொறாமைப் படும்படி நடத்தி சீனாவின் பணபலம் தொழில்நுட்ப வளர்ச்சி இப்படிப்பட்ட ஒரு பெரிய நிகழ்ச்சியை நடத்தும் நிர்வாகத் திறனையும் வெளிக்காட்டியது. அத்துடன் விண்ணுக்கு மனிதனை அனுப்பி அமெரிக்கா ரஷ்யா போன்ற சில நாடுகளே இருக்கும் விண்வெளி அமைப்பிலே அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டது.

இன்னும் இது போன்ற பல சாதனைகள் சீனாவில் நடக்கப் போவதை உலகம் பார்க்க இருக்கிறது. கடந்த முப்பது வருடங்களாக சீனாவில் நடந்த பொருளாதார சீர்திருத்தங்கள் இவற்றை சாத்தியமாக்கி இருக்கின்றது. இதைப்பற்றி பேசுகையில் இவையெல்லாம் எப்படி ஆரம்பித்தது என்று பார்பதும் முக்கியமாகிறது.

1971ல் யப்பானில் நடந்த பிங் பொங் விளையாட்டுப் போட்டியொன்றில் (31st World Table Tennis Championship) பங்கு பற்றிய அமெரிக்க விளையாட்டுக் குழுவிற்கு சீனாவிற்கு வரும்படி அழைப்பு சீனாவினால் விடுக்கப்படுகிறது. இந்த அழைப்பை ஏற்ற அமெரிக்க குழுவின் விஜயத்தைத் தொடர்ந்து 1974ல் ஜனாதிபதி நிக்ஸனின் விஜயம் தொடர்ந்தது.

இந்த விஜயம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதன் மூலம் எப்படி இரு பெரிய அரசியல் வைரிகள் தங்களது சந்தேகங்களை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. திரு நிக்சனின் விஜயத்



தைத் தொடர்ந்து சீனாவின் ஏற்றுமதிகளுக்கு மேற்கு நாடுகளும் குறிப்பாக அமெரிக்காவும் தங்களது சந்தையைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தன. இதன் மூலம் பொருளாதாரம் வளர்ச்சிகண்டது. கோடிக்கணக்கான சீனர்கள் வறுமைக் கோட்டிற்கும் மேலே வந்தார்கள். Deng Xiaoping அவர்களது பொருளாதாரச் சீர்திருத்தகங்களை தொடர்ந்து வெளிநாடுகளின் முதலீடுகள் அங்கு அனுமதிக்கப் பட்டன. ஆனால் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் மேற்கு நாடுகளைக் குறி வைத்து அமைத்து வைத்திருந்த ஒரு நாட்டுக்கு சந்தைகளை திறந்து விட வேண்டிய அவசியம் மேற்கு நாடுகளுக்கு இல்லை.

இந்த நிலையில் சீனா உலக அரங்கில் தனது நிலையை முழுமையாகத் தக்க வைத்துக் கொள்ள சீனா பல முக்கிய அரசியல் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அயல்நாடுகளுடன் நல்ல உறவைப் பேணுதல். உள்நாட்டில் சமநிலையைப் பேணுதல். மற்றும் சீனாவில் பல சிறுபான்மை மக்கள் உள்ளார்கள். அவர்கள் சமமாக நடத்தப்பட வேண்டியுள்ளது. திபெத், தாய்வான் பிரச்சினைகளுக்கு சமாதான முறையில் தீர்வை முன் வைக்க வேண்டும். ஆயுதத்தால் தீர்வுக்கு தயார் என்ற சீனக் கொள்கை இருக்கும் வரையில் தாய்வானுக்கு தன்னைப் பாதுகாக்கும் உரிமையும் இருக்கிறது.

உள்நாட்டிலும்கூட ஆளும்கட்சியால் பொருளாதாரம் கட்டுபடுத்தப்படும் நிலையில் இருந்து விலகி எல்லாப் பிரஜைகளுக்கும் சமனான சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இத்தனை மாற்றங்களுக்கு பின்னும் சராசரி ஒருவருக்கு வருமானம் (per capita income) USD 3000 மட்டுமே. மேற்குநாடுகளில் இது 30,000 மேலாகும். தனிமனித கருத்துச் சுதந்திரத்திற்கு பெரிய தடை இருக்கிறது. பல மனித உரிமை ஆர்வலர்கள் மிக நீண்ட சிறைவாசங்களை அனுபவித்து வருகிறார்கள்.

சர்வதேச அரங்கிலே மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவதும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பதும் மேற்கு நாடுகளாக மட்டும் இருக்கக்கூடாது. கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மனிதகுலம் தனது சுதந்திர வேட்கையில் பல படிகளைத் தாண்டியிருக்கிறது. அது பின்னோக்கிப் போக சீனா காரணமாக இருக்கக்கூடாது. இந்தத் தகைமைகளை அடையும் போதுதான் சீனாவிற்கு சரியான இடம் சர்வதேச அரங்கிலே கிடைக்கும்.

4000 ஆண்டுகளுக்கு மேலான ஒரு புராதன நாகரிகம் உலக சரித்திரத்தில் பல தடவைகள் பெரிய பேரரசுகளை அமைத்த நாகரிகம் இனிவரும் நூற்றாண்டுக்கான மாற்றங்களை மேற்கொள்ள பின்நிற்கக் கூடாது. இது எல்லோருக்கும் ஏன் சீனாவிற்கும் கூட மிகவும் முக்கியமானது.

முடிவாக 1971ல் ஒரு சிறிய பிங் பொங் விளையாட்டில் ஆரம்பித்த அரசியல், உலக அரங்கில் பாரிய மாற்றத்தை இன்று கொண்டு வரும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■


*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*




உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

$509,000




**Torbram / Father Tobin**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms, Stone Front,D/D Entry,Over $45K Spent On Upgrades,Like Pot Lights In & Out,Crown Mouldings

$252,500




**Birchmount / Ellesmere**
Condo Apt, 2 Bedrooms, 2 Washrooms, Luxury Condo By Tridel,Close To Everything,Steps To T.T.C. Fridge,Stove,B/I Dishwasher,Dryer,All Window Coverings,All Elfs.

$669,000




**Weston / Rutherford**
4 Bedrooms, 4 Washrooms, Granite Countertops in Kitchen & Washroom, Upgrade Kitchen, Part Finish Basmt

$169,000



**Kipling / Steeles**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Very Clean And Nice Spacious 2 Bdrm Apt.One Bus To Subway

- digi Media -



முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald Award Winner

**சத்தி மருதப்பா**
Sales Representative

**416.816.1500**

Not intended to solicit properties currently listed for sale.

மேலும் பல Gas Stationகளும்
வியாபாரநிலையங்களும்
விற்பனைக்குண்டு

Century 21
**Affiliate Realty Inc.,** Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: **416-290-1200,** Fax: **416-290-1900**

# உங்கள் வெற்றி உங்கள் கையில்

## தொடர் - 5


சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

"வரவு எட்டணா செலவு பத்தணா" என்னும் பாட்டைக் கேட்டால் சிரிப்பு வருகிறது. வரவு வருகிறதோ இல்லையோ செலவு ஆயிரமாயிரமாய் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வு தான் இன்றைய எங்கள் வாழ்வு. உலகில் எங்கு வாழ்ந்தாலும், வருமானம் உள்ளபோதும் சேமிக்கும் பழக்கம் எமக்கு இல்லாது போய்க் கொண்டிருக்கின்றது.

நாம் எவ்வளவு உழைக்கின்றோம் என்பது முக்கியமல்ல. எமது வருமானத்திலிருந்து எவ்வளவு தொகையை சேமிக்கின்றோம் என்பதுவே முக்கியமான விடயமாகும். இது பற்றி இத்தொடரில் அடிக்கடி நான் குறிப்பிட்டு வருகின்றேன். இனி இதனை பற்றி ஆழமாக ஆராய்வோமாக.

ஒரு தனி நபரது அல்லது ஒரு குடும்பத்தினது மொத்த வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயுட்கால சராசரி வருமானத்தை கணக்கிடுவோமாக. சராசரியாக ஒருவர் 40 வருடகாலம் உழைக்கிறார் எனக் கொள்வோம்.

இது ஓர் அண்ணவான கணக்கு:

$30,000 × 40 வருடம் = $1,200,000
$40,000 × 40 வருடம் = $1,600,000
$50,000 × 40 வருடம் = $2,000,000

இதென்ன பெரிய கணக்கு வருட சம்பளத்தை 40ஆல் பெருக்கிப்பார்க்கத் தெரியாத முட்டாள்களா நாம்? ஏன் இதைக் குறிப்பிட வேண்டும் என நீங்கள் நகைக்கக் கூடும். ஆனால் இந்த 40 வருடகாலத்தில் நீங்கள் உழைத்த இத்தனை பெருந் தொகைப்பணத்தில் உங்களுக்காக சேமித்த தொகை எவ்வளவு என்பதே என் வினா? இத்தனை வருட காலத்தில் இவ்வளவு உழைத்தேன் என்பதில் எந்தப் பெருமையும் இல்லை. இறுதியில் கையில் ஒரு சதமும் மிஞ்சாதவர்களாக எம்மக்களில் பலர் அந்திமக் காலத்தில் வாழுகையில் மனம் வேதனையடைகின்றது.

தாயகத்தில் பொருளாதார வளர்ச்சிகளுக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கக் கூடும், ஆனால் கனடா போன்ற மேலைத்தேய நாடுகளில் பலதரப்பட்ட முதலீட்டு வருமான வாய்ப்புகளுடான பொருளாதார வளர்ச்சிகளுக்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தும் அவற்றை பயன்படுத்தத் தெரியாது துன்பப் படுவது வேதனைக்குரியதொரு விடயமாகும்.

பணத்தைச் சேமித்து முதலீடுகளூடாக உங்கள் பொருளாதார நிலையை வளர்த்துக் கொள் வதில் தான் உங்கள் பொருளாதார வெற்றி தங்கியுள்ளது.

இதுவரை காலமும் நீங்கள் உழைத்தவற்றை அண்ணளவாகக் கணக்கிட்டு அதனை உழைக்க நீங்கள் எடுத்த காலத்தையும் கணக்கிட்டு இவற்றிலிருந்து உங்கள் சராசரி வருமானத்தொகையை கணக்கிடுங்கள். இதேபோல் உங்களின் இதுவரை காலச் சேமிப்புத் தொகையையும் கணக்கிடுங்கள். இப்பொழுது

$$\frac{\text{சேமிப்புத் தொகை / வருடம்}}{\text{வருமானம் / வருடம்}} \times 100$$

என்ற கணக்கீட்டைக் கொண்டு இவ்விகிதாசாரத்தின் பெறுமானத்தை கணக்கிடுங்கள். நிச்சயம் இந்தப் பெறுமானம் உங்களுக்கு அதிர்ச்சியைத் தரும். சேமிப்புப் பழக்கத்தை நம்மில் எத்தனை பேர் கைக்கொள்கின்றார்கள் என ஆராய்ந்தால் அதிர்ச்சி தான் மிஞ்சும். சேமிப்புக்கு முதலிடம் கொடுப்பவனே செல்வந்தனாகின்றான் என்பதே உண்மை.

மேற்கூறிய பெறுமானம் மிகச்சிறிதாக உள்ளதாயின் உங்கள் சேமிப்பு பழக்கம் படுமோசமாக இருக்கிறது என்று பொருள். இதுவரை காலமும் உழைத்த பணம் அநியாயமாக வீணாகின்றதே எனும் கவலை, உறுத்தல் எழும். அத்தகைய உறுத்தல் உங்களை சிந்திக்க வைக்கும். இனி நீங்கள் சேமிக்க சிறிதளவேனும் பழகிக் கொள்வீர்கள்.

> **"சேமிப்பு என்பது ஒருவித பயிற்சி. ஆரம்பத்தில் இதர பயிற்சிகள் போல கடிமாகத்தான் இருக்கும். எனினும், பின்பு அது ஒரு மகிழ்ச்சிதரும் சுவாரஸ்யமான விளையாட்டாகப் பழகிவிடும்."**

சரி, இனி உங்கள் உழைப்பைக் கொள்ளை கொள்ளும் சிக்கல்களைப் பற்றி பார்ப்போம். வருமான வரி எமது வருமானத்தைச் சூறையாடும் முதன்மைக் காரணியாகத் திகழ்வதைக் காணலாம். அடுத்து குடும்ப செலவுகள் மாதாந்த செலவுகள் என எண்ணற்ற செலவுத் தொடர்கள், எம்மைத் தொடர்ந்து வந்து பற்றிக் கொள்ளுவதையும் காணலாம். "வரவுக்கு மிஞ்சிய செலவுகள்" என பெருமூச்சு விட்டு காலம் முழுவதும் வாழப் போகின்றீர்களா? இந்தப் புராணம் ஆயுள்முழுவதும் தொடர வேண்டுமா? இந்நிலை மாற்றம் பெறாவிடில் 10 வருடங்களின் பின்பும் இதே கதையைத்தான் செல்வீர்கள். இந்நிலையை மாற்ற வேண்டுமானால் இதர செலவுகளுக்கு நிதியை ஒதுக்குமுன் உங்கள் சேமிப்புக்கு (முதலீட்டுக்கான முதலுக்கானது) முதல் நிதியை ஒதுக்குங்கள்.

உங்கள் எதிர்காலத்தின் நீண்டகால பொருளாதர சுதந்திர நோக்கு உங்களுக்குள் இருக்குமேயானால் நிச்சயம் உங்களுக்கு நீங்கள் முதலிடம் கொடுப்பீர்கள். மிகச் சிறப்பாக கூறுவதானால் உங்கள் வருமானத்தில் 1% வீதம் என்னும் இந்த சேமிப்புக்காக ஒதுக்கப்படல் வேண்டும். இவ்வண்ணம் ஒதுக்குவதைவிட முக்கியமான விடயம் இவ் வண்ணம் சேமிக்கும் தொகையை எக்காரணம் கொண்டும் எதற்காகவும் "தொடக் கூடாது!" என்னும் வைராக்கியத்தை வளர்த்துக் கொள்வதாகும்.

இவ்வண்ணம் உங்களுக்காக நிதி ஒதுக்குவதை முதன்மையாகக் கொண்டு சேமிக்கும் சேமிப்பானது நாளை ஒரு வியாபாரத்தின் முதலாகவோ சேமிப்பு திட்டங்களில் முதலீடாகவோ, வீடு வாங்குவதற்கு முற்பணமாகவோ (Down Payment) எதிர்கால பொருளாதார வளர்ச்சி தரும் ஏதேனும் ஒரு முதலீடாகவோ உதவப்போகிறது. எனவே துணிந்து சேமிப்பீர்.

ஒவ்வொரு 10 வருடங்களுக்குட்பட்ட காலத்திலும் சுமார் 75% சதவீதமான குடும்பங்கள் நாளாந்த வாழ்க்கையில் பல்வேறுபட்ட பொருளாதாரப் பழுக்களால் மிகவும் வேதனைப்படுகின்றனர். இத்தகைய பொருளாதாரச் சிக்கல்களுக்கான காரணங்களின் வரிசையில் வேலையின்மை உடல்ரீதியான இயலாமைகள் போன்றவை முக்கிய காரணிகளாகின்றன. இவ்வாறான பழுக்களைச் சுமக்க முடியாமல் போரடிக் கொண்டிருப்பவர்களுக்கு அன்றாட வாழ்வே சவாலாக இருக்கையில் இது போன்ற நிதி சேமிப்புப் பற்றி நினைப்பதற்குக் கூட இயலாது போகலாம்.

இத்தகைய நிலைகளில் அவசரகால தேவைகளுக்காக ஒரு சிறு விட்டுக் கொடுப்பை வேண்டுமானால் நீங்கள் செய்யலாம். அதாவது எற்கனவே தீர்மானித்திருந்த 10% சேமிப்பு ஒதுக்கீட்டுத் தொகையில் ½ பங்கைக் குறுகிய காலத்திற்கு எதிர்நோக்கும் அவசரகால தேவைகளுக்கு ஒதுக்கிவிட்டு மீதித் தொகையை உங்கள் நீண்டகால இலட்சியத்துக்காக முன்னர் கூறியபடி ஒதுக்கலாம். அதாவது சேமிப்பை 5% வீதமாகக் குறைக்கலாம்.

எது எவ்வாறாயினும் சேமிப்புக்காக நிதி ஒதுக்குவதை முற்றிலுமாக ஒரு போதும் நிறுத்தி விடக்கூடாது. இன்றைய இயலாமை களைவிட நாளைய இயலாமைகள் மோசமானவையாக அதிகம் பயமுறுத்துபவையாக இருக்கக்கூடும். எனவே அவ்வேளையில் உங்களுக்கு உதவ நீங்கள் தான் முன் வர வேண்டும்.

சேமிப்பு என்பது ஒருவித பயிற்சி. ஆரம்பத்தில் இதர பயிற்சிகள் போல கடினமாகத்தான் இருக்கும். எனினும் பின்பு அது ஒரு மகிழ்ச்சி தரும் சுவாரஸ்யமான விளையாட்டாக பழகிவிடும்.

என்ன விளையாட நீங்கள் தயாரா?

(தொடரும்..)

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■




தாய்வீட்டிற்காக கருத்தோவியம் சிவ.மாமுனி ©2010

"Hun! யாரை Stupid Company எண்டு phoneஇல திட்டுறீர்?"

"முந்தி சாமத்தியவீட்டுக்கு பிள்ளையை Carஇல கொண்டந்தவை. பிறகு லிமோவில. பிறகு ஹெலிக்கொப்ரரில. நான் சாமூவின்ரை சாமத்தியவீட்டுக்கு வித்தியாசமா ட்ரை பண்ணுவம் என்டால்..... Stupid Air Canada.... இதுக்கெல்லாம் பிளேன் தரஏலாதாம்."

**HELP WANTED**

**கதவு மற்றும் ஜன்னல்கள் தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.**

**கருணா**

**416 892 7070**

**Viewtech Windows & Home Improvements.**

FROM LOW
$200,000

# WEST LAKE

A TRUE URBAN VILLAGE
LIVE/WORK/SHOP/PLAY




LIMITED TIME OFFER

**ONLY 10% DOWN PAYMENT**
for the first year

**FREE PARKING**

**FREE LOCKER**

**FREE ASSIGNMENT**
(you can sell your condo unit before the closing date)

**DISCOUNTS UP TO $10,000**

**SUITE FEATURES**
8'6" – 9'6" Ceilings* | Stainless Steel Energy Star Fridge, Energy Star Dishwasher, Range & Integrated Microwave Hood Fan | Full size Washer & Dryer | Designer Selected Finishes | Designer Selected Kitchen Cabinetry | Caesar Stone Counter tops | Kitchen Back splash | Bathroom Vanity | Laminate Flooring in Foyer, Living/Dining Room, Kitchen, Bedroom(s) & Den* | Tile Flooring in Bathroom(s) | Designer Selected Light Fixtures | Capped ceiling outlets in Dining Room & Den*

**BUILDING AMENITIES**
48-storey building | 487 suites | Stylishly finished lobby with 24-hr. Concierge | Multi-purpose Room with walkout to a beautifully landscaped terrace | Games and relaxation lounge with walkout to rooftop terrace and BBQ area |Dedicated Guest Suites

**CLUB W**
Grand Party Room equipped with Kitchen | Juice Bar with access to large Terrace | Outdoor Lounge | BBQ areas | Outdoor Putting Green | Impressive Fitness Health Centre | Men's & Women's Change Rooms | Indoor Pool with hot tub and fireplace | Showers | Spa Eucalyptus Steam Room and Sauna | Meditation and Multi-purpose Room | Yoga Studio | Massage Therapy Rooms | Sports Lounge with Billiards Table, Games Table & Bar complemented with Plasma TV | Children's Craft Centre | Business Centre | Private Theatre

**1 BEDROOM from $204,900**
**1 BEDROOM + DEN from $229,900**
**2 BEDROOM from $320,900**
**3 BEDROOM from $373,900**

**CALL NOW TO BOOK AN APPOINMENT TO VISIT THE SALES OFFICE**

**SUJAN SHAN**
*Real Estate Broker*

*"The person you can rely on for all your Professional Real Estate Needs"*



Dir: **416 402 1040**
Bus: 416 321 2228
E mail: sujan.shan@gmail.com

RE/MAX
Vision Realty Inc. BROKERAGE
Each Office Independently Owned and Operated
2210 Markham Road, Unit 1
Toronto, Ontario M1B 5V6


பேரழிவினைக் கொண்டுவரும்
நீரழிவு நோயினை
இரண்டே இரண்டு மாதங்களில்
முற்றும் முழுதாக கட்டுப்படுத்த
முடியும்!
ஊளைச் சதை பெருகுவதை
தடுக்கிறது!
வாத வலியை நீக்குகிறது!
உடலுக்கு புதுத்தென்பைக்
கொடுக்கிறது!
Diabina
HERBAL DRINK
Gluteala
HERBAL DRINK
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் கருக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
க்லூாட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
இயற்கை மூலிகையின் உதவியுடன்
உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்புவும் கிடைக்கிறது.
Ervamatin
POWER
Loção Capilar Natural
Dreamron
HENNA
Treated Natural
Henna
இயற்கை மூலிகையிலான
தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாணிடி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The ERVAMATIN HAIR LOTION
provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.
SABONA
Amazon
Health Care
BBB
ACCREDITED BUSINESS
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)
Send gifts to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
www.egiftsender.com


# 2010/2011 INDOOR SOCCER SEASON

## FOR 10 YEARS AND UNDER

SEASON RUNS FROM OCTOBER 3RD, 2010 TO MAY 2011 AT BUR OAK SECONDARY SCHOOL GYM

REGISTER NOW FOR OUR HOUSE LEAGUE AND COMPETITIVE (REP) PROGRAMS

**REGISTRATION:**
**Dates:** October 3rd, October 10th, and October 17th.
**Time:** 5:00 PM – 8:00 PM
**Location:** Bur Oak Secondary School Gym






ஓடி விளையாடு பாப்பா. ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
- மகாகவி பாரதி

CHEETAHS

U10 (2001), U9 (2002), U8 (2003)
Competitive (Rep) Team Tryouts
- Oct 3rd at 6:30 PM
- Oct 10that 6:30 PM
- Oct 17that 6:30 PM

416 454 7522
647 241 7373
416 476 6873
team@cheetahssoccerclub.com
www.cheetahssoccerclub.com

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# உடல் உறுப்புகளின் தானம்

## (Organ & Tissue Donation)

எங்கள் வாழ்வின் முடிவு! என்றோ ஒரு நாள் என்பது நிட்சயமானது.

அந்த மரணத்தின் பின்பு மின்தீயினுள் அல்லது மண்ணினுள் என்றோ ஒருநாள் சங்கமமாகப் போகும் நாம் உடலின் சில உறுப்புகள் வாழ்விற்காகத் துடிக்கும் இன்னொருவருக்கு நாம் ஏன் வழங்கக்கூடாது?

கனடாவில், ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டும் சுமார் 1700 நோயாளிகள் உடல் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைக்காக காத்துக்கொண்டு இருக்கிறார்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. பொருத்தமானவர்களின் உடல் உறுப்புகளை பொருத்திக் கொள்ள வேண்டிய நோயாளிகளுக்கு தக்க சமயத்தில் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தி (Organ Transplant) பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு வாழ்வினை வழங்கவென கனடாவின் வைத்திய நிலையங்கள் தயார் நிலையில் உள்ளது.

இவ்வாறு தேவைப்படும் நோயாளிகளுக்கு உடல் உறுப்புகள் தானம் செய்ய விரும்புபர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவர்களின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அதனை மருத்துவ நிறுவனங்களுடன் சேர்ந்து நிறைவேற்றும் அரச நிறுவனம் ஒன்று இயங்கிக்கொண்டிருப்பது பற்றி அறிந்து கொண்டீர்களா?

தங்கள் மரணத்தின் பின்பு மற்றவர்களுக்கு உதவுவோம் என்ற நல்லெண்ணங்களை மனதில் கொள்பவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை இதுவரை முன் எடுக்காவிட்டால்

**தகவல் தொடர் - 45**

உடனடியாக நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

### மரணத்தின் பின்பு உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புவர்கள் எவ்வாறு? எப்படி உடன்படிக்கை செய்துகொள்வது?


> “ *மரணத்தின் பின்பு,*
> *அழிந்துபோகும் உங்கள் உடல் உறுப்புக்களைத்*
> *தானமாகக் கொடுப்பதனால்,*
> *இறந்தும்*
> *இறவாமையைப் பெறுகின்றீர்கள்.* ”

தானம் செய்ய விரும்புவர்களின் விண்ணப்பங்கள், விபரங்களை ஏற்று அதனை பதிவில் வைத்திருந்து உடல் உறுப்பு மாற்றங்களுக்காக காத்திருக்கும் நோயாளிகளுக்கும் அவர்களோடு சம்பந்தப்பட்ட வைத்திய நிலையங்களுக்கும் வழங்கவென கனடாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் அதற்குரிய நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டேயுள்ளன.

எம்மவர்கள் பலர் வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில், மாகாண சுகாதார அமைச்சின் கீழ் கடந்த 2000ம் ஆண்டிலிருந்து ஒரு நிறுவனம் பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களிடம் மட்டும் இத்தகைய உடன் படிக்கைகளை அவரவர் மாகாண மருத்துவ சுகாதாரகாப்புறுதி அட்டை (Ontario Health Card) அடையாளத்தினை அடிப்படையாக வைத்து திரட்டி, அவற்றினை தங்கள் மின் கணினி தகவல் மையத்தில் கவனமாக வைத்திருந்து சம்பந்தப்பட்ட நோயாளிகள் எதிர்கொள்ளும் வைத்தியசாலைகளுக்கு வழங்கி வருவதுடன், இவ்உறுப்புகள் தானம் தொடர்பான விழிப்புணர்வுகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர்.

பிரபல மருத்துவர்களை இயக்குனர்களாக கொண்ட இவ்நிறுவனத்தின் விபரம் பின்வருமாறு:

**TRILLUM GIFT OF LIFE NETWORK**



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

**533, University Ave. Suite #900**
**Toronto, ON. M5G 1W7**
தொலைபேசி: 416 363 4001, 1 800 263 2833
**இணையதளம்: www.giftoflife.on.ca**

தங்கள் மரணத்தின் பின்பு தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புகிறவர்கள் பின்வரும் வழிகளில் தங்கள் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

- இவ்நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு உடன்படிக்கை விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டு நிறுவனத்தின் இணையத்தளத்திலிருந்து விண்ணப்படிவம் பதிவிறக்கம் செய்து நிரப்பி, கைச்சாத்திட்டு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைத்து உடல் உறுப்புக்களைத் தானம் செய்பவராக உங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்
- தங்களின் மருத்துவ சுகாதார காப்புறுதி அட்டையினை குறிப்பிட்ட சில வருடங்களுக்கு ஒருமுறை அலுவலகம் சென்று புதுப்பிக்கும் போது (Ontario Health Insurance Card Renewal Time) இவ் உறுப்புகள் தானம் செய்யும் உடன்படிக்கை விண்ணப்பங்களை அவர்களிடம் கேட்டு

*46ம் பக்கம் பார்க்க...*



# கனடாவில் வீட்டுவிலை எத்திசையை நோக்கிச் செல்கிறது?



இரஞ்சன் பிரான்சிஸ்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

அமெரிக்காவில் கடந்த பத்து வருட காலமாக, குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் எந்த கேள்வியும் இன்றி வழங்கப்பட்டு வந்த வங்கிக்கடன்கள் ஆகிய காரணிகளால் வீட்டு விலைகள் முன்னெப்போதும் இல்லாத அள விற்கு மிகவும் உயர்ந்து, அண்மைக்காலத்தில் சரிவடைந்தன. சிகரத்தை தொட்ட விலைகளிலிருந்து அனேகமான அமெரிக்க வீடுகள், பாதிவிலையை விடக்குறைவான விலைக்கு வந்துவிட்டன.

அதேவேளை கனடாவில் வீடுகளின் பெறுமதி ஓர் அசாதாரண உயர்வினால் இயற்கைக்கு மாறாக உயர்ந்துள்ளதாகவும் எனவே இது ஒரு "நீர்க்குமிழி" (bubble) நிலைக்குச் சமம் என்றும் குமிழிகள் உடைவது போல வீட்டின் விலையிலும் சரிவு நிச்சயம் ஏற்படும் என்பதும் ஒரு சாராரின் கருத்து. "Toronto, Vancouver, Calgary, Edmonton, Montreal மற்றும் Ottawa ஆகிய கனடாவின் ஆறு பெரு நகரங்களிலும் இந்த நிலையற்ற தன்மை வேகமாக பரவி வருகிறது என்று Canadian Centre for policy Alternatives (CCPA)யில் ஆராய்ச்சியாளராக பணிபுரியும் David Macdonald என்பவர் குறிப்பிடுகிறார்.

கனடாவின் வங்கிகள், அமெரிக்க வங்கிகள் போலல்லாது மிகவும் இறுக்கமான சட்ட திட்டங்களைக் கொண்டிருப்பதோடு வீட்டின் பெறுமதிக்குரிய அடமானக் கடன்களை (mortgage) மிகவும் நன்றாக ஆராய்ந்துணர்ந்து வழங்கி வருகின்றமையால் வீட்டின் விலைகள் சாதாரண விலையுயர்வு நோக்கியே செல்கின்றன. 'வீக்கம்', 'சரிவுநிலை' என்ற பதங்களெல்லாம் மாயை என்றும் ஆதலால் வீட்டின் விலை தொடர்ந்து பெருமளவு கூடாவிட்டாலும் வீட்டின் விலையில் சரிவு ஏற்படச் சாத்தியமில்லை என்பர் மறுசாரார். The Conference Board of Canada வெளியிட்ட பிரசுரத் துண்டுகளில் "கனடாவின் வீட்டு விற்பனை சந்தை ஒரேயடியாக வீழ்ச்சியடைந்துவிடாது" என்று Mario Lefebvre என்னும் நிபுணர் எழுதி இருக்கிறார்.

வீட்டுக்கான கடன் கொடுக்கும் நிதிநிறுவனங்கள், மற்றும் வீட்டுவிற்பனை முகவர் அமைப்புக்களைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்கள், கனடிய பொருளாதார மந்த நிலையையும் அதனால் வீட்டுவிலையில் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பற்றியும் மேற்படி ஆருடங்களைத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் இந்த எதிர்வுகூறல்கள் எல்லாம் ஒன்றுக் கொன்று மாறுபாடாகவும், முரணாகவும் இருப்பதனால் பொதுமக்கள் இவர்களது கூற்றுக்களின் நம்பகத்தன்மையைச் சந்தேகத்துடன் பார்க்க வேண்டிய நிலையிலுள்ளனர். குழப்பத்தைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் பல சந்தேகங்களை இவை உருவாக்கியுள்ளன.

உண்மையிலேயே அமெரிக்காவின் சீரற்ற பொருளாதார நிலை, மற்றும் அங்குள்ள வங்கிக் கட்டமைப்புகளின் பொறுப்பற்ற தாராள பொருளாதாரக் கொள்கைகளால் பல இலட்சம் மக்கள் தங்கள் தொழில்களையும் வீடுகளையும் அடுத்தடுத்து இழந்து விட்டனர். அவர்களது கொள்வனவுச்சக்தி மிகவும் அடி மட்டத்துக்குச் சென்றுவிட்டது. கனடாவின் மிக முக்கியமான பொருளாதாரப் பங்காளியான அமெரிக்கா, தற்பொழுது பொருளாதாரத் தாக்கத்திலிருப்பதால் கனடாவில் உற்பத்தியாகி அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களை வாங்கும் சக்தியை அமெரிக்கர்கள் இழந்துவிட்டனர். அதனால் கனடாவின் ஏற்றுமதியில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையாகும். உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள் அமெரிக்க முதலீடுகளில் போட்ட கோடானுகோடி டொலர்கள், கடலில் கரைத்த புளி போலக் காணாமல் போய்விட்டன. அதேவேளை கனடிய, அமெரிக்க டொலர்களின் பெறுமதி கிட்டத்தட்டச் சமமாக இருப்பதுவும் ஏற்றுமதிக்குப் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது. கனடாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதைவிடச் சீனாவிலிருந்து பலமடங்கு குறைந்த விலைக்கு அதே பொருட்களை அமெரிக்கா இறக்குமதி செய்து வருகின்றது. இவையெல்லாம் கனடிய பொருளாதாரத்தின் மேல் விழுந்த பலத்த அடிகளாகும்.

எங்களது தாயகம் போலன்றி, மேற்கத்தைய நாடுகளில் வீடு என்பது உறையுள் மட்டும் என்ற நிலையுடன் நில்லாமல் மூலதனமாகவும், விற்பனைப் பண்டமாகவும் கருதப்படுகிறது. எனினும் பொதுமக்களில் பெரும்பாலானோர் தங்கள் வீட்டை 'உறைவிடம்' என்று கருதுவதினால் பெருநகரங்களைத் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் வீட்டின் விலை உயர்வு எப்பொழுதுமே சிறியதாகவும் சீராகவும் இருந்து வந்துள்ளது. எது எவ்வாறாயினும் கனடிய வீட்டு விற்பனை கடந்த ஏழு மாதங்களில் அண்ணளவாக 25% குறைந்துள்ளது. இது கனடா முழுவதற்குமான அளவீடும் 2009ம் ஆண்டு விற்பனையுடன் ஒப்பீட்டின்மூலம் பெறப்பட்ட எண்ணிக்கையுமாகும். இவ்வீழ்ச்சி வீட்டுவிற்பனையில்தான் ஏற்பட்டுள்ளதே தவிர வீட்டின் விலையில் அல்ல. வீட்டின் விலையிலும் சற்றுச் சரிவு ஏற்பட்டுள்ளதெனினும் அது சராசரியேயன்றி எல்லா இடங்களுக்கும் பொதுவான வீழ்ச்சியல்ல. அதேவேளை அமெரிக்காவிலோ 2010ம் ஆண்டு யூலை மாதத்தில் மட்டும் வீட்டு விற்பனை மேலும் 25%த்தால் குறைந்துள்ளது.

> " வீடு என்பது உறையுள் மட்டும் என்ற நிலையைத் தாண்டி மூலதனமாகவும், விற்பனைப்பொருளாகவும் கருதப்படுகிறது. ஆனால், பெரும்பாலான பொதுமக்கள் தங்கள் வீட்டை 'உறைவிடம்' என்று கருதுவதினால் வீட்டின் விலை உயர்வு சிறியதாகவும் சீராகவும் இருந்து வந்துள்ளது. "

கனடாவில் வரலாறு காணாத குறைந்த வட்டி வீதம் அறவிடப்படுவதாலும், புத்தம்புதிய வீடுகள் கட்டப்படுவது குறைந்துள்ளதாலும், புதிய குடிவரவாளர்கள் ஆண்டுதோறும் கனடாவை நோக்கிப் பெருமளவில் வருவதாலும் தற்போது இரண்டு மூன்று மாதங்களாகத் தொடரும் வீட்டு விற்பனை மந்தநிலை நீங்கி மீண்டும் நல்லநிலைக்குச் செல்லும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அமெரிக்காவில் வீட்டு விற்பனை சம்பந்தமாக நடந்தேறிய தரம் குறைந்த சூழ் நிலைகள், கனடாவில் நிகழ வாய்ப்பில்லை. ஏனெனில் கனடாவின் சிறந்த வீட்டு நலத்திட்டங்கள் அந்த திடீர் சீர்குலைவு ஏற்படுவதை 2008, 2009ல் தடுத்துவிட்டன. எதிர்காலத்திலும் எந்த பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படாத வண்ணம் அவை பாதுகாக்கும் என்று கூறுகிறார் C.D. Howe Instituteன் தலைவர் Jim Macgee.


மேலும் நாங்கள் Toronto அல்லது Greater Toronto Areaவை உதாரணமாக எடுத்துக்கொண்டால் கனடாவிற்குள் வரும் புதியகுடிவரவாளர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இந்தப்பகுதியில்தான் குடியேறுகிறார்கள். அத்துடன் உலகத்திலுள்ள வாழ்க்கைத்தரம் மிகுந்த ஐந்து பெருநகரங்களில் Torontoவும் ஒன்றாக இருப்பதால் கனடாவின் இதர பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கே குடிபெயர்ந்த வண்ணமேயுள்ளனர். (இதனை Internal migration என அழைப்பர்.) இவற்றுடன் Greater Toronto Areaவில் வாடகை வீட்டில் வசிப்பதற்கும், குறைந்த வட்டியில் அடமானக்கடன் எடுத்து வீட்டின் உரிமையாளராகி வசிப்பதற்கும் பாரிய வித்தியாசம் ஏதுமில்லாதபடியால் வீடு வாங்குபவர்களது எண்ணிக்கையில் தேக்கம் அடையும் நிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே உள்ளன. கனடாவின் பிரபலமான பொருளாதார நிபுணர் Will Dunningஇன் கூற்றின்படி 'நீர்க்குமிழி' மாதிரி வீட்டுவிலையேற்றமும் தாக்கத்துக்குள்ளாகி உடைந்து ஒளிந்துவிடும் நிலை கனடாவில் வராது. அப்படி வீட்டு விலையில் மாற்றம் ஏற்படுவதாயின் அது ஒரு சிறிதளவு ஏற்றத்தாழ்வாக மட்டுமே இருக்கும் என்பதாகும்.

நிபுணர்கள் தம் மாறுபட்ட கருத்துக்களால் பொதுமக்களை மயக்கமடைய வைக்கும் அறிக்கைகளை வெளியிட்டாலும் கனடிய பொதுமக்கள் எப்பொழுதுமே தாங்கள் தரமான சிந்தனையாளர்கள் என்று மீண்டும் நிரூபித்துள்ளார்கள். வீட்டின் விலைகள் குறையலாம் என்ற செய்திகள் பரவலாகப் பொது மக்களிடம் பரப்பப்பட்ட வேளைகளிலெல்லாம் வீட்டு உரிமையாளர்கள் பதறியடித்துக்கொண்டு (panic) தங்களது வீடுகளை விற்பனைக்காக விடுவார்கள். இதனால் வீட்டுச் சந்தையில் விற்பனைக்கான வீடுகள் தேவைக்கதிகமாக வரும் நிலை ஏற்பட, வீடு வாங்குவோர் (நுகர்வோர்) தங்களிடம் தெரிவுக்கான சந்தர்ப்பம் (Choice) கூடுதலாக உள்ளதால் விலையைக் குறைத்துப் பெற்றுக் கொள்ள முடியும் நிலை ஏற்படும். இது வீட்டு விலைச்சரிவுக்கான தொடக்கமாக அமையும். ஆனால் இந்நிலையை வீட்டு உரிமையாளர்கள் இக் காலகட்டத்தில் உருவாக்காதபடியால் வீட்டின் விலையில் திடிரெனப் பெருஞ்சரிவு ஏற்படும் நிலை இல்லையென்பதே எமது கருத்தாகும்.

ranjanfrancis@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி. பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997

AZ வாகன சாரதிகள் தேவை
கனடா மற்றும் அமெரிக்காவில்
(USA, Canada) கனரக வாகனங்கள்
செலுத்துவதற்கு அனுபவமுள்ள (Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.
Tel: 416 749 5392
Fax: 416 749 5087



**Shan Thayaparan**
Sales Representative

Dir: 416.567.7675
Bus: 416.321.2228

www.shan123.com
E mail: Shan123@rogers.com

RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

# Scarborough




4 Bedrooms, Huge Backyard
Hardwood main floor. Finished
basement with separat entrance
Close to Schools, Shopping
401, TTC and more!!!

# Markham




Updated Home!!!
Hardwood throughout. Finished
New Kitchen, New Hardwood
Staircase. Finished basement
Close to Schools, 407 & More

# Stouffville





2600 Sqf4 Bedrooms, 3 Full
Washrooms, Hardwood Floors
throughout, Walkout basement,
Upgraded kitchen, Granite
counter top and many mored!!!

# Brampton




4 Bedroom Semi Home!!!
Closing on 2011.
Builder selling for more than
$410,000.


REALTY EXECUTIVES
REALTY EXECUTIVES GTA LTD.
Brokerage.
9889 Markham Rd. (Hwy 48),Suite 209
Markham ON L6E 0B7
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Queen/Goreway
Wow!!!!!Great Location With Upgraded (Approix 1000Sqs) Newer 2 Bedroom And 2 Full Bath Room Plus Den. Upgraded With Kitchen Undervalance .
$249,900
Major Mac/Hwy 48
Great Independant Bakery & Take-Out Business. Located In A Busy Plaza On The South-East Corner Of Major Mackenzie & Hwy 48.
$95,000
Highway 7/Bullock Dr.
Well Maintained 2 Bedroom Bungalow In Highly Desired Neighbourhood. Walk To Markville Mall, Schools, Park, Ttc, Highway Access .
$390,000
Alfred/Lake Dr
Charming Cottage On Huge Lot, Close To Beach Village Store. Situated In A Beautiful Area Of Point Clark. 2 Bedroom Cottage With Loads Of Potential.
$112,000
Lundys Lane/Drummond
All Inclusive, Self Contained 2 Bedroom Detached 2-Storey Unit. Hardwood & Laminate Floors With Main Floor Laundry. Steps To Ttc & Go Transit.
$189,900
Hyw 26/74th S
New Home On A Country Feel Area On The West Side Of Wasaga Beach. Home Boasts Hardwood( Bamboo) Flooring And Ceramics In Entry And Baths
$269,999
Gordon St
Live In The Much Sought After South End Of Guelph. This 3 Bedroom Thomasfield Built Home Is Located On A Quiet Street Close To Parks, Schools.
$295,000
Bolger/Rex Gate
It Is With A Great Deal Of Sadness That The Owner After 50 Years Is Selling His Home. This Well Loved Home Is Situated On A Huge Pie Shaped Lot.
$339,900
Tiny Beaches/Pansy
This Extreamly Well Built, Nearly New, Custom Home Now Available For You. From Double Weep Tiles To Heritage Roof Shingles Quality.
$349,900
Collegeway/Erin Mills Prkwy
Much Larger Than It Looks This Multi Level Semi Has A Unique Layout That Is Sure To Please! Boasting Large Formal Livingroom With Cathedral Ceiling.
$389,000
Nawaid Qamar*
Nisha Sidhu*
Agnelo Almeida*
Aaron Pereira*
Pravisha Nagaretnam*
Kumaran Pathmanathan*
Babu Selvarajah*
Yoga Sivagnanasundaram*
Rafiq Charaniya*
Tyrone Caldera*
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Each Office is Independantly Owned and Operated. Not intended to solicit buyers and sellers already under contract. *Sales Representative

# கணினி ஒரு கைவந்த கலை

ஜிப்றி உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -



## Microsoft word 2007ஐப் பாவித்து ஒரு மொழியில் எழுதியதை வேறுமொழிக்கு எப்படி மொழி மாற்றம் செய்யலாம்?


உலகில் ஏராளமான பல்வேறு மொழிபேசும் மக்கள் இணைய வலையம் மூலமாக இணைக்கப்படுகிறார்கள். பலரின் கருத்துக்களை வேறு மொழியில் மொழியாக்கம் செய்யக் கூடியதாக Microsoft 2007 சில வசதிகளைக் கொண்டுள்ளது. (Microsoft ஒருசில மொழியில் இருந்து ஒருசில மொழிகளுக்கு மட்டும் மொழியாக்கம் செய்யக் கூடிய வசதியைத் தந்திருக்கிறது.)

இதனை எப்படிச் செய்யலாம் என்று பார்ப்போம்.


உங்களுக்குத் தேவையான ஒரு கட்டுரையின் பகுதியை Microsoft 2007இல் கொப்பி செய்துகொள்ளுங்கள். தேவையான பகுதியை உங்கள் 'மௌசின்' உதவியுடன் highlight பண்ணிக்கொள்ளுங்கள். (அல்லது 'எடிற்' என்ற பகுதிக்குச் சென்று select all என்ற தெரிவை அழுத்துவதன் மூலம் முழுத் தொகுதியையும் தெரிவு செய்துகொள்ளலாம்.



அடுத்து menu barஇல் இருக்கும் review button என்ற தெரிவை தெரிவுசெய்யுங்கள்




அதில்வரும் Translate என்ற தெரிவை அழுத்துங்கள்.




இதன்போது ஒரு task pane உங்கள் கணினித் திரையில் தோன்றும்.




இதில் எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப் போகின்றீர்கள் என்பதனைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். உடனடியாகவே அந்தத் தெரிவின் கீழ்ப் பகுதியில் மொழி பெயர்க்கப்பட்ட பகுதி தெரிவதனைக் காணலாம்.



நீங்கள் விரும்பும் மொழி உங்கள் கணினியில் தோன்றாவிட்டால் Translation option என்ற தெரிவினை அழுத்துங்கள்.

மிகச் சிறந்த மொழிபெயர்ப்புக்கு பன்மொழி ஆற்றல் உள்ள மனிதர்களை இன்னமும் கணினிகள் ஈடுசெய்யமுடியாது. காலத்தால் முடியாதது ஒன்றும் இல்லை அல்லவா?

## Password பாவித்து Microsoft Excel Fileஐப் பாதுகாப்பது எப்படி?

பொதுவாக Microsoft Excel Files கணக்கியல் உடன் சம்பந்தப்பட்ட தரவுகளை உள்ளடக்கியதாக இருக்கும். ஆதலினால் இந்தப் பத்திரக் கோவைகளைப் பாதுகாப்பது மிக முக்கியமாகும். இந்த Microsoft Excel file களில் Password இடுவதன்மூலம் விரும்பாத மாற்றங்களையோ அல்லது முழுமையாகவோ அந்த fileஇல் இருக்கக்கூடிய தரவுகளை உரிமம் இல்லாதவர்கள் பார்ப்பதனைக்கூட தடுக்கலாம்.


உங்கள் Microsoft Excel கோவைகளில் இருக்கக்கூடிய ஒரு cell அல்லது பல cellகளை ஒன்று சேர்த்து அல்லது ஒரு குறிப்பிட்ட Worksheet மட்டும் அல்லது முழுமையான Workbook ஐக்கூட Password இடுவதன் மூலம் பாதுகாக்கலாம்.

இரண்டு வகையான passwords இருக்கின்றன.


- Password to open the document. இந்த Password சரியாக இருந்தால் மட்டுமே Workbookஐத் திறக்க முடியும்.
- Passwords to modify the document. இவ்வகையான password உடைய Workbook சரியான password இருந்தால் மட்டுமே அதில் உள்ள தரவுகளை மாற்றியமைக்க முடியும்.

சரி. இதனை எப்படிச் செய்யலாம்? நீங்கள் பாதுகாக்க விரும்பும் Excel Fileஐத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்.

முதலில் Tool என்ற பகுதியைத் தெரிவுசெய்து பின் அதில் வரும் option தெரிவில் அழுத்துங்கள்.




இதன்போது திறக்கும் Windowவில் Security Tapஐத் தெரிவுசெய்யுங்கள்.




அதில் இருக்கும் Password to open அடுத்தது File encryption setting for this workshop என்ற பகுதிகளில் உங்களுக்கு விருப்பமான பாதுகாப்பான Passwordஐ இட்டுக்கொள்ளுங்கள்.




நீங்கள் OK buttonஐ அழுத்தி நிச்சயம் பண்ணும்போது நீங்கள் இட்ட Passwordஐ மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளும். மீண்டும் முன்னர் நீங்கள் இட்ட Passwordஐ இட்டு உறுதிப்படுத்தியதும் உங்கள் Excel File பாதுகாப்பானதாக மாற்றப்பட்டுவிடும். மீண்டும் அதனைத் திறக்கும்போது நீங்கள் இட்ட Passwordஐ இட்டால் மட்டுமே திறக்கமுடியும்.

## Microsoft Word 2007ஐப் பாவித்து Greeting Cards செய்வது எப்படி?

முதலில் Microsoftஐ ஆரம்பியுங்கள். பின்னர் படத்தில் காட்டியுள்ளபடி New என்ற தெரிவினை அழுத்துங்கள்.




பின்னர் அதில்வரும் Template என்ற விண்டோ தெரிவில் Greeting card என்ற தெரிவை மேற்கொள்க. அதன்பின்னர் உங்களுக்குத் தேவையான அழைப்பு இதழ் வகையினைத் தெரிவுசெய்துகொள்க.




அவ்வளவுதான்...!

இதன்பின்னர் உங்கள் கற்பனைச் சக்திக்கு வேலைகொடுங்கள். Microsoft நிறுவனம் நூற்றுக்கு மேற்பட்ட முன்பே வடிவமைத்து வைத்திருக்கும் மாதிரி அழைப்பு இதழ்களை இலவசமாக இணையத்தளத்தில் வைத்திருக்கிறார்கள்.

http://office.microsoft.co.en-us/templates/ என்ற இணைய பகுதிக்குச் செல்லுங்கள். மேலும் உங்களுக்கு உதவக்கூடிய பல்வேறு வகையான Templateகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

jiffry.uthumalebbe@thaiveedu.com

■ ■ ■



# காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்

## கேள்வி - பதில்



**சக்திவேல்**

- ஆயுட் காப்புறுதி முகவர் -

**ஆயுள் காப்புறுதியில் Disability இருக்குமாயின் ஊனமுற்று இருக்கும் போது அந்த காப்புறுதி திட்டத்திலிருந்து ஒரு தொகையை மீளப்பெறலாம் என்று கேள்விப்பட்டேன். இது மாதாமாதம் கிடைக்கும் தொகையா அல்லது ரொக்கமாக கொடுக்கும் தொகையா? இது பற்றி நான் வினவியபோது எனது ஒப்பந்தத்தை பரிசீலிப்பதற்காகக் கொண்டுவரச் சொன்னார்கள்.**

ஆயுள் காப்புறுதியில் கொடுக்கும் Disability என்பது நீங்கள் தொடர்ச்சியாக 6 மாதத்திற்கு மேல் வேலைபார்க்க முடியாமல் ஊனமுற்று இருக்கையில் உங்கள் மாதாமாதக் கட்டணத்தை மட்டும் காப்புறுதி நிறுவனம் உங்கள் சார்பாக செலுத்திக் கொண்டுவரும். இந்த சலுகை எவ்வளவு காலம் ஊனமுற்று இருக்கிறீர்களோ அல்லது 60 அல்லது 65 வயது வரை (நிறுவனத்தை பொறுத்து) கொடுக்கும் சலுகையாகும். இதையே ஆங்கிலத்தில் Disability Waiver அல்லது Waiver of Premium என அழைப்போம். ஒரு குறிப்பிட்ட சலுகைகள் கூடிய ஆயுள் காப்புறுதியை பொறுத்தமட்டில் உங்கள் கடைசிக்காலம் குறுகிய வருடம் என விசேட வைத்தியர்கள் உறுதிப்படுத்தினால் மட்டும் மனுச்செய்த காப்புறுதி தொகையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை அல்லது கணிசமான தொகையை வருமான வரியின்றி மீளப் பெறலாம். வருமானக் காப்புறுதியை பொறுத்தவரை (Disability Insurance) நீங்கள் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது பொறுத்திருக்கும் காலவரையை (Waiting Period) பொறுத்து மாதாமாதம் நீங்கள் வருமான வரி இலாகாவிற்கு உங்களது ஏனைய செலவு கழித்து கிடைக்கும் NETT Incomeஇன் 2/3 மடங்கு மாதாமாதம் அதிக பட்சம் 65 வயது வரை வருமானவரியின்றி கிடைக்கும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பொறுத்தவரை நீங்கள் மாற்றுத்திறனுடையோர் (Disablity) இருக்கையில் மாதாமாதம் RRSPஇல் எவ்வளவு செலுத்திக்கொண்டு வந்தீர்களோ (Disablity ஏற்பட முன்) அதே தொகையை மாதாமாதம் நீங்கள் விரும்பிய சேமிப்பு திட்டத்தில் போட்டு நீங்கள் எந்த வயதில் முற்றாக தேறியிருக்கிறீர்களோ அச்சமயம் அந்த போட்ட தொகையையும் அதற்கான வட்டியையும் நீங்கள் RRSPஇல் போடலாம். பதிலாக ஆயுள்காலமாகவே Disablityயில் இருப்பின் வயது 65இல் இந்த முழுத்தொகையையும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் சேமிப்பில் ஒதுக்கி உங்களுக்கு மாதாமாதம் கிடைக்கும் வருமானமாக எவ்வளவு காலம் வருமானம் தேவை என்று தீர்மானித்துக் கொள்ளலாம்.

உங்கள் ஒப்பந்தத்தை பரிசீலிக்க கொண்டு வாருங்கள் என்று சொன்னால் உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தை அப்படியே கொடுக்காமல் அதன் பிரதியை மட்டும் (Copy) கொடுங்கள். காரணம், இந்த ஒப்பந்தம் தப்பித்தவறி தொலைந்தால் இன்னுமோர் பிரதி ஒப்பந்தம் பெறுவதற்கு ஏறத்தாழ $50 முன்கூட்டியே கொடுக்க வேண்டும். அத்துடன் இந்த பிரதி ஒப்பந்தம் கிடைப்பதற்கு ஒரு சில காலம் செல்லும்.

இதை எழுதிக் கொண்டு இருக்கையில் இந்த மாதிரியான சம்பவங்கள் ஞாபத்திற்கு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட காப்புறுதி பிரதிநிதியின் கைவசம் ஏறத்தாழ 40 காப்புறுதி ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டு பின்னர் அவர் அந்த தொழிலியிருந்து முற்றாக விலகியதால் அந்த காப்புறுதி ஒப்பந்த விண்ணப்பதாரர்கள் பிரத்தியேகமாக பணம் கட்டி பிரதி ஒப்பந்தங்களை பெற்றுக் கொண்டனர்.

**எனது வயது 35. அண்மையில் ஒரு நிறுவனத்திடம் ஆயுள் காப்புறுதிக்கும், Critical Illnessக்கும் மனுச் செய்தேன். Critical Illnessஇன் மாதாந்த கட்டணம் ஆயுள் காப்புறுதியின் மாதாந்த கட்டணத்திலும் பார்க்க அதிகமாக இருந்ததால் இரண்டையும் ரத்து செய்துவிட்டேன். அத்துடன் Critical Illnessஇனை பொறுத்தவரை கொடிய நோய்வாய்ப்பட்டு 30 நாட்களுக்கு மேல் உயிரோடு இருந்தால் தான் மனுச்செய்த தொகை கிடைக்கும் என அறிந்தேன். பல்வேறு நிறுவன பிரதிநிதியென்ற முறையில் குறைந்த விலைக்கு உங்களுக்கு தெரிந்த நிறுவனம் ஏதும் உண்டா?**

எனக்கு தெரிந்த வரை ஒரேயொரு நிறுவனம் மட்டும் தான் Critical Illnessஇனை பொறுத்தவரை சம்பவம் நடந்து மறுநாளே இழப்பீட்டு தொகையை கொடுக்கும். இந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்படி உதாரணமாக ஒருவர் $250,000 இற்கு ஆயுள் காப்புறுதியும் $75,000இற்கு Critical Illnessஇற்கும் மனுச்செய்து திடீரென கொடிய தீராத நோய் வாய்ப்பட்டு அதன் காரணமாக 4 மாதத்தில் மரணமடைந்தால் நோய்வாய்ப்பட்ட மறுநாளே $75,000 இதனை அவருக்கு வருமான வரியின்றி வழங்கி மீதி $175,000 இவரது மரணத்திற்கு பின்னர் இவரது வாரிசுதாரரை வருமான வரியின்றி சென்றடையும்.

**எனது வயது 43 நான் பொழுது போக்காக பிரத்தியேக சிறுவிமானம் ஓட்டுபவர். ஆயுள் காப்புறுதியை சற்று அதிகரிக்கும் நோக்கமாக விண்ணப்பித்த போது அதிகப்படியான கட்டணம் விதித்தார்கள். காரணம், இதன் விளைவாக காப்புறுதி இழப்பீடு எப்போதும் ஏற்படலாம் என்ற காரணத்திற்காக. இந்த நிலையில் உங்களுக்கு தெரிந்த நிறுவனங்கள் ஏதும் உண்டா:**

மருத்துவ ரீதியாக காப்புறுதிக்கு மனுச்செய்தால் குறைந்த பட்சம் சாதாரண மாதாந்த கட்டணத்திலும் பார்க்க 4 மடங்கு அதிகரிப்பு இருக்கும். பதிலாக, மருத்துவரீதியின்றி உடனேயே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி திட்டங்களை பொறுத்தவரை ஏறத்தாழ $300,000 வரை கொடுக்கலாம். இதன்படி இரண்டு நிறுவனங்கள் அகால மரணம் ஏற்படின் இரட்டிப்பு தொகையை கொடுக்கும் என்பது குறிப்பிடத்தாது.

**அண்மையில் எனது நண்பர் ஒருவர் தனது காப்புறுதி ஒப்பந்தத்தை பரிசீலிப்பதற்காக வந்த பிரதிநிதியி-**

*44ம் பக்கம் பார்க்க...*


# சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 169 துரித காப்புறுதி இழப்பீடுகள். 39 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurance ). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



# மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகா-ரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

## சக்திவேல்

## 416 706 3530

# BUYING/SELLING HOUSES

## PUNCH SOCKALINGAM

Broker

Century 21

Affiliate Realty Inc. Brokerage*

ADVERTISING
24 HRS. A DAY
7 DAYS A WEEK
UNTIL SOLD



**416-786-2463**

Call Your TOP PRODUCER

Why some properties are sold over asking price?
Why some properties are sold sooner than others?
Who is buying home in your area?

**DO YOU KNOW WHO BROUGHT BUYERS TO THE PROPERTIES WHICH BEING SOLD IN YOUR NEIGHBOURHOOD?**

## இலங்கையிலும் கனடாவிலும் தச்சுவேலையில் பல வருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால்

- **Basement**
  Complete Basement
  Separate Entrance Cutting
  Window Cutting
- **Kitchen**
  Custom Kitchen Cabinets
  Kitchen Modification
  Kitchen Backflash
  Counter tops Granite and Wood
- **Bathroom**
  Custom Bath Cabinets
  Bathroom Modification
  Counter Tops Granite and Wood
- **Floor**
  Hardwood Flooring
  Laminate Flooring
  Vinyl Tiles
  Ceramic Tiling
  Carpet
  Stairs
- **Wall and Ceiling**
  Painting
  Crown Mouldings Work
  Ceiling and Stucco Work
- **Back Yard**
  Custom Deck with Design
  Fence Work
  Storage
- **Repairs**
  Plumbing Repairs
  Basement Repairs
  Kitchen Cabinet Repairs
  Bathroom Repairs
  Floor Sanding and Polishing
  Door and Window Replacement & Repair
  Kitchen and Washroom Fan (Exhaust) Changing
  Washing Machine and Dishwasher Fixing




6 Months or 1 Year
No Payment
No Interest
some conditions may apply

Arul
RENOVATION
*Expert in Sri Lankan & Canadian Carpentry*

5200 Finch Ave. East, Unit 304,
Toronto, ON. M1S 4Z5
Tel : 416-728-2222/416-268-2993

*Quality • Commitment • Satisfaction*

# ஈரப்பதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

பிரபா சின்னா



உங்கள் வீட்டின் Humidity level மாற்றங்களை Hygrometer பொருத்துவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒரே நாளில் வெவ்வேறு அறைகளில் வெவ்வேறு Humidity level இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும் பழைய துனலிகள் விளக்கு (Flash light), நீர்ப்படிவைக் கண்டு பிடிக்கும் Detective cap, வேறு சில தேவையான உபகரணங்களையும் வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று நீராவிப்படிவால் ஏற்பட்ட சேதங்களையும் பூஞ்சணப் படிவையும் கண்டு பிடிக்கலாம். புதிய வீடுகள், அதிலும் முக்கியமாகப் பழைய வீடுகள் வாங்கும் போது இந்தப் பரிசோதனையைச் செய்யலாம். பானிக்காலம் இப்பரிசோதனைக்குச் சிறந்ததெனினும், Basement பரிசோதனை கோடைகாலத்திலேயே செய்யப்படல் வேண்டும்.

### குளிர்ந்த பரப்புக்களுக்கு Insulation செய்தல்:

Insulation செய்யப்படாத அல்லது சிறந்த முறையில் Insulation செய்யப்படாத வீட்டின் வெளி மூலைப்பகுதிகள், Basement சுவர்கள். மேற்கூரைகள் (Attic) போன்றவற்றிற்கு மேலதிக Insulation செய்யப்படவேண்டும். இது பெரும் பணச்செலவாக இருந்தாலும் வீட்டின் திருத்த வேலையாக மதிப்பிடும்போது வீட்டுப் பெறுமதி கூட்டப்படுவதோடு அரசாங்கத்தால் வழங்கப்படும் Rebateஐயும் பெற்றுக்கொள்ள உதவுகிறது. Insulation செய்யும் போது Air/Vapour barrier ஆகத் தொழிற்படும் Polythyleneஐ வீட்டில் உட்பக்கமாகப் பொருத்துவதனால் நீர்ப்படிவு Insulationஇன் பின் புறமாகப் படிவதைத் தடைசெய்யலாம்.

### கட்டுப்படுத்த முடியாத Air Leakageஐக் குறைந்தல்:

ஒரு வீட்டினுள் வெளியானது கீழ்ப்பகுதியால் உள்நுழைந்து மேல்பகுதியால் வெளியேறுகின்றது. Air leakage உள்ள வீடுகளில் கீழ்ப்பகுதியால் உள்நுழையும் வளி குளிர்வடையும் போது யன்னல்களிலும் கதவுகளிலும் நீர்ப்படிவு ஏற்பட்டு யன்னல் கதவு நிலைகளை உக்கச் செய்வதனால் நீண்டகாலத்தில் பாதிப்பு ஏற்படுகிறது.

வீட்டின் சுவர்கள், நிலங்களினூடாக உட்செல்லும் வளியும் நீராவியை வீட்டினுள் கொண்டு வந்து சேர்க்கும். வீட்டின் மேற்பகுதியில் Air Leakஇனால் வெளியேறும் வளியிலுள்ள நீராவி Atticஇலும் சுவரினுள்ளும் படிந்து பழுதடைய வைக்கும். எனவே Insulation செய்வதற்கு முதல் வெடிப்புக்களையும், பொருத்துக்களையும், சில தேவைகளுக்காக செய்யப்பட்ட துவாரங்களையும், Sump pumb lidஜச் சுற்றியும் seal பண்ண வேண்டும். கூரையின் Attic, hatchஐ இறுகப் பூட்டுதல், யன்னல் கதவைச் சுற்றி Caulking செய்தல், Electrical Outletsஇற்கு Gaskets பொருத்துதல் அத்திவாரத்தில் மேற்பகுதியை அடைத்தல் போன்றவற்றையும் செய்தல் வேண்டும்.

### சிறந்த காற்றோட்டக் கருவியைப் பொருத்துதல்:

Humidity level கூடலாக இருந்து, அதை மேலும் குறைக்க முடியாத நிலை ஏற்பட்டால், காற்றோட்டத்தை அதிகரிக்க வேண்டும். உங்கள் வீடு முழுமையாக Air Leakage control செய்யப்பட்டிருந்தால் போதுமானது. சிறந்த முறையான காற்றோட்டம் நடைபெறுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். Ventilation மேலதிக நீராவியை அகற்றுவதோடு வீட்டினுள் உள்ள வளியின் தரத்தையும் உயர்த்துகிறது.

பழைய வெளியேற்றும் காற்றாடிகள் (Exchaust Fans) அதிகளவு சத்தத்தை எழுப்புவதோடு சீராக வேலை செய்வதுமில்லை. எனவே திறமையாகவும் அதிகளவு ஒலி எழுப்பாமலும் இயங்கக்கூடிய fansஐப் பொருத்துதல் நலம். முக்கியமாக சமையலறை, குளியல் அறையில் கூடியளவு நீராவி வெளியேறுவதனால் இந்த இடங்களிலேயே முக்கியமாக பொருத்தப்படல் வேண்டும். கூரையில் மறைந்திருக்கும் Ductworkஐயும் கவனிக்க வேண்டும் என்பதை ஞாபத்தில் கொள்ளவும். வெளியேற்றப்படும் வளி Atticஇனுள் தேங்கி நிற்காது முழுமையாக வெளியேற்றப்படுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

Heat Recovery Ventilation Recovery (HRV) கருவியைப் பொருத்துவதே மிகவும் சிறந்த முறையாகும். இது தொடர்ச்சியான காற்றோட்டத்தை ஏற்படுத்துவதோடு குறைந்தளவு சக்தியிலேயே இயங்குகிறது. இதன் மூலம் வெளியேற்றப்படும் வளியிலுள்ள வெப்பம் உள்நுழையும் வளியைச் சூடாக்கப் பயன்படுவதால் சக்தி விரயமாகாது தடுக்கப்படுகின்றது.

### கவனத்தில் எடுக்க வேண்டியவை:

- மழை காலங்கள், நீர்ப்பரப்பை அண்டிய பிரதேசங்களில் சுற்றாடல் வளியில் கூடிய அளவு நீராவி இருப்பதனால் Ventilation இன் போது வீட்டினுள் வந்து சேர்வதற்கு வாய்ப்பாகின்றது.
- புதிய வீட்டிலே அல்லது புதிதாகத் திருத்தம் செய்யப்பட்ட வீட்டிலே கட்டடப் பொருட்களில் இருந்து வெளியேறும் அதிகளவு நீராவியை வெளியேற்றுவதற்கு மேலதிக Insulation செய்யப்பட வேண்டும்.
- வீட்டினால் உறுஞ்சப்பட்டிருக்கும் நீராவி இலையுதிர் காலத்தில் வெளியேறுவதனால், குளிர் காலத்திற்கு முன்பதாக, யன்னல்களை முழுமையாகத் திறந்து வைப்பதோடு சிறந்த காற்றோட்டத்தையும் ஏற்படுத்தல் சாலச் சிறந்தது. கோடை காலத்தில் AC பாவிப்பதும் உதவியாக இருக்கும்.

### முக்கிய கருவிகளை சுத்தம் செய்தல்:

Humidifiers, Dehimidifier, AC units, Filteration System, போன்றவை பூஞ்சணம் படிவதற்கு ஏதுவாகின்றன. ஒழுங்காகச் சுத்தம் செய்தல் இவற்றின் திறனைக் கூட்டும்.

### யன்னல்களைப் புதிப்பித்தல் அல்லது மாற்றுதல்:

நீர்ப்படிவைக் காணக்கூடிய முதலிடம் யன்னல்களின் உட்புறப்பகுதியே. புதிய யன்னல்களில் Insulation technology இருப்பதனால் நீராவிப்படிவு அதிகளவு குறைக்கப்படுகிறது. யன்னல்களை மாற்றுவதற்கு நீங்கள் யோசித்தால், Low E வெளிப்பூச்சுக் கொண்ட Argon, Krypton போன்ற வாயுக்களால் நிரப்பப்பட்ட யன்னல்களையே தெரிவு செய்யுங்கள். இதற்கான மேலதிக செலவு 10%இலும் குறைவாகவும், இதனால் நீங்கள் அடையப்போகும் பலாபலன் கூடிய அளவுமாக இருக்கும்.

வீட்டு யன்னல்கள் நல்ல நிலையில் இருந்தால் Hardware Storesஇல் விலை குறைவாக வாங்கக்கூடிய மெல்லிய Plastic film (Shrink wrap) இனால். யன்னல்களையும் Frameகளையும் சேர்த்து மூடி double sided cellotape இனால் ஒட்டிவிடவேண்டும். இது ஒவ்வொரு வருடமும் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டி உள்ளதால் விலை கூடிய தடித்த plastic Shoetsஐப் பாவித்தால் சில வருடங்களுக்குத் திரும்பத் திரும்பப் பாவிக்கலாம். இந்த முறையில் Air Leak தடுக்கப்படுவதாலும் யன்னலின் உட்பக்கப்பரப்பில் சூடான வளி ஓட்டம் இருப்பதாலும் நீராவிப் படிவு ஏற்பட்டு யன்னல் சேதமடையாமலும், சக்தி விரயமாகாமல் இருப்பதால் மின் கட்டணம் குறைவடைந்தும் இருக்கும்.

### காற்றோட்டத்தைச் சீராக வைத்திருத்தல்:

- தளபாடங்களையும், மற்றும் பொருட்களையும் சுவர்களிலிருந்து கணிசமான இடம் விட்டு உட்புறமாகவும் Basement நிலத்திலிருந்து சிறிது தூரம் உயர்த்தியும் வைத்து காற்றோட்டத்தைச் சீராக்கலாம்.
- Warm air registersஐத் தடை செய்யக் கூடாது.
- Closet, Bathroom, Bedroom கதவுகளை இயலுமான அளவு திறந்து வைத்திருக்க வேண்டும்.
- Blinds, Curtains, Drapes தேவையான வேளைகளைத் தவிர மற்றைய நேரங்களில் திறந்து விடவேண்டும்.
- Furnace Fanஐத் தொடர்ச்சியாக ஓடவிட வேண்டும் இதற்கு அதிக சக்தி பாவிக்கப்படுவதனால் two – speed energy efficiency Motorஐப் பொருத்துவது மின்கட்டண சேமிப்புக்கு உதவும்.
- பாவிக்கப்படாத அறைகளில் Heating supplyயைத் துண்டிக்கக்கூடாது.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# காப்புறுதியில் ஏற்...

42ம் பக்கத் தொடர்ச்சி...

**டம் காட்டியபோது ஏன் இவ்வளவு சலுகைகள் கொடுக்கப்பட்டன. கூடிய சலுகைகள் கொடுத்தால் அந்த பிரதிநிதிக்கு கூடிய கமிஷன் கிடைக்கும். இவ்வளவு சலுகையில்லாமல் உங்கள் மாதாந்த கட்டுப்பணத்தை ஏறத்தாழ $60இனால் குறைத்து அந்த $60இற்கு உங்கள் மனைவிக்கும் காப்புறுதி தருவேன் என்று சொன்னதும் எனது நண்பரும் பிரமித்துப் போனர். ஏன் இப்படி பல சலுகைகளை கொடுத்து ஏமாற்ற வேண்டும்?**

காப்புறுதியின் மறுபெயர் 'மரணம்' அல்ல. காப்புறுதி திட்டத்தில் உயிரோடு இருந்து அனுபவிக்கும் சலுகைகளும் உண்டு. உதாரணமாக ஒரு விபத்தில் மரணம் ஏற்படாமல் கை, கால் அல்லது வேறு ஏதாவது உறுப்பில் பலத்த சேதம் ஏற்பட்டால் காப்புறுதி நிறுவனம் ஒரு கணிசமான தொகையை வருமான வரியின்றி உங்களுக்குக் கொடுக்கும். அத்துடன் இந்த விபத்து காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டால் நாள் வீதம் $100 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை காப்புறுதி செய்யப்பட்டவருக்கு கொடுக்கும். மேலும் காப்புறுதி செய்து ஒருவருடம் தாண்டியபின் வேலை இழந்தால் அவரது மாதாந்த கட்டுப்பணத்தை அதிகப் பட்சம் 1 வருடம் மட்டும் கட்டிவரும். பெண்களை பொறுத்தவரை கர்ப்பமாக இருந்து Maternity Benefitஇல் இருப்பின் அவரது மாதாந்த கட்டுப்பணத்தை காப்புறுதி நிறுவனமே 1 வருடத்திற்கு கட்டிக்கொண்டு வரும். இப்படி பல்வேறு சலுகைகள் நிறுவனத்திற்கு நிறுவனம் கொடுக்க முன் வருகின்றன. சலுகைகள் கூடினால் கூடிய Commission என்று சொன்னது தவறு. எடுக்கும் காப்புறுதி உங்களுக்கு அதிகப்படியான சாதகமாக இருந்து அதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் அதற்கேற்ப கமிஷனும் கிடைக்கும். இதை சொன்னவருக்கும் விற்றால் தான் கமிஷன் என்பது யாவரும் அறிந்ததே. மனச்சாட்சிக்கு துரோகமாக இப்படி விற்பது எதிர்காலத்தில் பலத்த விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மறக்கமுடியாத உண்மை. உதாரணமாக வாகன விற்பனையில் $500-இற்கும் வாகனம் வாங்கலாம் $50,000இற்கும் வாகனம் வாங்கலாம் கொடுக்கும் பணத்தை பொறுத்துதான் சகல சௌகரியங்களும் சலுகைகளும் கிடைக்கும். சுருங்கக் கூறின் 'மலிவான' விலையில் வாங்கும் பொருள் தக்க சமயத்தில் 'மலிவான' புத்தியை காட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்...

saththivel@thaiveedu.com

■ ■ ■

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)

Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings

416.203.0344





HomeLife/Future Realty Inc., Brokerage
Birchmount & Ellesmere
•4 Bed Rooms
•3 Wash Rooms
$349,900
Warden & Finch
•3 Bed Rooms
•4 Wash Rooms
$299,000
Sheppard & Brimley
Business Unit
$119,000
Steeles & Staines
•3 Bed Rooms
•3 Wash Rooms
$419,900
Mccowan & Finch
•3+1 Bed Rooms
•2 Wash Rooms
$294,000
Midland & Lawrence
•3 Bed Rooms
•2 Wash Rooms
$157,900
Downtown Condo
X2 & ICE2 & ONE BLOOR
With More VIP Price Condos
Call NOW
Scarborough Condo
Starting Price
$147,800
For Sale or Rent
Call NOW
Markham Condo
Starting Price
$189,000
For Sale or Rent
Call NOW
16 YEARS
ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற NaNo Computer ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்
RAJ NADARAJAH
Sales Representative
வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு
Direct: 416-333-6115
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®
Buying/Selling Your Home ?
Call Now!
Lets Talk!
Direct: 416-333-6115




பொருத்தமான வீட்டைத் தேர்வுசெய்ய
சரியானதொரு முகவரைத்
தேர்வுசெய்யுங்கள்
அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
வீடு, வியாபார நிலையங்கள் வாங்குதல், விற்றல் தொடர்பான
அனைத்து சேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும்
- digi Media-
Rajee Iyadurai
Sales Representative
Direct: 416-918-7346
RE/MAX West Realty Inc., Brokerage
6074 Kingston Road, Scarborough, ON M1C 1K4
Tel: 416-281-0027 Fax: 416-281-0034
E-mail: riyadurai@trebnet.com
RE/MAX
Above the Crowd!
RE/MAX

# உடல் உறுப்பு...

37ம் பக்கத் தொடர்ச்சி...

கைச்சாத்திட்டு வழங்கலாம்.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒருவர் தமது மனம் சில நேரங்களில் குழம்பினால், உடன்படிக்கையை ரத்துச் செய்ய விரும்பினால், தமது ஒப்பந்தத்தினை மீள்பரிசீலனை செய்யும் உரிமை இங்கு உண்டு. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்கள், தங்கள் குடும்பத்தினர் மற்றும் தங்கள் பாசத்திற்குரிய வாரிசுகளுக்கும் இத்தானம் என்பது என் ஆத்மாவின் ஆவல் என்பதனை நிட்சயம் தெரிவித்து வையுங்கள் என்பதனை இவ் நிறுவனம் வலியுறுத்துகின்றது. ஏனெனில் ஒருவரின் மரணத்தின் பின்பு இவ்உறுப்புகளை அகற்றுவதற்கு அவரது குடும்பத்தவர்கள் ஆட்சேபனையோ அல்லது எதிர்ப்போ தெரிவித்தால், அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் சங்கடப்படுத்தி "மரணமானவரின் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையினை நிறைவேற்றுகின்றேன்" என குறிப்பிட்டு உடல் உறுப்புகளை தானத்திற்காக எடுக்க கூடாது என்பது இந்நிறுவனத்தின் சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சம்பந்தப்படும் கனடாவின் வைத்திய நிபுணர்களும் அந்த நேரம், மனிதநேயமற்ற முறையில் மரணமாகியவரின் குடும்பத்தவர்களின் மனதினை, அவர்களின் விருப்பத்திற்கு மாற்றாக நிறைவேற்றி எந்த சந்தர்ப்பத்திலும் புண்படுத்தமாட்டார்கள்.

கனடாவின் எந்தவொரு வைத்தியசாலையிலும் உடன்படிக்கை செய்தவரின் மரணம் என்பது உறுதிபடுத்தப்பட்டதுடன் அங்கு அவரது அடையாளமாக இருக்கும் மருத்துவ சுகாதார காப்புறுதி இலக்கத்தின் கீழ் (OHIP Card) ஒப்பந்தம் செய்து வைத்திருப்பது தெரியவர மரணம் நடந்து இருபத்தி நான்கு மணித்தியாலத்தினுள் அவரது குடும்பத்தவர்களுக்கு ஏற்கெனவே மரணமானவர் செய்து வைத்துள்ள ஒப்பந்தம் தொடர்பாக தெரியப்படுத்தி உறுப்புகளை எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை முன் எடுப்பார்கள் அதன் பின்னர் குடும்பத்தினரிடம் உடல் வழங்கப்படும்.

தொடர்ந்து இவரின் உடல் உறுப்புகளை பெறுவதற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நோயாளிகளுக்கு வெற்றிகரமாக மாற்றியமைத்த பின்பு இந்நிறுவனம் நன்றி தெரிவித்து மரணமாகியவரின் குடும்பத்தவர்களுக்கு எந்த உறுப்பு எவ்வகையான நோயாளிக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பதனை கடித மூலம் அறிவிப்பது வழமையாகும். உடல் உறுப்பு மாற்றம் செய்யப்பட்டது என்பது அறிவிப்பார்களே தவிர, எவ்வுறுப்பு எவருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பது இருபக்கமும் தெரியப்படுத்த மாட்டார்கள். இவைபற்றித் தெரியப்படுத்தக் கூடாது என்பது சட்ட ஒழுங்கு விதியாகும்.

ஒரு மனிதனின் உடலில் உள்ள பின்வரும் எட்டு உறுப்புகள் தானம் செய்வதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது வழமையாகும். இங்கு தாங்கள் விரும்பிய பகுதியினை மட்டுமோ அல்லது சகல எட்டு பாகத்தினையோ என தானம் செய்வதற்கு விரும்பியபடி ஒப்பந்தத்தில் சம்மதிக்கலாம் என மேற்குறிப்பிட்ட நிறுவனம் தெரிவிக்கின்றது.

## தானம் செய்யும் உறுப்புக்கள்:

### சிறுநீரகங்கள் (Kidneys)
குருதியினை சுத்திகரித்து கொடுக்கும் இச்சிறுநீரகங்களுக்காக கனடாவில் தவிக்கும் ஈழத்தமிழ் நோயாளிகளே ஏராளம்!

### இருதயம் (Heart)
பிறக்கும் போதே ஏராளமான குழந்தைகள் இதயம் மற்றும் இருதய வால்வு (Heart Valve) பழுதான நிலையில் பிறந்து இன்னொருவரின் இருதயஉறுப்பினை எடுத்து பொருத்தும் சந்திரசிகிச்சைக்காக குழந்தைகள் மருத்துவ மனையில் காத்து இருப்போர் ஒன்று இரண்டல்ல.

### எலும்புகள் (Bone)
எலும்புகளினுள் இருக்கும் 'எலும்பு மச்சைகள்' (Bone Marrow) என்பது குறைவாக இருக்கும் நோயாளிக்கும் குருதியில் ஒட்சிசனைக் காவிச்செல்லும் செங்குருதி (Red blood Cells) இல்லாது போகின்றது. அதே நேரம் தொற்று நோய்களை எதிர்த்து அழிக்கும் வெண்குருதி துணிக்கைளும் (White blood cells) இல்லாது போகின்றது.

'எலும்பு மச்சைகள்' குறைவாக உள்ள நோயாளிகளுக்கு இவ்உடல் உறுப்பு தானத்தின் போது அதனை மாற்றியமைக்கும் போது, இந் நோயிலிருந்து மீளக்கூடியதாக இருக்கும்.

### கணைய நீர் சுரப்பி (Pancreas)
வயிற்று பகுதியில் இரைப்பைக்கு சற்று பின்பக்கமாக இருக்கும் ஒரு 20-25 செ.மீற்றர் உள்ள முள்ளங்கி போன்ற ஒரு உறுப்பு ஆகும். இவ்உறுப்பானது உணவினை சமிபாடு அடைவதற்கு பயன்படும் கணையநீர் என்னும் நொதியத்தினை அளிக்கின்றது. உடலுக்கு தேவையான ஹோர்மோன்களை உருவாக்குகின்றது.

### கல்லீரல் (Liver)
மனிதர்களின் மார்பு எலும்புக் கூட்டிற்குள், வயிற்றின் மேல்புறத்தின் வலப் பக்கமாக இரைப்பைக்கு அருகில் இருக்கும் ஒரு உறுப்பு ஆகும். உடலின் சீரான இயக்கத்திற்கு பல வழிகளிலும் பணிபுரியும் முதன்மை வாய்ந்த உடல் சுரப்பிகளில் இதுவும் ஒன்று ஆகும்.

### நுரையீரல் (Lungs)
மூச்சு காற்றினை இழுத்து வெளியேற்றும் இரு சுவாசபைகள் தேவையான நோயாளி களுக்கு மற்றியமைக்கப்படுகிறது.

### தோல் (Skin)
பெரும் தீ காயங்களினால் தோல் எரிந்து நிரந்தரமாக வாழ்வில் காயப்பட்டவர்களுக்கு இவ்தானம் ஏதோ ஒரு வழியில் மீட்சியினை கொடுக்கிறது.

### கண் (Eyes)
'கண் விழி படலம்' கிடையாதா? அது பொருத்தப்பட்டு கண் பார்வை கிடைக்காதா? என ஏங்கும் பார்வையில்லாதவர்கள் உலகில் பலர்.

## உறுதியான ஒரு முடிவு!
உங்கள் மரணத்தின் பின்பு, ஏதோ ஒரு வழியில் மனித குலத்தினை வாழவையுங்கள்.


இறந்த பின் நெருப்பிலும் மண்ணிலும் சிதையும் இவ்வுடலின், சில பாகங்களுக்காக ஏங்குபவர்களுக்கு உங்கள் உறுப்புக்களை தானமாகக் கொடுக்க முன்வாருங்கள்.

இன்றே முடிவெடுங்கள்.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■


உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON






Kannan Kankesu
REAL ESTATE & MORTGAGE BROKER
Mortgage/Refinance
Cell: 416 418 5189
Bus: 416 284 5555
RED CARPET
Since 2003
880 Ellesmere Road, Suit 204, Toronto, ON
kkankesu@gmail.com

14th &9th



Over 120K upgraded 4+1Bedroom
Box Grove Arista Home 4 Washrooms

Pharmacy &Finch


$294,900 3+1Bedroom
Finished Basement 2Washrooms

Elson/Coppard

$455,000 Finsd Bsmt/SepEnt
4+2 Bedroom 4 Washrooms

Birchnount/Steeles

$439,000 Finished Basement
3 Bedroom 4 Washrooms




BUYING-SELLING-INVESTING
Sheppard & Neilson
$ 99,900
2+1 Bedrooms + 2 Washrooms
Neilson & Mclevin
$ 169,900
2+1 Bedrooms + 2 Washrooms
Rossland & Harwood
$ 381,900
3 Bedrooms + 3 Washrooms
Mccowan & Eglinton
$188,900
2+1 Bedrooms + 2 Washrooms
Westney & Williamson
$ 289,900
3 Bedrooms + 2 Washrooms
Hardwood & Taunton
$ 314,800
3 Bedrooms + 3 Washrooms
Brimley & Steeles
$ 484,900
4+1 Bedrooms + 4 Washrooms
Steeles & Mccowan
$ 415,000
3 Bedrooms + 3 Washrooms
Markham & Highglen
$ 479,000
3 Bedrooms + 3 Washrooms
9thLine & 16th Ave.
$379,900
3 Bedrooms + 3 Washrooms
Salem & Rossland
$ 369,900
4 Bedrooms + 3 Washrooms
Westney & Taunton
$ 339,000
3 Bedrooms + 3 Washrooms
9th Line & Hoover Park
$ 499,900
4 Bedrooms + 3 Washrooms
Middlefield & Dennison
$ 479,900
4+1 Bedrooms + 4 Washrooms
Brimley & Highglen
$ 399,999
3+1 Bedrooms + 4 Washrooms
Mccowan & Ellesmere
$299,800
2 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
$ 445,000
4+2 Bedrooms + 4 Washrooms
Brimley & Denison
$ 349,000
3 Bedrooms + 3 Washrooms
Old Kennedy & Denison
$ 489,000
5+2 Bedrooms + 4 Washrooms
Brimley & Denison
$ 498,000
4+2 Bedrooms + 5 Washrooms
Mccowan & Hwy 401
$ 239,900
2+1 Bedrooms + 2 Washrooms
Brimley & Hwy 401
$319,000
2+1 Bedrooms + 2 Washrooms
14th Ave. & 9th Line
$ 599,000
5 Bedrooms + 4 Washrooms
14th Ave. & 9th Line
$ 649,900
5 Bedrooms + 4 Washrooms
Salem & Taunton
$ 534,888
4 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 184,999
Commercial / Retail
Markham & 14th Ave.
$ 409,900
Commercial / Retail
Markham & Nashdene
$226,900
Professional Office
Salem & Rossland
$ 539,900
4 Bedrooms + 3 Washrooms
Salem & Taunton
$ 474,900
4+1 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 519,900
4+1 Bedrooms + 4 Washrooms
Creditview & Sandlewood
$ 450,000
4+3 Bedrooms + 4 Washrooms
Mcvean & Castlemore
$ 488,800
4 Bedrooms + 3 Washrooms
The core & Castlemore
$479,900
4 Bedrooms + 3 Washrooms
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
YOUR HOME
SOLD
GUARANTEED!
LET US SELL YOUR HOME FAST AND
FOR THE BEST PRICE!
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
SOLD
HOMELIFE
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
புதிய முகவரி தேடும் உங்களுடன் முகவர்களாய் நாங்கள்

# இதயத்தில் இடம் பிடிக்கும் இல்லம்



இலகுப்பிள்ளை சிறீநாதன்
- வீடு விற்பனை பிரதிநிதி -

**முதல் பார்வையிலேயே முத்திரைகளை பதித்துவிட வேண்டும் என்று கூறுவதின் காரணம் என்ன?**


உங்களுக்கு உதவ இதோ சில சிறந்த உபயோகக் குறிப்புகள்.

### உங்கள் வீட்டிற்கு வெளியே உள்ள இடம் (Outside Your Home)

- பசும்புல்வெளி, புதர்ச்செடிகள், மரங்கள் மற்றும் பல்வேறு தாவர வகைகளை நேர்த்தியாக வெட்டி ஒழுங்குபடுத்துங்கள் மற்றும் fertlizer இடுங்கள்.
- உங்கள் வீட்டு இலக்கம் தெளிவாக கண்ணில் தெரியும்படி வைத்திருங்கள்.
- உங்கள் வீட்டு முன்வாசலில் கிடக்கும் குப்பைகள் (garbage) மற்றும் மறுசுழற்சி குப்பை (recycling) பொருள்கள் அனைத்தையும் அகற்றி, முன் வாசல் வழியை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.
- குளிர்காலமாக இருந்தால், அனைத்து நடைபாதைகளிலும் உள்ள பனி மற்றும் பனிக்கட்டிகளை (Snow & Ice) அகற்றி விடுங்கள். இலையுதிர்காலத்தில் (Fall Season) அனைத்து இலைச் சருகுகளையும் கூட்டி அகற்றிவிடுங்கள்.
- வீட்டிற்கு வெளியில் முன்வாசல் கதவு, மற்றும் Railing போன்ற இடங்களில் தேவைப் பட்டால் சிறிது Paint அடியுங்கள்.
- Paint மங்கிபோன அல்லது உரிந்துவிட்ட இடங்களில் மீண்டும் Paint அடியுங்கள்.
- உங்கள் Mail box tatteredஆக இருந்தால் அதற்கு பதிலாக புதிதாக ஒன்றை வையுங்கள்.
- Tattered அல்லது பழையதாகிவிட்ட வாயில் விரிப்புகளை புதிதாக மாற்றுங்கள்.
- உங்கள் வீட்டின் வெளியில் ஒரு செல்லப் பிராணியை நீங்கள் வளர்த்து வந்தால் அதைக் கட்டி வையுங்கள். ஏனெனில் தங்களை நோக்கி பிராணிகள் ஓடிவருவதை சிலர் விரும்புவதில்லை.
- Looseஆக தொங்கிக் கொண்டிருக்கும் எந்த பொருளையும் அப்படியே விட்டு விடாதீர்கள். அதை இறுக்கமாக முறுக்கி வைத்துவிடுங்கள்.
- உங்கள் garage சுத்தமாகவும் மற்றும் ஒழுங்காகவும் இருந்தால் மட்டும் போதாது. அது அழகாகவும் மற்றும் நேர்த்தியாகவும் இருக்க வேண்டும்.
- உங்கள் garage தரை அல்லது வாகனப் பாதை எண்ணெய் கறைகள் படிந்து மிக மோசமாக காட்சியளித்தால் அவற்றை சுத்தப்படுத்தி விடுங்கள்.
- உங்கள் வீட்டில் பக்கப் பாதை (Side way) ஏதேனும் இருந்தால் அது சுத்தமாக காட்சியளிக்கிறதா? இல்லையென்றால் ஒரு Pressure sprayerஐ பயன்படுத்தி சுத்தப்படுத்துங்கள் (வாடகைக்கு கிடைக்கும்).
- உங்கள் வீட்டு கதவில் பொருத்தப்பட்டிருக்கும் அழைப்பு மணி (door bell) சரியாக வேலை செய்கிறதா என்பதை கவனியுங்கள்.

### உங்கள் வீட்டிற்கு உள்ளே:

- உணவு, செல்லப்பிராணி அல்லது வேறு மணங்கள் எதுவுமின்றி வீட்டினுள்ளே எப்போதும் ஒரு நறுமணம் வீசும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.
- துர் வாசனைகளை நீக்க Potpourri, Airfresheners, Scented Candles ஜன்னல்களை திறந்து வைத்தல் ஆகியன உதவும்.
- உங்கள் குளியலறைகள் மீது மிக முக்கியமாக கவனம் செலுத்துங்கள். அங்குள்ள towel, tub, mirror மற்றும் Sink முதலியன எப்போதும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருப்பது அவசியம்.
- உங்கள் வீட்டிற்கு உள்ளே இருக்கும் அனைத்துச் சுவர்களும் கைவிரல் ரேகைகள் மற்றும் பிற அழுக்குகள் ஏதுமின்றி மிக சுத்தமாக காட்சியளிக்க வேண்டும்.
- உங்கள் வீட்டிலுள்ள அனைத்து உபகரணங்களும் சுத்தமாக பிரகாசத்துடன் ஒளி வீசவேண்டும். உணவு துணுக்குகளுடன் காணப்படும் Ovenகள் மற்றும் அழுக்கடைந்த fridgeகள் ஆகியவற்றை சுத்தப்படுத்தி அழகாக வைத்திருக்க வேண்டும்.



- இரவில் உங்கள் வீடு காட்சியிடமாக தோற்றமளிக்க எப்போதும் விளக்குகளை போட்டு வைத்திருங்கள் (lightson) முடியும்வரை இனிய பார்க்கத்தக்க காட்சியாக ஆக்குங்கள்.
- அதிக Furnitureஐ கூட்டமாக போட்டு வைக்காதீர்கள். அறை சிறிது என்ற தோற்றத்தை உருவாக்கும் அளவுக்கு அதிகமாக எந்த அறையிலும் திணிக்காதீர்கள்.
- உங்கள் Carpet சுத்தமாக இருக்கிறதா? ஏதாவது கறைகள் தென்படுகிறதா? சுத்தமாக இல்லை என்றால் அதை சுத்தப்படுத்துங்கள்.
- உங்கள் வீட்டில் hardwood floorகள் இருந்தால், அவற்றை சுத்தம் செய்து பிரகாசத்துடன் மின்னச்செய்யுங்கள். Vinylக்கும் இப்படியே செய்யுங்கள்.
- அனைத்து light bulbகளும் மற்றும் Switchகளும் நன்றாக வேலை செய்கின்றனவா என்பதை பரிசோதனை செய்யுங்கள்.
- தண்ணீர் வரும்போது faucetகள் கசிந்தொழுகவோ அல்லது இரைச்சல் கேட்கவோ செய்தால் அதை சரி செய்யுங்கள்.
- பெரிய Closet களையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் உங்களுடையதும் அதிக இடம் உள்ளதாக இருக்கட்டும்.
- படுக்கையறைகள் மிக முக்கியம் வாய்ந்தவை. அவை திறந்த வெளியுள்ள, சௌகரியமானதாக, வண்ணமயமாக மற்றும் நல்வரவு தரும் விதமாக இருக்கவேண்டும்.
- மன அமைதிதரும் ஒரு CDஐ வாங்கி, உங்கள் வீட்டில் வைத்து play செய்து இனிமையாக பொழுதை போக்குங்கள். காட்சியிடமாக அனைத்து திரைச்சீலைகளையும் திறந்து வைத்திருங்கள். ஒளி உள்ளே பாயட்டும்.
- உங்களுக்கு கவர்ச்சிகரமாக தோன்றுவது வீட்டை வாங்குபவருக்கு தோன்றாமல் இருக்கலாம். சினமூட்டும் மிதமிஞ்சிய அலங்காரத்தை அகற்றிவிடுங்கள்.
- சமையலறை மிகவும் முக்கியம் வாய்ந்த அறை என்பதால் அது எப்போதும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருக்கவேண்டியது அவசியம்.

### தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்ளாதீர்கள்:

வீட்டை பற்றிய உங்கள் தனிப்பட்ட உணர்ச்சிகளை உங்கள் மனதிலிருந்து விலக்கிவிடுங்கள். இதுதான் நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை. இப்பொழுது அது உங்கள் வீடு இல்லை வணிகச் சந்தையில் நீங்கள் விற்க விரும்பும் வியாபாரப் பொருள் போன்றதான் அதுவும். உங்கள் உள்ளுணர்வுகளை நம்புங்கள். முதல் தடவை உங்கள் வீட்டை பார்ப்பது போல் அதை மதிப்பிடுங்கள். நீங்கள் ஒரு வீட்டை வாங்குவதாக இருந்தால் அந்த வீட்டை பற்றி என்ன நினைப்பீர்கள்? என்னென்ன மாறுதல்கள் செய்து அதை உடனடியாக சீர்படுத்தவேண்டும் என்று தானே? வீட்டின் சிறந்த அம்சங்கள் எவை, அகைளை எப்படி வெளிக்காட்ட வேண்டும் என்பதை பற்றி யோசிப்பீர்கள்.

### ஒரு இனிய மனஉணர்ச்சியை உருவாக்குங்கள்:

ஒரு இனிய மனஉணர்ச்சியை நீங்கள் உருவாக்கினால் என்ன? நீங்கள் ஒரு கடற்கரைக்கு அருகில் வசிப்பவராக இருந்தால், கடற்கரையை நமக்கு ஞாபகப்படுத்தும் விதத்தில் நீலம் மற்றும் பச்சை நிற வண்ணங்கள் கொண்ட தென்றல் காற்றுள்ள காட்சியை வெளிப்படுத்தும் fabricsகளை பயன்படுத்தினால் போதுமே? நீங்கள் மலை அடிவாரங்களில் வசித்துவந்தால், கிராமியக் காட்சிகளை சித்தரிக்கலாம். நீங்கள் முன்பு வாழ்ந்ததற்கு பொருத்தமாக உங்கள் புதுவீட்டில் என்னென்ன புதிய யோசனைகளை செயல்படுத்தலாம் உங்கள் மூளையை கசக்கி யோசித்துப் பாருங்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப அங்கத்தினர்களுடன் ஆலோசியுங்கள்.

### மூட்டையாக கட்டி எடுத்துச் செல்லுங்கள்.

உங்கள் குடும்ப photoக்களையெல்லாம் எடுத்துவிடுங்கள். உங்கள் வீட்டை வாங்குபவர்கள் தங்கள் உடைமைகளை வீட்டில் எங்கு வைக்கலாம் என்பதை உத்தேசித்துக் கொண்டிருப்பார்கள். வீட்டை வாங்குபவர்கள் தங்கள் furniture சாமான்களை உங்கள் அறைகளில் எந்தெந்த இடங்களில் வைக்க வேண்டும் என்று திட்டமிடுவார்கள். உங்கள் தனிப்பட்ட பொருள்களை எல்லாம் பெரிய மூட்டையாக கட்டி ஒதுக்கி வைத்துவிடுங்கள். உங்கள் வீட்டை வாங்குபவர்கள் உங்கள் வீட்டை கண்ணோட்டம் விட்டநேரத்தில் அவற்றையெல்லாம் அக்கறையுடன் கவனிக்க தவறி இருப்பார்கள்.

### வீட்டை விசாலமானதாக (Spacious) ஆக்குங்கள்.

அதிகப்படியாக furnitureஐ அகற்றி, அறைகளை விசாலமானதாக ஆக்குங்கள். Closetகளை சுத்தப்படுத்தி, பொருள்களை ஒழுங்காக அடுக்கிவையுங்கள். அட்டைப்பெட்டிகளை எல்லாம் வேறு ஒரு இடத்தில் தள்ளி ஒதுக்கி வையுங்கள் அல்லது தற்காலிகமாக ஒரு வாடகை இடத்தில் வையுங்கள். வீட்டிலுள்ள குப்பைக்கூளங்களை (de-clutter) நீங்கள் அகற்றும் போது அவற்றையும் வெளியே எடுத்துச் செல்லலாம்.

### விரும்ப தகுந்த காட்சிகளை வெளிகொணர்தல் (Expose Desirable Features):

அழகான hard wood floorகளை மறைக்கும் தரை விரிப்புகளை அகற்றிவிடுங்கள் ஜன்னல்களின் வெளியே தெரியும் பசுமை நிறைந்த இயற்கை வண்ணக் காட்சிகளை மறைக்கும் கனத்த திரைச்சீலைகளை (Drapes) அகற்றி விடுங்கள்.

### உயிருள்ள தாவரங்களை வளருங்கள்:

உயிருள்ள தாவரங்கள் எந்த வீட்டையும் சிறந்த காட்சியிடமாக மாற்றும். உயிருள்ள தாவரங்கள் தான் தேவை உயிரற்ற செயற்கை தாவரங்கள் தேவைஇல்லை.

### புதியதாக்குங்கள்:

வீட்டில் சுவர்கள் மங்கலாக காட்சியளித்தால் புதிதாக paint அடித்தால் என்ன? நிறங்கள் அழுக்கடைந்து விட்டதா? திரைச்சீலைகள் அல்லது மற்ற ஜன்னல் அலங்காரப் பொருள்கள் நீங்கள் சுத்தம்பண்ண வேண்டிய நிலையில் உள்ளனவா? செய்யுங்கள்.

### ஒரு இனிய மனஉணர்ச்சியை (Mood) உருவாக்குங்கள்:

உங்கள் வீட்டின் காட்சிகளை நீங்கள் காண்பிக்கும் போது bread bake பண்ண ஏற்பாடு செய்யுங்கள் அல்லது counter மீது ஒரு கூடையில் ஒரு fresh loaf பரிமாற வைத்திருங்கள். பின்னணியில் மெல்லிய classical music கேட்கும்படி செய்யுங்கள் ஒரு இனிய மனஉணர்ச்சியை உருவாக்க உதவும் எந்த விடயத்தையும் மேற்கொள்ளுங்கள்.

elaguppillai.srinathan@thaiveedu.com

■ ■ ■

நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை

R M A
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464

**Das Narayanasamy**
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

$399,000


Markham/Steeles

$139,000

Midland/Lawrence
2 Bedroom Condo
In Prime Location

$258,930


Lawrence/Sgc Lane
3+1 Bedrooms
2 Washrooms

$399,900


Mccowan/16th Ave

$299,000

Finch/Warden
Super Location
3 Bedroom
Close to Mall
Park & School

$189,000


Finch/Middlefield

$199,000


Finch/Middlefield
Excellent Location
Commercial Unit For Retail
Store Related

$199,000

Finch/Middlefield
2+1 Bedrooms

$469,000


Steeles/Middlefield

$572,900


Yonge/Sheppard

$499,000


9th Line/Reeves Way

$239,900

Morningside/Mclevin
3+1 Bedrooms 2 Wash

$269,600

Birchmount/Huntingwd
3+1 Bed Rooms
3 Washrooms

$269,900

Huntingwd/Midland
3+1 Bedrooms
3 Washrooms

$294,000

Finch/Mccowan
3+1 Bedroom
Finished Bsmt, Sep. Entrance.

$199,000

Finch/Middlefield
commercial unit for Retail
Store related



More Houses Visit
www.krishome.ca

**Krish Sivapatham**
Sales Representative

**Full Time Realtor**

**Direct : 416-895-4457**
**HomeLife/ Future Realty Inc.,** Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under contract/ some conditions may apply/ I Do Not Represent The Developer

HOMELIFE
HIGHER STANDARDS
25th ANNIVERSARY

**www.NewCondoInGTA.com**

**New Condos Call Krish**

**VIP Price & Floor PLan**

# அனைத்துக் காப்புறுதி தேவைகளுக்கும் கல்வி சேமிப்புத்திட்டங்களுக்கும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

### Critical Illness Insurance

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.

*Our guarantees are written in your policy*

LILAND INSURANCE INC.

Assumption Life


INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்

**647-885-3012**

**www.vvinsurence.ca**

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453



Apex Creations : 416-297-0707

நாம் அழகாய் இருக்க

# முகப் பராமரிப்பும் சந்தேக நிவர்த்தியும்

## தொடர் 11



சசி நரேன்
Cosmetologist & Aestheticia

சென்றமாதத் தொடர்...

**பற்களில் இடைவெளி:**
30 வயதிற்கு மேல் பற்களில் இடைவெளி உண்டாகலாம். இதைப்போக்க தினமும் காலையில் எழுந்தவுடன், கட்டை விரலால் உங்கள் பற்களை நன்றாக உள்நோக்கி அழுத்திவிட வேண்டும்.

**கற்பூரத் தைலம்:**
கற்பூரத் தைலம் கடைகளில் கிடைக்கிறது. இதனைக்கொண்டு முகம் கழுவினால் வெள்ளை, கருப்புப் புள்ளிகள் நீங்கும்.

**உதட்டில் வெடிப்பு:**
உதட்டில் வெடிப்பு உள்ளவர்களும், உதடு அடிக்கடி உலர்ந்து விடுபவர்களும் முட்டை வெள்ளை, கிளிசரின் சிறிதளவு, பாதாம் பேஸ்ட் சிறதளவு, பால் ஆடை சிறிதளவு இவை நான்கையும் கலந்து உதட்டில் தடவி, சற்றுப் பொறுத்து வெந்நீரால் கழுவி வருவதால் இக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

**உதடுகள் கருப்பாகுதல்:**
வெய்யிலினாலும் உதடுகள் கருப்பாக மாறலாம். இம்மாற்றம் ஏற்படாமல் தடுக்க உதடுகளில் லிப் கிளோஸ் அல்லது வாசலின் தடவிக் கொள்வது நல்லது.

**உஷ்ணத்தைத் தணிக்க:**
கைகளிலும் கால் விரல்களிலும் மருதாணி வைத்துக்கொள்வது நல்லது. மருதாணி உஷ்ணத்தைத் தணித்துக் குளிர்ச்சியைக் கொடுக்கிறது.

**உணவில் சேர்க்கும் கசப்பு:**
பாகற்காய், வேப்பம்பூ போன்ற கசப்பான பொருள்களை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

கருத்தடை மாத்திரைகள்:
கருத்தடை மாத்திரைகள் சாப்பிடுவதாலும் சருமம் பாதிக்கப்படும். ஆகையால் டாக்டரின் ஆலோசனைப்படி மட்டுமே எடுக்க வேண்டும்.

**சுருக்கங்களை அகற்றுதல்:**
பாதாம் பருப்பை அரைத்து, சருமத்தில் தடவிக்கொண்டால் சருமத்தை வெளுக்கச் செய்யும். சுருக்கங்களை அகற்றும். சருமத்தைப் பாதுகாக்கும்.

வெண்டைக்காய், சௌச்செள, உருளைக்கிழங்கு இவற்றின் சாற்றை சருமத்தில் தடவிக் கொள்வதால் சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கி, சருமத்திற்குத் தேவையான நிறம் கிடைக்கும் வெயிலில் அதிகம் சுற்றினாலும் சருமம் பாதிக்கப்படும்.

**எண்ணெய் வகையும் நாமும்:**
நல்லெண்ணெய், கடுகு எண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் இவைகளை அதிகம் காய்ச்சக்கூடாது.

**வெள்ளைப்பூண்டு:**
வெள்ளைப்பூண்டு அதிகம் சேர்த்துக் கொள்வதால், இரத்த ஓட்டம் அதிகரிக்கும். தோல் சுருக்கங்களை நீக்கும்.

**படுக்குமுன் பால் அருந்துதல்:**
இரவு படுக்குமுன் பால் அருந்துவது நல்லது. ஏனெனில் பாலில் சருமத்திற்கு தேவையான சத்துகள் பலவும் அடங்கி உள்ளன.

**மஞ்சள் பூசிக் குளிப்பது:**
மஞ்சள் பூசிக் குளிப்பது நல்லது. இது சருமத்தில் உள்ள கிருமிகளை அழித்து சருமத்தைப் பாதுகாக்கும். சருமத்தை வெளுக்கச் செய்யும் தன்மையும் உடையது.

38 நெய், வெண்ணெய் உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. ஆனால் அளவிற்கு அதிகமாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

**கரட் சாறு:**
கரட் சாற்றை எடுத்து சருமத்தில் தடவிக் கொள்வதால் சருமத்திற்கு புத்துணர்வு கிடைக்கும்.

**பழங்கள்:**
பொதுவாக எல்லாப் பழங்களும் சாப்பிட வேண்டும். எல்லாப் பழங்களுமே உடம்பிற்கு நல்லது தான்.

**காலில் வெடிப்பு:**
காலில் வெடிப்பு உள்ளவர்கள் தேன் மெழுகைத் தடவிக் கொள்ளலாம். பூண்டையும் இடித்துத் தடவிக் கொள்ளலாம்

காலில் வெடிப்பு அல்லது காலின் மூட்டுகளில் கருப்பாக இருந்தால், இரவு படுக்கைக்கு போகும் முன் G pumic stone அல்லது மிருதுவான பிளாஸ்டிக் பிரஷினால் வெடிப்பு உள்ள இடத்தில் நன்றாகத் தேய்த்துக் கழுவித் துடைத்து, வஸலின் அல்லது எலுமிச்சம் பழச்சாறு, பால் ஏடு இரண்டையும் சேர்த்து கால் முழுவதும் முக்கியமாக வெடிப்பு உள்ள இடத்தில் நன்றாகத் தடவ வேண்டும். பிறகு, இளஞ் சூடான வெந்நீரில் சுமார் 10 நிமிடம் வரை வைத்திருக்கவும். பிறகு, காலைத் துடைத்துச் சிறதளவு வஸலின் தடவிக் கொள்ளவும். இதனால் காலில் வலி இருந்தாலும் குறையும்.

**செயற்கை நடை:**
Artificial Walking என்று சொல்லப்படும் செயற்கை நடை நடக்கக்கூடாது. நன்றாக நிமிர்ந்து சாதாரணமாகவே நடக்க வேண்டும்.

**கொண்டை போடுதல்:**
கொண்டையைக் கழுத்தின் மேல் வருமாறு போட்டுக்கொண்டால், கவர்ச்சியாகவும், இளமையாகவும் தோன்றும். கொஞ்சம் தூக்கிப் போட்டுக் கொண்டால் கொஞ்சம் வயது அதிகமாகவே தோற்றமளிக்கும். கொண்டையை அதிகம் தூக்கிப் போட்டு சுற்றியுள்ள கூந்தலைத் தளர்த்தியாக விட்டுக் கொண்டால் மிக நன்றாகத் தோன்றும்.

**சேலையும் நகையும்:**
நிறைய டிசைன் போட்ட சேலை அணிந்தால் நகைகள் கொஞ்சமாக அணிய வேண்டும். டிசைன் அதிகமில்லாத சேலைகளை அணிந்தால் நகைகைகள் அதிகம் போட்டுக் கொள்ளலாம்.

**மார்பகங்கள்:**
மார்பகங்கள் சிறயதாக உள்ளவர்கள் நடக்கும்போது தோள் பட்டைய பின்புறமாகச் சாய்த்து நிமிர்ந்து நடக்க முயற்சி செய்ய வேண்டும்.

**கழுத்து நீளமா?**
கழுத்து நீளமாக உள்ளவர்கள் கழுத்து மறைக்கப் பட்டையாக நெக்லஸ் அணியலாம். கழுத்தின் பெரும் பகுதியை மறைக்குமாறு முடி அலங்காரம் செய்து கொள்ளலாம். குளோஸ் நெக் ஜாக்கெட்டும் அணிந்து கொள்ளலாம்

**இடுப்புக்கு கீழே பெருத்துவிடும்:**
ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை பார்க்கும் பெண்களுக்கு இடுப்புக்கு கீழே பெருத்து விடும். இப்படி உள்ளவர்கள் வேலை செய்யும் போது ஒரு மணிக்கு ஒரு தரம் 5 நிமிடங்கள் நடந்துவிட்டு உட்கார வேண்டும்.

**மாதவிலக்கும் ஒய்வும்:**
மாதவிலக்கான முதல் மூன்றுநாட்களுக்குக் கூடுமான ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது. ஓய்வு இல்லாவிடில் அழுகு பாதிக்கும்.

**வாய் நாற்றம்:**
வாய் நாற்றம் உள்ளவர்கள் வெந்நீரில் எலுமிச்சை ரசம் சேர்த்துக் குடிக்கலாம். 1/2தேக்கரண்டி தேன் தினமும் சாப்பிடலாம்.

**உபயோகித்த சோப்பு, சீப்பு:**
ஒருவர் உபயோகித்த சோப்பு, சீப்பு, டவல் மூன்றையும் இன்னொருவர் ஒரு போதும் உபயோகிக்கக்கூடாது. இதனால் சருமம் பாதித்து அழகு கெடக்கூடும்.

**குழந்தை பிறந்தால் அழுகு...?**
குழந்தை பிறந்தால் அழுகு பாதிக்கும் என்பது தவறு. குழந்தை பிறந்த உடன் 40 நாட்களுக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு, தேகப் பயிற்சிகள் செய்து, உணவில் கட்டுப்பாட்டுடன் இருந்தால் அழகாக இருக்கலாம்.

குழந்தைக்குப் பால் கொடுப்பதால் அழுகு பாதிக்கக்கூடும் என்பது மிகவும் தவறான எண்ணம். சில மாதங்களுக்குப் பிறகு பிரஸ்ட் மசாஜ் செய்தால் மீண்டும் சரியாகிவிடும்.

குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது குனியாமல் நிமிர்ந்து உட்கார்ந்ததான் கொடுக்க வேண்டும்

**அகலமான வாய்:**
அகலமான வாய் உடையவர்கள் சிரிக்கும் போது அதிகம் சிரிக்காமல் புன்சிரிப்பாகச் சிரிக்கப் பழக வேண்டும்.

**எண்ணைக் கசிவான சருமம்:**
எண்ணை கசிவான சருமம் உடையவர்களுக்குத் துருவின காரட், முட்டை, மஞ்சள், தேன், முல்தானிமிட்டி இவற்றை சம அளவில் கலந்து முகத்திற்குப் பூசிக் கொண்டால், சருமத்தைச் சாதரண சருமமாக மாற்றச் செய்யும்.

எண்ணெய்க் கசிவான சருமம் உடையவர்கள் அடிக்கடி ஆவி பிடித்தல் நல்லது. இப்படி செய்வதால் சருமத் துவாரங்கள் திறந்து, அழுக்குகள் வெளியேறிவிடும். இதனால் பருக்கள் வராமல் இருக்கும்

**முகம் பளபளப்பாக:**
தக்காளி சாற்றுடன், சிறதளவு தயிர் கலந்து முகத்தில் தடவிக் கொண்டால், முகம் பளபளப்பாக இருக்கும்

உருளைக்கிழங்குச் சாறு ஒரு தேக்கரண்டியுடன், ஒரு தேக்கரண்டி மோர் கலந்து முகத்தில் தடவிக் கொணர்டால் முகம் வெளுமையாகும்

sasi.naren@thaiveedu.com

■ ■ ■

Tutoring & Homework Help

French
For grade 4 to grade 12 or IB program By a native French speaking teacher from France

Math
For grade 5 to grade 12 or IB program In English or French medium Intersection

Victoria Park & Ellesmere

Mr. Shanthakumar
647 262 94 30

Non Medical Insurance / Funeral Expense $10,000



| Age | Female | Male | Male Smoker |
|---|---|---|---|
| 60 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

Call us for more details 905.470.0063

# வீடு வாங்கவும், விற்கவும்......




2 Bedrooms, 2 Washrooms Brand New Condo at Downtown

3 Bedrooms, 2 Washrooms New Furnace And Cac

6+2 Bedrooms, 5 Washrooms Close To Schools,Public Transit

4+1 Bedrooms, 4 Washrooms Over 120K Upgraded

4+1 Bedrooms, 4 Washrooms Upgraded Corner Lot, Aprox 2600 St

5 Bedrooms, 4 Washrooms 2901 Sqft Luxury Home

4 Bedrooms, 3 Washrooms Beautiful 4 Years Old

5+1 Bedrooms, 4 Washrooms Sep.Entrance To Basement

4 Bedrooms, 2 Washrooms Few Minutes To Shopping, Hospital

3 Bedrooms, 4 Washrooms Close to Hospital, Transit

3 Bedrooms, 3 Washrooms Low Maintenance Fee Condo House

4 Bedrooms, 2 Washrooms Well Maintained Complex

சகல விதமான படிவங்களும் நிரப்பிக் கொடுக்கப்படும்

இரஞ்சன் or செல்வா

416.816.1220



RED CARPET. Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Office: 416.284.5555

RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220

வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......



# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
  - Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
  - Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion



**Beauty Classes**

அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

## அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

**Tel: 416.509.7978**

Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

## ஹோமியோபதி

# மனிதநேய மருத்துவம்



போல் யோசேப்
ஹோமியோ மருத்துவ நிபுணர்

‘தாய்வீடு’ வாசகர்களுக்கு என் இனிய நல்வாழ்த்துக்கள். கனடிய தமிழ் ஊடகத் துறையில் தாய்வீடு பத்திரிக்கையின் சேவையென்பது மிகவும் போன்றுதற்குரியதாகும். தாய்வீடு வாசகர்களுக்காகவும் அவர்களின் உடல், உளஆரோக்கியத்தின் மேம்பாட்டிற்காகவும் இந்தக் கட்டுரை தொடரை ஆரம்பிக்கின்றேன்.

இவ்வுலகில் எத்தனையோ மருத்துவ முறை களை மனிதன் கையாண்டு அவற்றின் பலனை பெற்று வருவது அனைவரும் அறிந்து விடயமாகும். இப்படி பல மருத்துவமுறைகள் வழக்கத்தில் இருந்தாலும் உலக சுகாதார நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ முறைகள் என்று பார்க்கும் போது ஒரு அறுபது மருத்துவமுறைகளை குறிப்பிடலாம். அதில் பொதுவாக எல்லோராலும் பின்பற்றப் படும் அலோபதி என்கிற ஆங்கில மருத்துவம் முன்னிலை வகிப்பது பாராட்டுதற்குரியதாகும். இதற்கு அடுத்தாற்போல ஹோமியோபதி என்ற ஜெர்மன் மருத்துவம், நேச்சுரோபதி என்கிற இயற்கை மருத்துவம், ஆயுள்வேத மற்றும் சித்த மருத்துவம், அக்குப்பங்சர் மற்றும் சீன மருத்துவம் போன்ற பல மருத்துவ முறைகளும் உலக சுகாதார நிறுவனத்தால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு இதற்கென பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டங்கள் வறையறுக்கப்பட்டு பட்டப் படிப்புகளாகவும், பட்ட மேற்படிப்புகளாகவும் பயிற்றுவிக்கப்பட்டு உருவாக்கப்படும் சிறந்த மருத்துவர்களால் மனித சமூகம் பயன்பெற்று வருவது தெரிந்ததே.

சில மருத்துவ முறைகள் அந்தந்த நாடுகளில் தோன்றி அந்த நாட்டு மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகி வழக்கத்திலுள்ளது. சில மருத்துவ முறைகள் அரசியல் காரணங்களாலும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகவும் சில நாடுகளில் வளரவிடாமல் நசுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில மருத்துவமுறைகள் தவறானவர்களின் கைகளில் அகப்பட்டு சிகிச்சை அளிப்பதால் அவை நல்ல பயனைக் கொடுக்காமல் மக்களால் மறக்கப்பட்டுள்ளது.

சில மருத்துவ முறைகளில் முறையாகப் படிக்காத போலி மருத்துவர்கள் உள்ளே நுழைந்து பணமே குறிக்கோளாக செயற்படுவதால் மக்கள் ஏமாற்றம் அடைந்து அந்த மருத்துவமுறையின் உண்மையான பலனை பெற முடியாமல் போகிறது. இன்னும் சில மருத்துவமுறைகளில் பரம்பரை பரம்பரையாக ரகசியங்கள் பேணப்பட்டு வருவதால் அதன் பயன் எல்லாருக்கும் தெரியாமல் போய்விடுகிறது.

இன்னும் சில மருத்துவ முறைகளை அந்த நாட்டு அரசாங்கங்களே ஊக்குவித்து அவற்றிற்கென அரசாங்க மருத்துவமனைகள், மருத்துவர்கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் என்று ஏற்படுத்தி அதன் பலனை மக்கள் பயன்பெறும் வண்ணம் செய்து வருகின்றன.

இந்தியாவில் ஆங்கில மருத்துவத்திற்கு சமனாக ஆயுள்வேதம், ஹோமியோபதி, சித்த மருத்துவம், போன்றவற்றிக்கு அரசாங்கம் ஊக்கமளித்து, அரசாங்க மருத்துவமனைகளிலும் அந்தந்த மருத்துவ நிபுணர்களை பணியில் அமர்த்தியும் மேற்சொன்ன மருத்துவ முறைகளில் மாணவர்கள் முறையாக பயிலுவதற்கு பல்கலைக்கழகங்களிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் பட்டப்படிப்புகளை உருவாக்கியதன் மூலம் தகுதியான மருத்துவர் களை உருவாக்கியும், மறைந்துகிடக்கிற மருத்துவங்களின் மகிமையை மக்களுக்குப் பயன்படுத்த ஆராய்ச்சிக்கூடங்கள் அமைத்,து அதற்கான ஆய்வுகளும் நடந்து வருவது ஒரு நல்ல விடயமாகும். இந்தியா, இலங்கை, சீனா, போன்ற நாடுகளில் இதற்கென தனி அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டு இந்த மருத்துவர்களில் முன்னேற்றம் குறித்து அக்கறை எடுக்கப்பட்டுவருகிறது.

ஆனாலும் மேற்கத்தைய நாடுகளிலும் ஆங்கில மருத்துவ முறைக்கு அடுத்தபடியாக ஹோமியோபதி மருத்துவமும், இயற்கை மருத்துவமும் அரசாங்கங்களினால் அங்கீகரிக்கப்பட்டு தனியாக செயற்பட அனுமதிக்கப்படுகிறது. சில நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து போன்ற நாடுகளில் அடிப்படையாக ஆங்கில மருத்துவம் கற்றவர்கள் தான் ஹோமியோபதி மருத்துவத்தை அங்குள்ள கல்லூரிகளில் பயின்று மருத்துவம் பார்க்க முடியும் என்ற நிலையும் உள்ளது.

ஆம் வாசகர்களே இத்தகைய மருத்துவ முறைகள் நோயாளிகளுக்கு நன்மைகளைக் கொடுத்தும் ஏன் கீழைத்தேய நாடுகளில் பிரபலமானது போல் மேற்கத்தைய நாடுகளில் பிரபலமாகவில்லை. அதிலும் குறிப்பாக மேற்கத்தைய மருத்துவமான ஹோமியோபதி மருத்துவமும் மேற்கத்தைய நாடுகளில் பிரபலமாகவில்லையே. இந்தியாவில் ஹோமியோபதி மருத்துவம் பிரபலமான அளவுக்கு அது கண்டு பிடிக்கப்பட்ட ஜெர்மன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூட பிரபலமாகவில்லையே ஏன்? இதற்கு பின்புறமாகவுள்ள வியக்கவைக்கும், ஆச்சரியமூட்டும் பதில்களைத்தான் இனிவரும் கட்டுரைகளில் பார்க்கப் போகின்றோம். இந்த மருத்துவ முறைகளை வளரவிடாமல் தடுக்கின்ற பணியை செய்து வருகின்ற ஒரு மாபியா கும்பல் உலகெங்கும் செயற்படுகின்றது. உலகத்தின் மிகப் பெரிய பணமுதலைகளான ஆங்கில மருந்துகளை உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்களின் பங்களிப்பு இதிலே முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவை பல அரசாங்கங்களை தன்னகத்தே வைத்தும் ஆராய்ச்சியாளர்கள் என்ற பெயரில் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கியும், ஏன் மருத்துவர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கியும் முழு மருத்துவ உலகத்தையே தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

மக்களின் பிணி போக்கும், உயிர்காக்கும், அவசர நிலைகளில் அற்புதமாக மனிதனைக் காக்கும் அறுவைச் சிகிச்சையின் மூலம் நோயுற்றோரை மரணத்தினின்று மறுவாழ்வு அளிக்கும் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் அதீத வளர்ச்சி கண்டுகொண்டிருக்கும் மேற்கத்தேய மருத்துவமான ஆங்கில மருத்துவம் இன்று மருத்து தயாரிக்கும் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் செயற்படுகிறது. இந்த மருத்துவமுறையில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் அனைத்தும் இவற்றின் கட்டுப்பாட்டில் தான் செய்யப்படு கின்றன. இதன் விளைவுகள் என்ன என்பதைப் பற்றியும் அடுத்து வரும் கட்டுரைகளில் ஆதாரத்துடன் விளக்குகிறேன்.

தொடரும்…

paul.joseph@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca


K. ANANTHANATHAN MA, MSW., RSW.

Registered Social Worker with OCSWSSW
MVA SOCIAL WORKER / ASSESSOR
MVA Social Worker Assessment & Counseling Therapy

ஒன்ராரியோ மாகாணத்தில் (OCSWSSW) சட்டரீதியாகப் பதிவு
செய்யப்பட்ட Social Worker, வாகனவீதி விபத்துக்களில் சிக்கி
அல்லல்படுவோருக்கான சமூக உள நலப்பாதிப்புக்களை மதிப்பீடு
செய்து காப்புறுதித் தாபனங்களிடமிருந்து அவர்களுடைய
சட்டத்தரணிகள் மூலம் நட்டஈடுகளைப் பெற்றுத் தருவதில் வல்லவர்.

30 வருடங்களுக்கு மேலான இத்துறையில் ஈடுபட்டுள்ள
KWH Medical Assessment Centre - Mississauga விலுள்ள Company யிலும்
ReMedical Assessment Inc - North York லும்
அவர்களது சமூக உளநலப்பாதிப்பை மதிப்பீடு செய்வதில்
கடமையாற்றுபவர்.
அத்தோடு ஒன்ராரியோ ODSP, கனேடிய மத்திய அரசின் RDSP
விண்ணப்ப பத்திரங்களை நிரப்புவதிலும்
சட்டரீதியாக அனுமதி பெற்றவர்.

Tel: 905-572-6854
Fax: 905-271-7851
Email: kananthan2003@hotmail.com
K.W.H. Remedical Medical Assessment Centre
Mississauga & North York


Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Email: rajah@formulahonda.com
2006 Acura MDX $24,995
2005 Acura RSX $15,995
2006 Acura MDX $26,995
2008 Accord Sedan $19,995
2010 Accord EX Sedan $30,175
2008 Accord EX-L NAVI Sedan $25,995
2007 Accord EX-L Sedan $19,995
2007 Accord SE Sedan $13,995
2008 Accord Sedan $17,995
2007 Accord SE Sedan $18,995
2006 Honda Accord SE $15,995
2007 Accord SE Sedan $17,995
2007 Accord SE Sedan $14,995
2007 Civic Please Call
2007 Honda Civic $15,995
2008 Honda Civic $17,995
2008 Honda Civic $16,995
2006 Honda Civic $12,900
2006 Honda Civic $14,995
2007 Honda Civic $13,995
2008 Honda Civic DX $13,995
2008 Honda Civic DX $14,995
2009 Honda Civic DX Please Call
2008 Accord Sedan $15,299
2007 Honda Civic EX $15,995

உலகப் புகழ் பெற்ற

# சைக்கிள் பிராண்ட் அகர் பத்திகள்




**சகல சமய நிகழ்வுகள், மங்கல வைபவங்கள், பிரார்த்தனைகள், இல்ல வழிபாடுகள், போன்ற அனைத்துத் தேவைகளுக்கும்**

## நீடித்த நறுமணம் தரும்

## சைக்கிள் பிராண்ட் அகர் பத்திகளை

**கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்**


*இப்போது சகல வர்த்தக நிறுவனங்களிலும் கிடைக்கிறது.*

விற்பனைப் பிரதிநிதி:
**URUTHIRA BROTHERS LTD.**
**Tel: 416 412 4427**

இறக்குமதியாளர்கள்/மொத்த விற்பனையாளர்கள்
**Fernando Enterprises Inc.**
**90 Hymus Road, Unit 1**
**Scarborough, ON. M1L 2C9**
**Tel: 416 615 4446**



உங்களின் சுதந்திரமான முடிவுக்கு...
RBC
RBC Royal Bank
Mayuran Ketheeswaran
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
Cell : 416 823 4479
Fax : 416 444 4433
mayuran.ketheeswaran@rbc.com

MARKHAM / STEELS
*EXCLUSIVE LISTING*
Fabulous Four Bedroom, Four Bathroom Semi With Many Upgrades. Beautiful Hardwood Floors, Hardwood Stairs, Coffered Ceilings, Main Floor Powder Room & Laundry. Separate Side Entrance To Full Finished Basement W/4 Pc Bathroom. Modern Upgraded Kitchen W/Walk-Out To Deck & A Large Backyard. Large Master Bedroom With Oversized Walk-In Closet & Ensuite Bathroom.
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
www.iwishtomove.com
NEW LISTINGS EVERYDAY
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated
*Not intended to solicit properties currently listed for sale.


Toronto - London - Kuwait - Colombo
Toronto - London - Kuwait - Madras
From $999 + Tax
Toronto - Washington - Doha - Colombo
$850 + Tax
QATAR AIRWAYS
Toronto - London - Colombo
$1175 + Tax
SriLankan
Toronto - Brussels - Chennai
$749 + Tax
JET AIRWAYS
Toronto - Abudhabi - Chennai
$725 + Tax
ETIHAD AIRWAYS
Toronto - London - Bahrain - Colombo
$849 + Tax
GULF AIR
Toronto - London - Bahrain - Chennai
$869 + Tax
GULF AIR
SPECIAL GUIDED TOURS
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia • Vietnam • Laos • Myanmar • Hongkong • China • Korea • Japan
SriLankan ETIHAD Emirates FLY KINGFISHER
JET AIRWAYS QATAR AIRWAYS KUWAIT AIRWAYS GULF AIR
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202, Toronto, ON (Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207 Markham, ON (Markham & Steeles)
905.201.6660
New Location
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $465.
- digi Media -

# உலகின் ஒரேயொரு சொர்க்கபுரி

உலகமே விஞ்ஞான மயமாகிக் கொண்டிருக்கிறது. எங்கேயும் எப்போதும் கொண்டாட்டம். அதே நேரம் பணத்தைக் கொட்டி பணத்தை அள்ள ஒரு கூட்டம் உலகமெங்கும் இருக்கத்தான் செய்கின்றது. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்கள். ஏதோ காரணங்களையும், நொண்டிச் சாட்டுக்களையும் சொல்லிச் சொல்லியே நொந்து போனவர் களல்லவா நாம்.

ஒரு நல்லவரைப்பற்றி விமர்சிக்கும்போது நாம் அவரை சூதுவாது அறியாதவர் என்றுதான் சொல்வோம். சூதாடிச் சொத்து சுகத்தை இழந்த சரித்திரக் கதைகளை இன்னமும் படித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். உலகமெல்லாம் சிறு சிறு பணத்திற்காக தொடங்கி கோடிக்கணக்கான பணத்தை அள்ளும் சூதாட்டம் இன்னமும் கொடி கட்டிப் பறந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆண்டவன் புண்ணியத்தால் நல்ல காலம் திரௌபதைகளை வைத்து சூதாடும் வழக்கம் இல்லை. மேல் மட்டத்தில் இருப்பவர்கள் சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏற வேண்டுமென்று ஆசைப்படுகின்றார்கள். கீழ் மட்டத்தில் இருப்பவர்களே சிகரமும் வேண்டாம் வானமும் வேண்டாம் ஏதோ வாழ்க்கையைச் சிறப்பாக்க வழி இருக்கின்றதா என்று தேடுகின்றார்கள்.

இதெற்கெல்லாம் இன்று பலருக்கும் வடிகாலாக இருப்பது சூதாட்டமே (Gambling). Gambling என்றவுடன் நாம் எல்லாம் Las Vegas என்று தான் பீலா விடுவது வழக்கம். Las Vegasஐ அடிக்க உலகில் எந்த இடமும் இல்லை என்றுதான் கணக்கு விடுவது வழக்கம். நான் உட்பட நம்மில் பலருமே Gambling என்றவுடன் Lag Vegas என்றே உச்சரித்துக் கொண்டு திரிந்தோம்.

ஆனால் அடித்தது jagpot என்பது போல் எனக்கு ஒரு சர்வதேச மகாநாட்டில் கலந்து கொள்ள உலகின் மிகப்பெரும் Gambling நடைபெறும் இடத்தைக் காணும் பாக்கியம் கிடைத்தபோதுதான் அடடா நாம் இன்னமும் குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறோம் என்று தெளிவானது.

ஆம்! உலகின் மிகப்பெரும் Gamblingஐ Industry ஆகவே நடத்தும் Macau என்னும் தீவுக்கு போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. யாருக்காவது Macau என்ற சொல்லை உச்சரித்தவுடன் பலரும் ஆவென்று வாயைப் பிளப்பார்களாயின் அவர்கள் சூதாட்டப் புலிகள் என்று எண்ணிக் கொள்ளுங்கள். சூதாட்டத்தின் பல எல்லைகளைத் தொட்டு நெஞ்சைவிட்டகலாத இடமென்றால் அது நிச்சயமாக Macau ஆகத்தான் இருக்கமுடியும். கோடிகளில் புரள்பவர்கள் கூட அள்ளிக் கொள்ள சூதாட்டத்தில் கொட்டும் பணத்தை பார்த்தால் தலையே கவிழ்ந்துவிடும்.

Torontoவிலிருந்து Hong Kong நோக்கிய விமானப் பயணத்தில் Macauவிற்கு பயணப்படுவதை சக பயணிகள் கேட்ட போது ஆவென்று வாயைத் திறந்ததை வைத்தே ஆகா நான் ஏதோ ஒரு Pardise நோக்கித்தான் பறக்கின்றேன் என்பதை உணர முடிந்தது. அங்கே நடக்கும் மாநாடொன்றில் கலந்து கொள்ளச் செல்கின்றேன் என்று என் பக்கத்து இருக்கைப் பயணியோடு பேசியபோது சொன்னதை கேட்டு அப்பயணி கைகுலுக்கி "நீ வாழ்க்கையில் கொடுத்து வைத்தவன். நான் சீனாவில் பிறந்தும் அந்தப்பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை" என்றார்.

Hong Kongஇன் அழகிய 5 Star Hotelஇல் Macau செல்பவர்களுக்கென விசேட கவனிப்பே உண்டு. இரண்டு நாட்கள் Hong Kongஇல் அதன் அழகை அள்ளிப் பருகிவிட்டு Macau செல்ல ஆயத்தமானேன்.

சீனாவின் விசேட நிர்வாகத்தில் அமைந்த பிராந்தியமே Macau. Hong Kong இலிருந்து Pearl River உடாக பயணப்பட்டால் வருகிறது Macau. 1999 வரை Macau போத்துக்கல் நாட்டின் ஒரு நிர்வாகத்திலேயே இருந்தது. ஐரோப்பிய கட்டுப்பாட்டிலிருந்து கடைசி Colony ஆக இருந்த ஒரே இடம் Macau. ஆழகிய Boat பயணத்தில் Macauவை அடைந்தவுடன் நம்க்கு ஏதோ ஐரோப்பிய நாடொன்றின்றில் இருக்கின்ற மனப்பிரமையை உண்டு பண்ணுகிறது.

Macau மிகக் கடுமையான Hot Summerயும் Mild Winter சீதோஷ்ண நிலையும் கொண்ட இடமாகும். அடிக்கடி Storm, Typhoon தாக்குதலால் பயணங்கள் தடைப்படுவது இயற்கை. 16ம் நூற்றாண்டில் சீனா, போத்துக்கல் நாட்டுக்கு Macauவை வழங்கியது. கடற்கொள்ளைக்காரர்களை கண்டுபிடிக்கும் பணியை போத்துக்கல்லுக்கு வழங்கி அவர்களை அங்கே குடியமர்த்தியது. 20ம் திகதி December 1999 ஆண்டோடு 400 ஆண்டுகால கட்டுப்பாட்டிலிருந்து சீனா தன் வசம் Macau வைப் பெற்றுக்கொண்டது.

ஆனாலும் சீனா தனது கம்யூனிச சித்தாந்த கட்டுப்பாட்டை Macau மீது திணிக்கவில்லை. ஒரு நாடு, இரண்டு நிர்வாகம் என்ற கொள்கையை சீனா Macau மீது செலுத்தியது.







முழுச் சுதந்திரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. Macau தமக்கென அரசு, கடவுச்சீட்டு, விசா, பணம் என்பவற்றை தனித்தன்மையுடன் சீனாவிடமிருந்து பிரித்து வைத்திருக்கின்றது.

VISA நீங்கள் Enter பண்ணும் போது உங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் Hong Kongஐ சேர்ந்தவர்கள் தமது அடையாள அட்டையுடன் உட்புகுந்து ஒரு வருடம்வரை தங்கும் வசதி உண்டு. Macau சர்வதேச விமான நிலையமும் Air Macau என்ற விமான சேவையுடன் இயங்குகின்றது. தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து விமான சேவை கிடைக்கின்றது. காரணம் Low Landing Fees இந்த நாட்டு விமான சேவைகளுக்கு வழங்கப்படுகின்றது.

Hong Kong இலிருந்து Ferry Service நாளொன்றுக்கு பலதடவை இயங்கின்றது. நீங்கள் Ferryஇல் இருந்து இறங்கியவுடன் Book செய்த Hotel Bus உங்களின் வரவுக்காக காத்திருக்கும். அதிலும் Casino Hotelஆக இருந்தால் நீங்கள் ராஜ உபசாரங்களுடன் மதிக்கப்படுவீர்கள். உங்களின் வரவை அவர்கள் பெரு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறார்கள். நீங்கள் Hong Kongஇல் Immigration தாண்டியவுடன் உங்களை நேராக Ferayக்கு அழைத்துச் செல்லும் வசதிமுண்டு. Hong Kong இல் நேரத்தை செலவிட விரும்பாதவர்கள் விமான நிலையத்திலிருந்தே நேராக Feray மூலம் Macauவை வந்தடைந்துவிடலாம். இதனால் செலவும் குறைவு, நேரத்தையும் மிச்சப்படுத்தலாம்.

Main land Chinaவிலிருந்து Macauவுக்கு Portas Do Cerco இருந்து ஆயிரக் கணக்கில் மக்கள் கால்நடையாக வருகின்றார்கள். இவர்கள் நாளாந்த தேவைகளுக்காக வருபவர்களாக இருப்பதால் மணிக்கணக்கில் காத்திருந்து நெரிபட்டு இடிபட்டுத்தான் வந்து சேருகின்றார்கள். இந்த வழியாக உல்லாசப் பிரயாணிகள் யாரும் வருவது கிடையாது.

வெளிநாட்டவர்களுக்கு Passport Check செய்வதற்காக விசேட Counterகளை அமைத்திருக்கின்றார்கள். Macauவின் வீதிகள் குறுக்கலாக அமைந்திருப்பதால் போக்குவரத்து நடைமுறைகள் எதுமே Macauவில் மதிக்கப்படுவதில்லை. மக்கள் தம் விருப்பத்திற்கேற்ற நிலையில் கண்மண் தெரியாமல் பயணிக்கின்றார்கள். இரண்டு Bus சேவை நிறுவனங்களே சேவையில் ஈடுபட்டிருகின்றன. Transportes Unbands, Sociedade De Transportes என்ற இரண்டு Bus சேவையுண்டு. ஆனால் எங்கே போகின்றன எப்படி போகின்றன என்பதை கண்டு கொள்வதே கடினம். எங்கே பார்த்தாலும் சீன மொழியின் ஆதிக்கமே இருக்கின்றது. Bus Driverகள் ஆங்கிலமே அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.

Taxi சாரதிகள் தம்மிடையே Hotel, Casino போன்றவற்றின் பெயர்களை கைவசம் வைத்திருக்கின்றார்கள். அவற்றைக்காட்டி எங்கே போக வேண்டும் என்பதை புரிந்து கொள்கின்றார்கள். அல்லது நீங்கள் கொண்டு செல்லும் காகிதத்தை காட்டி இடத்தை புரிய வைக்கலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் Taxiகளை காண்பதே அபூர்வம். அன்றைய நாளை ஒய்வு நாளாக கழிக்கின்றார்கள்.

Main Land Chinaவிலிருந்து Bus காகக் Macau Casinoவை நோக்கி சீனர்கள் படையெடுத்து வருகின்றார்கள். சனி, ஞாயிறு கிழமைகளில் Casinoகளில் சனத்திரள் அலை மோதுகின்றது. Macau Towerஇலிருந்து நீங்கள் சீனாவினதும் Hong Kongஇனதும் அழகைக் கண்டு கழிக்கலாம். அதே போல் Fisher man's Wharf எனப்படும் Theme Parkஇல் Shopping செல்வதோடு பொழுதை உல்லாசமாகக் கழிக்கலாம்.

அனேகமான Casinoகள் கிழக்கு கரையை யொட்டிய Macau Peninsulaவில் அமைந்திருக்கின்றன. வடக்குப் பகுதியை ஒட்டி சிறிய Casionoக்களும் காணப்படுவதோடு மிக அருமையான Indian Restaurantஉம் பல Portuguese Restaurantகளும் காணப்படுகின்றன. புதிய அபிவிருத்திப் பகுதியான உலகின் மிகப் பெரிய சூதாட்ட Hotel ஆன Venetian Macau தங்கி நிற்கும் வாய்ப்பு Conferenceஇல் கலந்து கொண்ட அனைவருக்கும் கிடைத்த அரிய வாய்ப்பு சொந்தப் பணத்தில் செல்வதாக இருந்தால் $2^{nd}$ Mortgage எடுத்துக் கொண்டு தான் செல்ல வேண்டுமோ என நினைத்து விடாதீர்கள். Week Endஇல் மட்டும் Hotel




Rate கொடி கட்டிப்பறக்கும். பணத்தை கொட்டி விளையாட சீனாவிலிருந்து மக்கள் Casiono களை நோக்கி குவிகின்றார்கள்.

3,000 அறை வசதிகளைக் கொண்டது The Venetian Macau Resort Hotel. 92,900 Sq.M பரப்பளவைக் கொண்ட இந்த Hotel Aug 28, 2007இல் திறக்கப்பட்டது. உலகின் மிகப் பிரமாண்டமாக 3000 Slotஐயும் 750 Table Gamesஐயும் கொண்டது. 15,000 Seats வசதிகொண்ட Concert மேடையேயுள்ளது. 30 Restaurants, 350 International Brand Stores இங்கேயே அமைந்துள்ளன.

Macauவின் பெருமைக்கு மிக அழகு சேர்ப்பது Venetian Hotel என்றால் மிகையாகாது. சீனாவின் அழகுச் சிற்பங்கள் போல் திரும்பிய இடமெல்லாம் கண்ணைக் கவரும் விதத்தில் மூளைய கிறங்கடிப்பது போல் நடந்து திரியும் போது தேவலோகத்தில் இருக்கிறோமா என்ற உணர்வு ஏற்படுகிறது. ஒடோடி வந்து உல்லாசப் பிரயாணிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஆட்களுக்காக பலரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

தேன் நிலவைக் கழிக்க வந்த ஜோடிகள் நிறையவே காணப்படுகின்றார்கள். இந்த Hotelஐப்பற்றி ஓர் ஆச்சரியமான விடயமொன்றை அங்கே வழிகாட்டியாக இருந்த சீனச் சிற்பமொன்று எனக்கு எடுத்துச் சொன்னது. அதாவது இந்த Hotelஇனுள் 9 Boeing 741 Jumbo Jetகளை அடக்கலாம். கேட்கும்போதே தலையை சுற்றியது.

இவற்றிற்கு அருகாமையில் தான் உலகின் மிக உயரமான Bungy Jumping அமைந்திருக்கிறது. 233M உயரமான Bungy Jump இல் கூட்டம் அலைமோதுகிறது.

சீனா என்றால் நமக்குத் தெரிந்ததெல்லாம் Chinese Food, குள்ளமான மனிதர்களும் தான். ஆனால் சீனாவினால் நிர்வகிக்கப்படும் Macau உலகின் ஒரேயொரு சொர்க்கபுரி என்று தான் சொல்லவேண்டும். கண்களைக் கவரும் Macauவை விட்டு விமானம் ஏறி Torontoவில் தரைதட்டிய போதும் மனதில் Macau என்ற சொர்க்கலோகத்தில் கண்டு, ரசித்து வந்த அந்த விபரிக்கமுடியாத அதிர் வலைகள் மனதில் நீங்கரமிட்டுக் கொண்டு தான் இருந்தன. இருக்கும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# விழி திறக்கும் விஞ்ஞான சிந்தனை

சிவவதனி
பிரபாகரன்



## அறிவு விழி திறக்கும் விஞ்ஞான சிந்தனை:

சிந்தனையின் அகச்செயற்பாடுகளை அறிவு வழி சிந்தனைகளின் பால் திருப்பி அறிவியல் உலகை விழிகளால் தரிசிக்கும் வழிமுறையை நாம் கற்றுக்கொள்வது வாழ்வில் பலவற்றை உண்மைநிலை பிறளாமல் கற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது.

அறிவியல் துறைகளின் விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் பூமி அனுதினமும் வளப்பட்டு வருகின்றது. செயலற்று கிடக்கச் செய்யும் சிந்தனைகளால் பயனேதுமில்லை. பூமியில் புதிய மாற்றங்கள் ஏற்பட அறிவியல் சிந்தனையும் விஞ்ஞான மனப்பான்மையும் வளர வேண்டும். இத்தகு விஞ்ஞான சிந்தனையை பெற எவரும் விஞ்ஞானியாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. சாதாரண மனிதர்களின் வாழ்வில் அன்றாட முன்னேற்றம் திகழ வேண்டுமாயின் அவர்களுள் விஞ்ஞான சிந்தனை எழ வேண்டும். எதனையும் அறிவியல் ரீதியில் ஆராயும் உளப்பாங்கு வேண்டும். அரும்பெரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு துறைசார் விஞ்ஞான அறிவுத்தேர்ச்சி இருப்பது அவசியமே. ஆனால் வாழ்க்கை விஞ்ஞானத்தை புரிந்து கொள்ள எம்முள் முடுக்கி விடக்கூடிய எளிமையான விஞ்ஞான சிந்தனையே போதுமானது. சாதாரண சின்னஞ் சிறிய விடயங்களைக்கூட விஞ்ஞான மனப்பான்மையுடன் நாம் ஆராயப்பழக வேண்டும்.

'ஏன்?' என்று கேட்கப்பழக வேண்டும். தேடல்கள் அறிவை வளர்ப்பவை. இளம்பிராயத்தவறுள் இயல்பாகவே 'ஏன்' என்ற கேள்விகள் ஓராயிரமாய் எழுவதுண்டு. ஆனால் பெற்றோர்கள் அவர்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் சளைத்துபோய் "சும்மா இரு" என சலித்து அடக்கி விடுவர். இது தவறு. 'ஏன்' என்ற கேள்விக்கு விளக்கம் காண முயல்வது விஞ்ஞான சிந்தனையின் வளரச்சியைத் துரிதப்படுத்தும் ஒரு செயலாகும்.

எந்தவொரு விடயம் குறித்த கேள்வியையும் சாதரண அன்றாட விடயம் தானே என உதாசீனப் படுத்தலாகாது. சாதாரண அன்றாட விடயங்களினை விஞ்ஞான சிந்தனைகளூடாக சிந்தித்தவர்களாலேயே உலகில் பாரிய கண்டு பிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சோர் ஐசக் நியூட்டன் (Sir. Isac Newton) பூமியின் ஈர்ப்புச் சக்தியை கண்டுபிடிக்கக் காரணமாக இருந்தது ஒரு சாதாரண நிகழ்வு தான். ஒரு மரத்தின் கீழ் அவர் ஒய்வெடுத்துக் கொண்டிருக்கையில் மரத்திலிருந்து கீழே விழுந்த அப்பிள் பழம் தான் அவரின் விஞ்ஞான சிந்தனையை முடுக்கிவிட்டது. "பொருட்கள் ஏன் கீழே விழவேண்டும்? ஏன் மேல் நோக்கிச் செல்லக்கூடாது? மேலே வீசப்படும் பொருள் வீசுவதனால் ஏற்றப்பட்ட உந்துவிசையில் பெறப்பட்ட சக்தி முடியும் வரை மட்டுமே மேல் செல்கிறது. அந்த சக்தி தீர்ந்தவுடன் அது பூமியை நோக்கிக் கீழேதான் விழுகிறது. ஆதலால் பூமிக்கு பொருட்களை கீழ் நோக்கி ஈர்க்கும் ஒரு சக்தி இருக்க வேண்டும்" என தன் விஞ்ஞான சிந்தனையூடாக கண்டுபிடித்து அதனை உலகிற்கு நிரூபித்துக் காட்டினார்.

இதை போன்று தான் நீராவி இயந்திரத்தின் கண்டு பிடிப்புக்கு வழிகோலியது ஜேம்ஸ் வாட் என்ற சிறுவனின் விஞ்ஞான சிந்தனை. தாயார் நீரைக் கொதிக்க வைக்கையில் கேட்டிலின் மூடி மேலும் கீழும் நகர்ந்து ஆடுவதை அவதானித்த ஜேம்ஸ் வாட் அதனை விஞ்ஞான மனப்பான்மையுடன் ஆராய்ந்து நீராவிக்கு உந்து சக்தியுள்ளதை உணர்ந்து அந்த சக்தியை ஏன் இயந்திரங்களின் இயக்கத்துக்கு பயன்படுத்தலாகாது என எண்ணியதனால்தான் நீராவி புகையிரத வண்டி கண்டுபிடிக்கப்பட்டது. போக்குவரத்து வசதிகள் முன்னேற்றமெய்தின.

பறவைகளைப் போல் ஏன் நாமும் பறக்க முடியாது என ரைட் சகோதரர்கள் சிந்தித்த தால் முதல் ஆகாயவிமானம் வானில் பறந்து இன்றைய ஆகாய விமான சேவையின் வளர்ச்சியை அன்று தொடக்கி வைத்தது.

இதே போன்று தான் இயற்கையின் இயக்கத்தை ஆராய்ந்து மனித சிந்தனையில் மாற்றத்தை உருவாக்கி மனித பரிமாண வளர்ச்சி பற்றியும் கூர்ப்பு பற்றியும் தத்துவங்களை நிறுவினார் டார்வின்.

தோமஸ் அல்வா எடிசன் மின்சார குமிழ்களை எரியவிட்டதும் இதே போன்ற விஞ்ஞான சிந்தனையினாலயே. இதற்கு அவர் அடைந்த பல்லாயிரம் தோல்விகள் பற்றி அவர் குறிப்பிடுகையில் "ஒவ்வொரு தோல்வியையும் நான் பாடமாக எடுத்துக் கொண்டேன். என்ன செய்யக் கூடாது என ஒவ்வொரு முறையும் அறிந்து கெண்டேன்" என்றார்.

"நான் என் முயற்சியில் வெற்றி பெறவிடினும் மற்றவர்கள் இந்த பரிசோதனையை எவ்வாறெல்லாம் செய்யக்கூடாது என்பதை என் அனுபவக் குறிப்புகளிலிருந்து அறிவர். அதனால் என் தோல்விகள் பலரது நேரத்தையும் முயற்சியையும் மீதப்படுத்தியுள்ளது. அதலால் அவை என் வெற்றிகளே." என்றார். ஈற்றில் அவர் முயற்சிகள் வீண்போகாமல் தன் முயற்சியில் வெற்றியும் கண்டார்.

விஞ்ஞான சிந்தனையாளர்கள் எல்லோரது முயற்சிகளுமே ஆரம்பத்தில் சமூகத்தால் ஏளனமாகப் பார்க்கப்பட்டவையாகவும் சமூக முரண்களையும் கண்டனங்களையும் சம்பாதித்தவையாகவும் பிறரால் ஏற்றுக் கொள்ள படாதவையாகவுமே இருந்தமையை நாம் காணலாம்.

கலிலியோ கலிலி என்னும் அறிஞரே உலகம் உருண்டையானது என்பதையும், பூமி தான் சூரியனை சுற்றுன்றது என்பதையும், தூரத்து பொருட்களை பார்க்க உதவும் தொலைநோக்கியையும் கண்டுபிடித்தவர். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அன்றைய சமூகம் அவரையும் அவர் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. விஞ்ஞானிகள் தம், தோல்விகளையும் வேதனைகளையும் பொருட்படுத்தாமல் சிந்தனையால் தம் இறுதித்துளி வாழ்வு வரை உழைத்து மானுட சமூகத்தின் மேன்மைக்கு வழிகாட்டியவர்கள்.

சாதாரண மனிதன் காண்கின்ற அதே காட்சியைத்தான் விஞ்ஞான சிந்தனையாளனும் பார்க்கின்றான். ஆனால் அவன் நிகழ்வுகளை சாதாரணமாக எண்ணிப் புறக்காணிக்காமல் அது குறித்த உன்னிப்பான ஆராய்வை முடுக்கிவிட்டு காரண கரியங்களை கண்டுபிடிக்க விளைகின்றன்.

அச்சம், அறிவு வளர்ச்சிக்குத் தடை போடுகின்ற ஒன்று. சிந்தனையை விஞ்ஞான சிந்தனையாக வளரவிடாமல் அச்சவுணர்வு முடக்கிச் சிறைப்படுத்துகிறது. சிந்தனைகளுக்கு சிந்திக்கும் சுதந்திரமுண்டு. அதனை எவரும் பறித்தலாகாது.

மனிதர்கள் எல்லோரும் விஞ்ஞானியாக வாழாவிடினும் விஞ்ஞான சிந்தனையுள்ளவராகவேனும் வாழல் வேண்டும். இது வாழ்க்கையை முன்னேற்ற உதவும். தேடல்கள் அதிகரிக்கும்போது தான் குழப்பங்கள் தெளிவு பெறுகின்றன.

'வளரும் பயிரை முளையில் தெரியும்' என்பர் பெரும்பாலான விஞ்ஞானிகளை ஆராய்ந்தால் அவர்கள் சிறுவயது முதலே விஞ்ஞான சிந்தனையுள்ளவராக இருந்ததை அறியலாம். இதற்கு தோமஸ் அல்வா எடிசனே சிறந்த உதாரணமாவார்.

எடிசனின் சிறுபிராயத்தில் கோழி முட்டைகளை அடைகாப்பதை பார்த்து விட்டு தயாரிடம் "ஏன்" என்ற கேள்வியை எழுப்ப தாயார் "குஞ்சு பொரிக்க அடைகாக்கிறது" என்று பதில் கூற மறுநாள் அத்தனை முட்டைகளையும் அடுக்கிவிட்டு அவரே ஏறி அதன் மேல் அமர அவையாவும் உடைந்து போயினவாம். இவ்வாறாக சிறுவயதிலேயே அவர்களுள் இருந்த ஆராய்வுத்தன்மைதான் பின்னாளில் அவரை உலகப்புகழ் எய்திடச் செய்தது. ஆதலால் பெற்றோர்கள் தம் சேய்களின் ஆராய்வு மனப்பான்மையை மழுங்கடிக்கச் செய்யாமல் பொறுமையாக பதிலளித்து மேன்மேலும் அவர்கள் சிந்தனைகளை முடுக்கிவிட்டு இன்றே அவர்களின் அறிவுச் செழுமையை வளப்படுத்துவர்களாயின் நாளை அவர்கள் வாழ்வு வளச்செறிவு உள்ளதாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எத்தகைய சிந்தனைகளும் முடுக்கிவிடப்பட்டால் பல கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாகும். முடக்கமுள்ள சிந்தனைகள் அறிவைத் தேக்கமடையச் செய்யும்.

எதையும் உள்ளவாறே ஏற்பதைவிட அதை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பதே உகந்த நெறியாகும். செக்குமாடுகள் போல் நின்ற இடத்தில் சுழல்வதை விடுத்து புதிய பாதைகளில் பயணித்துப் பார்க்க வேண்டும். புதுப் புதுச் சிந்தனைகளை வரவேற்க வேண்டும். சிந்திக்க உதவும் ஆறாவது அறிவு மனிதனுக்கே உரிய தனிச்சிறப்புடையதாகும். அதுவே விலங்குகளிடம் இருந்து எம்மை வேறுபடுத்திட உதவுகிறது. ஆதலால் நாம் எந்த விடயத்தையும் பகுத்து ஆராய்ந்து சிந்தனையை செறிவு படுத்துவது அவசியமாகும்.

விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சிக்கு கிடைக்கப்படும் தகவல்களை ஒழுங்குபடுத்தி தொடர்பு படுத்தி பகுத்தாராயும் பயிற்சி அவசியம்.

பகுத்தாராயும் திறன் வளர பகுத்தறிவு அவசியமாகிறது. நாள், கோள், சகுனம், சாத்திரம் போன்றவற்றை நம்பி வாழ்வது முயற்சிகளுக்கு விரோதமான செயல்களாகின்றன. ஒரு விடயத்தை செய்யும் ஆர்வம் உண்டானால் அதை நிறைவேற்றும் பற்றுதலும் தன்னம்பிக்கையும் இருக்குமானால் அந்த விடயத்தை அன்றே செய்துவிட வேண்டும். நாள், கோள், நேரம் எனப்பார்த்து அவற்றை ஒத்திப்போடுவோமேயானால் நாம் எம்மில் போதிய நம்பிக்கை வைத்திருக்கவில்லை என்பது அர்த்தமாகிறது. அத்தகைய தன்னம்பிக்கையை அடிப்படையாக கொண்டேற்காத எந்த செயலும் முழுமையான வெற்றியைத் தரப் போவதில்லை.

எந்தக் காரியத்தை செய்யினும் அதில் அறிவுக் கண்ணோட்டத்தைப் பாய்ச்சுவது அவசியமாகும். உலகில் பெரிய கண்டுபிடிப்புகளைச் செய்த எந்த விஞ்ஞானியுமே நாள், கோள் பார்த்ததில்லை. ஆனால் பூமியில் நிலையான இடத்தைப் பதித்துச் செல்லும் வகையில் எதையாவது விட்டுச் சென்றிருக்கின்றனர்.

எதிரிகளை எதிர்கொள்ளும் போராளிகள் நாள், கோள் பார்த்தால் நாடே எதிரிவசமாகிவிடும். காலமும், நேரமும் எவர்க்காகவும் காத்திருப்பதில்லை. நன்றெனக் கருதிடின் அதனை அன்றே செய்ய வேண்டும்.

அறிவையும் முயற்சியையும் ஊன்றுகோலாகக் கொண்டு முன்னகர்பவர்களே வாழ்வில் என்றும் முன்னேறுவர்கள். எந்த காரியத்தைச் செய்வதானாலும் அதன் பின்னால் மறைந்துள்ள காரணங்களை அறிய முயலவேண்டும்.

பொதுவாக நாம் ஒரு விடயம் சாதகமாக வந்தால் அதிஷ்டம் எனவும் அதுவே பாதகமாக இருந்தால் துரதிஷ்டம் எனவும் கூறுகின்றோம். ஆனால் விஞ்ஞான சிந்தனையுள்ளவர்கள் அப்படியில்லை. அவர்களுக்கு முயற்சிகளே முக்கியமானவை. விளைவுகள் தான் முக்கி யமான தகவல்கள். தோல்விகளோ பாடங்கள் ஆகும். இதனால் தவறுகள் உடனுக்குடன் திருத்தியமைக்கப்படும். இலக்குகளை தேடும் வரை ஓய்வெடுக்கத் தோன்றாது. இத்தகைய சிந்தனையாளருக்கு வாழ்க்கையில் உண்மை நிலைகளை அறிவதற்கு இரு வகையான அணுகுமுறைகள் உண்டு. ஒன்று விஞ்ஞான அணுகுமுறை. மற்றையது மெய்ஞான அணுகு முறை. பகுத்து தொகுத்து ஆராயும் அடிப்படையில் இவ்விருவகை அணுகு முறைகளும் ஒன்றே என்பதை உணரலாம். அந்த வகையில் இவ்இரு அணுகு முறைகளையும் இணைத்துப் பார்க்கும் பொழுதுதான் உலக வாழ்க்கையின் முழுமை பூரணமாவதை உணரமுடிகிறது.

தனிமைப்படுத்தப்பட்ட எந்த விடயமுமே முழுமையான விளக்கத்தை தெளிவுபடுத்த முடியாது. ஒருங்கிணைத்து ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பினை புரிந்து கொள்கையில் தான் பல விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. பகுப்பதுவும், தொகுப்பதுவும் காரண காரியங்கள் ஆராய்வதுவும் இருவகையான தேடலிற்கும் பொதுவானவை. ஆதலால் தான் இரு வகையான ஆராய்ச்சியாளர் களையும் மெய்'ஞானி' விஞ்'ஞானி' என அழைக்கின்றோம்.

சிலர் இயல்பாகவே விஞ்ஞான நுண்ணறிவுச் சிந்தனையை கொண்டிருப்பார்கள். சிலர் கற்கை றெறிகளூடாகவும் பயிற்சிகளூடாகவும் வலிந்து பயிற்றுவித்தும் விஞ்ஞான சிந்தனையை வளர்த்துக்கொள்வர். எவ்வகையிலேனும் மனிதவாழ்வில் விஞ்ஞானம் என்பது அவசியமான ஒன்று என்பதை அனைவரும் உணர்வது நன்று.

எல்லா சிந்தனைகளுமே எப்பொழுதுமே நூற்றுக்கு நூறு வீதம் சரியானவையாக இருக்குமென்பதற்கில்லை. ஏனைய சிந்தனைகளில் ஏற்படும் சில தவறுகள் போல் விஞ்ஞான சிந்தனைகளிலும் தவறுகள் நிகழ்வதுண்டு அதற்காக விஞ்ஞானமே தவறு என்று புறக்

60ம் பக்கம் பார்க்க...

> "சாதாரண அன்றாட விடயங்களையும்
> விஞ்ஞான சிந்தனைகளூடாக
> சிந்தித்தவர்களாலேயே
> உலகில் பாரிய கண்டு பிடிப்புகள்
> கண்டுபிடிக்கப்பட்டுள்ளன."

## மொழி பெயர்ப்பு

**பிறப்புச் சான்றிதழ் உட்பட சகல விதமான மொழி பெயர்ப்புகட்கும் அழையுங்கள்.**

**647-291-1357**




# வயோதிபர்களுக்கான காப்புறுதி

## மிகக் குறைந்த விலையில்...

**$30.55**

$10000
60 years female
non smoker
Some conditions may apply

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

## NO PROBLEM

**HIRING NEW AGENTS RESP & Insurance**

No Contract
No Obligation
Friendly Service
Quality Training

உங்களுக்கு காப்புறுதி நிராகரிக்கப்பட்டு அல்லது காப்புறுதி தெளிவற்ற முறையிலிருந்தால் மேலதிக ஆலோசனைகளுக்கு என்னை அழையுங்கள். CTBC வானொலியில் சனி காலை 9:00 – 10:00 மணிவரையிலும், ஞாயிறு இரவு 9:00 – 10:00 மணிவரையிலும் நான் கலந்துகொள்ளும் காப்புறுதி பற்றிய நிகழ்ச்சியைக் கேளுங்கள்.





RB ROYAL BROKERS CORPORATION

# Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE

# வன்னியில்
# சுயதொழில் வாய்ப்புச் சிறுகடன் திட்டம்
## (Micro Credit)

நலம் காப்போம் - 3

- இராமநாதன் லம்போதரன் -

கல்முனை, மன்னார் , கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு சுழற்சி முறையிலான சுயதொழில் வாய்ப்புச் சிறுகடன் திட்டங்களை IMHO - அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

கடந்த மாதம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறியுள்ள ஏதிலிகளான பெண்கள் சிலர் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து மன்னார் வந்திருந்தார்கள். அவர்கள் அங்கு வந்தது அங்குள்ள தமது உறவுகளைப் பார்க்கவோ அல்லது அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த மதுவடிமை நிலையில் உள்ள குடும்பத்தலைவர்களின் மனைவிமார்களுக்கான பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றுவதற்காகவோ அல்ல. அவர்கள் வந்தது அந்த பயிற்சிப்பட்டறையை நடத்துவதற்காக வந்திருந்த வைத்தியரைச் சந்தித்து உதவி கோருவதற்கே.

கணவன்மாரை இழந்து தனித்து பிள்ளைகளுடன் வாழும் பெண்களுக்கும், உடல் அங்கவீனமானவர்களையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளையும் கொண்டுள்ள குடும்பங்களுக்கும் உதவுவதற்கென 2003இல் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் இப் பெண்களால் சுயமாக உருவாக்கப்பட்ட மகாசக்தி, யுகசக்தி என்னும் இரு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களே இவர்கள். 2003இல் இருந்து கடைசிக்கால போர் இடப்பெயர்வு வரை இவர்கள் எந்தவிதமான அமைப்புகளின் உதவியோ, அரசாங்க உதவியோ அல்லது வெளிநாட்டு உதவியோ இன்றி இவ்வாறான இருபது பெண்கள் கொண்ட குழுக்களாக இயங்கி, ஒவ்வொருவரும் மாதாமாதம் சிறு தொகைப்பணத்தை சீட்டு முறையில் சேமிப்பாகச் சேர்த்து அதை மாதாமாதம் தம்மில் ஒருவருக்கு சுயவேலைவாய்ப்புக்கான கடன் தொகையாக வழங்கி வந்துள்ளார்கள். வெற்றிகரமாக, தன்னிறைவுடன், சுயமாக ஏறத்தாழ நூறு குழுக்களுக்கு மேல் கடைசிப் போர்க்கால இடப்பெயர்வு வரை இயங்கி வந்திருக்கின்றன. இவர்கள் முன்னரே சுமைகளுடன் இருந்தாலும் தமது சுய உதவியால் தாமும் தமது சொந்தக்காலில் நின்று மற்றவர்களும் இவ்வாறு பயனடைய உதவினார்கள்.

ஆனால் இப்போது நிலைமை வேறு. முன்னரை விடக் கூடிய இழப்புகளுடனும், வடுக்களுடனும் ஏதிலிகளாக கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும் இவர்கள் மீளக்குடியேறியுள்ளார்கள். முன்போல இவ்வாறு தங்களுக்குள்ளேயே உதவி செய்து மீண்டும் ஒரு தொழிலைத் தொடங்க அவர்களிடம் ஒரு சில ரூபாய்கள் கூட இல்லாத நிலை. இவ்வாறு மீளக்குடியேறியுள்ள ஏதிலிகளான பெண்களில் பலர் தமது பிள்ளைகளின் உணவுக்காகவும், பாலுக்காகவும் விபச்சாரத்துக்குத் தள்ளப்பட்டுள்ள நிலைமையைப் பார்த்து தாங்கமுடியாமல் இவர்கள் முதல் முறையாக வெளி உதவியை நாடி மன்னாருக்கு வந்து அந்த வைத்தியரைச் சந்தித்து தமது அவல நிலையைச் சொல்லியுள்ளார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரினதும் இழப்புகளும், துன்பங்களும் மனதைத் தொடுவன. முன்னைவிட கூடுதலான எண்ணிக்கையில் அங்கு மீளக்குடியேறியுள்ள இவர்களின் துயரம் சொல்லிமாளாது. இவ்வளவு துன்பங்களுக்கும் மத்தியில் மனம் தளராது தமது பிள்ளைகளை அயலில் உள்ளவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பல சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து, மன்னாருக்கு வந்து அந்த வைத்தியரிடம் தமது குறைகளைச் சொல்லி, தமக்கு இந்த சுயதொழில் வாய்ப்புச் சிறுகடன் உதவித் திட்டத்தை மீளத்தொடங்க உதவுமாறு கேட்டுத் திரும்பியுள்ளார்கள். வன்னிப்பிரதேசத்தில் உதவி வழங்குவதில் தற்போதுள்ள அரசாங்க கட்டுபாடுகளை கருத்திற் கொண்டு இவர்கள் இவ்வாறு ஆளுக்கு ஐயாயிரம் ரூபாய்கள் வரை உதவி பெறுவதற்கு அரசாங்க, இராணுவ அனுமதியையும் பெற்றிருக்கின்றார்கள்.



இவர்களுடைய துயரக்கதையையும், கோரிக்கையையும் அறிந்தவுடனேயே ரொறன்டோவைச் சேர்ந்த பாடசாலை மாணவியான செல்வி வைஷாலி இரட்ணம் தனது பூப்புனித நீராட்டு விழாவில் கிடைத்த பணத்துடன் பரிசுப் பொருட்களையும் கூட பணமாக்கி வந்த தொகையை தனது பெற்றோரின் உதவியுடன் இரட்டிப்பாக்கி ஒன்பதாயிரம் ($9000) கனடிய டொலர்களை வன்னிப்பிரதேச அபலைப் பெண்களின் சுழற்சிமுறை சுயதொழில் கடனுதவித் திட்டத்துக்கு IMHO ஊடாக வழங்கியுள்ளார்.

இது மட்டுமன்றி கடந்த ஆண்டு ஏற்பட்ட பயங்கரமான யுத்தத்தின் காரணமாக இடப்பெயர்வுக்கு உள்ளாகி பல விதத்திலும் அல்லல் பட்டுக்கொண்டும், அவயங்களை இழந்து தவித்துக்கொண்டும் இருக்கும் எம் மக்களின் புனர்வாழ்வை பிரதான நோக்கமாகக் கொண்டு கனடிய, அமெரிக்க நலன் விரும்பிகளால் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் "அன்புநெறி" என்ற அமைப்பானது எமது சுய தொழில் வாய்ப்புச் சிறுகடன் திட்டத்தைக் கேள்விபட்டதும் தாமாக முன்வந்து $5500 டொலர்களை ஆரம்ப நிதியாக கொடுத்து உதவியுள்ளனர். இப்பணமானது கோடைகாலத்தில் அவர்கள் வைத்த BBQ நிகழ்வின் மூலமாக திரட்டப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இது மட்டுமன்றி முன்னரும் இவ்வமைப்பானது $2400 டொலர்களை அவயங்களை இழந்தவர்களுக்கு செயற்கை கை கால் பொருத்தும் திட்டத்திற்கு IMHO ஊடாக வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவியான செல்வி வைஷாலியின் பரோபகார சிந்தனையையும் எமது இனத்தின் மேல் உள்ள துடிப்பையும் IMHO நிறுவனம் இதயபூர்வமாக பாராட்டுகின்றது. அத்துடன் அன்புநெறி போன்ற அமைப்புகள் எமக்கு ஊடாக எமது உறவுகளுக்கு உதவ முன்வருவதையிட்டு பெருமிதம் அடைகிறோம். மேலும் அவர்களுக்கு பக்க பலமாக இருந்து உதவுவதற்கு IMHO எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

காலத்தின் தேவை கருதி IMHO அமைப்பானது முன்னெடுத்திருக்கும் வன்னியில் மீளக்குடியேறியுள்ள அபலைப் பெண்களுக்கான சுழற்சி முறைச் சுயதொழில்வாய்ப்புக் கடனுதவித் திட்டத்துக்கு மேலும் உதவிகளை நலன் விரும்பிகளிடம் நாடி நிற்கின்றது.

ramanathan.lambotharan@thaiveedu.com

■ ■ ■

# விழி திறக்கும் விஞ்...

58ம் பக்கத் தொடர்ச்சி...

கணிக்கலாகாது. விஞ்ஞான உண்மைகள் சாதனைகள் வாழ்வின் வசதிகளுக்கு பயன் படுகின்றவை. மனிதவாழ்வை மேம்படுத்துபவை. உலகின் நவீன மயப்படுத்தப்பட்ட வாழ்வை இலகுபடுத்துவதோடு மூட நம்பிக்கைகளில் இருந்து எம்மை விடுவிக்க உதவுபவையும் விஞ்ஞான சிந்தனைகளே.

விஞ்ஞான சிந்தனையை தனி மனிதர்களாக மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகமுமே ஏற்கின்ற போதுதான் அந்த சமூகம் முன்னேற்றப் பாதையில் நடைபயில இயலுமாகின்றது. ஒரு மனிதனை எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ள வைப்பது விஞ்ஞான சிந்தனை.

கடுமையாக உழைப்பதை குறைத்து சிந்தனைகளால் அறிவால் உழைக்கும் காலம் மலர்ந்து கொண்டிருக்கிறது. காலத்திற்கேற்ப நாமும் நம்மை மாற்றிக் கொள்ளவேண்டும் துறைசார் விஞ்ஞான சிந்தனைகளை வளர்க்க உதவும் கல்வியை பெறவேண்டும்.

இன்றைய உலகில் விஞ்ஞானம் வியக்கத் தக்க விந்தைகளை ஏற்படுத்திக் காட்டியுள்ளது. "விஞ்ஞான சிந்தனையாளனின் விஞ்ஞான அறிவு, முழுமையாக பயன்படுத்தப்படுமேயாயின் உலகிலுள்ள அனைவருமே சுபீட்சமான வாழ்வைப் பெற முடியும்" என்றார் உலகப் பெரும் கணித மேதை பெட்ரன்ட் ரஸ்ஸல்.

"பழைய புராணங்களிலும் இதிகாசங்களிலும் சொல்லப்பட்டுள்ள ஆராய்ச்சிகளைவிட ஆச்சரியப்படத்தக்க அதிசயங்களை விஞ்ஞானத்தில் நாம் காண முடிகிறது" என்றார் எமர்சன்.

ஆகவே விஞ்ஞானத்தினை அச்சுறுத்தலாக சமயவாதிகள் எண்ணுவதைத் தவிர்க்க வேண்டும். விஞ்ஞானிகளை மதிக்கவேண்டும். விஞ்ஞானி தன் தேடலை இயற்கையிடம் இருந்தே கண்டுகொள்கின்றான். விஞ்ஞானம் என்பது உலக வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையதென்பதோடு அறிவியல் விழிப்புணர்வுக்கு விஞ்ஞான சிந்தனையை மனித சமூகம் வளர்ப்பதும் அவசியமாகும்.

"தேடுங்கள் கிடைக்கும்!"

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■


INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO)

**துயர் துடைக்க விரும்புவோருக்கான பங்களிக்கும் முறைகள்:**

1. தபால் மூல முகவரி: (காசோலையாக) "IMHO Canada", 5637 Finch Avenue East, Unit #7, Scarborough, ON M1B 2T9
2. இணைய த்தள மூலம் : www.imhocanada.org ⟶ Paypal
3. வங்கிக் கிரமக்கழிவு: இணையத்தளத்திலிருந்து அதற்கான படிவத்தை தரவிறக்கி நிரப்பி அனுப்பலாம் (Monthly contribution)

தொடர்புகளுக்கு: 416 321 9555; contact@imhocanada.org



வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
Over 50 Years Combined Experience
Even if you are:
• unemployed
• cyclist
• passenger
• pedestrian
• traveling in public transit
• student
• housewife
FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS
CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH
Jack J. Fireman Q.C. LLM.
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario
உங்களுக்குத் தெரியுமா?
விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக $330,000.00 வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் $86,000 வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
உங்களுக்குத் தெரியுமா?
விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் $86,000 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
தீபன்
Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)
If the impairment catastrophic your claim can be:
• Medical and Rehabilitation expenses up to $1,000,000.00
• Personal care expanses up to $1,000,000.00
(416) 505-9804
இலவச ஆலோசனைகளுக்கு:
24 Hours Direct Line (416) 624-4751
Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.
IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO
$1,000.00 IRB'S PER WEEK
வரை
இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்
அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்
"One of the best personal injury law firm in Ontario"
TORONTO SCARBOROUGH MISSISSAUGA




LEARN TO EARN in REAL ESTATE INVESTMENTS!!!
COMMERCIAL
$599,000
Unbelievable : Over 10% Cap rate for the Property and ESSO - Good for a small family
$699,000
Ideal investment for a new immigrant SHELL Gas Station in their own property.
$799,000
Money making 3 in 1(Gas + Convenience + Coffee time) business with property
$2.49Million
Cash on Cash over 20% within one hour from Toronto; Approx 3.5 acres on Hi-way location
$3.29Million
Rental Income + Gas Station for the right investor; Less than 1.5 Hrs from GTA
RESIDENTIAL
$99,000
2BR+2WRcondo near doctors office, shopping, Schools & 24hr TTC - Rental Income $900/m
$129,000
2BR+2WR condo near Hospital, shopping etc; Possible Rental Income $1100/m
$249,000
3BR+2WR detached Home near HWY 401; Rental Income $1350/m + Utilities
$349,000
3BR+2WR detached Home in quite neighborhood; Rental Income $1650/m + Utilities
$409,500
Large 4BR+4WR in Pickering selling for a Bargain price; Ideal for a Handyman/ Investor
WE OFFER AFFORDABLE PROPERTY MANAGEMENT SERVICES FOR YOUR INVESTMENT PROPERTIES!!
ஆதன முதலீட்டுக்குத் தகுந்த தருணம்!!- வரலாறு காணாத வட்டி விகிதம் இப்போது கிடைக்கிறது!!!
சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் - உடனே அழையுங்கள்!!!
Uthayan Nadarajah
Real Estate & Business Broker
Direct: 416-727-9945
RE/MAX
The Real Estate Leaders
Vijay Thiagarajah
Real Estate & Business Broker
Direct: 647-297-7144
RE/MAX Rouge River Realty Ltd., Brokerage. Independently owned and operated
6758 Kingston Road, Toronto, ON. M1B 1G8 Office: 416-286-3993 Fax: 416-286-3348
***Every office is independantly owned and operated*** ****Not Intended to solicit any property under contract****

சிறப்புத்தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல் (Identifying Special Needs children)

# அதிமேதையான பிள்ளைகள்

## (Gifted Children)



ஜீவா திசைராஜா

### அதிமேதாவித்தனத்தை வரையறுத்தல்:

மேதாவித்தனம் (giftedness) என்பது எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். சில நிபுணர்கள் 98% அல்லது அதற்கு மேற்பட்ட அறிவுத் திறன் மதிப்பெண் பெறுதல் என வரையறுப்பர். இந்த மதிப்பெண்கள் (Scores) எப்போதும் அறிவுத்திறன் ஈவு (Intelligence Quotient- IQ) என குறிப்பிடப்படும். பொதுவாக இதனைப் பெறுவதற்கு அவர்களது வயதிற்கு மேலான அறிவுத்திறன் தேவைப்படுகின்றது. அதாவது சாதாரண கல்வி மட்டத்திற்கு மேலாக தனிநபருக்கு வேறுபட்ட கல்வி அனுபவங்கள் தேவைப்படும். 1990-91இல், ஒன்ராறியோ அதிமேதை மாணவர்கள் முழு பாடசாலைப் பிள்ளைகளில் 1.76%மாக இருந்தனர். அநேகமான அதிமேதை பிள்ளைகள் பொதுவான குணவியல்புகளைக் கொண்டிருப்பர் எனும் கருத்திற்கு அநேக நிபுணர்கள் உடன்பட்டதுடன் இப்பிள்ளைகள் உயர் எதிர்பார்ப்புகளை (Highly motivated) கொண்டவர்களாக இருப்பதுடன் அதிதீவிரமாக சுதந்திரமானவர்களாகவும், பிறருடன் அதிகமாக பழகாதவர்களாகவும் (introversion) மற்றும் ஆத்மசோதனை/தற்சோதனை (introspection) உடையவர்களாகவும் இருப்பர் எனக் கூறப்படுகின்றது.

### இத்தகைய பிள்ளைகளை எவ்வாறு இனங்காண்பது?

அதிமேதாவித்தனத்தின் சில ஆரம்ப அறிகுறிகளுள் பின்வருவன அடங்கும்.

- சிசுப்பருவத்திலேயே அசாதாரணமான முறையில் உன்னிப்பாக (Alertness) இருத்தல்.
- சிசுப்பருவத்திலேயே நித்திரை குறைவாக தேவைப்படல்.
- அதிக நேரம் கவனத்துடன் (attention) இருத்தல்.
- அதிகமாக செயல்படும் தன்மை.
- மிக ஆரம்பத்திலேயே தம்மை பராமரிப்பவரை இனங்காணுதல், சிரித்தல் ஆகிய தன்மைகளைக் காட்டுதல்.
- மிக விரைவாகவே குறைந்த வயதில் பேச ஆரம்பித்தல், அவர்களது பேச்சு மொழியானது அதிக சொற்களைக் கொண்டிருத்தல்.
- அறியும் ஆவலைக் (Curiosity) கொண்டிருப்பதுடன் மற்றவர்களை விட மிக விரைவாக படிக்கும் இயலுதன்மையைக் கொண்டிருத்தல்.
- மிக அதிகமான ஞாபகசத்தியைக் கொண்டிருத்தல்.
- பரந்த பொது அறிவும் தம்மைச் சுற்றியுள்ள உலகில் கரிசனையும் கொண்டிருத்தல்.
- பிரச்சினை தீர்ப்பதில் சந்தோஷமடைதல். ஓர் வாதத்தின் (Argument) இடையில் ஏற்படும் கட்டங்களைத் தவிர்த்து உடனடியாகவே மூலாதாரப் பிரச்சினையை உணர்ந்து கொள்ளல்.
- விரைவாக குறைந்த வயதிலேயே வாசித்தல்
- பலமான உணர்வுகள் மற்றும் அபிப்பிராயங்களைக் காட்டுவதுடன் அசாதாரணமான நகைச்சுவை உணர்வையும் கொண்டிருத்தல்.
- உயர்வான எண்ணங்கள் சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் எதிலும் பூரணமான தன்மையை எதிர்பார்ப்புடன் அவ்வாறே நடந்து கொள்ளல்.
- உலகரீதியான (Mundane) செயற்பாடுகளில் ஆர்வத்தை இழத்தல்.
- புத்தகங்களால் கவரப்படுதல்.
- பிறர் காரியங்களில் தேவையில்லாமல் தலையிடும் இயல்பு.

**தொடர் - 7**

- அதிதீவிரமான கற்பனை (vivid imagination)
- எளிதில் உணர்ச்சி வசப்படுவதுடன் கருணையுணர்வையும் கொண்டிருத்தல்.

> *"திறமையுள்ள பிள்ளைகளுடன் நேரம் செலவிடும் பெற்றோர், பிள்ளைகளின் விருப்பங்கள் ஆர்வங்களை அறிவதுடன், பொருத்தமான கல்வி வளப்படுத்தும் சந்தர்ப்பங்களை வழங்கக்கூடியவர்களாக இருக்கின்றனர்."*

இந்த குணவியல்புகளில் அதிகமானவற்றை ஒரு பிள்ளை காட்டினால், பிள்ளை அதிமேதாவித்தனத்தைக் கொண்டிருக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு அனுபவம் வாய்ந்த பரிசோதகரை அணுகலாம். ஏனைய பிள்ளைகளை விட மூத்த பிள்ளை மிக அதிகமாக இனங்காணப்படலாம். குடும்பத்தில் ஒரு பிள்ளை அதிமேதாவித்தனமாக இருந்தால், மற்ற பிள்ளைகளும் இயற்கையாகவே திறமை வாய்ந்தவர்களாக இருக்கலாம். ஆரம்பத்திலேயே (3 வயதில் இருந்து 8 வயதுவரை) இனங்காண்பது சிறந்தது. ஏனெனில் இது ஆரம்பத்திலேயே பிள்ளைகளை வழிநடத்துவதற்கு உதவும். சிறப்புத் தேவையுள்ள ஏனைய பிள்ளைகள் போல இயற்கையிலேயே திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கும் இவ்வாறு ஆரம்பத்திலேயே கண்டறிவது முக்கியமாகும்.

இந்த பிள்ளைகளை உள்ளார்ந்த விதமாக (intuitively) அடிக்கடி இனங்காண முடிந்த போதிலும் மேதாவித்தனத்தின் அளவை அளவிடுவது ஓர் சவாலாகும். அதிமேதையான பிள்ளைகளை (Prodigies) உடனடியாக இனங்காணக் கூடியதாக இருந்த போதிலும் மேதையான பிள்ளைகள் எப்போதும் 'A' களைப் பெறும் மாணவர்கள் அல்ல. விரைவிலேயே அலுத்துப் போகும் மற்றும் கற்பிக்கக் கடினமான (disruptive) மாணவர்களாகவும் இவர்கள் இருப்பர்.

### அதிமேதையான பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம்?

அதிமேதைப் பிள்ளைகளை வளர்ப்பதும் பயிற்றுவிப்பதும் ஆர்வமூட்டுவதொன்றான போதிலும் இது ஒரு சவாலாகவும் அமைகின்றது.

அதிமேதாவித்தனம் என்பது சமகாலத்தில் அல்லாத அபிவிருத்தி (development) ஆகும். அதாவது ஒரே காலத்தில் உடல், உளம், அறிவுத்திறன் என்பன வளர்ச்சியடையாமை ஆகும். இதனை சமமற்ற தன்மை (Asynchrony) எனலாம். உள்வாரியாகவும் (internally) வெளிவாரியாகவும் (externally) சமமற்றுக் காணப்படுவது என்பதையே இது குறிக்கும். அதாவது இயற்கையாகவே அதிதிறமை கொண்ட பிள்ளைகள், அவர்கள் உடலியல் ரீதியாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் வளர்வதை விட மிக வேகமான விதத்தில் அறியும் திறனில் (Cognitive) வளர்வதாகும். இதில் முன்னரே அறியும் திறன்கள் (Advanced cognitive abilities) மற்றும் ஆர்வங்கள் என்பன உடல் வளர்ச்சியை விட வேகமாக வளர்ச்சியடைகின்றன. இதனால் இவர்கள் சிந்திக்கும் விடயங்களை செயல்படுத்த முடியாத நிலை இவர்களுக்கு ஏற்படுகின்றது. இவர்களது சிறப்பான அபிவிருத்திக்கு; பெற்றோரின் வளர்ப்பு, கற்பித்தல், ஆலோசனை கூறல் என்பவற்றில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மேதாவித்தனத்தின் இவ் வரைவிலக்கணம் இளம் மேதாவிகளான இவர்களை வளர்க்கும் சிக்கல் தன்மையை எடுத்துக் காட்டுவதாகவே அமையும்.

இந்த சமமற்ற வளர்ச்சியினால் சில வித்தியாசமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக 8 வயது சிந்தனைகளைக் கொண்ட 5 வயது பிள்ளை (உளவயது = 8) தனது சிந்தனையில் இருந்து உருவாகும் எண்ணங்களை 5 வயது கைகளினால் நிறைவேற்ற முடியாமல் இருப்பது. மேலும் இன்னும் உணர்வு பூர்வமாக கையாளத் தயாராகாத தகவல்களை இவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை முழுவதிலும் அதிக தீவிரமாக சிந்திப்பதனால் உணர்வுபூர்வமாக சிக்கலானதாகவே அமைகின்றது. மற்றவர்களின் பிரச்சினைகளை தமது பிரச்சினைகளாக எடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கு முயல்பவர்களும் இவர்களே. இந்தப் பிள்ளைகள் தமது வயதின் அபிவிருத்தி நியமங்களுக்கு பொருந்தக் கூடியவராக இருக்க மாட்டார்கள். இவர்களுக்கு அதிகமான முன்னேற்றமான விளையாட்டு ஆர்வங்கள் இருப்பதுடன், தமது வயது பிள்ளைகளுடன் ஒப்பிடும்போது கல்வீதியில் மிகவும் முன்னேற்றமடைந்தவர்களாக இருப்பர். பிள்ளை மிகவும் கெட்டித்தனமாக இருப்பதற்கேற்ப சமநிலையற்ற தன்மை (Asynchrony) அதிகமாக இருப்பதுடன் இதனை உடலியல் மற்றும் உணர்வு ரீதியில்சமாளிக்க முடியாத பலவீனமாகவும் இருப்பர். எனவே தமது பிள்ளைகளின் இயற்கையாய் அமையப் பெற்ற (inherent) அபிவிருத்தி வேறுபாடுகளைத் தெரிந்திருக்கும் பெற்றோர் அவர்களது ஆலோசகராக செயற்படுவதற்கு தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

### பிள்ளைகளின் திறமைக்கேற்ற விதமாக பெற்றோர் நடந்து கொள்ளல் (Responsive Parenting):

பிள்ளைகள் முதலில் பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொள்கின்றனர். தமது திறமையுள்ள பிள்ளைகளுடன் நேரம் செலவிடும் பெற்றோர், பிள்ளைகளின் விருப்பங்கள் ஆர்வங்களை அறிய முடிவதுடன், பொருத்தமான கல்வி வளப்படுத்தும் (Educational enrichment) சந்தர்ப்பங்களை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். பிள்ளைகள் தாமே வாசிக்கக் கூடியவர்களாக இருந்த போதும் கூட, பிள்ளைகளுக்கு அடிக்கடி புத்தகங்களை வாசித்துக் காட்டுவது அவசியமாகும். ஆரம்ப வருடங்களில், பெற்றோர், பிள்ளைகளின் தனிப்பட்ட விருப்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவ முடிவதோடு, அவர்களின் சொந்த விருப்பங்களை நோக்கி அவர்களை வழிப்படுத்துவதுடன், கலை, இயற்கை, இசை, அரும்பொருட் காட்சிச்சாலை, விளையாட்டு போன்ற பல்வேறுபட்டவற்றைப் பற்றி அவர்கள் கற்றுக் கொள்ள ஊக்குவிக்கலாம். ஒரு குறிப்பிட்ட விடயத்தால் கவரப்படும் பிள்ளைகள் அந்த துறையில் ஆழமாக ஈடுபட சந்தர்ப்பங்கள் தேவைப்படுகின்றது. திறமைகளை (Talents) அபிவிருத்தி செய்வதற்கு வீட்டில் ஊக்கமும் ஆதரவும் அத்தியாவசியமானவையாகும். பிள்ளையின் தலைமையைப் பின்பற்றுவது, அதாவது பிள்ளை எதை விரும்புகிறதோ அதற்கேற்ப வழிநடத்துவது பிள்ளை வளமுடன் வளருவதற்கு உதவும்.

### குடும்ப உறவுகள் (Family Relationships):

அதிமேதாவியான இக் குழந்தைகள் பேசத் தொடங்கியவுடனேயே, தொடர்ந்தேர்ச்சியாக வினாத் தொடுப்பதுடன், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு (authorities) சவாலாகவும் அமைகின்றனர். "நான் சொல்வதனால் நீ இதனைச் செய்ய வேண்டும்" என்பதெல்லாம் இப்பிள்ளைகளிடம் வாய்க்காது. பொதுவாக அதிகாரத்தால் சாதிக்க நினைக்கும் பெற்றோரை விட தாம் எதற்காக பிள்ளையிடம் ஒன்றைச் சொல்கிறோம் என்பதை நேரம் எடுத்து விளக்கும் பெற்றோருடன் பிள்ளைகள் ஒத்துழைக்கின்றனர். இந்தப் பிள்ளைகளிடம் கரிசனை எடுத்து மரியாதையுடன் கதைத்து அப்பிள்ளைகளின் பிரச்சினைகளை செவிமடுக்கும்போது பிள்ளைகளும் பெற்றோரிடம் மரியாதையாக நடந்து கொள்கின்றன.

பிள்ளைகளின் வயது கூடும் போது, பொறுப்புக்களை பகிர்ந்து கொடுத்தல், கருத்து வேறுபாடுகளை பரஸ்பரம் பேசித் தீர்த்துக் கொள்ளும் திறன்களை (Negotiations skills) கற்றுக் கொடுத்தல் போன்றவற்றிற்கு குடும்பத்தவர்கள் கலந்து பேசுவது சிறந்த வழியாகும். குடும்பத்தவர் இவ்வாறு கூடிப் பேசும்போது பிள்ளைகளும் குடும்ப அங்கத்தவராக, தமது கருத்துக்களை தெரிவிக்கமுடிதல், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே அதிகாரப் போட்டி ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள உதவும். உடன்பாடுகள் ஏற்படாவிடினும் கூட அதிமேதாவிக் குழந்தைகட்கு குடும்பத்தவரிடமிருந்து ஆதரவு கிடைப்பது அவசியமாகும்.


ஒத்த திறமையுடைய பிள்ளைகளுடன் வகுப்பறையில் சிறிதளவு நேரமாவது செலவிடுவது இந்த அதிமேதாவிக் குழந்தைகட்கு நன்மையளிக்கக் கூடியதாகும். இவர்களது கல்வி நிகழ்ச்சித் திட்டமானது அவர்களது வளர்ச்சி வீதத்திற்கேற்பவும் வடிவமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலையுடன் ஈடுபாடுடையவர்களாக இருக்கும் பெற்றோர், இந்தப் பிள்ளைகளின் தேவைகளை பாடசாலையில் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் சந்திப்பதற்கு உதவியாக இருப்பர். திறந்த நெகிழ்வுத் தன்மையுள்ள சூழலானது (Flexible environment) பிள்ளைகள் ஏற்ற தெரிவுகளைச் செய்ய சந்தர்ப்பங்களை வழங்குவதுடன், சுதந்திரத்தை விரிவுபடுத்தி படைப்பாக்கத் தன்மையையும் தூண்டுகின்றன.

பாடசாலையின் அதிமேதாவித்தனமான நிகழ்ச்சித் திட்டம் பிள்ளைகட்கு போதுமான சவாலைக் கொண்டிராதபோது, திறமை கொண்ட பிள்ளைகளை ஒரு வகுப்பு முன்னோக்கி அனுப்புதல் (Early entrance/ Promotion) கல்வீதியாகவும், சமூகரீதியாகவும் விரைவுபடுத்தலுக்கான இலகு வழியாகும். 3ஆம் வகுப்பிற்கு முதல் அல்லது 9ஆம் வகுப்பிற்கு பிறகு, பெண்பிள்ளைகள் தமது சமவயதுக் குழுவினருடன் (Peer group) குறைந்த ஒட்டுந் தன்மையைக் கொண்டிருக்கும்போது அவர்களை இவ்வாறு வகுப்பு மாறிச் செல்ல ஊக்குவிப்பது சிறந்ததாகும். ஆண்கள் தமது பாடசாலையின் எந்தக் கட்டத்திலும், வகுப்-

65ம் பக்கம் பார்க்க...

# தமிழ் மக்களின் நன்மை கருதி

# இப்போது புதிய முகவரியில்...



# CR Canada

Credit Reform Canada

**10, Milner Business Court, Suite 900, Scarborough**

**(Markham & 401)**

**உங்கள் வீடு, வாகனம் மற்றும் சொத்துக்களை இழக்காது அனைத்து விதமான கடன் தொல்லைகளிலுமிருந்து தீர்வு காண இலவச ஆலோசனைகளுக்கு உடனடியாக அழையுங்கள்**

**உங்கள் கடன் பிரச்சினைக்கு Bankruptcy மட்டும்தான் தீர்வல்ல...**

**உங்கள் கடன் தொகையிலிருந்து**
**20%தை மட்டும் மாதாமாதம்**
**வட்டியுமில்லாமல்**
**செலுத்தி கடன் பிரச்சனையிலிருந்து**
**சட்டபூர்வமாக வெளியேறலாலம்.**



**WE work for YOU Trustee Represents your CREDITORS**

நாம் Trusteeக்கு வேலை செய்பவர்களல்ல...
நாம் உங்களுக்காக வேலை செய்பவர்கள்.
உங்கள் கடன் பிரச்சினைகளை ஆராய்ந்து
அதற்கு உங்களுக்கு சாதகமான முறையில்
சட்ட பூர்வமான தீர்வுகளை சிறந்த முறையில்
நிறைவேற்றித் தருபவர்கள்.



**T.Shankar**
(Director)

CR Canada
Credit Reform Canada
*Judgement in your favour!*
CR Canada
**416-264-1010**
10, Milner Business Court, Suite - 900, Scarborough
(Markham & 401)



# CTR தகவல் பலகை

**BIRCHMOUNT & STEELES**
காற்றோட்ட வசதிகளுள்ள அழகிய
1 Bedrom basement for rent
416 731 1752

**NEILSON & MCLEVIN**
6 year old Townhouse for sale
Rangarajah: (416) 630 – 2097

**DONMILLS & SHEPPARD**
3 Bedroom Apt தனிவழி
Pathi: - (416) 502 - 8053

**DENISON**
2 Bedroom basement/தனிவழி
Mrs.Siva: (905) 201 - 9901/ (416) 647 - 1987

**NEILSON & MCCOWAN**
1 Bedroom for rent
Vaani:- (416) 427-7747

**DUFFERIN STREET**
1 Bedroom Basement for rent
Kasi:- (905) 761 – 7318

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walkout basement
Tharan:- (416) 492 - 9816

**9th LINE & 14th LINE**
2 b basement
Chithira: - (416) 818 - 2616

**SEWELLS & MORNINGSIDE**
2 Bedroom s walkout basement தனிவழி
Siva: - (416) 551 - 8379

**O'CONNOR & ST. CLAIR**
Rent $1800/ Convenience Store
Arul: (416) 285 - 8937

**9th LINE**
2 Bedroom basement
Santhiran: - (905) 554 - 0996 / (647) 456 - 2730

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom basement
(416) 430 - 0999

**MARKHAM & ELLESMERE**
Single Bedroom basement/தனிவழி
Aswin : - (647) 996 - 6977 / (416) 289 – 6977

**BRIMLEY & ELLESMERE**
1 Bedroom basement for rent
Rajah: - (416) 430 - 0035/ (647) 456 - 3144

**MARKHAM & DENISON**
2 Bedroom basement
Also 1 Bedroom /same place
Selvan: - (905) 201 - 9901 / (416) 648 - 1987

**MIDLAND & FINCH**
600 sq ft office space for rent
Bala: - (647) 704 – 4021

**NEILSON & MCLEVIN**
2 Bedroom 1 room for rent
Ranja Rajah: - (416) 292 - 1953

**SEWELLS & MORNINGSIDE**
2 Bedroom s/also 4 Bedroom
Kukaa: - (416) 893 – 2377

**BRIMLEY & ELLESMERE**
1 Bedroom Basement for rent
Mani: 647 456 3144

**MARKHAM**
1 Bedroom basement for rent
Abiram: (647) 962 – 6545

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom /தனிவழியுடன்
Kannan: (416) 438 – 7756

**16th & MCCOWAN**
1 Bedroom &2 Bedroom basement
Sekar: (416) 471 0094, (905) 471 7161

**1993 TOYOTA TERCEL**
Engine replaced/2 Extra winter tires
Kumar:- (416) 627 – 5735

**2000 ACURA - EL**
165km/4 door/gold in colour
Rajan:- (416) 716 – 2975

**1990 ACURA**
Thilaka:- (416) 840 - 9762

**2000 TOYOTA CAMRY**
Burgundy / $ 2000.00
Siva: - (416) 439 - 4299

**2003 TOYOTA COROLLA**
Green/148km/4 doo /Auto
Selvam: - (647) 998 - 2870

**1995 HONDA CIVIC**
Ravi Mohan: - (416) 286 - 4780

**2000 CHEVY CAVALIER**
Kadampanathan: (416) 386 – 0453

**2005 CRV- HONDA**
Venthan: (416) 297 – 6138, (647) 505 - 4520

**93 TOYOTA COROLLA**
makesthan: (905) 683 – 0043

**94 HONDA CIVIC**
Nirmala: (416) 298 - 9767

**99 TOYOTA CAMRY**
Ranji: (416) 208 – 7048/(416) 432 - 6633

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**2005 DODGE CARAVAN**
Yajarah: (647) 401 – 2886

## HELP WANTED

**கதவு மற்றும் ஜன்னல்கள் தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.**
**கருணா**
**416 892 7070**
**Viewtech Windows & Home Improvements.**


## மொழி பெயர்ப்பு

பிறப்புச் சான்றிதழ் உட்பட சகல
விதமான மொழி பெயர்ப்புகட்கும்
அழையுங்கள்.

**647-291-1357**

**BIRCHMOUNT & STEELES**
அழகிய
1 Bedrom
basement for rent
**416 731 1752**

# துயர் பகிர்வோம்




### திரு. மருதையினார் சபாரத்தினம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் இலண்டன் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட முன்னை நாள் தபால் அதிபர் மருதையினர் சபாரத்தினம் அவர்கள் 13.09.2010 அன்று இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதையினார் மீனாட்சிப்பிள்ளை இணையினரின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சுந்தராம்பாள் இணையினரின் மருமகனும், பாக்கியத்தின் கணவரும், சிவசக்தி (இங்கிலாந்து), அருட்சக்தி (சக்தி CTR - கனேடியத்தமிழ் வானொலி), சிவச்செல்வி (கனடா) ஆகியோரின் தந்தையும், வேணுகுமார் (இங்கிலாந்து), பரமலிங்கம் (கனடா), புவிராஜன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்-சென்றவர்களான கனகம்மா, தனலக்சுமி, மற்றும் வைத்தியநாதன், தங்கராஜா, வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாதசுந்தரம், இரட்ணசபாபதி, இராசம்மா, சின்னம்மா மற்றும் புவனேஸ்வரி, கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் விபீசன், அபிராமி, வைஷ்ணவி, ரம்யா, நந்திகா, யாதவ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 16.09.2010 அன்று இலண்டனில் நடைபெற்றது.

0793 278 9544,
44 208 868 0677,
416 884 0256,
647 340 2817.



### திரு கார்த்திகேசு இரத்தினசிங்கம்
(ஓய்வு பெற்ற இலிகிதர்)

நொச்சிமோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இரத்தினசிங்கம் அவர்கள் 18.09.2010 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கார்த்திகேசு, அன்னமுத்து இணையரின் மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, அன்னமுத்து இணையரின் பாசமிகு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சூரியகலா (ஆசிரியை), வசந்தகலா (ஆசிரியை வவுனியா), காலஞ்சென்ற சறோஜினி, சிவா (Mortgage Consultant - கனடா), சுகுணகலா (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும், புவனேந்திரராஜா (றெயின்போ ஸ்ரூடியோ வவுனியா), தர்மரட்ணம் (அதிபர் வவுனியா), கணேசராஜா (சுவிஸ்), மாலினி (கனடா), இராசலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பூலோகசிங்கம், தம்பு, நடராசா (இலண்டன்), காலஞ்சென்றவர்களாகிய லோகசிங்கம், தையல்நாயகி ஆகியோரின் அன்பு சகோதரனும், இராசமணி அவர்களின் பாசமிகு மைத்துனரும், ஜனனி, ஜனன், ஜனந்தன், ஜீவனா, ஜீவிதா, ஜெய்னிகா, அனுஜன், அஸ்வினி, அனுசா, அனுசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 21.09.2010 அன்று வவுனியாவில் நடைபெற்றது.

இலங்கை: 1 94 242 220 446,
சிவா இரட்ணசிங்கம (கனடா) 1 647 977 0501,
1 416 520 1214.

# அதிமேதையான...

62ம் பக்கத் தொடர்ச்சி...

புகளை விட்டு மாறி அடுத்த வகுப்புகளுக்கு செல்லுவதற்கு பெண்பிள்ளைகளை விட அதிக விருப்பமாக இருப்பார்கள். துரிதப்படுத்தப்படுவதற்கு (acceleration) ஓர் பிள்ளை விருப்பம் காட்டும்போது சிறப்பான சமூக பொருத்தப்பாடுகளை மேற்கொள்ள முடிகின்றது.

8 வயது மனதையுடைய 5 வயதுப்பிள்ளை, 5 வயதுப் பிள்ளையுடன் கலந்து பழக முடியாவிடின் (Cannot relate to 5 year olds) ஒரு வகுப்பில் மீண்டும் ஒரு தடவை படிக்க விடுவதால் எதனையும் சாதிக்கப் போவதில்லை. அவன் பின்பு 9 வயது மனத்தை உடைய 6 வயதுப் பிள்ளையாக 5 வயதுப் பிள்ளைகளுடன் கலந்து பழக வேண்டியதாயிருக்கும். இதற்கு மிகச் சிறப்பான தீர்வு, அறிவுத் திறனில் முன்னேற்றமடைந்த அவனது சொந்த வயதுப் பிள்ளைகளுடன் பழக விடுவதேயாகும்.

## பெற்றோர் ஆதரவு (Parent Advocacy):

அதிமேதையான குழந்தைகட்கு பலமான, பொறுப்பு வாய்ந்த, அவர்களுக்காக பேசக்கூடியவர்கள் (advocates) தேவை. பெற்றோர் குழுக்கள் இதில் ஓர் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். அதிமேதாவிக் குழந்தைகளுக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் கிடைக்க கூடியதை பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். இயற்கையிலேயே திறன் வாய்ந்த இந்தக் குழந்தைகளின் பெற்றோர், ஏனைய பெற்றோருடன் தமது பிள்ளை வளர்ப்பு பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பங்கள் தேவை. அத்துடன் அவ்வாறு சந்திக்கக் கூடிய இடத்தை பெற்றோர் குழுக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

சிறப்புத் தேவையுள்ள எந்தப் பிள்ளைகளின் பெற்றோரும் ஆசிரியர்களை பாடசாலை தவணை ஆரம்பத்திலேயே சந்திப்பது முக்கியமானதாகும். பெற்றோரும் ஆசிரியர்களும் ஒன்றாக வேலை செய்யும்போது, பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்யக் கூடியதாக இருப்பதுடன், பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கும். தமது பிள்ளையின் ஆசிரியர்களுக்கு தேவையான விடயங்களில் உதவி செய்தல், வகுப்பறையில் அவனது வாசிகசாலையில் உதவி செய்தல், சிறிய குழு மாணவர்களுக்கு நிபுணத்துவ உதவி வழங்கல், ஏனைய அனுபவங்களை வழங்குபவர்களை கண்டறிதல் போன்றன உதவியாக இருக்கும். திறன் வாய்ந்த பெற்றோர், தமது பிள்ளைகளின் கல்வியில் ஈடுபாடுடையவர்களாக இருப்பதுடன், பொதுவாக இயற்கையிலேயே அதிதிறமை கொண்ட பிள்ளைகளின் கல்வி பற்றிய தகவல்களை அறிந்தவர்களாகவும் இருப்பர். அதிமேதையான பிள்ளைகளை விளங்கிக் கொள்வதற்கு அல்லது அப்பிள்ளைக்கு உதவுவதற்கு ஆசிரியர் சிறப்பான முயற்சியை எடுக்கும்போது ஆசிரியருக்கு அல்லது பாடசாலை அதிபருக்கு ஓர் குறிப்பை அனுப்புதல் பொதுவில் பாராட்டத்தக்கது.

அதிமேதாவியான பிள்ளைகளை வளர்ப்பதற்கான திறவுகோல் அப்பிள்ளைகளுக்கு கொடுக்கும் மரியாதையாகும். அவர்களது தனித்தன்மையையும், அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் மதித்தல். அவர்களது கனவுகளை மதித்தல் என்பன அவசியம் நெகிழ்வுத்தன்மையுடன் (Flexibility) ஆதரவு உடைய பெற்றோர் இத்தகைய குழந்தைகட்கு அவசியம் தேவை. ஏனைய பிள்ளைகளைப்போல் தமது பிள்ளைகளும் இராததை பார்க்கும் போது பெற்றோருக்கு மிகவும் வேதனையாகவே இருக்கும். ஆனால் ஏனைய பிள்ளைகளுடன் பொருந்தக் கூடியதாக இருக்காதவிடத்து அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது பொருத்தமானதல்ல. பிள்ளைகள் இந்த கருத்தை வெளியுலகத்தில் போதுமானளவு கேட்பார்கள். எனவே வீட்டில் பிள்ளைகள் தமது தனித்தன்மை போற்றப்படுகின்றது என்பதை அறிய வேண்டும். அவர்கள் மனிதர்களாக இருப்பதால் மதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர வேண்டும்.

அதிமேதாவிப் பிள்ளைகள் பொதுவாக தனியார் பாடசாலைகளில் சிறப்பாக இயங்குகிறார்கள். இங்கு அவர்களது தேவைகள் சிறப்பாக சந்திக்கப்பட முடியும். அதிமேதையான மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் போதிய பாராட்டைப் பெறாதிருப்பதுடன், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கவனிப்பும் கிடையாததால் அலுப்புறுவதுடன், தூண்டுதலற்றும் காணப்படுகிறார்கள். ஓர் தனியார் பாடசாலையில் உள்ள சிறிய வகுப்பறைகளும், மிகவும் கவனமுள்ள சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களும் அதிமேதாவிக் குழந்தைகளுக்ககாக ஓர் வித்தியாசமான உலகத்தையே உருவாக்க முடியும்.

உண்மையில் இந்தப் பிள்ளைகள் சாதாரண கல்வித் திட்டத்துடன் (Curricula) அலுப்புற்றுப் போவதால், கல்வியாளர்கள் இத்தகைய பிள்ளைகட்கு கற்பிப்பதில் வகுப்பறையில் ஆதரவாக இருப்பதற்கு பதிலாக, இந்தப் பிள்ளைகள் சில ஆசிரியர்களால் பிரச்சினைக்குரியவர்களாக நோக்கப்படுகிறார்கள். இது சமூக சூழலிலும் பரவுகின்றது. இவர்கள் அங்கு கவர்ச்சியற்றவராக ('nerds') ஆக அல்லது அதனை விட மோசமாக நோக்கப் படுகிறார்கள். www.ourkids.net எனும் இணையத்தளம் இப்பிள்ளைகளுக்கான எண்ணற்ற நிகழ்சித் திட்டங்களை வழங்கும் தனியார் பாடசாலைகளை பட்டியல்படுத்துகின்றது.

சமூகத்துடன் கலந்து பழகுவது முக்கியமாக இருக்கும் அதேவேளை உங்கள் பிள்ளை தனது திறமைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது முக்கியமாகும். இதன்மூலம் அவன்/அவள் முற்றிலுமாக தனது திறமையை உணர்ந்து கொள்ள முடியும். அதிமேதாவிப் பிள்ளைகளை ஓர் தனியார் பாடசாலையில் விடுவது உங்கள் நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். இதன் மூலம் அவனது/அவளது திறமைகளை முற்றிலுமாக கண்டறிவதுடன் ஏற்ற சிறந்தக் கல்வியை உங்கள் பிள்ளை பெறமுடியும்.

## அதிமேதாவிப் பிள்ளைகளுக்கான நிதி உதவி:

வளர்ந்த மாணவர்களைப் போல், ஆரம்ப பாடசாலை வயதை (Elementary school age) உடைய அதிமேதாவி பிள்ளைகளுக்காக புலமைப் பரிசில்களும் நிதி உதவிகளும் உள்ளன. முன்னேற்றமான கல்வித் திறமைகளைக் காட்டும் ஆரம்ப அல்லது உயர் பாடசாலை வயதுடைய பிள்ளைகட்கான நிதி உதவி திட்டங்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கும் ஒரு குழுவாக Fraser Institute கல்வி நிறுவனம் உள்ளது.

அதிதிறமை வாய்ந்த மாணவர்களுக்கு நன்கு பொருந்தக் கூடிய சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கும் அநேக தனியார் பாடசாலைகள் கனடாவில் உள்ளன. ஒரு தலைமுறைக்கு மேலாக, அரசாங்க பாடசாலை சபைகள், அதிமேதாவி பிள்ளைகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து வழங்குகின்றன. அதி திறமையான நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றிகரமான தன்மைகளை மதிப்பிடுவதற்கு ஆய்வுகள் நடைபெற்று வந்த போதும் இன்று வரை திட்டமான விடை எதுவும் கிடைக்கவில்லை. விளையாட்டு வீரர்களும் ஏனைய நாட்டிய, நாடக, இசைத்துறையில் சிறந்து விளங்குபவர்களுமான வசதிகளைப் போலவே அறிவுத்திறனில் சிறந்து விளங்கும் மாணவர்களிற்கு கல்வி சார்ந்த கவனம் வழங்கப்பட வேண்டியது நியாயமானதாகும் என வாதிடப் படுகின்றது.

எனவே பிள்ளைகளின் மேதாவித்தனத்தை அறிந்து அப்பிள்ளைகளை ஏற்ற வழியில் நடத்தும்போது அவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக வளராமல் நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை பயக்கக் கூடியவர்களாக உருவாகும் சந்தர்ப்பம் உள்ளது.

*உசாத்துணை:*

*http://www.kidsource.com/kidsource/content/parents.gifted.html*

*http://www.ourkids.net/gifted-kids-schools.php*

*http://www.aboutkidshealth.ca/News/Gifted-Programs*

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■



# நியூசிலாந்து

கற்பதற்கு, வாழ்வதற்கு, விளையாடுவதற்கு யாவற்றிற்குமே தலைசிறந்த இடம்.



## முதற்செய்தி

நியுசிலாந்தின் அரச நிறுவனமான விற்ரியா கொம்யுனிற்றி பொலிரெக்னிக் (Whitieria Community Polytechnic) கிரிக்கட் வெலிங்டன் நிறுவனத்தின் கல்விப்பிரிவானது (Wellington School of Cricket) உடன் கூட்டாக செயற்படுத் அதேவேளை உலக அங்கீகாரம் பெற்ற மூன்றாம் நிலைக்கல்வியை மாணவர்களுக்கு நி?சிலாந்தில் வழங்கி வருகின்றது. அதேவேளை எதிர்கால வாய்ப்புகள் பலவற்றை அள்ளித்தரக்கூடிய பெருவாய்ப்புகளுக்கும் இடமளிக்கிறது.

நீங்கள் டிப்ளோமா கற்கையில் அல்லது ஒரு பட்டப்படிப்பில் ஈடுபட்டு இருக்கும் போதே உங்கள் கிரிக்கட் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு இது ஒரு அரிய வாய்ப்பு. 2 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான ஒரு டிப்ளோமா கற்கையில் அல்லது பட்டப்படிப்பில் இணைந்து கொள்ளும் ஒரு மாணவர் வாரத்திற்கு 20 மணித்தியாலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் முழுநேரமும் பகுதிநேரத் தொழில் புரியும் அனுமதியை கொண்டுள்ளார்.

நியுசிலாந்தின் விளையாட்டுத்துறை நிறுவனத்துடன் (NZIS) கூட்டு ஏற்பாடுகளில் இணைந்து கொள்ள நாம் விளையாட்டுத்துறை விஞ்ஞானத்திலும் டிப்ளோமா/ பட்டப்படிப்பை ஏற்படுத்தி வழங்குவதற்கு தயாராகவுள்ளோம். Wellington School of Cricket நிறுவனத்தின் முழுமையான பயிற்சியளிப்பு உங்களுக்கு கிடைப்பதுடன் பின்வரும் அனுகூலங்களும் கிடைக்கும்.

- ✦ தனித்தனியாக பயிற்சி அளித்தல்
- ✦ நியுசிலாந்து முதலாம் மட்ட (L-I) பயிற்சிச்சான்றிதழ்
- ✦ திறன் மட்டங்களுக்கு ஏற்ப வெலிங்டன் கிரிக்கட் கழகத்தில் விளையாடுவதற்கு வாய்ப்பாக ஒரு உள்ளூர் கிளப் ஒன்றில் இணைத்து விடுதல்.
- ✦ வெலிங்டன் கிரிக்கட் கழகத்தின் வசதிகள் யாவற்றையும் இலவசமாக பெறுதல்.
- ✦ இலவச விமானநிலையத்திற்கான பயணமும் ஆரம்ப தங்குமிடமும், மேலும் பலவும்.

NEW ZEALAND
INSTITUTE OF SPORT

## அடிப்படை / இளநிலை / முதுநிலை

✦ கணினி அறிவியலும் தொழில்நுட்பமும் ✦ வணிகமும் முகாமைத்துவமும் ✦ நிதியும் கணக்கியலும்
✦ பொறியியல் ✦ விருந்தோம்பல்
✦ விளையாட்டு முகாமைத்துவமும் பயிற்சி வகுத்தளித்தலும் ✦ விளையாட்டுக் கற்கைகள்
✦ புதிர்றல் மற்றும் பல்லூடக வடிவமைப்பு ✦ மனிதவள முகாமைத்துவம்
✦ தாதியர் பணியும் இணைந்த நலப்பேணல் தொழில்களும்
✦ விமான, விண்கல கட்டமைப்பு பொறியியல் ✦ உணவறிவியல்
✦ மக்கள் தொடர்பாடலும் நிகழ்த்துகலைகளும் ✦ மோட்டார் பொறியியல்
✦ விளையாட்டு விஞ்ஞானமும் உடற்பயிற்சிக் கல்வியும்.

உங்கள் ஆர்வநிலை கல்விக்கான எல்லைகளுக்குள் மட்டுமிருப்பினும் எம்மால் உதவமுடியும்.

Whitireia Community Polytechnic | Wellington School of Cricket
Massey University INTERNATIONAL | Southern Institute of Technology
AUT University | Wellington Institute of Technology
Eastern Institute of Technology | Lincoln University

Agent

**NZ Cricket & Education (Pvt) Ltd**
Tel: +1 866 269 8787
Email: cricketeducation@gmail.com

[redacted]



**எமது அனைத்துச் சேவைகளும் முற்றாகவே இலவசம்.**

# உங்களுக்கும் பாராட்டுதல் தேவை


ராகுலன்
- Accountant -

ஒருநாள் முடியும் போது அல்லது ஒரு வார அல்லது மாத முடிவில் இதுவும் முடியாவிட்டால் ஒரு வருடம் முடியும் போது நீங்கள் நடந்து வந்த பாதையில் எத்தனை விடயங்கள் வெற்றியாக முடிந்தன, எத்தனை விடயங்களில் தவறியிருக்கிறீர்கள், எத்தனை விடயங்களில் பாதையை விட்டு சற்று விலகிச் சென்றிருக்கிறீர்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் உங்களுடைய சாதனைகள் உங்களுக்குப் புரியும். உங்களுடைய சாதனைக்கு உங்களிடம் இருந்தும் பாராட்டு அவசியம்.

பெரும்பாலானோர் தாங்கள் செய்யும் சின்ன சின்ன நல்ல விடயங்களை பாராட்டிக் கொள்வதில்லை. ஆனால் தங்களது சிறிய தவறுகளை எல்லாம் மிகுந்த தெளிவாக நுணக்கமான விபரங்களுடன் ஞாபகம் வைத்திருப்பார்கள். இது ஏனென்றால் உணர்வுகளைக் கிளறிய விடயங்கள் எளிதில் மூளையால் இலகுவில் நினைவில் நிறுத்தப் படும்.

உங்களது பட்டமளிப்பு விழாவோ நீங்கள் ஒரு பத்து பவுண்டை உடல் பாரத்தில் இருந்து குறைத்ததோ அல்லது ஒரு விரும்பிய வேலையை பெற்றுக் கொண்டதோ ஞாபகம் இருக்கும். ஆனால் உங்களுடைய மனைவி அல்லது கணவருடன் ஒரு சிறந்த உரையாடலை மேற்கொண்டதோ உங்கள் பிள்ளையுடன் சந்தோசமாக நேரத்தைக் கழித்ததோ அல்லது இன்னும் முக்கியமாக உங்கள் காரின் ஒயிலை முதன் முதலில் மாற்றப் பழகியதோ பெரிதாக நீண்ட காலத்திற்கு ஞாபகம் இருப்பதில்லை.

## தோல்வியை ஞாபகம் வைத்திருப்பது போலவே சரியாகச் செய்ததை ஞாபகம் வைத்திருக்காவிட்டால் உங்கள் ஞாபகத்தில் இருப்பது தோல்வி, தவறு மொத்தத்தில் எல்லாமே குழப்பம்தான்.

மற்றவர்கள் பாராட்ட முன் உங்களைப் பாராட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் தப்புக்களையும் தவறுகளை மட்டுமே ஞாபகம் வைத்திருந்தால் புதிதாக வரும் இடர்களுக்கு முகம் கொடுத்து முன்னே செல்லும் தில்லு இருக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர வைக்க நீங்கள் வெற்றிகரமாக செய்தவைகள்தான் உதவும். துணிவும் தன்னம்பிக்கையும் வாழ்க்கையில் மிகவும் முக்கியம். வெற்றிச் செய்திகள் மூளையை நிறைத்தால் அவை துணிவையும் தன்னம்பிக்கையையும் வளர்க்க உதவும்.

> “ *மற்றவர்கள் பாராட்ட முன்*
> *உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள்.*
> *தப்புக்களையும் தவறுகளையும்*
> *ஞாபகம் வைத்திருந்தால்*
> *புதிதாக வரும் இடர்களுக்கு முகம் கொடுத்து*
> *முன்னே செல்லும் தில்லு இருக்காது.* ”

## நேரமெடுத்து நன்றாக நடந்தவற்றை எழுதி வைத்துக் கொள்ளவும்:

நீங்கள் ஒரு நூறு நல்ல விடயங்களை எழுதி ஞாபகம் வைத்துக் கொண்டால் இன்னும் பல வெற்றிகளை அடையலாம் என்பதை அது உங்களுக்கு அது ஞாபகத்தில் வைத்திருக்கும். இதை எழுத தொடங்கும் போது மிக சின்ன வயதில் செய்ததில் இருந்து ஆரம்பியுங்கள். பெரிய விடயங்கள்தான் எழுத வேண்டும் என்றில்லை சிறிய விடயங்கள் கூட எத்தனையோ முக்கிய விடயங்கள் இருக்கின்றன. மிதிவண்டி பழகியதில் இருந்து சின்ன வயதில் பலூன் உடைக்கும் போட்டியில் வென்றது வரைக்கும். சில நேரங்களில் ஆச்சிக்கு அவசரத்துக்கு நேரத்துக்கு ஒரு மருந்து வாங்கிக் கொடுத்ததுகூட முக்கியம் தான். இதை எழுதி வைக்கத் தொடங்கும் போது உங்களின் நீண்ட கால நினைவுகளை அசை போடும் போது அவை உள்ளத்துக்கு உரம் கொடுத்து துணிவைக் கொடுக்கிறது.

## கடந்த கால நினைவுகளின் வெற்றிகளால் உங்களைச் சூழ்ந்து கொள்ளுங்கள்:

சூழல் உங்களின் மனநிலை செயற்பாடுகளைப் பாதிக்கிறது என்று விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆனால் உங்களின் உடனடிச் சூழலை முழுமையாக நிர்ணயிக்கும் சக்தி உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு உற்சாகத்தை உறுதியைத் தரும் படங்கள் கட்டுரைகள் சின்னங்கள் வெற்றிக் கேடயங் கள் இவை உங்களைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கு விசேட இடத்தை ஒதுக்கி பாதுகாத்துப் பேணி வர வேண்டும். இது மெல்ல உங்கள் உள்மனதில் உங்கள் வெற்றிகளை நினைவுறுத்தி இன்னும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும். எப்போதும் வெற்றி கனிகளை அறுவடை செய்பவர் என்ற நினைவை உறுதிப் படுத்தும். இது உங்கள் குழந்தைகளுக்கும் நல்லது. அவர்களும் இந்த நல்ல பழக்கங்களை பழகிவிட உதவியாக இருக்கும்.

உங்கள் வெற்றிகளை ஒத்துக் கொள்ளுங்கள், பாராட்டுங்கள். உங்கள் மூளை உங்களுக்குச் சொல்லும் நீங்கள் எதையும் செய்யலாம் என்று.

ragulan@thaiveedu.com

■ ■ ■





# Thinking of Buying, Selling or Leasing !!

New or Re-Sale of Homes or Condos !!
Find out the Market Value of your Property !!

**Please Call**



Tammy Surendran (Broker)
tammy.surendran@gmail.com

**416 - 410 - 9301**

**416 - 321 - 6969**

HOMELIFE HIGHER STANDARDS

Home Life GTA Realty Inc., Brokerage
1711 McCowan Road, Suite 206
Toronto, ON. M1S 3Y3

# மகிழ்ச்சிகரமாக சாலைப்பயணங்கள்



அதீசன் சர்வானந்தன்


### தூர இடங்களுக்கு வாகனத்தில் செல்வதாயின் வீதியில் உங்கள் வாகனம் பயணிப்பதற்கு முன் செய்யவேண்டிய முக்கியமான விடயங்கள்:

உங்கள் வாகனத்தை அதன் நிறுத்துமிடத்தில் இருந்து எடுத்துச் செல்வதற்கு முன், சில முக்கியமான விடயங்களை நீங்கள் செய்யவேண்டும். அவை எவை எனில்:

### உங்கள் வாகனத்தை தயார் செய்து கொள்ளுங்கள்:

நீங்கள் வாகனத்தில் புறப்படுவதற்கு முன் tire pressure, oil, coolant மற்றும் brake fluid முதலிய நான்கு அடிப்படை விடயங்களை முதலிலேயே கவனத்தில் கொள்வது முக்கியம். சில விடயங்களை போகும் வழியிலேயே கவனித்துக் கொள்ளலாம் என்றிருந்தாலும், இவைகளை பொறுத்தவரையில், வாகனத்தை ஓட்டிச்செல்வதற்கு முன்பே கவனிப்பதுதான் நல்லது.

### Tireஇன் pressure

உங்கள் Tireகள் இன்னமும் குளிர்ச்சியான நிலையில் இருந்தாலும், அதன் pressureஐ நீங்கள் சோதனை செய்யவேண்டியது அவசியம். பரிந்துரை செய்யப்பட்ட pressure வாகனத்தின் குறிப்பு புத்தகத்தில் அல்லது வானத்தின் கதவு பக்கம் ஓட்டப்பட்டிருக்கும் stickerல் அச்சிடப்பட்டிருக்கும். நீங்கள் வாகனத்தை ஓட்டிச்சென்றவுடன், tireகள் வெப்பமடைவதால் அவற்றின் உள்ளே இருக்கும் காற்று விரிவடைந்துவிடும். அதற்கு பிறகு உயர் அழுத்தம் என தவறுதலான அளவே கிடைக்கும். பரிந்துரை செய்யப்பட்ட அழுத்தங்கள் உங்கள் tireகளின் ஆயுளை நீடிக்க உதவும். மேலும் உங்கள் வாகனத்தை நீங்கள் சுலபமாக ஓட்டமுடியும் மற்றும் எரிபொருளை சிக்கனப்படுத்த முடியும்.

### Oil அளவு:

நீங்கள் புறப்படுவதற்கு முன் உங்கள் வாகனத்தின் oil அளவு சரியான நிலையில் உள்ளதா என்பதை சோதனை செய்யவேண்டும். உங்கள் வாகனத்தை நீங்கள் நன்றாக பேணி பாதுகாக்க இந்த சுலபமான பரிசோதனை உங்களுக்கு மிக உதவும். oil அளவு குறைவாக இருந்தால் சரியான அளவு வரை நிரப்புங்கள்.

### Coolant level:

Car இயங்கி ஓடுவதற்கு முன்னரே coolant levelஐ சரி பாருங்கள். ஏனெனில் engine சூடாக இல்லாமல் குளிர்ச்சியாக இருக்கும் போதுதான் coolantஐ நிரப்புவது சுலபமான மற்றும் இதமான வேலையாக இருக்கும். சூடாக இருக்கும்போது அதை நிரப்பினால் engine கடுமையாக சேதமடைய நேரிடலாம். இதே போன்று தான் brake fluid reservoirல் சரியான அளவில் உள்ளதா என்பதையும் சோதனை செய்யவேண்டும். கண்ணால் பார்த்தே தெரிந்து கொள்ளமுடியும் என்றாலும், அதை அடிக்கடி சோதனை செய்வது மிக முக்கியம்.

### brake fluid:

உங்கள் வாகனத்தின் brake fluid அளவு சரியான நிலையில் உள்ளதா என்பதை சோதனை செய்யவேண்டும். நீங்கள் புறப்படும் இடத்திலிருந்து பாதுகாப்பாகப் போய்வர உறுதி செய்வதற்கு இது அவசியம்.

### தயாராக வைத்திருக்கவேண்டிய தேவையான ஆவணங்கள்:

உங்கள் wallet அல்லது hand bagல் தேவையான ஆவணங்களை எப்போதும் தயாராக வைத்திருங்கள். உங்கள் வாகனத்தின் உடைமையாளர் நீங்கள் தான் என்பதற்கு ஆதாரமான நடப்பில் உள்ள ஆவணங்களை உங்களுடனே வைத்திருங்கள். உங்கள் Insurance மற்றும் வாகன சாரதிப் பத்திரம் (Driver’s Licence) முதலியவையும் உங்களுடனேயே வைத்திருக்க வேண்டும்.

நீங்கள், கனடிய எல்லையை தாண்டி உங்கள் வாகனத்தில் செல்வதாக இருந்தால், வாகனத்தில் பயணம் செய்யும் ஒவ்வொருவரின் passportம் மிக அவசியம். அத்துடன் கொஞ்சம் பணமும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். நான் வழக்கமாக 100 டொலர் என்றாலும் வைத்திருப்பேன். மேலும் நீங்கள் உங்கள் credit card மற்றும் gas company cardகள் ஏதேனும் இருந்தால் அவற்றையும் உங்களுடன் எடுத்துச் செல்ல மறந்துவிடாதீர்கள்.

மேலும் ஒரு தனியான பாதுகாப்பான இடத்தில் ஒரு இரண்டாவது credit cardஐ உங்களுடனே வைத்திருங்கள் உங்கள் wallet தொலைந்து போகவோ அல்லது திருடப்படவோ செய்திருந்தால் உங்கள் வீட்டிற்கு போக தேவைப்படும் பணத்தை நீங்கள் புரட்டிக்கொள்ளலாம் உங்கள் wallet அல்லது bagல் இருக்கும் ஒவ்வொரு cardன் numberகளை நீங்கள் குறித்து வைத்திருந்தால் அவசர நேரத்தில் உங்களுக்கு email செய்வதற்கு வசதியாக இருக்கும்.

### உங்கள் credit card நிறுவனத்தை தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசுங்கள்:

நீண்ட தூரம் மற்றும் வழக்கத்திற்கு மாறான பயணம் நீங்கள் செய்வதாக இருந்தால், நீங்கள் எங்கு போகிறீர்கள் என்பது பற்றி அவர்களுக்கு தெரிவியுங்கள். Visa அல்லது Master Card ஆகிய இரண்டு fancy software மூலம் உங்கள் பயண செலவுகளை அவர்கள் கண்காணிப்பார்கள். உங்களுக்கு பழக்கப்படாத இடங்களில் நீங்கள் பல பொருள்களை வாங்கும் போது, உங்களுக்கு தெரியாமலே உங்கள் cardஇன் பணம் திருடப்பட்டால், அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள்.

### கூடுதலாக ஒரு Ignition key எப்போதும் உங்கள் கைவசம் இருக்கட்டும்:

இது மிக அவசியமில்லை என்றாலும் கூட, உங்களுக்கு Onstar நேரிடும்போது, ஒரு radio signal மூலம் உங்கள் carஐ mechanic திறக்க முடியவில்லை என்றால், நீங்கள் பூட்டைப் பழுது பார்க்கும் ஒரு தொழிலாளியையோ அல்லது tow companyன் உதவியையோ தான் நாடவேண்டியது வரும்.

உங்கள் சாவியை உங்கள் காரின் உள்ளே வைத்து பூட்டிவிடுவீர்கள் என்றில்லை. நவீன கார்களில் electronic fobகள் உள்ளதால் இவ்வாறு செய்வது கடினம் என்றாலும், நீங்கள் உங்கள் சாவியை எங்கேனும் தொலைத்து விடவோ அல்லது யாராவது உங்களிடமிருந்து திருடவோ செய்யலாம். அந்த நேரத்தில் வாகனத்தில் இருக்கும் உங்கள் உடைமைகளையாவது, நீங்கள் வெளியே எடுக்க விரும்புவீர்கள். இப்படி அவசர நேரத்தில் பயன்படுவதற்கென்றே Canadian Tire சிறிய magnetic boxகளை விற்பனை செய்கின்றன. அவற்றில் உங்கள் spare key மற்றும் fobஐ பிறர்கண்ணில் படாமல் எளிதாக ஒளித்து வைத்திருக்கமுடியும் அதை பயன்படுத்தி தான் தீரவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும் போது நீங்கள் மிகவும் சந்தோஷப்படுவீர்கள். நீங்கள் keyஐ saran wrapல் பொதிந்து வையுங்கள். ஏனென்றால் அது அழுக்கு மற்றும் ஈரம் அடையாமல் இருக்கும். மேலும் boxல் உருண்டு சத்தம் எதையும் ஏற்படுத்தாது.

### ஒரு Auto clubல் சேருங்கள்:

மாகாணங்களில் AAAயுடன் கூட்டுசேர்ந்து பங்காளிகாளக இருக்கும் CAAயில் சேர்வது சிறந்த தீர்வு. ஆனால் இப்போது வேறு சில நிறுவனங்களும் இந்த விடயத்தில் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளன.

Auto clubல் அங்கத்தினராக இருப்பது மன அமைதிதரும் விஷயமாகும். நீங்கள் எப்படியும் வீட்டிற்கு திரும்ப அவர்கள் உதவுவார்கள். இல்லையென்றால் பழுதுபார்க்க ஒரு mechaicஐ ஆவது அனுப்பிவைப்பார்கள். மேலும் CAA அங்கத்தினர்கள் hotelகள் மற்றும் motelகளில் 10 சதவீதம் வாடகையில் தள்ளுபடி பெறமுடியும்.

### உங்கள் Phone Chargeகளை கவனியுங்கள்:

கனடாவின் phone வாடிக்கையாளர்களுக்கு அமெரிக்காவில் roaming கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படும். உங்களுடைய அடிப்படை மற்றும் இலவச சலுகைகளை roaming கட்டணங்கள் தொடர்பாக நீங்கள் பெற முன்கூட்டியே அனுமதி கோரவேண்டும்.

உங்கள் வீட்டிலுள்ள phone கணக்கில் ஒரு calling card பெற்றுக்கொள்ளுங்கள். அதன்படி நீங்கள் ஒரு hotel phone மூலம்பேசி, மிதமிஞ்சிய surcharge கட்டணங்களை நீங்கள் குறைக்க முடியும்.

மிக தூரத்திலுள்ள இடங்களுக்கெல்லாம் நீங்கள் பயணம் செய்வதாக இருந்தால், உங்கள் cellphone நிறுவனம் அங்கு தன்னுடைய பிரதிநிதி அலுவலகத்தை கொண்டுள் ளதா என்பதை விசாரியுங்கள்.

### ஒரு GPS அல்லது குறைந்த பட்சம் ஒரு mapஐ ஆவது வாங்கி வைத்திருங்கள்:

ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிய தெளிவான விபரங்கள் அல்லது ஒருவருடைய முகவரியை பற்றி அறிந்து கொள்ள ஒரு GPS map உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஒரு அறிமுகம் இல்லாத நகரத்தில், ஒரு Star bucks, tim hortons அல்லது ஒரு bank machineஐ எளிதாக அதன் துணையுடன் நீங்கள் கண்டறியமுடியும்.

### ஒரு lodgeல் அறை எடுப்பது சம்பந்தமாக முதலிலேயே முடிவு செய்யுங்கள்:

Online மூலம் ஏதாவது அறை book பண்ணுங்கள். சில சமயங்களில் அங்குள்ள hotel அல்லது moteல் ஒரு அறை எடுப்பது என்பது ஒரு சாதாரண விஷயம் அல்ல. அதிலும் நீங்கள் தாமதமாக சென்றீர்கள் என்றால் மிகமிகக் கடினம்.

நீங்கள் ஒவ்வொரு நாளும் புறப்படும் போதே நீங்கள் போய் சேரும் இடம் எது என்பதை நன்கு முடிவு செய்யுங்கள். பின்னர் www.expedia.ca அல்லது www.hotels.com போன்ற இணைய முகவரிகளில் தேடி, அந்த பகுதியில் என்னென்ன இருக்கிறது என்பதை பாருங்கள். நீங்கள் எதிர்பார்த்தது மாதிரி ஏதாவது அறை கிடைத்தால் அதை உடனே பதிவு செய்துவிட்டு மன அமைதியுடன் இருங்கள். நீங்கள் அந்த இடத்திற்கு சென்றபின் தான் தங்குவது பற்றி முடிவு செய்வீர்கள் என்றால், அது பற்றிய கூடுதல் விபரங்களையாவது முன் கூட்டியே தெரிந்து வைக்கலாம். மலிவான கட்டணங்கள் உள்ள அறையை நீங்கள் தேர்வு செய்யலாம்.

### குழந்தைகளையும் நீங்கள் கூட்டிச் செல்வதாக இருந்தால்:

Carல் ஒரு portable DVD playerஐயும் கொண்டு செல்லுங்கள். (அது ஏற்கனவே இல்லாமல் இருந்தால்). நீங்கள் எண்ணற்ற இயற்கை காட்சிகளை காண்பதற்கும் மற்றும் விசேஷமாக பொழுதை போக்குவதற்கும் பயணம் செய்பவராக இருக்கலாம். ஆனால் free wayல் பல மணி நேரங்கள் வாகனத்தில் போவது உங்கள் குழந்தைகளுக்கு சலிப்பூட்டுவதாக அமையலாம். எனவே அவர்களுக்கு சந்தோஷமாக நேரம் போவதற்கு சில moviesகளையும் கொண்டு செல்லுங்கள்.

### சோர்வூட்டுகிற வாகனப் பயணங்களைத் திரைப்படங்கள் மகிழ்வாக்குகின்றது:

ஒரு நாளுக்கு இரண்டு movieகளை போடுங்கள். அதனால் வாகன பயணத்தில் 50 சதவீதம் இனியபொழுது போக்காக கழிந்துவிடும். எனவே சுற்றுச் சூழல்கள் அவர்களை முழுவதும் வெறுப்பூட்டுவதை சற்று குறைக்கமுடியும். அவர்கள் மடியில் வைத்து laptopஐ எப்போதும் கேட்டுக் கொண்டிருந்தால் அவர்கள் கழுத்தில் வலி ஏற்படும். ஆகையால் அவர்களின் தலைக்கு நேர் எதிராக ஒரு playerஐ set பண்ணி வைப்பது சிறந்த தீர்வு.


குழந்தைகள் head phoneகள் அணிந்து கொண்டு படம்பார்க்கும்போது பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்க முடியும்.

உங்கள் சாலைப்பயணங்களை உண்மையில் மகிழ்ச்சிகரமாக ஆக்க முடியும்.

atheesan.s@thaiveedu.com

■ ■ ■


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca
Office : (514) 299-3186
(450) 926-1881

Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

## மகாஜனாவின்

# குழந்தைக் கவிதைகளின் பாரம்பரியம்



குரு அரவிந்தன்

இன்று புலம் பெயர்ந்த தமிழர்களின் முக்கிய பிரச்சினையாக இருப்பது தங்கள் தாய் மொழியை, எப்படித் தாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தக்கவைப்பது என்பதே. தமிழர்களின் தாய் மண்ணில் இருந்து தமிழர்களுக்கு எந்த ஒரு வகையான அரச உதவியும் கிடைக்காத இப்படியான ஒரு சூழ்நிலையில், தாய் மொழியைக் காப்பாற்றி அடுத்த தலை முறையினரிடம் கொடுக்க வேண்டிய கடமையும் புலம் பெயர் தமிழர்களின் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் இனத்திற்குப் புலம் பெயர்ந்த மண்ணில் இது ஒரு சவாலாகவும் இருக்கிறது. இதை எப்படிச் சாத்தியமாக்கலாம், எந்த வகையில் இந்த மண்ணில் தமிழ் மொழி அழியாமல் காப்பாற்றுவதற்குத் துணை புரியலாம் என்று சிந்தித்தால் அதற்கான பலவழிகள் புலப்படும். முதலில் அவற்றைச் செயற் படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். முக்கியமாக குழந்தைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கான சாத்தியமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். தொட்டதற்கெல்லாம் யாரையாவது குறை கூறிக் கொண்டே இருக்காது, இருப்பதை வைத்துக் கொண்டு இலட்சியத்தை அடைய முயற்சிக்க வேண்டும். குழந்தைகளின் மொழி விருத்தியில் கவனம் செலுத்தும்போது, குழந்தைகள், மொழியை எப்படி இலகுவில் கற்றுக் கொள்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால், குழந்தைகளின் உளவியற்படி ஓசை வடிவத்தில் வெளிவரும் பாடல்கள் மூலமே அவர்கள் மொழியை இலகுவில் கற்றுக் கொள்கிறார்கள் என்பது தெரியவந்திருக்கிறது. ஆங்கிலத்தில் கூட Nursery rhyme என்ற பாடல்கள் புகழ் பெற்றதற்கு இதுதான் காரணம். பொதுவாகச் சிறுவர் என்று கூறும்போது அவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். 1-6 வயதுவரை (Basic), 7-8 வயதுவரை (Primary), 9-11 வயதுவரை (Elementary) என்று இவர்களைத் தரம் பிரிக்க முடியும். இதை மனதில் கொண்டு, அப்படியானதொரு முயற்சி மூலம் இத்தகைய வயதினருக்கு ஏற்றமாதிரி சிறுவர், சிறுமிகளுக்குக் கிடைத்த அருமையான தொகுப்புத்தான் மகாஜனன் தந்த குழந்தைகளுக்கான இந்தக் கவிதைத் தொகுப்பாகும்.

ஈழத்து இலக்கியப்பரப்பிலே மகாஜனக் கல்லூரி மாணாக்கர் பரம்பரையினர் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, சினிமா போன்ற துறைகளிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ளனர். அந்த வகையிலே தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சிறுவர் இலக்கியத்திற்காக மிகப் பெரியதொரு சேவையை ஆற்றியிருக்கிறது. அன்று தொட்டு இன்றுவரை இலக்கியப் பாரம்பரியத்தில் புகழ் பெற்றது மகாஜனாக் கல்லூரி. இவர்களின் நூற்றாண்டை (2010) முன்னிட்டு குழந்தைக் கவிதைகள் என்ற தொகுப்பைத் தற்போது வெளியிட்டிருக்கிறார்கள். ஆனாலும் சில பழைய மாணவர்களான கவிஞர்களின் ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம் பெறவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. குழந்தைகளுக்கான கவிதைகளை அவர்கள் எழுதாமல் இருந்திருக்கலாம் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் அவர்களின் ஆக்கங்கள் விடுபட்டுப் போயிருக்கலாம். இருந்தாலும் பல சிரமங்களுக்கு மத்தியில், பாவலர் துரையப்பாபிள்ளையின் கவிதைப் பாரம்பரியத்தில் வளர்ந்த, கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களினதும், கற்பித்த ஆசிரியர்களினதும் குழந்தைப் பாடல்கள் சிலவற்றை ஒன்றாகச் சேகரித்து இத்தொகுப்பில் இடம் பெறச்செய்திருக்கிறார்கள். இந்த முயற்சிக்குப் பாரபட்சம் காட்டாது முன்னின்று உழைத்த மயிலங்கூடலூர் பி. நடராசன், எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், ம.பா. மகாலிங்கசிவம் போன்றோரும், தற்போதைய அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன், முன்னாள் அதிபர் திரு. பொ. சுந்தரலிங்கம், இதற்கான நிதி உதவி புரிந்த முன்னாள் ஆசிரியர் திரு. க. செல்வகுணச்சந்திரன் ஆகியோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஈழத்து ஓவியர் ரமணி அவர்கள் குழந்தைக் கவிதைகளுக்கு ஏற்றவாறு அழகான அட்டைப் படம் வரைந்திருக்கிறார்.




'ஈழத்து தமிழ்க்கவிதை வரலாற்றிலே குழந் தைப்பாடல்களுக்கு தனித்துவமான சிறப்பம்சம் எப்பொழுதும் உண்டு' என்று இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தனது அணிந்துரையில் குறிப்பிடுகின்றார். 1918ம் ஆண்டு குழந்தைகளுக்காக ச. வைத்திநாதர் என்பவர் குழந்தைப் பாடல் தொகுதி ஒன்றை வெளியிட்டிருந்ததாகவும், 1935ம் ஆண்டு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் உள்ளிட்ட பலரின் பாடல்கள் அடங்கிய 'பிள்ளைப்பாட்டு' என்ற தொகுதி அப்போதைய வித்தியாதரிசியாக இருந்த க. ச. அருணந்தியின் பெருமுயற்சியால் ஈழத்தில் வெளிவந்ததாகவும் தெரிவிக்கின்றார். குழந் தைகள் வாய்விட்டுப் பாடக்கூடியதாகவும், இனிய ஓசையோடு அபிநயக்கத் தக்கதாகவும் பாடல்கள் அமைய வேண்டும் என்றும், இத்தொகுப்பில் பெரும்பாலான பாடல்கள் இயற்கை, சுற்றுச்சூழல், உறவுமுறைகளை மனதில் கொண்டு எழுந்தவையாகவும், அனேகமாக குழந்தைகளுக்கு உபதேசம் அல்லது புத்திமதி சொல்வதாய் இருப்பதாகவும், குழந்தைப் பாடல்கள் பற்றி ஆய்வினைச் செய்பவர்களுக்கு சிறந்ததொரு களஞ்சியமாக இத்தொகுப்பு அமையும் என்றும் மேலும் குறிப்பிடுகின்றார்.

இத்தொகுப்பில் நாற்பத்தி நாலு கவிஞர் களின் நூற்றிப் பதின்நான்கு குழந்தைக் கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. முதற் கவிதையாக இடம் பெற்றிருப்பது கவிஞரும், கல்லூரி ஆசிரியருமான அமரர் செ. கதிரேசன்பிள்ளையின் பாடல்களும், அடுத்து மஹாகவி. து. உருத்திரமூர்த்தியின் பாடல்களும், அடுத்து பன்மொழிப் புலவர் மயிலங்கூடலூர் த. கனகரத்தினத்தின் பாடல்களும் தொடர்ந்து பண்டிதர் சி. அப்புத்துரை, கல்லூரிக் கீதம், கொடிக் கீதம் போன்றவற்றைத் தந்த புலவர் நா. சிவபாதசுந்தரனார், செ. சிவசுப்பிரமணியம், புலவர் ம. பார்வதிநாதசிவம் கவிஞர் மயிலங்கூடல் நடராசன், பத்திரிகை ஆசிரியர் சிவநேசச்செல்வன், பேராசிரியர் சபா. ஜெயராசா, எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என். சண்முகலிங்கன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், திருமதி மரகதவல்லி சர்வானந்தராசா, தெல்லியூர் நா. ஆறுமுகம், சைவப்புலவர் சு. செல்லத்துரை, திருமதி சௌ. பத்மநாதன், திருமதி பகீரதி கணேசதுரை, இ. ஞானேஸ்வரன், திருமதி ஜெயரஞ்சனி மயில்வாகனன் செல்வி இராஜேஸ்வரி செனகரத்தினம், திருமதி சிவனேஸ்வரி பரமசிவம், க. வாணி முகுந்தன் பா. பாலமுரளி, திருமதி சாமினி பிரதீபன், க. ஆதவன், கவிஞர் உ. சேரன், திருமதி பாரதி சேந்தனார், ம. பா. மகாலிங்கசிவம், எழுத்தாளர் குரு அரவிந்தன், கவிமணி க. ஆனந்தராசா, இரா. ஜெயக்குமார், சி. சிவசிவா, பூ. நகுலன், வே. செவ்வேள்குமரன் மா. பிரவீணன், செல்வி ஜே. கவிதா, செல்வி க. சுபாஜினி, செல்வி சஜீதா சண்முகரத்தினம், செல்வி புராதனி ஏழூர்நாயகம், இ. தனஞ்சயன், செல்வி கோபிகா குமாரவேலு, செல்வி ஸ்ரீபுராதனி இராஜகோபாலன், சு. சர்மிகா போன்றோரின் பாடல்களும் இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் இத்தகைய அருமையான குழந்தைக் கவிதைகள் இசையோடு கூடிய ஒலி வடிவமைப்பிலோ, அல்லது காட்சிகளோடு கூடிய ஒளி அமைப்பிலோ குறுந்தட்டுக்களாக வெளிவந்தால் இன்னும் சிறப்பாக, குழந்தைகளை அதிகம் கவரக்கூடியதாக இருந்திருக்கும். மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர்களான மாவை நித்தியானந்தனின் பாப்பாபாரதி, குரு அரவிந்தனின் தமிழ் ஆரம் போன்றன இத்தகைய குழந்தைப்பாடல்கள் அடங்கிய குறுந்தட்டுக் களாக ஒளிவடிவில் வெளிவந்திருக்கின்றன. குரு அரவிந்தனின் தமிழ் ஆரம் குழந்தைப் பாடல்கள் குழந்தைகளை மிகவும் கவர்ந்திருப்பதை, மூன்று குருட்டு எலி என்ற தனது படைப்பில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களே எடுத்துக்காட்டிப் பாராட்டியிருப்பதையும் இங்கே குறிப்பிடத்தக்கது. பல தலைப்புக்களில் பலவிதமான சிறுவர் பாடல்களும் இத்தொகுப்பில் அடங்கியிருப்பதால், சிறுவர் இலக்கியத்தில் ஆர்வமுள்ள யாராவது பொறுப்பெடுத்து இதில் உள்ள பாடல்களுக்கு ஒலி, ஒளி வடிவம் கொடுக்கும் முயற்ச்சியில் ஈடுபடுவார்கள் எனப் புலம் பெயர் தமிழர்களான நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். தாய் மொழியாம் தமிழ் மொழியைப் புலம் பெயர்ந்த மண்ணில் தக்கவைப்பதற்கு நீங்கள் செய்யும் பேருதவியாக இது என்றென்றும் நிலைத்து நிற்கும். தமிழ்தானே என்று அலட்சியப்படுத்தினால், மொழி அழிந்தால், நம் இனமும் அழிந்துவிடும் என்பதை நாம் நினைவில் கொண்டு மனப்பூர்வமாய் செயற் படவேண்டும், ஏனென்றால் நாமும் முகவரி அற்றவர்களாக ஆகிவிட நேரிடலாமல்லவா?

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

**For a limited time government will pay rebate for insulating your attic**

**+ Provincial (750) + Toronto (200) = $ 950**

from existing R-12 insulation to raise it up to R50

**How can attic insulation help me?**

-Reduce the heat loss through attic
-Save on heating & cooling cost
-Prevent roof rot and mold in a well
-insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

**Call for no obligation free quote**

மேலதிக விபரங்களுக்கு அளையுங்கள்

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer

# உள்ளூராட்சித் தேர்தல்:
# சிறுபான்மையினரின் அக்கறையீனம்



கந்தசாமி
கங்காதரன்

ஒக்டோபர் 25, 2010

ஒன்ராறியோ மாகாணத்தின் 444 உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளுக்கும் தேர்தல் நடைபெறும் நாள்.

தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்கும் காலமிது. நகர முதல்வர், கல்விச்சபை உறுப்பினர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் போன்ற பதவிகளுக்குத் தமிழர்களும்கூட போட்டியிடுகின்றனர். பரப்புரை என்ற பெயரில் அல்லது போர்வையில், 'நான் தோற்றாலும் கேடில்லை, அவன் வெற்றிபெறக்கூடாது' என்ற முனைப்புடன் போட்டியிடும் வேட்பாளர்களும் களத்திலுள்ளனர். நாம் இங்கு, 'யாருக்கு வாக்களிக்கலாமென்றோ அல்லது இந்த வேட்பாளர் நல்லவரா கெட்டவரா' என்றோ ஆராயப் போவதில்லை. யாருக்கு வாக்களிப்பது என்பது அவரவர் முடிவு, விருப்பம். ஆனால் வாக்களிக்கவேண்டும் என்றுதான் சொல்ல விழைகின்றோம்.

பொதுவாக நாடாளுமன்றத் தேர்தல் என்றால் ஊடகங்களும் பெருத்த ஆரவாரம் செய்ய, அனைவரதும் கவனிப்பைப் பெறும். அந்த அளவுக்கு மாகாண, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கவனிக்கப்படுகின்றதா? என்றால்...

இல்லை.

செப்டெம்பர் 18ம் நாள் வெளியான கருத்துக் கணிப்பொன்றின்படி, ரொறன்ரோ நகரில் வாழும் பலருக்கே ஒக்டோபர் மாதத்துத் தேர்தல் பற்றித் தெரிந்திருக்கவில்லையாம். ரொறன்ரோ நகரசபைத் தேர்தலில் "யாருக்கு உங்கள் வாக்கு?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பலர், "அப்படியா.. எப்போது தேர்தல்?" என்று திருப்பிக் கேட்டிருக்கின்றனர். இந்த இலட்சணத்தில் 'யாருக்கு உங்கள் வாக்கு?' என்பது அவர்களிடம் கேட்கக்கூடாத கேள்வி.

2006 நாடாளுமன்றத் தேர்தலில், வாக்களிக்கத் தகுதிபெற்ற கனடியர்களில் 64.7 விழுக்காட்டினர் வாக்குரிமையைப் பயன்படுத்தியிருந்தனர். 2008இல் இது 59.1%ஆகக் குறைந்தது. கனடிய நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் இதுவே ஆகக் குறைந்த வாக்களிப்பு விகிதம். ஒன்ராறியோ மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் 2007இல் வாக்களிப்பு 52.8%ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1923இல் 54.7% என்ற சாதனையை ஒன்ராறியோ வாக்காளர்கள் வெற்றிகரமாக 2007இல் முறியடித்துள்ளனர். 2006 ரொறன்ரோ நகரசபைத் தேர்தலிலும் வாக்களிப்பு 39.3% எனப் பதிவுகள் சொல்லுகின்றன.

இவ்வாறான குறைந்தளவு வாக்களிப்புக்குப் பல காரணிகள் முன்வைக்கப்படுகின்றன.

- நாட்டு நடப்புக்களில் ஆர்வமின்மை.
- எங்காவது போய் வாக்களிப்பதில் உள்ள அசௌகரியம்.
- கருத்துக் கணிப்புக்கள் போன்ற தரவுகளை வைத்து, அவர்தான் வெல்லப்போகிறார், எனவே எனது வாக்கு ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்ற சலிப்பு.
- பல்வேறு மட்டங்களிலும் நடக்கும் தேர்தல்களில் அடிக்கடி வாக்களித்து அலுப்புத் தட்டுவது

போன்ற காரணங்கள் கவனிக்கத்தக்கன.

சுற்றிவர நடக்கும் நிகழ்வுகளில் ஆர்வமில்லாதிருந்து விட்டு ஏதாவது ஒரு பிரச்சினை தலைக்கு மேல் வந்தபின் ஓடித் திரிவதில் பயனில்லை.

> " மக்களாட்சியில்
> மிகப்பலமான ஆயுதம் வாக்கு மட்டுமே. "

வாக்களிப்பு என்பது ஒரு கொஞ்ச நேர வேலை. வேலை நாளாயின் பணியிடங்களில்கூட, போய் வாக்களித்துவிட்டு வருவதற்கு அனுமதி தரப்படுகின்றது. கருத்துக் கணிப்புக்கள் எப்போதுமே. சரியாக அமைவதில்லை. சில வேளைகளில் உங்கள் ஒரேயோரு வாக்குக்கூட வெற்றியாளரைத் தீர்மானிக்கலாம். ஒவ்வொரு வாக்கும் மிக வலிமையானது.

அடிக்கடி தேர்தல்கள் வரும்போது வாக்களிக்காமல் விடுவது உங்களுக்குப் பிடிக்காத ஒருவர் பதவிக்கு வருவதற்கு ஏதுவாகலாம். அல்லது, வெற்றிபெற வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்த ஒருவர் வெற்றி பெறா மற்போவதற்கு நீங்களே காரணமாகலாம்.

நீங்கள் அளிக்காமல் விடும் வாக்கு தவறான ஒருவர் உங்களை ஆள்வதற்குத் துணைபுரியக்கூடும்.

2002இல் பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலின் போது, 'வலதுசாரியான Jacques Chiracஉம் இடதுசாரியான Lionel Jospinஉம் தான் அதிகப்படியான வாக்குகளோடு முன்னிலைக்கு வருவார்கள், அதன்பின் இரண்டாவது சுற்றில் இந்த இருவரில் ஒருவருக்கு வாக்களிக்கலாம்' என்று பெரும்பாலான இடதுசாரிகள் பேசாமல் இருந்துவிட்டனர். முதலாவது சுற்றுத் தேர்தல் முடிவுகளோ முழு உலகையுமே பிரான்ஸ் நோக்கித் திருப்பின. Jacques Chirac 19.88% வாக்குக்களைப் பெற வெளிநாட்டவர்களுக்கெதிராகத் தீவிர வெறுப்பைக் கக்கிக் கொண்டிருந்த அதிதீவிர வலதுசாரியான. Jean-Marie Le Pen 16.86% வாக்குக்களோடு இரண்டாமிடத்திற்கு வந்தார். முதலிரு இடங்களுக்குள் உறுதியாக எதிர்பார்க்கப் பட்ட Lionel Jospin 16.18% வாக்குக்களோடு வெறும் 194,600 வாக்குக்களால் மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டு இரண்டாவது சுற்றுக்கான வாய்ப்பை இழந்தார். இப்போது, 'வலதுசாரியா? அதிதீவிர வலதுசாரியா?' என்ற கேள்வி. மிதமான போக்குடையவர்களான பிரெஞ்சுக்காரர்களுக்கே Jean-Marie Le Pen இரண்டாவது சுற்றுக்கு வந்ததை ஏற்றுக்கொள்ளக் கடினமாகவிருந்தது. நாடு முழுவதும் Jacques Chiracக்கு ஆதரவாகவும் Jean-Marie Le Penக்கு எதிராகவும் பேரணிகள். நிறையத் தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்கள் நிலைமையின் தீவிரம் தலைக்கேற விழுத்தடித்துக்கொண்டு வாக்காளர் பதிவேட்டில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய ஓடினர் பயனில்லை. கால அவகாசம் போதாமலிருந்தது. இருவர் மட்டுமே போட்டியிட்ட இரண்டாவது சுற்றில் 82.21% வாக்குக்களோடு Jacques Chirac மீண்டும் வெற்றி பெற்று ஜனாதிபதியான பின்புதான் பலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

பிரான்சில் நடைபெற்றது போலவே இங்கும் நாம் ஏனோதானோவென்றுதான் இருக்கின்றோம். வாக்கு என்பது உரிமை இம்மண்ணின் மைந்தர்களான கனடியப் பூர்வகுடியினருக்கு 1960ம் ஆண்டிலேதான் வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்புரிமைகளைக் கைவிட்டு பூர்வகுடியினர் என்ற அடையாளத்தையும் கைவிட்டால் மட்டுமே 1960க்கு முன் அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் எமக்கோ நிரந்தர வதிவிட உரிமை கிடைத்து 3 ஆண்டுகளின் பின் குடியுரிமை கிடைத்துவிடுகின்றது. குடியுரிமையோடு வரும் வாக்குரிமையை இதுவரையிலும் சரியாகப் பயன்படுத்தியிருக்கின்றோமா?

2009இன் முதற்பாதியில் பெரும்பாலான கனடியத் தமிழர்கள் குளிரிலும் பனியிலும் நடுங்கி நடுங்கித் தெருவில் நின்று போராடினோம். நாடாளுமன்ற முன்றலில் மண்டியிட்டு கண்ணீர் விட்டுக் கதறியழுது இறைஞ்சினோம். யாரேனும் திரும்பிப் பார்த்தார்களா? எங்கள் குரல் கேட்டு யாரேனும் ஓடோடி வந்தார்களா?

எங்கள் குரல் கேட்கவில்லையென்று யாரும் சொல்லமுடியாது. அவர்களுக்கு ஒரு நம்பிக்கை – 'இவர்களின் வாக்கு எங்களின் வெற்றியைப் பாதிக்காது' என்று ஒரு நம்பிக்கை. சில நூறு வாக்குக்கள் வேறுபாட்டில் கடந்த பொதுத் தேர்தலில் சில தொகுதிகளின் முடிவு இருந்தது. ஆயிரக்கணக்கில் பெரும்பாலான தொகுதிகளில் இருக்கும் எங்களில் அதிகப்படியானோர் வாக்களிக்கின்றோம் என்றால் எல்லோருமே எங்கள் பக்கம் பார்வையைத் திருப்புவர். எங்கள் வாக்களிப்பு விகிதம் அதிகரிக்கவேண்டும். சாக்குப்போக்குச் சொல்லாமல் உரிய காலத்தில் வாக்காளர் பதிவேட்டில் பெயர்கள் இருக்கின்றனவா என்று விசாரித்து, இல்லாவிடின் வாழும் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களோடு தொடர்பு கொண்டு காலாகாலத்தில் உரிய பதிவுகளைச் செய்து வாக்காளர் பதிவேட்டில் இடம் பெறுவோம். அத்தோடு நின்றுவிடாமல் தேர்தலிலும் எங்கள் வாக்குக்களைப் பதிவு செய்வோம். எத்தனை பேர் வாக்களிக்கின்றோம் என்பது கவனிக்கப்படும், கவனத்தில் கொள்ளப்படும்.

எடுத்த எடுப்பிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று, பிரதமரின் வலது கையாக இல்லாவிடினும் பரவாயில்லை இடது கையாகவென்றாலும் இருப்போம் என்ற எண்ணம் கொண்டோர் தேர்தலிற் போட்டியிடுவர். அவர்களை அண்ணாந்து பார்ப்பதை விடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடுவோரையும் கவனத்திற் கொள்வோம். பின்னர் மாகாணமன்றம், நாடாளுமன்றம் என்று போகலாம்.

'எங்கு, யார் எதற்குப் போட்டியிடுகின்றார்கள்?' என்பது அல்ல முக்கியமான விடயம். யாருக்கு வாக்களிக்கிறோம் என்பதிலும் எத்தனை பேர் வாக்களிக்கின்றோம் என்பது தான் மிக முக்கியமான விடயம்.

மக்களாட்சியில் மிகப்பலமான ஆயுதம் வாக்கு மட்டுமே. அந்த ஆயுதத்தை அனைவரும் கையிலெடுப்போம். எங்கள் குரல் எங்கும் கவனித்துக் கேட்கப்படும்.

ஒக்டோபர் 25ஐ மறந்துவிடாதிருப்போம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

## நான் எங்கே, எப்பொழுது வாக்களிக்க வேண்டும்?

முன்கூட்டியே வாக்களிப்பதற்கு எட்டு வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் முன்கூட்டியே வாக்களிப்பதற்கு காரணம் காட்டத்தேவையில்லை.

கிழமைநாளில் முன்கூட்டியே வாக்களித்தல்.

ஒக்டோபர் 5, 6, 7, 8, 12, 13 காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை. மாநகரத்தில் நீங்கள் எங்கு வசித்தாலும், மேற்படி நாட்களிலும் நேரங்களிலும், பின்வரும் நிலையம் எதிலும் வாக்களிக்கலாம்:

**Etobicoke Civic Centre**
399 The West Mall Council Chambers, வாயில் கூடம்

**North York Civic Centre**
5100 Yonge Street Members' Lounge, கீழ் மட்டம்

**Scarborough Civic Centre**
150 Borough Drive Committee Room 1, வாயில் கூடம்

**Toronto City Hall**
100 Queen Street West Rotunda, வாயில் கூடம்

**York Civic Centre**
2700 Eglinton Avenue West
Council Chambers, 2ம் மாடி

கிழமையிறுதியில் முன்கூட்டியே வாக்களித்தல்.

ஒக்டோபர் 16 சனிக்கிழமையும், 17 ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை உங்கள் வட்டார நிலையம் ஒன்றில் வாக்களிக்கவும்.

கிழமையிறுதியில் முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையங்கள் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் இடம்பெற்றிருக்கும். ஒக்டோபர் மாதத் தொடக்கத்தில் அது அஞ்சல்மூலம் உங்களை வந்தடையும். வாக்களிப்பு நிலைய விபரங்கள் முழுவதும் www.toronto.ca/elections என்னும் இணையத் தளத்தில் இடம் பெற்றுள்ளன. அல்லது 311 என்னும் இலக்கத்தை அழைத்தும் அவற்றை நீங்கள் செவ்வை பார்க்கலாம். கிழமையிறுதியில் உங்கள் வட்டாரத்தில் முன்கூட்டியே வாக்களிக்க நிர்ணயித்த நிலையத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

## வாக்காளர் பதிவேட்டில் இடம் பெறும் விதம்:

நீங்கள் வாக்காளர் பதிவேட்டில் இடம் பெற்றுள்ளீர்களா? இடம்பெறுவது முக்கியம். இடம்பெற்றால், விரைவாகவும் எளிதாகவும் வாக்களிக்கலாம். வாக்காளர் பதிவேட்டில இடம்பெறுவது மிகவும் இலகு:

- 311 இலக்கத்தை அழைத்து, நீங்கள் வாக்காளர் பதிவேட்டில் இடம்பெற்றுள்ளீர்களா என்பதை அறியவும்.
- நீங்கள் வாக்காளர் பதிவேட்டில் இடம் பெறவில்லை என்றால், அல்லது உங்கள் விபரங்களை மாற்ற வேண்டும் என்றால், வாக்காளர் பதிவேடு விபரமாற்ற வேண்டுகோள் (Request for Voters' List Change) படிவத்தை நிரப்பவும். அதனை தேர்தல் துறையின் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கலாம், அல்லது அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- நிரப்பிய படிவத்தை, ஏற்கத்தக்க அடையாள ஆவணத்தின் படப்பிரதியுடன்

Toronto Elections,
City Hall, 1st Floor North,
100,Queen St W,
Toronto ON M5H 2N2

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது அக்டோபர் 15-ம் திகதிக்கு முன்னர் ஏற்கத்தக்க அடையாள ஆவணத்துடன் மாநகர எழுதுநரின் அலுவலகங்களுள் ஒன்றுக்கு நேரில் செல்லவும்.

அத்துணை இலகுவாக வாக்காளர் பதிவேட்டில் இடம்பெறலாம்.

நீங்கள் வாக்களிக்கச் செல்லும்பொழுதும் உங்களை வாக்காளர் நிரலில் சேர்க்க முடியும். எத்தகைய ஆவணங்கள் ஏற்கத்தக்கவை என்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு அல்லது வாக்காளர் பதிவேடு விபரமாற்ற வேண்டுகோள் (Request for Voters' List Change) படிவத்தைப் பதிவிறக்குவதற்கு, பின்வரும் இணையத்தளத்தை நாடவும்: http://www.toronto.ca/elections/

# என் அன்பான இனிய மார்க்கம் 7ம் வட்டார வாக்காளப் பெருமக்களே!

வணக்கம்!

நான் உங்கள் முழுநேர ஊழியன். இதனால் உங்கள் நம்பிக்கையைப் பெற்றவன். கடந்த கால எனது மக்கள் சேவை உங்கள்

**கண் முன்னால்!**

மார்க்கம் வரலாற்றில் கடந்த நான்கு வருட வாழ்க்கைப் போக்கில் நான் ஒரு சரித்திரத் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளேன். இன்னும் தொடர்ந்து எடுத்துக் கொண்ட பெரும் பணிகளை நிறைவேற்றி வேலைத் திட்டங்களைப் பூரணப்படுத்திப் புது வாழ்வினை மலர வைக்க வேண்டும்.

உங்கள் ஒவ்வொரு வாக்கும் புனிதமானவை. சிறுதுளி பெருவெள்ளமாகி எனது பயணத்தை உற்சாகப்படுத்தி உறுதி செய்ய வேண்டும். சென்ற முறை போல் இந்த முறையும் என்னை

**மீண்டும் தெரிவு செய்து**

உங்கள் தொண்டனாக்குங்கள்.

நன்றி



☑ **Oct 25th 2010**
**on Monday**

# கவுன்சிலர் லோகன் கணபதி

# நீதன் சண்ணின் பரப்புரைத் தலைமைப் பணிமனைத் திறப்புவிழாவை

நீதன் சண்ணின் பரப்புரைக் குழு பரப்புரைத் தலைமைப் பணிமனைத் திறப்புவிழாவை செப்ரெம்பர் 12ஆம் நாள் பிற்பகல் 2 மணிக்கு நிகழ்த்தியிருந்தது. நீதன் சண்ணுடைய வேட்பிற்கு ஆதரவு தெரிவிக்க ஏறத்தாழ 300 ஆதரவாளர்கள் வந்திருந்தார்கள். முன்னாள் ஸ்காபரோ கிழக்குக்கான மாகாண சபை உறுப்பினரும், பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கான முன்னாள் அமைச்சரும், சிறார், இளையோர் சேவைகளுக்கான முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு மேரி ஆன் சாம்பேர்ஸ் (Honourable Mary Anne Chambers) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நீதன் சண் பகுதி 42 (ரயசன 42) இற்கான நகரசபை உறுப்பினராகப் போட்டியிடுவதை ஆதரித்தார். நீதணின் வேட்பை ஆதரித்து மேலும் பல பிரமுகர்கள் உரை நிகழ்த்தினார்கள். பரப்புரைத் தலைமைப் பணிமனை 5633 Finch Ave. East unit 6 (Tapscott மற்றும் Finch சந்திப்பின் தென்மேற்கு மூலையில்) அமைந்துள்ளது.

தொலைபேசி: 416 398 5106
மின்னஞ்சல் info@neethanshan.ca.

















நிழற்பட உதவி: www.ninaivukal.com

# Elect Juanita Nathan

Public School Board Trustee
**Ward 7 & 8 - Markham**

## ☑ அனுபவம் மிக்க வேட்பாளர்





### வனிதா நாதனின் தேர்தல் கொள்கைகள்:

- எம் சமூகத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் பகல் நேர பாலர் வகுப்புகளை விரைவாக விரிவுபடுத்தல்
- மேலதிகக் கட்டணமற்ற கல்வி
- பெற்றோருக்கும் பாடசாலைகளுக்கும் இடையிலான மொழித் தடைகளைப் போக்கும் வழிகளை ஆராய்தல்
- சிறப்புக் கவனிப்புத் தேவையான மாணவர்களை மேலும் உள்வாங்கக் கூடிய சூழலை உருவாக்குதல்
- உரிய வகுப்புகளில் மாணவர்கள் கற்றலை உறிதிப்படுத்தல்
- பாதுகாப்பான பாடசாலைச் சூழலை உருவாக்கல்
- சமூகத்தின் பாவனைக்காகப் பாடசாலைகளைப் பயன்படுத்தல்



### அனுபவமே மிக முக்கியமான தகமை

- யோர்க் பிரதேச ஈகுவிற்றி கவுன்சில் இயக்குனர் சபை உறுப்பினர்
- சமூக சேவைப் பணியாளர்
- பெற்றோருக்கான பயிற்றுனர்
- போதைப் பொருட்களுக்கு அடிமையான இளையோருக்கான ஆலோசகர்
- குடும்ப வன்முறைத் தீர்வு ஆலோசகர்
- முதியோர் குழு ஒழுங்கமைப்பாளர்






**Election Day:**
October 25, 2010

**Advance Voting:**
October 16 to 21, 2010

**For more info:**
647.701.5589
www.juanitanathan.ca
info@juanitanathan.ca

AUTHORIZED BY THE CFO FOR THE JUANITA NATHAN CAMPAIGN.


கனேடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம்
CTAA
CANADIAN TAMIL ARTIST'S ASSOCIATION
"கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன்
"நவரசத்தாரகை" ரூபி யோகதாசன்
இணைந்து வழங்கும்
மாபெரும்
நாடகப்பெருவிழா
"லண்டன் கந்தையா" புகழ் கலைஞர் கனகலிங்கம் அரங்கு
ஒரே மேடையில்
5
நாடகங்கள்
2010
Drama
Festival
Can west - Logan Rasiah
Wrong Number
Ten Stars
தோற்ற மாயை
Standard Mortgage - Raj S
ஆவி துடிக்கிதடி
Santha Plumbing Electrical - Santhalingam
வந்தாளே மகராசி
Seylingo Financial Group - Siva Ratnasingam
இது பெரிய கூத்து
Oct 23, 2010
Saturday @5:00pm
Winston Churchil C.I
2239 Lawrence Ave, East
(Kennedy / Lawrence)
Scarborough
Stage Sponsors: Finch & Warden Medical Clinic
Dr. Manivannan, Dr. Nithyaluxmi
MORE INFO @ 416-670-6522
416-898-RAVI (7284)
ctaa2005@yahoo.ca

# வானத்திலிருந்து எரிகல்மழை பொழிந்தது

- பொன் குலேந்திரன் -

வானத்தில் இயற்கையினது பலவிதமான விநோதங்களை மனிதன் கண்டு இரசிக்க முடிகிறது. சூரிய குடும்பங்கள் பல பிரபஞ்சத்திலிருந்தாலும் எமது சூரிய குடும்பம் தான் எமக்கு முக்கியம். பிரபஞ்சத்தில் பூமியானது சிறுதுளி. சூரிய, சந்திர கிரகணங்கள், வால் நட்சத்திரம், எரிகல் மழை, இடி, மின்னல், அரோரா (Aurora) என்ற கனடாவின் வட, தென் விளக்கு என அழைக்கப்படும் மின் மண்டலத்தினால் தோன்றும் வானத்தில் வர்ணஜாலங்கள் - இயற்கை என்ற சித்திரக் கலைஞன் வானத்தில் பல வர்ணங்களைக் கொண்டு வரையப்பட்ட அரோரா. இவை ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞான ரீதியான விளக்கங்களுண்டு. அதே வானசாஸ்திரத்தில் கரை கண்ட இந்து மதவாதிகள் ஒவ்வொன்றின் மேலும் மூடநம்பிக்கைகள் வைத்திருந்தனர். வால் நட்சத்திரம் தோன்றினால் அரசனுக்கு அல்லது அரசாங்கத்துக்கு நல்லதல்ல என்பது மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல ஆசியநாடுகளிலும் உள்ள நம்பிக்கை. தொற்று நோய் பரவலாம் அல்லது, போர் ஆரம்பிக்கலாம் என்று மக்கள் நம்பினார்கள். அதே போல் சூரிய கிரகணம் ஏற்படும் தினத்தில் குழந்தை பிறந்தால் அதன் வாழ்க்கையானது இருண்டிருக்கும் என்பது ஒரு நம்பிக்கை. யேசுநாதர் பிறந்ததை கி.மு. 12ம் ஆண்டில் தோன்றிய ஹெய்லி வால்வெள்ளியோடு தொடர்பு படுத்தி பேசினார்கள். இதேபோல் ஹெரட் என்ற யூத மன்னனின் மறைவுக்கும் கி.மு. 4ம் நூற்றாண்டில் மார்ச் மாதம் தோன்றிய சந்திர கிரகணத்தையும் இணைத்துப் பேசினார்கள். ஏன் மகாபாரத யுத்தத்தையும் கிரகணத்தோடு தொடர்புபடுத்தி திகதியை குறித்தனர். அக்காலத்தில் வானத்தில் நடக்கும் நிகழ்வுகளை வைத்து உலகில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் நடந்த திகதிகளை கணித்தனர் முன்னோர். வால் நட்சத்திரத்தின் பாதை வளைந்திருப்பதற்கு ஈர்ப்பு விசையே காரணம். பனிக் கற்களைக் கொண்டதே வால்நட்சத்திரம். ஹெய்லி வால்நட்சத்திரம் 75 – 76 வருடங்களுக்கு ஒரு தடவை சொற்ப காலம் தோன்றி மறையும். இது பாதையில் வால் நடசத்திரம் சுற்றி வரும் காலத்தை குறிக்கும். 1986ம் ஆண்டு தோன்றிய ஹெய்லி வால்நட்சத்திரம் திரும்பவும் 2061ம் ஆண்டு தோன்றும். அதுவரை நீங்கள் உயிரோடு இருந்தால் பார்த்து இரசிக்கலாம். இவ்வால் நட்சத்திரமானது, தூசி, அமோனியா, கரியமிலவாயு ( $CO_2$) மற்றும் நீர் கொண்டது.

இவ்வாண்டு ஆகஸ்ட மாதத்தில். 12ம் திகதி முதல் 13ம் திகதி வரை வானத்திலிருந்து எரி மழை பொழிந்தது. சுமார் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 வரை எரிகற்கள் வாணவேடிக்கை போன்று காட்சிதந்தது. அக்காட்சியைப் பார்த்து இரசித்தவர் பலர். வான வேடிக்கையை பார்ப்பது போல் இரவு 10 மணிக்கு மேல் விழித்திருந்தனர். 2007, 2008 ஆண்டுகளில் தோன்றிய விண்கல் மழையை விட இவ்வருடம் பிரமாதமாக காட்சி தந்தது. காட்சியைப் பார்க்க அதுவும் வானம் இருண்டு இருக்கும் பொது பார்பதற்கு தெளிவாக இருக்கும். "வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்" என்ற பழைய பாடல் தான் என் நினைவுக்கு வந்தது. இக்காட்சி எப்போதும் தோன்றுவதில்லை. நல்லகாலம் முகில்கள் இல்லாது பருவநிலை காட்சிக்கு சாதகமாக அமைந்திருந்தது காட்சியைப் பார்த்து இரசிப்பதற்கு. இது ஒவ்வொரு வருடமும் நடக்கும் காட்சி. இதற்கு புராணத்தில் கரை கண்ட ஒரு கிழவி சொன்னாள் "இதென்ன அதிசயம்! சொர்க்கத்தில் தேவர்கள் இந்திரன் சபைக்கு வரும்போது பூமழை பொழிவதினால் ஒரு பகுதி பூமியை வந்தடைகிறது." என்று. சூரிய கிரகணத்தின் போது சூரியனை பாம்பு விழுங்குவதால் ஏற்படுகிறது என்ற மடைத்தனமான விளக்கம் சிலர் கொடுப்பது போல்.

மூடநம்பிக்கைகள் நிறைந்தது இந்துமதம். அது மட்டுமல்ல 1955ம் ஆண்டு நடந்த முழு சூரிய கிரகணத்தின் போது இலங்கையில் பலர், அவர்களால் தாம் அழகாக இருப்பதற்காக தயார்செய்த குடிபானம் ஒன்றை அருந்தி



மரணித்த சம்பவத்தை இன்றும் மறக்கமுடியாது. இதைபற்றி நகைச்சுவையான பாடலுமுண்டு.

எரிநட்சத்திரத்தைப் பார்ப்பது நல்லதல்ல. பார்த்தால ஐந்து பால் மரங்களை உடனே நினைவு கூரவேண்டும், அல்லாவிடில் தீய சம்பவம் வாழ்க்கையில் இடம்பெறும். வானத்தில் இடம் பெறும் சம்பவம் ஒவ்வொன்றுக்கும் மூடநம்பிக்கையில் ஊறிய நம் முதாதையர் விளக்கம் கொடுப்பார்கள். அது பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த விளக்கங்கள்.

சற்பறி (Sudbury) நகரம் ஒன்ராறியோவிலிருந்து வடக்கே சுமார் 350 கிமீ தூரத்தில் உள்ளது. அங்கு பல உலோகங்கள் காணப் படுகிறது. இது தோன்றுவதற்கு சுமார் 25 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியை வந்து தாக்கிய 15 மைல் நீளமும் 10 மைல் அகலமும் உள்ள எரிகல்லே காரணம் என்பது விஞ்ஞானிகள் விளக்கம். இத்தாக்கம் ஒரு பெரும் பள்ளத்தாக்கை சற்பறியில் உருவாக்கியது. அதன் விளைவே அப்பகுதியில் கோபால்ட், நிக்கல் போன்ற உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தோன்றிய பள்ளத்தாக்கின் பருமானம் 40x20 மைல்களாகும். இது போன்று உலகில் எரிகற்கல் தாக்கி பல பள்ளத்தாக்குகள் தோன்றியுள்ளன.

எரிகற்கள் ஏராளமாக சிறிதும் பெரிதுமாக வானத்தில் பயணம் செய்கின்றன. வானத்தில் பில்லியன் கணக்கில் தூசிகளும் கற்களும் ஏராளம். இவற்றில் சில வளிமண்டலத்தில் பயணம் செய்யும் போது உராய்வினால் பூமியை அடைய முன்னரே எரிந்து மறைந்து விடுகின்றன. சில உராய்வையும் மீறி பூமியை வந்து தாக்குகிறது. இவை சிறியதும் பெரியதுமாக இருக்கலாம். இதுவரை மனிதனை தாக்கியதாக கேள்விப்பட்டதில்லை. எங்கு தாக்குகிறது என்று சொல்வது கடினம். ஆங்கிலத்தில் Meteroide என்பது வேகமாக பயணம் செய்யும் அவ்வெரிகல்லைப் பொறுத்தது. சில சமயம் பூமிக்கு அருகே வந்து செல்லும். சிலவேளை கடலை அல்லது பூமியைத் தாக்கி சுனாமி என்ற பேரலையையோ அல்லது பூகம்பத்தையோ உருவாக்கி பாரதூரமான அழிவை உருவாக்கலாம். சற்று சிந்தித்து பாருங்கள். இலங்கை போன்ற தீவைத் தாக்கினால் நிலமை எப்படி என்று. லுமேரியா கண்டம் அழிந்தது போன்ற நிலை ஏற்படலாம் அல்லவா. இதனை மனிதன் உணருவதில்லை அதற்கிடையில் தான் பதவிக்கும் அதிகாரத்துக்கும் ஆசை.

பூமியில் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துவந்த பாலூட்டிகளான பிரமாண்டமான தோற்றமுள்ள டைனோசாஸ் (Dinosaurs) ஒரு நொடிப்பொழுதில் பிரமாண்டமான எரிகல் பூமியை தாக்கியதால் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இது வரலாறு. தாக்கியபகுதி மெக்சிக்கோவானாலும் பூமியின் பெரும் பகுதிளை பாதித்துள்ளது. பல நாட்கள் பூமி இருளால் சூழப்பட்டது. எங்கும் தூசிமயம். பூமியில் வாழ்ந்த பாதி உயிரினங்கள மறைந்தன. அணுவாயுதத்தால் போர் ஏற்பட்டால் பூமிக்கு இதே கதிதான். இந்த விளைவே அணுவாயுதங்களைப் பாவிப்பதை தவிர்த்து வாழ்கின்றன நாடுகள். ஜப்பானில் அணு குண்டு வீச்சால் ஏற்பட்ட அனுபவம் மனதை விட்டு அகலவில்லை. மிகவும் பெரிய எரிகல் பூமியை தாக்கினால் ஜப்பானில் ஏற்பட்ட தாக்கத்தை விட மிகப்பெரிய தாக்கமாக இருக்கும். எந்த ஒரு நாட்டின் அரசியல் சக்தியாலும் அதை தடுக்கமுடியாது. டைனோசோர்ஸ் அழிந்த பிரளயத்துக்கு பின்னரே படிப்படியாக மனித இனம் உருவாகியதாம். பூமியின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. சிறு தீவுகள் மறைந்தன, பல தோன்றின.

எமது சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய கிரகம் வியாழன். ஆனால் வானத்தில் பாதுகாப்பு குறைவாகையால் வியாழ சுகம் குறைவு. கிரகங்களை தாக்கும் எரிகற்கள் கிரகங்களுக்கு என்ன திசை நடக்கிறது என்று பார்த்து தாக்குவதில்லை. உருவம் பெரிதாகில் தாக்கும் சந்தர்ப்பம் அதிகம். அதுதான் வியாழ கிரகத்துக்கும் நடந்து The Shoemaker-Levy 9 என்ற வால் நட்சத்திரம் 20 சிறு துண்டுகளாக சிதறி வியாளனை 1994ம் ஆண்டு யூலை மாதம் தாக்கி கிரகத்தில் பெரும் வடுவை ஏற்படுத்தியது. இந்த காட்சியை ஐந்து நாட்களாக வான்வெளி ஆராய்ச்சியாளர்கள் அவதானித்தனர்.

வருடத்தில் சில நாட்களில் வானத்தில் எரி கற்கள் தோன்றுகிறது. இதனை எரி நடசத்திரப் பொழிவு என்பர். உண்மையில் நட்சத்திரங்களுக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது. பூமியானது வால் நட்சத்திரத்தால் தோற்றுவிக்கப்பட்ட தூசி நிறைந்த பாதையை கடக்கும்போது எரிகல் பொழிவைக் காணலாம். பூமியின் பாதையும் வால் வெள்ளியின் பாதையும் ஒன்றுக்கொன்று சரிந்திருப்பதால் பாதைகள் ஒருபக்கத்தில் வெட்டுகிறது. அந்த எரிகல் மழையால் மனிதன் ஒருவனாவது பாதிக்கப்பட்டு இறந்ததாக ஆதாரமில்லை. வளிமண்டலத்தை எரிகற்கள் பிரவேசிக்கும் போது அதன் வேகம் செக்கண்டுக்கு 60 முதல் 70 கிமீ வேகமாக இருக்கும். உயிர் பிழைக்கும் சிறு எரிகற்களின் வேகம், மணிக்கு சில கிமீ வேகமாக வளிமண்டல உராய்வினால் குறைந்து, பூமியை தாக்குகின்றன. எரிகற்களை பரிசோதித்ததில் அவை பனிக்கட்டியையும் இரும்பு போன்ற உலோகத்தையும் கொண்டவை என்பதை கண்டுபடித்தனர்.

சந்திரன் எரிகல்லின் தாக்குதலுக்கு விதிவிலக்கல்ல. மிகக் குறைந்தளவு வளிமண்டலமுள்ள சந்திரனில் எரிகற்கள் உராய்வினை சந்திப்பதில்லை ஆகவே பல எரிகற்கள் சந்திரனை தாக்குகின்றன. 2006ம் ஆண்டு மாாச் 2ம் திகதி பெரிய எரி கல்லானது மணித்தியாலத்துக்கு 86,000 கிமீ வேகத்தில் மோதியது. அந்த மோதலுக்கு நம் சாத்திரிமார் என்ன விளக்கம் கொடுத்தார்களோ தெரியாது.

இவ்வெரிகல் வானத்தில் பறக்கும் விமானத்தையும் தாக்கவல்லது. அதோடு வானத்தில் வெகு உயரத்தில் வான்வெளியில் இயங்கும் செய்மதியும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் எல்லாமே தாக்க நிகழ்வினை (Probability of Impact) பொறுத்தது. உதாரணத்துக்கு மரத்தின் கீழ் மழைக்காக ஒதுங்கி நிற்கும் மனிதன் ஒருவன் மின்னலால் தாக்கப்படுவது போன்று. இயற்கையில் எது எப்போது நடக்க வேண்டுமோ அது அப்போது நடந்தே தீரும், மரணத்தைப்போல்!

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

**Tution Classes**

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

1 to 1 or Group classes

**905-554-2496, 416-522-3314**

**HELP WANTED**

Scarborough, Ajax, Pickering, Whitby, Markham ...

பகுதிகளில் Delivery வேலைக்கு

(பகுதி நேர மற்றும் முழு நேரம்)

ஆட்கள் தேவை.

**647 892 5454**

# சிங்கள இனமும் சிங்கள மொழியும் அதன் வரிவடிவத் தோற்றமும்



முருகேசு பாக்கியநாதன்

## அறிமுகம்:

சிங்களம் இலங்கையில் பேசப்படும் பெரும்பான்மையின மொழியாகும். இம்மொழியின் ஆரம்ப காலத்தே சிங்கள மொழியினை ஹெலபாஷா என்று அழைத்தனர். இதனை அடியொற்றியே சிம் - ஹல என்ற பதம் தோன்றியது. பிற்காலத்தே மகாவம்சத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் சிங்கள இனம் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்ற ஐதீகத்தினால் சிங் என்று பாவிக்கத்தலைப்பட்டனர். ஹெல என்ற பாவனை எக்காலத்தே தோன்றியதென்பதனை நோக்கின் ஹெல என்ற பாவனை கி.பி 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஆரம்பகால மகாவம்சத்தில் இரண்டு முறையும் கி.பி 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சூளுவம்சத்தில் ஒரு முறையும் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையானது ஹெலதிவ என்ற பெயரையும் பெற்றிருந்தது. இதில் வழங்கப்படும் ஹெல என்பதற்கும் ஈழ என்ற சொல்லிற்கும் நிறைய தொடர்பு இருப்பதாகவே அறிய முடிகிறது. ஈழம் என்ற சொல் இன்று தமிழ்ஈழம் என்றே கற்பிதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஈழம் என்பது முழு இலங்கையினைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். கி.மு 2ஆம் நூற்றாண்டில் இருந்த முதற்சங்கத்தில் ஈழத்துப் பூதன் தேவனார் என்ற ஒரு ஈழத்துக் கவிஞர் முதற்சங்கத்தில் பங்குபற்றியதாகத் தகவல்கள் உண்டு. இவர் நக்கீரர் காலத்துப்புலவர் என்பது பசும்பூதப்பாண்டியன் என்பவரை நக்கீரர், பரணர் மற்றும் பூதன்தேவனார் ஆகியமூவரும் புகழ்ந்து பாடியுள்ளது இவர்கள் ஒரேகாலத்தவர்கள் என்பதனையே நிறுவுகின்றது. ஈழத்துப் பூதன்தேவனார் அவர்களது பாடல்கள் நற்றிணையில் 366வது பாடலும், குறுந்தொகையில் 189, 360ஆம் பாடல்களும், அகநானூற்றில் 88, 231, 307வது பாடல்களும் மேற்குறிப்பிட்ட சங்ககால இலக்கியங்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்தோடு சங்ககாலப் புலவர் உருத்திரங்கண்ணனார் அவர்கள் இயற்றிய பட்டினப்பாலை 191, 192 பாடல்வரிகளில் ஈழத்து உணவும், காளகத்து ஆக்கமும் அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி என்ற ஒரு பாடல்வரி காணப்படுகின்றது. இதிலிருந்து ஈழத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு உணவுப்பொருள் ஏற்றுமதியாகிய செய்தி கிடைக்கின்றது. ஆகவே ஈழம் என்ற பாவனை கி.மு 2ஆம் நூற்றாண்டிற்கு முன்பே பாவனையில் இருந்துள்ள செய்தி இங்கிருந்து கிடைக்கின்றது. ஆகவே ஈழம் என்ற சொல்லின் திரிபாகிய ஹெல இங்கிருந்தே திரிபுபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தே தமிழ்கூறு நல்லுலகில் ஐந்து மண்டலங்கள் இருந்துள்ளதாக வரலாறும் இலக்கியமும் கூறுகின்றன. அவையாவன சோழமண்டலம், சேரமண்டலம், பாண்டியமண்டலம், தொண்டைமண்டலம் மற்றயது ஈழமண்டலம் என்பதாகும். அடுத்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் அரசர்களின் பட்டியலில் ஈழநாகன் என்பவன் கி.பி 38–47 ஆண்டுவரை ஆட்சி செலுத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஹெல என்ற பாவனை வரமுன்பே ஈழம் என்று இலங்கைக்கு வழங்கிவந்த வரலாறு தெளிவாகப் புரிகின்றது. இதிலிருந்து சிங் - ஹல என்பது கூட சிங்-ஈழ என்ற பாவனையின் திரிபிலிருந்தே தோன்றியதாகக் கொள்ளமுடியும். இதில் சிங்க என்பது கூட கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின்பு வந்த மகாவம்சத்தின் தகவலில் இருந்தே தோன்றியதாகக் கொள்ளவேண்டும். ஆகவே சிங்கல என்ற பதம் கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின்பே பாவனைக்கு வந்துள்ளது. ஆகவே ஈழ என்பதே தமிழ்ப் பெயர்களை சிங்கள உச்சரிப்பிற்கேற்ப மாற்றியது போல ஹெல என்று மாற்றப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது.

## சரித்திர கால பின்னணி:

இலங்கையில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தே நாகர்கள், இயக்கர்கள் என்ற இரண்டு இனங்களுமே இலங்கையில் வாழ்ந்ததாக கிரேக்க மற்றும் இந்திய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நாகர்கள் நாகபாம்பினை வழிபட்ட பரம்பரையில் வந்தவர்களென்றும், இயக்கர்களையோ அன்றி நாகர்களையோ அமானுஷர்கள் என்றும், இயக்கர்கள் பேய் பிசாசுகளை வணங்குபவர்கள் என்றும் இவர்கள் அமானுஷர்கள் என்றும் குறிப்பிடுகின்றார்கள். இவர்களே இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்ததாக வரலாற்று மற்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மூல இராமாயணமாகிய வால்மீகி இராமாயணத்திலும் அதனை அடியொற்றிப் பிறந்த கம்பராமாயணத்திலும் அசுரர்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றது. இங்கு இலங்கையினை ஆண்ட சிவபக்தனாகிய இராவணனை அசுர இனத்தவனாகவே அங்கு பாத்திரப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இராமாயணத்தில் கையாளப்படும் பாத்திரங்கள் லங்காவில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றியோ அல்லது அங்கு வாழ்ந்த அமானுஷர்களைக் குறிப்பிடுகின்றதா என்பது ஆய்வுக்குரியதாகும். அத்தோடு தற்போது உள்ள இலங்கை என்றழைக்கப்படும் லங்காவினைத்தான் காவியத்தில் குறிப்பிடும் தளமாகக் குறிக்கின்றதா? இதில் குறிப்பிடப்படும் சேது அணை என்றழைக்கப்படும் மன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடைப்பட்ட மணல் திட்டுக்கள் இராமரால் படையெடுப்பிற்காக அமைக்கப்பட்டதா என்பனவற்றிற்கான விவாதத்திற்கு சாத்தியப்பாடான அறிவுபூர்வமான பதில்கள் கிடைக்காத நிலையில் நாசாவினால் வெளியிடப்பட்ட படங்களில் அடிப்படையிலும் இலங்கை இந்தியாவில் இருந்து பிரிந்தற்கான சான்றுகள் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் இலங்கையின் வடபகுதிக்கும் தென்இந்தியாவிற்கும் உள்ள தாவர வகைகள் மண் தன்மைகளின் ஒற்றுமை, பறவைகள் மிருகங்களின் ஒற்றுமை ஆகியனவும் இலங்கையும் இந்தியாவும் சேர்ந்திருந்ததனையே காட்டுகின்றது. அத்தோடு இராமர் அணையானது செயற்கையானது என்பற்கான சான்றுகள் எதுவுமே அங்கு காணப்படவில்லை. சேதுவை மேடுறுத்தி பாலம் அமைக்கப்பட்டிருந்தால் இடையே காணப்படும் மணல்திட்டுக்களியையே கற்பாறைகள் காணப்படவேண்டும். ஆனால் தலைமன்னாரிலோ அன்றி வேதாரணியத்தில் காணப்படும் மண்ணின் தன்மைகள் போலவே மணற்திட்டுக்களின் மணலும் காணப்படுவது அது இயற்கையாக அமைந்தது என்றும் அது ஒரே நிலபகுதியாக இருந்து பிரிந்தபகுதி என்பதேயாகும். ஆகவே தென்இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேயின மக்கள் தான் வாழ்ந்தார்கள் அவர்கள் ஒரே மொழியினைப் பேசிய தமிழர்களாகத்தான் இருக்கவேண்டுமேயொழிய வேறொருவருமாக இருக்கமுடியாது. மேலே குறிப்பிடப்படுவனவற்றினை ஒப்பீட்டிப்படையில் ஒப்புநோக்கி இலங்கையின் மூதாதையர் பற்றிய ஒரு முடிவனை ஓரளவு அறிய முடியும். அப்போது வாழ்ந்த இயக்கர், நாகர்களின் பரம்பரையினரே இன்று இலங்கையில் வாழும் தமிழர்களும் முன்பு தமிழர்களாகவிருந்து காலப்போக்கில் மாற்றம் பெற்ற சிங்களவருமாகும். அத்தோடு தென் இந்தியாவில் இன்றும் சில ஆதிக்குடிகள் நாகர்களாகவேயுள்ளனர். இலங்கையில் வாழும் மகியங்கணைக் காட்டுப் பகுதியில் வாழும் வேடர் இனத்தவர்களும் இந்த வகையிலேயே அடங்குவர்.

இலங்கையின் வரலாறு அமைவிடம் போன்றவற்றினைப் பின்நோக்கிப் பார்க்கும்போது குமரிக்கண்டம் என்ற லெமூறியாக் கண்டம் பற்றி விவாதிக்காமல் தவிர்க்க முடியாது. லெமூரியா இருந்த காலத்தே பாண்டியப் பேரரசே அங்கு கோலோச்சியதாகவும் அங்கு நாகர்களின் பரம்பரையினராகிய தமிழர்கள் வாழ்ந்து வந்ததாகவும், லெமூரியாவில் மீதமாகிய நிலப்பரப்புக்களே இலங்கை இந்தியா போன்ற நாடுகளாகும் என்று லெமூரியா பற்றி ஆராயும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதுபற்றிய விரிவான விளக்கத்தினை லெமூரியாக் கண்டம் என்ற எனது முந்திய கட்டுரைகளில் பார்வையிட முடியும்.

சென்ற மாதக் கட்டுரையில் குறிப்பிட்டது போல் சேர் கிரியேசன் என்னும் வெளிநாட்டறிஞர் தனது நூலாகிய Concise History of Ceylon (1961) என்னும் நூலில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழோ அன்றி அது சார்ந்த ஒரு மொழியோ பாவனையில் இருந்திருக்க வேண்டும் என்றும், இலங்கையில் புத்தசமயம் பரவியபின்பும் தொடர்ந்து விஜயனும் அவனோடு சேர்ந்த அவனது தோழர்களும் இலங்கைக்கு வந்து இலங்கைப் பெண்ணை மணம் முடித்து அங்கு வாழத் தொடங்கியதும் அவர்கள் இந்தியாவில் பாவித்த அந்த மொழியினைப் பேசியிருக்கலாம். அதன் பின்பே இலங்கையில் ஒரு பிறமொழிப் பாவனை ஒன்று பாவிக்கப்பட்டிருக்கும். ஆகவே கிரியேசன் அவர்களது கருத்தும் லெமூறியா பற்றிய கருதுகோளும் காவியங்களிலும் இதிகாசங்களிலும் குறிப்பிடப்படும் அசுரர், அமானுஷர் போன்ற கருத்துக்களும் அங்கு திராவிடர்களே ஆதிக்குடிகளாக வாழ்ந்துள்ளார்கள். அசுரர் மற்றும் அமானுஷர் போன்ற பதப்பிரயோகங்கள் ஆரிய இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன. திராவிடர்களை அசுரர்கள் என்றும் ஆரியர்கள் தேவர் வழிவந்தவர்களென்றும் அவர்கள் உயர்ந்தவர்களென்றும். அசுரர்கள் விகாரமான கரிய நிறம் உடையவர்களென்றும் கூறியள்ளார்கள். திராவிடர்களின் நிறம் கருமை என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இல்லை. இதன் காரணமாக தென்பகுதியில் பிறந்த கண்ணனின் நிறத்தினையே மகாபாரதத்தில் கருமை நிறமான பாத்திரப்படைப்பாக படைத்திருக்கிறார்கள் போலும். அதேபோல கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும், வடஆசியாவிலிருந்தும், துரானியாவிலிருந்தும் குடியேறியவர்களே ஆரியர் என்று அழைக்கப்படுகின்றனர் இவர்கள் சிவந்த மேனியர்களே. ஆனால் இலங்கையில் வாழ்வோர் யாவரும் சிவப்பு நிறம் அல்லாத கருமேனியர்களே. உடல் உறுப்புக்களின் தோற்றப்பாடும் உண்மையான ஆரியத் தோற்றமுடையாவர்களாகக் காணப்படவில்லை. தமிழர்களின் நிறமும் சிங்களரின் நிறமும் ஒன்றாகவேயுள்ளது. இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஆய்வின் பிரகாரம் இதுவரை ஆரிய மொழியென்று அறிப்பட்ட ஒரிய மொழியென்பது திரவிடத்திலிருந்து பிறந்தது என்ற முடிவிற்கு ஆய்வாளர்கள் வந்துள்ளார்கள். விஜயன் என்ற இளவரசன் கலிங்கம் என்று அழைக்கப்பட்ட இன்றைய ஒரிசாவில் இருந்தே துரத்தப்பெற்றவர்களாவர். எனது சென்ற மாத கட்டுரையில் வடஇந்தியாவில் இன்றும் வாழும் திராவிட மொழிகள்பற்றி விபரமாகத் தெரிவித்திருந்தேன். ஆகவே விஜயனின் பரம்பரையினர் திராவிடர்களாகத்தான் இருக்க முடியும். ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியா முழுவதுமாக திராவிடர்களே வாழ்ந்தார்கள். இதன் காரணமாக விஜயன் இலங்கைக்கு வந்து கி.மு 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த அதே இனத்தவர்களுடன் கலந்து வாழ்ந்ததில் எந்த வியப்பும் இல்லை. ஒரு சில ஆய்வாளர்கள் வியஜனின் பாத்திரமோ அன்றி விஜயனின் வருகையோ புனையப்பட்ட ஒன்றாகவே கருதுகின்றார்கள். விஜயனின் வருகைபற்றி ஒரு அறிவுபூர்வமான ஆதாரபூர்வமான எந்த ஆதாரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை மாறாக கி.பி 6ஆம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பெற்ற மகாவம்சத்தையே ஆதாரமகத் தெரிவிக்கின்றார்கள்.

> “ ஒரு மொழி தோன்றும்போது அதற்கு நிறைந்த சொல்வளம் இருந்தாலே அம்மொழியானது செழுமையானதாக வளர்ச்சியடைய முடியும். மேலும், அது வளர்ச்சியடைய அதற்கான வரிவடிவம் அத்தியாவசியமாகும். ”

## இலங்கைக்கு வழங்கிவந்த ஏனைய பெயர்கள்:

இலங்கைக்கு பின்வரும் பெயர்கள் வழக்கில் இருந்துள்ளன. ஈழம், ஈழத்தீவு, தம்பபன்னி, தாமிரபரணி, தப்பிரபேன், ஹெலதிவ, லம்க், லம்கா, சேரன்தீவு, செரன்டிவ, செரன்டிப், செரன்திப்பிட்டி, மணிபல்லவம், சீலோ, zeilo, Ceylon இறுதியாக தற்போது ஸ்ரீலங்கா என்று அழைக்கப்படுகின்றது. இதில் ஈழம் என்பதே முதலில் பாவிக்கப்பட்டிருக்க வேண்டும் இதன் பாவனை கி.மு 2ம் நூற்றாணடில் இருந்த முதற்சங்ககாலத்தில் இருந்ததனை முன்பு பார்த்தோம். மகாவம்சத்தில் குறிப்பிடும் பெயர்கள் கி.பி 6ம் நூற்றாண்டிற்குப் பின்பே தம்பன்னி என்ற பெயரே வழங்கிற்று ஆனால் இப்பெயரும் தாமிரபரணி என்ற தமிழ் பெயரே மருவி வந்தபெயராகும். விஜயன் மன்னார் மாவட்டத்திலுள்ள தம்பன்னியிலேயே வந்திறங்கியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. தீவு என்ற தமிழ் பெயர் டிவ என்றும் தீப என்றும் திரிபடைந்து பாவிக்கப்படுவதனை செரன்டிவ என்றும் நாகதீப (நயினாதீவு) என்றும் பாவிக்கப்படுவதகை அறியமுடிகிறது.

வரலாற்றின் ஆரம்பகாலத்தே தமிழர்கள் கிரேக்கர்களுடனும் ரோமர்களுடனும் வாணிபத் தொடர்பில் இருந்ததாக வரலாற்றுக் குறிப்புக்களும் சங்ககால இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலாபம் புத்தளம் மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து முத்து வணிகத்தில் அவர்கள் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கையினை Taprabane என்றழைத்தனர். அதனையே தமிழில் தாமிரபரணி என்றழைப்பர். இதனை பிற்காலத்தில் சிங்களத்தில் தம்பன்னி என்றே அழைத்தனர். தமிழ் நாட்டில் பன்னெடுங்காலமாக தாமிரபரணி என்ற ஒரு ஆறு திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடுகின்றது. இந்த ஆறுபற்றி சங்காலத்திலேயே குறிப்பிடப்படுகின்றது. இதனையே பொருணை ஆறு என்றும் அக்காலத்தே வழங்கினர். தாமிரபரணி மகாத்மியம் என்னும் ஒரு செய்யுட் தொகுதி கூட சங்ககலத்தே பாடப்பட்டுள்ளது. தாமிரம் என்பது செம்பு உலோகத்தினைக் குறிக்கும்

88ம் பக்கம் பார்க்க...




# CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

**கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!**



**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

இலவச ஆலோசனைகள்

**CALL: (416) 264 1272**

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

# CELL TEL MOBILITY

Cell Tel Mobility

For all your cellphone and accessory needs...

# 13th ANNIVERSARY SPECIAL !!!

**We sell new & used cellphones, Pagers and accessories for:**

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**
**VIRGIN MOBILE, KOODO MOBILE, SOLO MOBILE, MOBILICITY,**
**PUBLIC MOBILE, WIND MOBILE, CHATR WIRELESS.**



*Anniversary Sale*

**Geunine Leather Case**

From **$1.99**

Reg. $19.99

***Offer Valid between August 1st 2010 To August 31st 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.



*Anniversary Sale*

**Hands free**

From **$1.99**

Reg. $29.99

***Offer Valid between August 1st 2010 To August 31st 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.




*Anniversary Sale*

**Smart car charger**

From **$2.99**

Reg. $39.99

***Offer Valid between August 1st 2010 To August 31ser 2010.***
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.





- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light




**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***



| | | | |
|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East, | 5C - 2950 Birchmount Rd | 5A - 1162 Morningside Ave | NEW LOCATION 49 - 45 Karachi Dr |
| Eglinton Ave/Midland Rd | Birchmount / Finch Ave | Morningside Ave/ Sheppard Ave | Markham Rd / 14 th Avenue |
| 416.266.6818 | 416.495.7776 | 416.281.2355 | 905.201.4859 |

# இன்பம் எங்கே?

'இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு அது எங்கிருந்தபோதும் அதை நாடி ஒடு'

இது பல வருடங்களுக்கு முன் நான் கேட்ட ஒரு அருமையான சினிமாப்பாடல். அதற்கு விடை இப்போதான் எனக்கு கிடைத்தது. மின் கணினி உடாக நெருங்கிய நண்பர் இந்த தகவலை எனக்குத் தந்தார். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

நாம் இளமையில் எண்னுவதுண்டு வளர்ந்து வேலையில் சேர்ந்து, திருமணமாகி, இரண்டு பிள்ளை பெற்றுவிட்டல் வாழ்க்கை இனிமை யாக இன்பமயமாக அமையும் என்று.

பிள்ளை குழந்தையாக இருக்கும் வேளை எண்னுவதுண்டு அவர்கள் வளர்ந்து விட்டால் பின் ஆறுதலாக இனிமையாக இருக்கலாம் என்று. அவர்கள் வளர்ந்து வாலிபமிடுக்கேறும் வேளையில் செய்யும் துடுக்கில் அவலப்பட்டு எப்போ அவர்கள் சுயமாக தம் காலில் நிற்பார்கள் என்று எண்னுவதுண்டு. பொறுப்புகள் ஒன்று மில்லாமல் வசதியாக வக்கேசன் எடுத்து இன்பமாக காலப்பொழுதை கழிக்கலாம் என்ற ஆவலோடு அந்த நாட்களை நோக்கி பயனத்தைத் தொடர்வோம்.

உண்மையில், இன்பமாய் இருப்பதற்கு உரிய நேரம் எப்போதாவது வருவதல்ல, இப்போ உள்ள நிமிடமே சிறந்தது. வாழ்க்கை என்பது ஒரு தொடர்ச்சியான போராட்டமே. அதை ஏற்றுக் கொண்டு அதில் மகிழ்ச்சியாக இருப்பது தான் இன்பமான வாழ்க்கை. நெடுங்காலமாக வாழ்க்கை ஆரம்பிக்கப்போகிறது என்று காத்திருக்கிறோம். ஆனால் அங்கு இன்பத்திற்கு ஒரு தடை இருந்த வண்ணம் தான் இருக்கும். ஒரு பிரட்சினைக்கு முகம் கொடுக்கவேண்டி இருக்கும். ஏதவாது ஒரு கருமம் செய்து முடிக்கவேடியிருக்கும். ஒன்றும் இல்லை எனும்வேளை, ஒரு பில் கட்டவேண்டி இருக்கும். ஆகக் குறைந்தது ஒரு மோட்கேஜ் கட்டவேடியிருக்கும். இவையாவும் முடிந்தவுடன் வாழ்க்கை மகிழ்ச்சியாக ஆரம்பிக்குமென்றால் அது இலவு காத்த கிளியின் கதையாக ஏமாற்றத்தில் தான் முடியும். தடைகள் தான் வாழ்க்கை என்பதை மனிதர் அறிந்து அத் தடைக்கற்களை படிக்கற்களா மாற்றுவது தான் வாழ்க்கை என 'படையப்பா' படத்தில் ஒரு அருமையான பாடல்.

எனவே இன்பத்தை நோக்கி ஒரு பாதை இல்லை பயனிப்பதற்கு, இன்பம் தான் பதையாகும். எனவே ஒவ்வொரு வினாடியையும் அனுபவிக்கப் பழகுங்கள். படிப்பு முடியும் வரை காத்திருக்கவேண்டாம். பாடசாலை தொடங்கும் வரை காத்திருக்கவோண்டாம். எடையில் பத்து இறாத்தால் குறைவதற்கோ கூடுவதற்கோ காத்திருக்க வேண்டாம். வேலையில் சேரும் வரை காத்திருக்க வேண்டாம். திருமணமாகும் வரை காத்திருக்கவேண்டாம். வெள்ளி மாலைவரை காத்திருக்கவேண்டாம் அல்லது ஞாயிறு காலைவரை காத்திருக்க வேண்டாம். புதுக்கார் வாங்கும் வரையல்லது வீட்டு மோட்கேஜ் கட்டி முடியும் வரை நிற்க வேண்டாம். துளிர்காலம் வரட்டும், கோடை

காலம் வரட்டும், இலையுதிர்காலம் வரட்டும் முதலாம் திகதி வரட்டும், முப்பதாம் திகதி வரட்டும் என்று எல்லாம் இன்பத்திற்கு காலக் கெடுவைக்க வேண்டாம். அருகில் இருக்கும் நீர்த்தடாகத்தை விட்டு தொடுவானத்தில் தெரியும் கானல் நீரை நோக்கிய புள்ளி மானாக ஒடுவது மடமை.

மகிழ்ச்சி ஒரு இலக்கு அல்ல மகிழ்ச்சி ஒரு பயணம். அந்தப் பயணத்தை அனுபவிக்க தெரியாதவர்கள் முட்டாள்கள்!!

## கீழே உள்ள கேள்விகளுக்கு பதில் தெரியுமா?

- உலகில் மிகப்பெரிய பணக்காரர்கள் ஐவர் யார்?
- உலகின் கடைசி ஐந்து அழகு இராணிகள் யார்?
- கடைசி பத்து நோபல் பரிசு பெற்றவர்கள் யார்?
- உலகில் ஒஸ்கர் பரிசு பெற்ற பத்து நடிகர்கள் யார்?
- உலகில் ஒஸ்கர் பரிசு பெற்ற பத்து நடிகைகள் பெயர் என்ன?

உங்களுக்குத் தெரியாதா? கேள்விகள் கடினமாக இருக்கிறதா? கவலையை விடுங்கள். எனக்கும் தெரியாது தெரியவேண்டியதுமில்லை. கரகோசங்களும் பொன்னாடைகளும் பூச்செண்டுகளும் மறைந்துவிடும். வெற்றி வீரர் களை காலப்போக்கில் மறந்துவிடும் உலகம்.

## இனி இங்கேயுள்ள கேள்விகளுக்குப் பதில் தெரியுமா? என்று பார்ப்போம்.

- உங்களுக்க கற்பித்த ஆசிரியர்களில் சிறந்த மூவர் பெயர்?
- உங்களுக்கு துன்பம் வந்த வேளையில் தோள்கொடுத்த மூன்று நன்பர் பெயர்?
- உங்களை மதித்து உற்சாகப்படுத்திய மூவர்பெயர்கள்?
- நீங்கள் நேரத்தை செலவு செய்யவிரும்பும் மூவர் பெயர்?
- நீங்கள் சென்று பார்க்க விரும்பும் மூன்று இடங்கள்?

எழிதாக பதில் கூறக்கூடியதாய் இருக்கிறதல்லவா? உங்கள் வாழ்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் உலக விருது பெற்றிருக்காமலிருக்கலாம், உலகத்தில் பெரும் பணக்கரராய் இல்லாதிருக்கலாம், ஆனால் அவர்கள் உங்களில் அக்கறை உள்ளவர்கள். உங்கள் நலத்தை விருப்புகிறவர்கள். அவர்களை மறக்காமல் அவர்கள் அருகில் இருங்கள் மகிழ்சி பெருகும்.

வாழ்க்கை மிகக் குறுகியது. இந்த வாழ்க்கையில் உலகப்புகழ் பெற்றவராய் நீங்கள் இல்லாதிருக்கலாம். அனால் உங்களைச் சுற்றி அன்புள்ளவர்களால் சூழப்பட்டு இருந்தால் அது தான் மகிழ்ச்சி அதுதான் இன்பம்.
இங்கு நான் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரும் புலவர் பிசிராந்தையார் பாடல் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் முதுமையிலும் இளமையாக மகிழ்ச்சியாக இருப்பதை கண்டு வியந்து, கேட்ட வினாவுக்கு விடையாக பாடியபாடல் புறநானுறு எனும் சங்க இலக்கியத்தில் 191வது பாடலாக இடம் பெற்றுள்ளது. முதலில் பாடலைத் தந்து பின் விளக்கத்தைத் தருவேன்.

*"யாண்டுபல வாக நறையில வாகுதல்*
*யாங்கா கியரென வினவுதி ராயின்*
*மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்*
*யான் கண் டனையரென் னிளையாரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கு மதன்றலை*
*ஆன்றவிந்த தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழுமூரே."*

இப்பாடலின் பொருள்; உமக்கு ஆண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படி

## குமார் புனிதவேல் பக்கம்

ஆயினீரென கேட்பீராயின் என்னுடைய மாட்சிமைப் பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பியவராயிருந்தனர். நான் எண்ணியதையே எனது ஏவலரும் செய்பவர்கள். அரசனும் முறையல்லாததை செய்யாமல் காப்பவன். அது மட்டுமல்லாமல் நான் இருக்கும் ஊரில் நற்குணங்களால் கூடிய சான்றோர் மலிந்துள்ளனர், என்கிறார்.


எனவே மகிழச்சியாக வாழ்வதற்கு நேரம் பார்த்துக்கொண்டு இருக்காமல் இந்த கணப் பொழுதை பயனுடையதாக வாழப்பழகிக் கொள்வதவசியம்.

மகிழச்சி பயணமன்றி இலக்கு அல்ல. உங்களை சுற்றி அன்புடையவரை வைத்துக் கொண்டு அன்பு செலுத்துவது தான் வாழ்க்கை. இதை சொல்லும் வேளை ஐம்பது வருடங்களுக்கு முன் நான் பார்த்த படத்தின் கதைவசனம் ஞாபத்திற்கு வருகிறது. அதற்கு கதை வசனம் எழுதியவர் கலைஞர் கருணாநிதி படம் பராசக்தி அந்த வசனம்.

"அவள் ஒடினாள் ஒடினாள் வாழ்க்கையின் எல்லைக்கே ஒடினாள். அவள் ஒட்டத்தை தடுத்திருக்கவேண்டும் வாட்டத்தை போக்கி இருக்கவேண்டும் இந்த சட்டத்தை மீட்டும் அரசாங்கம்" இங்கு நாங்களும் மகிழ்ச்சியை நோக்கி வாழ்க்கையின் அந்தத்திற்கே ஒடாமல் மகிழ்ச்சியாக வாழப்பழகிக்கொள்வோம்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■



தாய்வீட்டிற்காக கருத்தோவியம் சிவ.மாமுனி ©2010

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

**வர்த்தகச்சாவடிகள், இன்னிசை, விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், நடனம், போட்டி நிகழ்ச்சிகள், நாடகம், நகைச்சுவை, சிலம்பாட்டம், தற்பாதுகாப்புக்கலை, இன்னும் பல மூன்று தினங்களும் மாறுபட்ட நிகழ்வுடன்**

# பல்லிசை வர்த்தகப் பெருவிழா

## நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பின் 13வது ஆண்டு விழாவும்

பல்லிசை வர்த்தகப் பெருவிழாவினை ஒட்டி 50 ஆயிரம் சதுர அடியில் 100 வர்த்தக நிலையங்கள் அமையவிருக்கின்றன.
பல்வேறு வர்த்தகநிலையங்கள் வழங்கும் மாபெரும் தீபாவளி சிறப்பு விற்பனையில் கலந்து கொள்ள வாருங்கள்!!!

## October 09, 10, 11 சனி, ஞாயிறு, திங்கள்

**Thanksgiving Holiday Long Weekend**

## 1510 Birchmount Road, Scarborough, ON. (Birchmount & Ellesmere)

**(மேருபுரம் ஸ்ரீ மகா பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)**

பல்லிசை வர்த்தகப் பெருவிழாவை சிறப்பிக்க இந்தியாவிலிருந்து கிளாரிநெட் எவரெஸ்ட் திரு. A.K.C. நடராஜன், கலைஞான இமாஜினரி பிரின்ஸ் கலைமாமணி நாதஸ்வர வித்துவான் மன்னார்குடி M.S.K. சங்கரநாராயணன், இசை மாமுரசு, கலைமாமணி மன்னார்குடி M.R. வாசுதேவன் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.



இதில் வர்த்தக நிலையங்களை அமைக்க விரும்புவோர் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

## நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு

**416.724.2502 / 416.420.1309**

**ntm97@yahoo.com www.nathaswarathavil.org**

## பேச்சுப் பல்லக்கு - 2

# நாமே மூலமும் முதலும்

பெருமை பேசப்போய் நம்மை நாமே அவமானப்படுத்திக் கொள்ளும் வறட்டுத்தனத்திற்கு வாத்தியார் கதை வந்தது. யதார்த்தம் புரியாத வறட்டுத் தனமானது நம்மிடம் தங்கியிருப்பதற்கான தளம் நம்மிடமிருக்கிறது. நாமே உலகின் மூலமும் முதலும் என்று நம்மிடம் சந்ததி சந்ததியாக சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது. புகழ்க்குழிக்குள் விழுந்து மயங்கும் நாமோ மற்றவரை முட்டாள் என்று எண்ணிக் கொண்டு புழுக ஆரம்பித்து விடுவோம் நம்மை நாமே புகழ்ந்து பாட நமக்கு யாரும் கற்றுத் தரத் தேவையில்லை.

பாணனுக்கு பரிசாக வழங்கிய மணற்றிடர் தான் யாழ்ப்பாணம் என்ற பதிவு நம்மைக் கடந்து போய் பாரிஸ் நகரத்தையும் விட்டு வைக்கவில்லை. உங்களுக்கு ஞாபகமிருக்குமென்று நினைக்கிறேன். அந்தக் காலத்துத் தேர்தல் கூட்டங்களில் பேசுவார்கள். "பரிசாகக் கொடுக்கப்பட்டபடியினால்தான் 'பரிசு' நகரம் என்ற பெயர் நாளாவட்டத்தில் 'பாரிஸ்' (Paris) என்று வந்தது"

"சின்ன சின்ன மனிதர் வாழுவதால் தான் சீனா என்று பெயர் வந்தது" இவ்வாறு பல பேசி, "உலகுக்கெல்லாம் பெயர் வைத்தவர்கள் நாங்கள். அப்படியிருக்க இந்த 'நண்டுக்கால்சிங்களம்' பேசுகிறவர்கள் வந்து நமது ஊருக்கே பெயர் வைக்க முடியுமா? என்று பேசப் பேச நாங்களும் கைமுழக்கம் போட்டுப் போட்டுக் கலைந்து போய் 'வோட்'டை அள்ளிப் போட்டவர்கள் தான். இவ்வாசு சொற்கோட்டை கட்டியே வரலாறு வாசித்த உதாரணங்கள் நிறைய உண்டு. அவற்றைத் திரும்ப எழுதி அலுப்பூட்டத் தேவையில்லை.

கட்டுமரம் என்ற சொல் ஏறத்தாழ அதே உச்சரிப்பு வரும் விதத்தில் அதே பொருளுக்கு இன்னொரு மொழியில் சொல்லப்படுகிறது என்றால் எங்களிடமிருந்து தான் கட்டுமரம் அவர்களுக்குக் காட்டப்பட்டிருக்கிறது என்று சொல்வதில் தவறில்லை. என்றாலும், வேறு வளங்களின் வருவாயைக் கொட்டி அவர்களிடமிருந்து கப்பல் வாங்கி வைத்து ஒட்டிக் கொண்டு அவர்களுக்குக் கட்டுமரம் காட்டியதே நாங்கள் தான் எங்களிடமிருந்து தான் அவர்கள் கடலோடவே கற்றுக் கொண்டார்கள் என்று பிதற்றுவதுதான் எங்கேயோ இடிக்கிறது.

'மொழி முறிச்சான்' வித்தை ஒன்று இருக்கிறது தெரியுமா? அதென்ன 'மொழி முறிச்சான்' வித்தை என்று யோசிக்கத் தோன்றுகின்றதா? இப்படி ஒரு காய்ச்சல் இருக்கிறது என்று தான் எல்லாருக்கும் தெரியும். ஆனால் இந்த வித்தை எங்களுக்கே உரித்தான ஒன்று. எல்லாம் எங்கள் மூலமாகவே வந்தது என்று இருக்கும் போது அதையெல்லாம் விட முடியுமோ? என்று கேட்கிறார்கள் என்று சொன்னேன் அல்லவா. அதற்கு வலுச் சேர்க்கும் வித்தை. சொற்களை உடைத்துப் பிரித்துக் கருத்துக் கொடுப்பது அல்லது எதையாவது முண்டு கொடுத்து புது வியாக்கியானம் கொடுப்பது.

முந்தி எங்களது பண்டிதர் ஒருவர் 'பென்சன்' எடுத்து அரசியலுக்கு வருமுன்னர் மொழி பெயர்ப்புத் திணைக்களத்தில் வேலை செய்தவராம். அப்போது வெளியிடப்பட்ட ஒரு புவியியல் புத்தகத்தை எழுதியவர் பெயர் Dudly Stamp. அது பெயர்தான் என்றாலும் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் போது இலக்கண சுத்தமாக எழுத வேண்டுமென்று "இடட்டிலித் தாம்பு" என்று எழுதினவர்களாம்.

ஒருமுறை Tutorial college என்பதை எப்படித் தமிழில் சொல்லலாம் என்று ஒரு உரையாடல் வரும்போது பரீட்சையில் தோற்றவர்கள் தான் ரியூட்டரிக்குப் போகிறவர்கள் எனவே ரியூட்டோரியல் கொலிச் என்பதை தோற்றோரியல் கல்லூரி என்று சொல்லலாம் என்று எங்களது முதல்வர் ஒருவர் கருத்துச் சொன்னவராம். நல்லவேளை நடைமுறைக்கு வரவில்லை வந்திருந்தால் வெட்கத்தில் ஒருவரும் 'ரியூட்டரி'க்குப் போயிருக்க மாட்டார்கள்.

படித்த வாலிபர் திட்டங்கள் உபஉணவுப் பயிர்ச் செய்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட காலத்தில் நடுத்தர வகுப்புக் குடும்பங்களிலிருந்து வந்த வாலிபர்களும் பலர் வந்தனர். அவர்களுக்கு அனேகமாக வீடுகளிலிருந்து பணம் கிடைக்கும் அப்படியொருவர் பணம் கிடைத்ததும் "ஐயாயிரம் மிளகாயக் கன்றுகள் நடப்பட்டன" என்று வீட்டுக்குக் கடிதமும் எழுதிவிட்டார். வீட்டுக்



காரர் வந்தபோது தோட்டம் வெறுமையாக இருந்தது. என்னவென்று கேட்டபோது "அது தான்" நடப்பட்டன என்று முன்னமே எழுதினனான் தானே என்றாராம்.

இப்படி நிறைய இருந்தாலும் தெரியாமல் நடந்த ஒரு மொழி முறிப்பு வேடிக்கை நினைவுக்கு வருகிறது. ஒரு கூத்துக்கு வசனக் கொப்பி எழுதிக்கொடுத்த ஒருவர் 'பீமசேனன் மரத்தைப் பிடுங்கினானே' என்பதை எழுதும் பொது 'பீமசேனன் மரத்தைப்பி' என்பதோடு முதல் வரியை முடித்து 'டுங்கினானே' என்று அடுத்த வரியில் எழுதிக் கொடுத்துவிட்டார். நடிக்க இருந்தவரும் நன்றாகப் பாடமாக்கிவிட்டார் ஒன்றிரண்டு ஒத்திகையோடு கூத்தும் மேடையேற்றப்பட்டது. இறுதியாக மேடையில் ஒத்திகையில் சொல்லிக் கொடுத்ததையும் மறந்து.

*"பீமசேனன் மரத்தைப்பி*
*டுங்கினானே டுங்கினானே*
*டுங்கினானே டுங்கினானே"*

என்று இழுத்துப் பாடி முடித்துவிட்டார்.

ஒரு நாள் வானொலியில் ஒரு நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. தற்செயலாகக் கேட்டபடியால் பேசியவரின் பெயரைக் கவனிக்க முடியவில்லை. 'தொழுவம்' என்ற சொல்லை தொழுவம் தொழுவம் என்று குறைத்துக் கணிக்கக்கூடாதாம். கண்ணன் வளர்ந்த இடம் யேசு பிறந்த இடம் என்றெல்லாம் சொல்லி 'தொழுவதற்குரிய இடம்' என்ற படியால் தான் தொழுவம் என்ற சொல்லு வந்ததென்று சொன்னார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருதர்.

*"கோகுலத்துப் பசுக்களெல்லாம்*
*கோபாலன் பேரைக் கேட்டு*
*நாலு படி பால் கறக்குது ராமாயி"*

*"பெத்தலகேம் நகரில்*
*மாட்டுத் தொழுவமதில்*
*பிறந்தார் பரமபிதா"*


என்ற பாட்டுகளையும் சொல்லி இது பெரிய விசயங்கள் எல்லாம் நடந்த இடம் ஆனபடியால் தொழுவோம் தொழுவோம் என்று சொல்லச் சொல்ல அது தொழுவம் என்று மருவிவிட்டது என்றார்.

இப்படியெல்லாம் சொல்ல வசதியிருக்கிற படியால் தானே மணலில் கயிறு திரிக்கிறதென்ற வசனமும் நம்மிடம் புழக்கத்திலிருக்கிறது. இடையில் ஒருவர் இதையெல்லாம் விட்டு விட்டு தேவகுமாரனைப் பரமபிதா என்று சொல்லியிருக்கு இது பிழையான வாசகம் என்றார். இதில் வாயைக் கொடுத்தால் சரிப்பட்டு வராது என்று எண்ணி இதையெல்லாம் 'பல்லக்கில்' ஏற்றக்கூடாது விண்ணகப் பிரச்சனைதானே 'ரொக்கட்டில்' ஏற்றுங்கள் என்று கூறி அகல முயன்றேன்.

சில பேருக்கு இதுவே வேலையாகிவிட்டது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டாவது அங்க தொட்டு இங்க தொட்டு எல்லோருக்கும் கடவுளின் ராஜ்ஜியம் காட்டியே தீருவேன் என்று நிற்பார்கள். ஒருவாறு அவரிடமிருந்து விலக இன்னொருவர், நான் ஒரு விசயம் சொலறேன் கேளுங்கோ என்று வந்தார். தோசை என்ற பெயர் எப்படி வந்தது வந்தது தெரியுமோ? 'தோ' என்றால் ஹிந்தியில் இரண்டு என்று அர்த்தம். தோசையை ஊற்றும் போதும் புரட்டும் போதும் 'சை' என்று சத்தம் வருவதால் தோசை என்று வந்தது என்றார். இவர் ஹிந்திக்கும் மொழி முறிக்கிறாரோ என்று பார்த்தால் இது இதையெல்லாம் கடந்த 'கடி'.

பொதுவாக காற்றிலே கரைந்து போகும் என்று நினைத்துக் கொண்டுதான் அனேகமான மேடைப் பேச்சுகளில் இந்த மொழி முறிச்சான் வித்தையை விட்டுக் காட்டுவார்கள். ஆனால் இப்போதெல்லாம் அச்சிலேயும் பதிவுகளிலும் போட்டு ஆதாரங்களாயும் காட்ட முயற்சிக்கிறார்கள்.

சி.சண்முகநாதன்



மேற்கு நாட்டவரின் குடியேற்றவாத ஆக்கிரமிப்பின் ஆரம்ப காலங்களில் குலத்தலைவர்கள், குறு நிலத்தலைவர்கள் எதிர்த்தார்கள். சண்டையிட்டார்கள். இறந்தார்கள். இவர்களை நினைவு கூர்ந்து முன்னுதாரணம் காட்டுவது அவசியம் அதற்காக அவர்களை.

*"பாயும் புலி நிகர்ந்த*
*தண்டமிழர் செல்வன்*
*தருக்குற்ற வெள்ளையரைத்*
*துண்டாடிவிட்டவன்"*

என்றெல்லாம் சொல்லி இலக்கியம் படைத்து விட்டு பின்னர் அவர்களை மாமன்னராகவும் அவர்களது நிலங்களை சாம்ராஜ்ஜியமாகவும் வரலாறாகக் காட்ட முனைந்தால் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்களா? அல்லது நமக்கே அபத்தமாகப் படுவதில்லையா?


நீங்கள் சங்கிலியன் நாடகம் பார்த்திருக்கிறீர்களா அதில் போத்துக்கீச சிப்பாய்கள் இருவர் வரும் காட்சி ஒன்றில்

*சிஞ்சோர்:* என்ன பிடிக்கிறாய் அந்தோனி?
*அந்தோனி:* எலி பிடிக்கிறன் சிஞ்சோரே!
*சிஞ்சோர்:* பொத்திப் பொத்திப் புடி அந்தோனி!
*அந்தோனி:* பூறிக் கொண்டோடுது சிஞ்சோரே!

பல்லக்கு போகும்.

sanmuganathan.s@thaiveedu.com

■ ■ ■



# புதிய இசை வகுப்புகள் ஆரம்பம்

Scarborough.North york . Markham. Mississauga.Brampton



**Vocal . Violin . Veena . Mridangam . Tabla**

**Piano . Keyboard . Guitar . Drums . Dance**

Learn from international performers, and talented graduate teachers in our studio

## Varnam School Of Music

**Call-: Ram (VarnaRameswaran) 647-893-4010**

www.varnamonline.com / www.viafa.net

**416.265.8884**

# இரண்டு தாய்கள்

ப்பிஷும் சாஹ்னி

ஆங்கிலம் ஊடாகத் தமிழில் - என்.கே. மகாலிங்கம்



(ப்பிஷும் சாஹ்னி (1915-2003) ஹிந்தி எழுத்தாளர்களில் மிகப் பிரபல்யமானவர். அவர் நாடகாசிரியர், தொலைப்பட எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், நடிகர். முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலாளர். அத்துடன் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர். ராவல்பிண்டியில் பிறந்த இவரும் இவரது குடும்பமும் இந்தியப் பிரிவினையில் பாதிக்கப்பட்டு டில்லியில் குடியேறியது. பிரிவினை பற்றிய அவரது 'தமஸ்' -இருட்டு- என்ற நாவல் மிக முக்கியமானதுடன் அது தொலைக்காட்சிப் படமாகப் பலரையும் கவர்ந்ததொன்று. பொது மக்கள் பிரச்சினையை ஆற்றலுடன் கையாண்டவர் இவர் என்று சொல்லப்படுகிறது. பத்மபூஷன், தேசிய அகெடெமி விருதும் பெற்றவர்.)

15 வது டவுன் புகைவண்டி இன்னும் சில நிமிடங்களில் வெளிக்கிட்டு விடும். வழியிலுள்ள பச்சை விளக்கு தெரிகிறது. சமிக்ஞை விழுந்திருந்தது. பயணிகள் அனைவரும் பயணத்துக்கு ஆயத்தமாக தம் பெட்டிகளில் இருந்தனர். ஆனால் கிழிந்த உடைகளில் இருந்த இரண்டு பெண்கள் பிளாட்பாரத்தில் சடுதியாக இழுபறிப் பட்டார்கள். ஒரு பெண் மற்றப் பெண்ணிடமிருந்த ஒரு குழந்தையைப் பிடுங்க முயன்றாள். மற்றவள் ஒரு கையால் குழந்தையை தன் நெஞ்சுடன் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள். அடுத்தவள், மற்றவளை தடுக்க முயன்று கொண்டு ரெயினில் ஏறிக் கொண்டிருந்தாள்.

"என்னை விடு. யமன் உன்னை விழுங்குவானாக. என்னை விடு. ரெயின் வெளிக்கிட்டுது."

"குழந்தையை விட மாட்டேன். குழந்தையை விடுவதிலும் பார்க்க நான் செத்துப் போவேன்..." திரும்பவும், அந்தப் பெண் குழந்தையை அவளிடமிருந்து இழுக்க முயன்றாள்.

சில நிமிடங்களுக்கு முன், இரண்டு பெண்களும், சிநேகமாகக் கதைத்துக் கொண்டு ஒன்றாகவே நின்றார்கள். இப்பொழுது பறித்துக் கொண்டும், பற்றி இழுத்துக் கொண்டும் நிற்கிறார்கள். பார்த்துக் கொண்டிருந்தோர் திகைத்துப் போனார்கள். வேடிக்கைப் பார்ப்போர் குவிய ஆரம்பித்தார்கள். புகையிரத மேடையில் நின்ற பொலிஸ்காரன் தண்ணீர் குழாயில் நீர் குடித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் அங்கு தன் பிரம்பைச் சுழற்றிக் கொண்டு வந்தார்.

'என்ன விஷயம்? எதற்காக இந்த சலசலப்பு?' அதிகாரத்துடன் கேட்டார்.

பெண்கள் இருவரும் சண்டை பிடிப்பதை நிறுத்தினார்கள். மூச்சுத் திணற, இருவரும் ஒருவரை ஒருவர் பிடித்துத் தின்னும் மிருகங்களைப் போல நின்றார்கள்.

இப்பொழுது இழுபறிக் காட்சி முடிந்து விட்டது. ஒருவரோ இருவரோ திரும்பவும் புகையிரதத்தில் ஏறினார்கள். குழந்தையை வைத்திருந்த பெண் அவர்களுடன் அதில் தானும் ஏற முயன்று கொண்டிருக்கையில் மற்றவள் அவளின்மேல் பாய்ந்து அவளை பிளாட்பாரத்திற்கு இழுத்தாள். மெலிந்த, கறுப்பான, கை கால்கள் தொங்கும் குழந்தை அவளின் தோளில் தன் தலையை வைத்து இன்னும் நித்திரை கொண்டிருந்தது. பெண்கள் இழுபறிப் பட்டுக் கொண்டிருக்கும்போது கூட, அதனுடைய மெல்லிய கழுத்து அங்காலும் இங்காலும் ஆடினதே தவிர, அது விழித்துக் கொள்ளவில்லை.

'இந்த அமளி துமளியை விட்டிற்று, என்ன விஷயம் என்று எனக்குச் சொல்லுங்க.' பொலிஸ்காரர் தன் பிரம்பை இரண்டு பெண்களையும் விலக்குவதற்காக அவர்களுக்கு இடையில் நுழைத்துக் கொண்டு சத்தம் போட்டார்.

'ரெயின் போகப் போகிறது, எளியவளே என்னை விடு!' குழந்தையைத் தூக்கிக் கொண்டிருந்தவள் கத்திக் கொண்டு, தன் புகையிரதப் பெட்டியை நோக்கி ஓடினாள். அவளுடைய வழியைப் பொலிஸ்காரன் தடுத்தான்.

'அவளுடைய குழந்தையை ஏன் தூக்கிக் கொண்டு போகிறாய்?' அவன் சீறினான்.

'குழந்தை அவளுடையதல்ல. அது என்னுடையது.'

'ஆனால் அவள் சொல்கிறாள், குழந்தை தன்னுடையதென்று. உண்மையைச் சொல்லு. யாருடைய பிள்ளை இது?'

'என்னுடையது' இரண்டாவது பெண் சொன்னாள். அவள் இருவரிலும் இளையவள். திடீரென வெடித்து அழுதாள்.

'அவளின் வெப்பமேறிய முகம் முரட்டுத்தனமாக, கலைந்த மயிர்களுடாகப் பிரகாசித்தது. கண்கள் பயத்தினால் முனைப்படைந்திருந்தன. பரபரப்புடன், மூச்சுத் திணறிக் கொண்டு, திரும்பவும் குழந்தையை பறிக்க அவள் எத்தனித்தாள்.

பொலிஸ்காரன் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க விரும்பினான். குழந்தையை வைத்திருக்கும் பெண்ணிடம் ஆணையிட்டான், 'அவளிடம் அந்தக் குழந்தையைக் கொடுத்து விடு.'

'நான் ஏன் கொடுக்க வேணும். குழந்தை என்னுடையது.'



'உன்னுடைய வயிற்றிலா அது பிறந்தது?'

மௌனமாக, அவள் மற்றவளைப் பார்த்தாள்.

'உன்னுடைய வயிற்றிலா குழந்தை பிறந்தது, சொல்லு.' பொலிஸ்காரன் கோபத்தில் கத்தினான்.

'என்னுடைய வயிற்றில் பிறக்கா விட்டால், என்ன? அவனுக்கு நான் பாலூட்டி வளர்த்திருக்கிறேன். அவனை நான் கடந்த ஏழு மாதமாக வளர்த்திருக்கிறேன்.'

'அதனால் அது உன்னுடைய குழந்தையாகி விடாது. அதை நீ கடத்திக் கொண்டு போகப் பார்க்கிறாயா?'

'நான் ஏன் கடத்தல்காரியாக வேணும்? என்னுடைய சொந்தக் குழந்தைகள் நலமாக இருக்கிறார்கள். இந்தச் சூனியக்காரியைக் கேள்.' மற்றப் பெண்ணிடம் திரும்பி, 'ஏன் பேசாமல் இருக்கிறாய்? துடுக்குக்காரியே! நான் உன்னிடமிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டா போகிறேன்? சேர், அவளே இந்தக் குழந்தையை என்னிடம் தந்தாள். அவள் இந்தக் குழந்தையை குப்பைத் தொட்டியில் போடப் போனாள். அங்கே போடாமல் அதை என்னிடம் தரும்படி கேட்டான். அந்தக் குழந்தையைப் பிறந்த நாளிலிருந்தே நானே வளர்க்கின்றேன். இந்தப் பெண் என்னை வழியனுப்பு புகையிரத நிலையத்திற்கு வந்தாள். அதன் பின் சடுதியாக தன் எண்ணத்தை மாற்றி கொண்டு விட்டாள்' என்றாள் அவள்.

பொலிஸ்காரர் இரண்டாவது பெண்ணின் பக்கம் திரும்பி, 'நீயே இந்தக் குழந்தையை இவளிடம் கொடுத்தாயா?'

அவள் வயதில் மூத்த மற்றவளை ஒரு சில கணங்கள் புரியாதது போல கண்களை அகலத் திறந்து பார்த்துவிட்டு, தன் பார்வையைக் கீழே திருப்பினாள்.

'நான் கொடுத்தேன். ஆனால் அது என் குழந்தை. அதை நான் ஏன் கொடுக்க வேணும். நான் கொடுக்க மாட்டேன்.' எதுவும் செய்ய தறியாது மூத்தவளைப் பார்த்தாள். அதன்பின் அழுதுவதற்குக் கூட அவளுக்கு மனவுரம் இருக்கவில்லை.

'ஆக, நீ குழந்தையை கொடுத்து விட்டாய். பிறகு ஏன் இப்போ திரும்ப வேணும் என்கிறாய்?'

அவள் நடுங்கினாள். கண்கள் கெஞ்சின.

'குழந்தையை அவள் தூர தேசத்திற்குக் கொண்டு செல்கிறாள்,' என்று சொல்லிவிட்டு வெடித்து அழ வெளிக்கிட்டாள்.

'நான் இங்கேயே நெடுக இருக்க வேணுமா?' கூட்டத்தைப் பார்த்து வயதில் மூத்தவள் தன் கைகளை உயர்த்தி விண்ணப்பித்தாள். என்னுடைய அயலவர்கள் எல்லோரும் ஏற்கனவே போய் விட்டார்கள். இன்னும் ஐந்து நாட்களுக்கு நில் என்று இவள் சொல்கிறாள். ஏற்கனவே நான் ஒரு மாதம் இங்கே நின்று விட்டேன். நான் எப்படி இங்கே நின்று கொண்டிருப்பது? இன்றைக்கு ரெயின் வெளிக்கிடும் போது, இவள் தன்னுடைய மனதை மாற்றி விட்டாள்.'

'நீங்கள் இரண்டு பேரும் உறவினரா?'

'கடவுளே, இவள் எப்படி எனக்கு உறவாக முடியும்? இவள் காத்தியவாடி, நாங்கள் பஞ்ஜாரிகள்.'

'நீ எங்கே போகிறாய்?'

'ஃபிறோஸிப்பூர், ஐயா?'

'ஏன் ஃபிறோஸிப்பூருக்கு?'

'நாங்கள் ஜிப்ஸிகள். எங்கள் குலத்தவர்கள் இங்கே நிலம் குத்தகைக்கு எடுத்து இரண்டு வருஷங்கள் பயிர் செய்தார்கள். இப்போ ஃபிரோஸிப்பூரில் நிலம் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். என்னுடைய உறவினர்கள் ஏற்கெனவே அங்கே இருக்கிறார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்து கொள்ள வேண்டும்.'

பொலிஸ்காரருக்கு குழப்பமாக இருந்தது. சொந்தத் தாய் குழந்தையைக் கைவிட்டு விட்டாள். மற்றவள் தன் பாலைக் கொடுத்து அதை வளர்த்திருக்கிறாள். ஆகவே குழந்தை யாருக்குச் சேர வேண்டும்?

'எப்படி நீ குழந்தையைக் கொடுப்பாய்? உனக்கு வீடோ, வாசலோ இல்லையா? எங்கே வசிக்கிறாய்?' அவன் குழந்தையின் சொந்தத் தாயைக் கேட்டான்.

'எங்கே இருக்கிறாள் என்று நீங்க நினைக்கிறியள்? பாலத்தடியிலுள்ள சேரியில் தான். அவள் ஒரு வேலைக்காரி. அவள் எங்கள் பக்கத்து வீட்டுக்காரி. இந்தக் குழந்தை பிறந்தபோது, நான்தான் என் கையால் அதன் கொப்பூழ்க் கொடியை வெட்டினேன்.'

திகைத்துப் போய் இளையவள் குழந்தையை பார்த்துக் கொண்டு நின்றாள். அவளுக்கு ஒன்றுமே கேட்கவில்லைப் போலத் தோன்றியது.

'உன்னுடைய கணவன் எங்கே?'

'அவளுக்கு கணவன் இல்லை. அவள் ஆண்களைத் துரத்திக் கொண்டு திரிகிறாள். ஆனால் அவளை ஒருவரும் மனைவியாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவளுக்கு விடு இருந்தால், அவள் தன்னுடைய குழந்தைகளை கைவிட்டிருப்பாளா?'

றெயில்வே க்காட் விசிலை ஊதினார்.

பயணிகள் தங்கள் பெட்டிகளுக்கு விரைந்தனர். ஜிப்ஸிப் பெண்ணும் போவதற்குத் திரும்பினாள். அப்போது இளையவள் பெரியவளின் காலடியில் விழுந்தாள்.

'போய் விட வேண்டாம். என் குழந்தையைக் கொண்டு போய் விட வேண்டாம். அவனைக் கொண்டு போக வேண்டாம்.'

சில பயணிகள் அவளில் இரக்கப்பட்டார்கள். பொலிஸ்காரர் தீர்மானமாக முன்னே வந்து, பஞ்ஜாரிக்குச் சொன்னார், 'அவளிடம் அவள் குழந்தையைக் கொடுத்து விடு. தாய்க்கு தன் குழந்தையை கொடுக்க விருப்பமில்லா விட்டால், நீ அதைக் கொண்டு போக முடியாது.'

தொடர்தல் 86ம் பக்கம்




*85ம் பக்கத் தொடர்தல்*

பஞ்ஜாரி அந்தத் தீர்ப்பை எதிர்பார்க்கவில்லை. 'நான் ஏன் அவனைக் கொடுக்க வேணும்?. தன் குழந்தையை யார் திருப்பிக் கொடுப்பார்கள்? அதுவும் அவளுக்குக் கொடுப்பார்களா? வீடோ வாசலோ... இல்லாதவளுக்கு.'

'ரெயின் வெளிக்கிடப் போகுது. குழந்தையை அவனுடைய தாய்க்குக் கொடுத்து விடு. அல்லாவிட்டால் உன்னை பிடித்து மறியலில் போட்டு விடுவேன்.'

பெரிய பெண் பயந்து விட்டாள். அங்கிருந்தவர்களை உதவிக்காக சுற்று முற்றம் பார்த்தாள். ஒருவரும் முன்வராததால் இளையவளை பார்த்துச் சொன்னாள், 'வேசை, இங்க வந்த பிறகு உன் மனசை மாற்றி விட்டாய்? உன் பிள்ளையைப் பிடி, பச்சோந்தி. அவனுக்குச் சாப்பாடு கொடுக்கச் சொல்லி என்னைக் கேட்டால், நான் நஞ்சுதான் கொடுப்பேன். பாலில்லை. உனக்கும் அப்படித்தான் செய்வேன். போன ஏழு மாசமாய் என்னுடைய பாலை அவனுக்குக் கொடுத்தேன். உண்மையில் அது என்னுடைய குழந்தைக்குச் சேர வேண்டியது...' திடுமெனத் திரும்பி மற்றவளின் கைகளுக்குள் குழந்தையை வீசிவிட்டு, வெடித்து அழுதாள்.

மற்றவள் குழந்தையை தன் நெஞ்சுடன் அணைத்துப் பிடித்துக் கொண்டாள். அவள் இதயம் பாசத்தால் நிரம்பி வழிந்தது. அவளும் அழ ஆரம்பித்தாள்.

அதுவொரு விசித்திரமான சம்பவம். இரண்டு பெண்களும் அழுதார்கள். இருவரும் வெளிப்படையான எதிரிகள். இருவரும் அந்த ஒரு குழந்தையின் இரண்டு தாய்மார். வீடற்ற மக்கள் துக்கத்திலும் மகிழ்ச்சியிலும் கட்டுப்பாடற்றவர்கள். பிரச்சினைக்குரிய, துன்பத்தால் மெலிந்த குழந்தை இன்னும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தது. அதன் விரல்கள் இறுக மூடியிருந்தன.

அழுதுகொண்டும் சாபமிட்டுக் கொண்டும் பஞ்சாரி றெயினில் ஏறினாள்.

'உன்னுடைய குழந்தை இப்போ உன்னிடம் இருக்கிறது. இப்போ இங்கிருந்து உடனே போய் விடு.' பொலிஸ்காரன் தன் பிரம்பின் நுனியை அச்சுறுத்துவதுபோல குழந்தையின் முதுகில் வைத்தான். 'இப்பொழுதே ஸ்ரேசனை விட்டு வெளியே போ.'

குழந்தையை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு அவள் பின்வாங்கினாள். கூட்டமும் கலைந்து விட்டது. புகைவண்டி பெட்டியின் வாசலில் நின்று பஞ்சாரி இன்னும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள். 'வேசை! நாய் வேசை! அவன் பிறந்த அன்றைக்கே நீ ஏன் அவனைக் கொல்லவில்லை? அவனை நீ கொல்லும்வரை நான் சந்தோசமாக இருக்க மாட்டேன். நாய் வேசை...'

திடீரெனக் குழந்தை விழித்துக் கொண்டது. அது படுத்துக் கிடந்த நெஞ்சு அதற்குப் பழக்கமில்லாததாக இருக்கலாம். அல்லது பொலிஸ்காரனின் பிரம்பு அதைக் காயப்படுத்தி இருக்கலாம். அது தன் மூக்கையும் கண்களையும் கசக்கியது. பிறகு பெருவிரலைச் சூப்ப வெளிக்கிட்டது. திகைத்துப் போய் புகையிரத நிலையச் சுவரில் பின்பக்கம் முட்டும்வரை அவள் இன்னும் இன்னும் பின்னே போய்க் கொண்டிருந்தாள்.

குழந்தை தன் பெருவிரலைச் சப்பியது. இருந்தும், ஒரு துளி பால் கூட அதிலிருந்து வரவில்லை. அதனால் தன் கால்களை அடித்துக் கொண்டு புலம்பி அழத் தொடங்கியது. இப்போது, அது நன்றாகவே விழித்துக் கொண்டது. தாய் அதை இடது தோளிலிருந்து வலது தோளுக்கு மாற்றினாள். ஆனாலும் அது இன்னும் சத்தமாக அழத் தொடங்கியது.

தாய் கவலைப்பட ஆரம்பித்தாள். அவள் அதை மாற்றி மாற்றிச் சுமந்துப் பார்த்தாள். அழாமல் வைத்திருக்க எவ்வளவோ முயன்றாள்.

பஞ்சாரிக்கு குழந்தையின் அழுகை கேட்கவே திரும்பவும் அவள் சத்தம் போட்டாள். 'அவனைக் கொன்று போடு. சும்மா கொன்று போடு. நீ ஏன் அவனுக்கு நஞ்சைக் கொடுக்க வில்லை? மத்தியானத்திலிருந்து ஒரு துளி பால் கூட அவன் குடிக்கவில்லை. பசிக்க இருக்கும் குழந்தை அழாதா?'

பொலிஸ்காரன் தன் பிரம்பை ஆட்டிக் கொண்டு தன் வழியே போய் விட்டான். ஒன்றிரண்டு கூலிக்காரர்களைத் தவிர புகை வண்டிப் பெட்டியின் அருகில் எவருமே இல்லை. புகைவண்டியின் கடைசியிலிருந்து காவலாளி பச்சைக் கொடியைக் காட்டிக் கொண்டிருந்தான்.

இயந்திரச் சாரதி விசிலை ஊதினான். புகையிரதம் வெளிக்கிட்டது.

குழந்தை இன்னும் அழுது கொண்டிருந்தது. தாய் தன்னுடைய கிழிந்த குர்தா பைக்குள்ளிருந்து சில கச்சான் கொட்டைகளை எடுத்து குழந்தையின் வாய்க்குள் திணிக்க வெளிக்கிட்டாள்.

'ஈனத்தியே, எதை அதன் வாய்க்குள் திணிக்கிறாய்? என்னுடைய குழந்தையை நீ கொல்லப் போகிறயா? வேசை, கொலைகாரி...'

பாஞ்சாரி சிறியதொரு றங்குப் பெட்டியையும் மூட்டையையும் பிளாட்பாரத்தில் வீசி விட்டு, தனக்குள் பேசிக் கொண்டும், சாபமிட்டுக் கொண்டும் வண்டியிலிருந்து இறங்கினாள். 'பேய்க்குப் பிறந்தவளே! நீ என்னுடைய றெயினையும் விடச் செய்து விட்டாய். நீ செத்துப் போவாய், ஈனத்தியே!'

புகையிரத மேடையிலிருந்து வண்டி விலகிப் போய்க் கொண்டிருந்தது. கடைசியாக நின்ற சுமை கூலிக்காரர்களும் புகையிரத நிலையத்தை விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். புகையிரத மேடையில் அமைதி ஆட்கொள்ள ஆரம்பித்தது. பொலிஸ்காரனும் தன் சுற்றும் கடமையை அங்கே முடித்து கொண்டு இன்னொரு பிளாட்பாரத்திற்குப் போய் விட்டான். ஆனால், அவன் தன் பிரம்பைச் சுளற்றிக் கொண்டு திரும்பியும் வந்தபோது, அந்த இரண்டு பெண்களும் புகையிரத நிலையச் சுவரில் சாய்ந்து நெருங்கி இருந்து கொண்டிருந்தார்கள். பஞ்சாரிப் பெண்ணின் மடியில, குழந்தை இருந்து, அவளின் முகத் துணியால் மூடியிருந்த முலையிலிருந்து பாலருந்திக் கொண்டிருந்தது. அதன் தாய் பக்கத்திலே யிருந்து குழந்தையின் முடியை மெதுவாகத் தடவிக்
கொண்டிருந்தாள்.



mahalingam.k@thaiveedu.com

**SP Electronics**

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ்

வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

**416 264 6400**

**2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)**

## நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்:

# நான்கு பெரும் கிரேக்க நாடகாசிரியர்கள்

## - ஈக்கிலஸ் (Aeschylus) -

**தொடர் - 7**

- ஞானம் லேம்பட் -

உலகிலுள்ள ஏனைய மக்களைவிடத் தாங்கள் வேறுபட்டவர்கள், உயர்ந்தவர்கள் எனக் கிரேக்கர் எண்ணினர். இவர்கள் குடியாட்சியை நிலைநாட்ட தங்களை ஆள்வோராகவிருந்த எதேச்சாதிகாரர்களுக்கு எதிராக நடாத்திய போராட்டங்கள், அடைந்த துயரங்கள், கொண்ட வெற்றிகள் ஆகியன பற்றிய நாடகங்களை ஈக்கிலஸ் (Aeschylus) எழுதினார். இவர், தங்கள் துயரங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் பெற்ற ஆன்மீக அறிவு விளக்கங்கள் பற்றியும், குருட்டு நம்பிக்கையின் விளைவாய் எழுந்த வழிபாட்டு முறைகளிலிருந்தும் நிர்ப்பந்தங்களிலிருந்தும் மீண்டெழுந்த மக்கள் பற்றியும் நாடகம் எழுதினார்.

கலைவடிவங்களை மிக ஆழமாக எழுதி ஒரு சிறந்த சரித்திர ஆய்வாளனாகவும், சமயங்களை மீளுருவாக்கம் செய்த ஒரு சமயவாதியாவும், குடியாட்சியின் நுண்பொருட்கோட்பாட்டியல் அறிவாளியாகவும் இவர் திகழ்ந்தார்.

தான் கொண்டிருந்த கொள்கையை விளக்க ஒரு நாடக மொழியை உருவாக்கியிருந்தார். சிறந்த இன்னிசைப் பண்களைச் சிறந்த நாடக வடிவமாக்கியவர். கிரேக்க நாட்டில் துன்பியல் நாடகங்களில் புதிய உத்திகளும், பரீட்சார்த்தங்களும் நடைபெற்ற போதிலும். சாதாரண பாடல்களுடன் அமைந்த நாடகங்களில் முதன் முதலில் வசன நடையைப் புகுந்தி மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர் இவர். தனது நாடகங்களுக்கு நிறந்தீட்டிய முகமூடிகளையும், துன்பியல் நாடகங்களுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட உடைகளையும் உபயோகித்து நாடகத்திற்கு மெருகூட்டினார். பாடல்களுக்கு மேளவாத்தியக் கருவிகளை உபயோகித்தார். பாடல் மெட்டுகளையும், சொற்பதங்களையும் காட்சிகளுக்கேற்ப மாற்றியமைத்தார். அத்துடன், நடன அசைவுகள், நகர்வுகள் என்பவற்றையும் மாற்றியமைத்தார்.


இவருடைய ஆன்மீக, தத்துவ மனிதத்துவ விளக்கங்கள் கிரேக்க தத்துவ ஞானி ஹோமரை விட மிகவும் ஆழமானது.

பெரும்பாலான இவருடைய நாடகங்கள் வித்தியாசமாகப் படைக்கப்பட்டன. சொல்ல வேண்டிய சம்பங்களை நேரடியாகச் சொல்லாமல், பாத்திரங்களின் சம்பாஷனை மூலமாயும், குறியீட்டு முறைகளிலும் காட்டினார். கி.மு 467இல் எழுதிய பேர்ஷியன் என்ற நாடகத்தில் நாட்டைப் பிடிக்க வரும் இரு சகோதரர்களையும் மேடையில் காட்டாமல் வேறொருவர் மூலமாக நாட்டிற்கு வரவிருக்கும் ஆபத்தை எடுத்துரைத்தும், கோறஸ் பாடகர் மூலமாக எதிரிகள் சாகடிக்கப்பட்டமையையும் நாடு காப்பாற்றப்பட்டமையையும் எடுத்தியம்புகிறார்.

இவர் கி.மு 525இல் எலெயூசிஸ் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் இபோறியன். இவர் கிரேக்க நாட்டின் இயூபெற்றிடாஸ் எனும் உயர்குலத்தைச் சேர்ந்தவர். டிமீற்றர் (Demeter) வழிபாடு நடந்த லெயூசிஸ் நகரைச் சேர்ந்தவரானபடியால் அங்கு நடந்த சமயவழிபாடுகள், மர்ம கொண்டாட்டங்கள், விளக்கீடுகள், சமய ஊர்வலங்கள் என்பன இவரைச் சமயப்பாங்குடையவராக மாற்றிற்று மட்டுமல்லது இப்புறவயச் சுற்றாடல்கள் இவரது கவித்துவத்தையும் செழிப்புள்ளதாக்கிற்று.

இவரது வாலிபப் பருவத்தில் ஏதென்சில் ஏற் பட்ட வளர்ச்சி, அன்னியநாடுகளின் படையெடுப்புகளை முறியடித்தமை, குடியாட்சியின் வளர்ச்சி என்பன இவரில் பெரும் மாற்றங் களை ஏற்படுத்தின. பாரசீகருக்கெதிரான இரண்டு போர்களில் இவர் கொண்ட பங்கு இவரது நாடக வாழ்வில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்திற்று.

இவர் சிறுவயதினரைக இருந்தபோது தந்தையின் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது டையேனிசஸ் கடவுள் தோன்றி துன்பியல் நாடகங்கள் எழுதும்படி கேட்டுக் கொண்டதாக ஒரு ஐதீகக் கதை உள்ளது. அதன்படியே இவர் துன்பியல் நாடகங்கள் எழுதியதாகவும் கூறப்படுகிறது. இவர் தனது முதல் நாடகத்தை கி.மு. 499இல்



எழுதினார். கி.மு. 458 வரை தொடர்ந்து 90 நாடகங்கள் வரை எழுதியுள்ளார்.

கவிதை எழுதியதோடு மட்டுமல்லாது இவர் காலத்துக் காலம் புலம்பல் பாட்டுகளையும் எழுதி வந்துள்ளார். ஆனால் அப்பாடல்கள் அக்காலங்களுக்கு ஏற்ப அமையவில்லை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

இவரது நாடகங்களில் இவரும் நடித்து வருவது வழக்கம். ஒரு நாடகத்தில் டிமீற்றர் கடவுள் பற்றி இவர் மேடையில் தோன்றிப் பேசுகையில் இவர் கடவுள் பற்றிய மர்மங்களைப் பேசுகிறார் எனக் கோபங்கொண்ட மக்கள் இவரைக் கொலை செய்ய முயன்றதாகவும், இவர் மேடையிலிருந்து தப்பி ஓடியதாகவும் கூறப்படுகிறது. பின்னர் இதே குற்றச்சாட்டில் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு பின்னர் தள்ளு-படி செய்யப்பட்டதாகவும் அறியக் கிடக்கிறது.

இவரது நாடகங்கள், இவரது கால நாடக ஆசிரியர்கள் போன்று சமகால அரசியலைக் கொண்டிருக்கவில்லை. மாறாக உலகளாவிய உண்மைகளையும், அனுபவ உண்மைகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தன. மட்டுமல்லாது, அரசியலில்கூட ஆட்சியாளர்களை எதுவித காரணமுமின்றி ஆதரித்து எழுதாமல் தான் கொண்டிருந்த சுதந்திரமான எழுத்தையே மேற்கொண்டிருந்தார்.

எழுத்துகளின் விதமும், சிறப்புகளும் இவர் உலகின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர் என்பதை எடுத்தியம்பும். கிரேக்க துன்பியல் நாடகங்களில் இவரது ஆளுமையும், நிறுதிட்டமும் மிகமுக்கியமானது. கிரேக்க துன்பியல் நாடகத் தந்தைகளில் இவரும் ஒருவர். துன் பியல் நாடகங்களின் வீரியத்தையும், அதில் மறைந்துள்ள தகைமைகளையும் மிகக் காத்திரமாக எடுத்தியம்பியவர் இவர். இவரது நாடகாற்றல் நாடகத்தின் ஒரு பகுதியை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யாது நாடகத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாயும், நாடகத்தின் உருவ அமைப்பு, மெய்ப் பொருள், துன்பியலின் வெளித்தோற்றம் என்பவற்றிலும் கால் பதித்து இருந்தது.

ஒரு நாடகத்தின் உயிர்த்துடிப்பு அதன் முரண்நகைக் கொள்கையின் மூலக்கோட்பாடே. பிரிந்து செல்லும் உட்கோளையும், மனப்பாங்கையும் ஒன்றாக்கி உருவாக்குவதலும், அம்மோதல்களை அல்லது முரண்பாடுகளை மேடையில் ஒருங்கமைவாகக் கொண்டு வருதலுமே ஒரு சிறந்த நாடகாசிரியரின் குறிக்கோளாகும். இவர் இரண்டு நடிகர்களைத் தனது நாடகங்களில் அறிமுகஞ் செய்து இம்முரண்நகைத் தன்மையைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார். ஆனால் அம்முரண்பாடுகளை மேடையில் அப்படியே கொண்டு வராமல் எடுத்துரைஞர் (Narrater) மூலமாய் அல்லது சம்பாஷனைகள் மூலமாய் அவற்றை வெளிக் கொணர்ந்துள்ளார். இதன் மூலம் துன்பியல் நாடகங்களில் நேருக்கு நேராக இரு முரண்பாட்டாளர்களைக் கொண்டு வந்து அவர்களது வாதாட்டக் கூறுகளைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

இவர் இரண்டு நடிகர்களை மேடையில் அறிமுகஞ்செய்யுமுன்னர் ஒரு நடிகன் மட்டுமே நடித்து வந்துள்ளான். அப்போது முக்கிய சம்பாஷனைகள் கோரஸ் பாடுவோருக்கும் நடிகனுக்கும் இடையிலேயே நடந்தது. ஆனால் இது காப்பியத்தன்மையும், உணர்ச்சிப் பாடல் தன்மையும் கொண்டதாயிருந்தது. ஆனால் ஈக்கலிப்ஸ் இரு நடிகர்களை அறிமுகம் செய்த போது நாடகங்கள் கலையுணர்வு கொண்டதாய் இருந்தது.

இவரது நாடகங்களில் மாற்றங்கள் படிப்படியாகவே நிகழ்ந்துள்ளது. இவரது தொடக்க கால நாடகங்கள் ஒரு நடிகரையும் கோரசையும் மட்டுமே கொண்டிருந்தது. பின்னர் இரண்டாவது நடிகரை அறிமுகம் செய்த போது இரண்டாவது நடிகரை மேடையில் இடையிடையே கொண்டுவந்தார். பின்னர் இரண்டு நடிகர்களையும் முழுநேரமும் மேடையில் கொண்டு வந்து கோரஸ்பாடுவதைக் குறைத்துக் கொண்டார்.

இவர் சிறந்த கவிஞர், நாடகாசிரியர், மேடை நிர்வாகி, நெறியாளர். நாடகங்கள் மிகக் காத்திரமாக இருத்தல்வேண்டி புதிய உடையலங்காரத்தை அறிமுகஞ் செய்தார். துன்பியல் நாடகங்களின் உடைகள் நீளமாயும், பொம் மலாக இருக்கக் கூடியதாயும் அவைகள் பளபளவென்ற மினுக்கம் உள்ளதாயும் பூக்கள் கொண்ட அலங்காரம் கொண்டதாயும் ஆக்கிக் கொண்டார். முகங்களுக்கு நிறந்தீட்டிய முக மூடிகளை அணிந்து கொண்டார். இவரது ஆடையலங்கார முறை கிரேக்க நாட்டில் 800 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து வந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடக மேடையின் பரப்பளவைக் கூட்டித் தொகையில் அதிகமானோர் மேடையில் நிற்கக் கூடியவாறு செய்தார். இவரே மேடையில் அலங்காரம் செய்வதையும் தொடக்கி வைத்தார். அத்தோடு மேடையில் பாரந்தூக்கிகளையும், வேறுசில உபகரணங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

மேடையில் பறக்கும் சிங்கத்தின் உடலும் கழுகின் தலையும் சிறகும் கொண்ட கற்பனைப் பறவை ஒன்றையும், சிறகு கொண்ட வாகனம், இடி முழக்கம் என்பவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவருடைய பேர்சி (Persae) என்ற நாடகம் தவர்ந்த ஏனைய எல்லா நாடகங்களும் புராணக் கதைகளை உள்ளடக்கம் கொண்டவையாகும். சில நாடகங்கள் வாய் மொழியாக இருந்து வந்த புராணக் கதைகளைப் பகைப்புலமாகக் கொண்டவை. மீன்பிடிப்போரின் வாய்மொழியாக வந்த போயோர்ரியன் கதையே கிளோக்கஸ் போன்ரியஸ் என்ற நாடகமாகும்.

இவருடைய நாடகங்களில் ஹோமருடைய பாதிப்பு உள்ளதாக சில விமர்சகள் கூறுவர். சிலர் இவரது நாடகங்களின் கதை கூறல் காவியத் தன்மையின் செல்வாக்குப் பரவியுள்ளது என்பர். ஆனால் இவரது நாடகங்களை உற்றுப்பார்த்தால் நாடக வசனங்களின் சொற்றொடர் அமைப்புகள் நாடகக் கருவைச் சுற்றி அமைந்துள்ளன. இதிலிருந்து இவர் ஹோமருடைய இலியட் அல்லது ஒடிசியின் பாதிப்புக்கு ஆட்படவில்லை என்பது புலனாகும். மாறாகப், பண்டைய கிரேக்க நடைமுறையைக் கையாண்டுள்ளார். இவருடைய நாடகங்கள் மிக எளிமையானவை. நாடகங்களின் உள்ளார்ந்த கரு பார்வையாளர்களுக்கு முதலிலேயே தெரியக்கூடியதாயிருக்கும்.

இவருடைய பேர்சியா என்ற நாடகத்தில் வித்தியாசமானதொரு பாணியை இவர் மேற்கொண்டுள்ளார். தனது வழக்கபாணியில் கதைக்கருவை முதலில் கூறுவதிலிருந்து விலகி, படிப்படியாகக் கூறுகிறார். நாடகத் தொடக்கத்தில் கதை படிப்படியாகத் தொடர்ந்தாலும் தெளிவற்ற நிலை தொடர்ந்து நாடகமுடிவி லேயே கதைக் கருவைச் சொல்லி முடிக்கிறார்.

முதலில் கோரஸ் பாடகர்களாகத் தோன்றும் வயது முதிர்ந்த பேர்ஷயர்கள் தமது போர் வீரர்களின் நிலையை அறிய எண்ணி, அவநம்பிக்கை, அவர்கள் பற்றிய தெளிவற்ற நிலை, பெருந்தீங்கு வருதலை உணர்தல், ஏற்படப்போகும் பேரிடர்பற்றி ஊசலாடும் மனப்பாங்கு என்பவற்றைக் கொண்டிருத்தலைக் காட்டுகிறார். பின்னர் அரோசா என்ற பாத்திரம் தான் கண்ட பேரிடர் நிறைந்த கனவு பற்றிக் கூறுதல் மூலம் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பையும், உணர்வலைக் கிளர்ச்சியையும் கூடுதலாக்கி, பின்னர் ஒரு செய்தியாளர் மூலம் இடையூறின்றிய செய்தி கூறல் மூலம் பாரசீகர்களின் தோல்வியையும், சொலோனியின் வீழ்ச்சியையும் அங்கு நடந்த கோரமான மனிதப் பேரழிவுகளையும் கூறியபின், டாறியசின் ஆவி புதைகுழியிலிருந்து தோன்றி, தம் நாட்டு மக்களின் பகட்டாரவாரத்தையும் பெருமை, திமிர் என்பவற்றைக் கண்டித்தும், பிளச்ரேயாவில் வரவிருக்கும் அழிவையும் கூறுவதாகச்

88ம் பக்கம் பார்க்க...

உங்கள் விழாக்களின் நிழல்ப் படங்களைப் பார்ப்பதற்கு
www.ninaivukal.com

# நான்கு பெரும்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

சித்தரிக்கிறார். கடைசியாக சீறக்கஸ் உம் அவரது பரிவாரங்களும் சேர்வுமிகுந்த கந்தலும் தூசியுமான ஆடைகளுடன் தோன்றி, நாடகத்தொடக்கத்தில் பாடகர்களாக வந்த வயது முதிர்ந்தவர்களுடன் இணைந்து பேரழிவைக் காட்டுவதுடன் நாடகம் முடிவுறுவதாகக் காட்டுகிறார்.

புனிதமாகக் கருதப்பட்ட புராணக் கதைகளைப் பகைப்புலமாகக் கொண்ட கிரேக்க துன்பியல் நாடகங்கள் புனிதமானவை என்ற கருத்தைக் கொண்டவர் ஈக்கிலஸ். இவ்வகையான வீரகாவியங்களை மக்கள் மனதில் புகுத்தி, அவற்றை மங்காது காக்கவேண்டிய நிகழ்வுகளைச் செய்வது கலைஞனுடைய முக்கிய கடமை எனக் கருதினார். அவருடைய பாத்திரங்கள் எந்தவித சலுகைகட்கும் ஆட்படாத கடின சித்தம் கொண்வைகள்.

30,000 வருடங்கள் சித்திரவதைக்குட்பட்டதாகக் கருதப்படும் புறோமதியஸ் (Prometheus) என்ற பாத்திரத்தைப் படைத்தவர். எதிர்க்க வேண்டிய இடங்களில் மூர்க்கத்தனமாக எதிர்த்தும், முடியாதவிடத்து அமைதிகாத்தும் மற்றவர்கள் பற்றிய செய்திகளைக் கூற மறுக்கும் உத்தியைக் கொண்டது.

டையோனிசஸ் விழாவின் நாடகப் போட்டிகளில் மூன்று துன்பியல் நாடகமும் ஒரு காம நாடகமும் (Satyric) ஒருவரால் தயாரிக்கப்பட வேண்டுமென்பது நியதி. இதன்படி ஒவ்வொரு போட்டியிலும் ஒருவர் நான்கு நாடகங்கள் தயாரிக்க வேண்டும். இந்நடைமுறையை மாற்றி ஒரு துன்பியல் நாடகத்தை மூன்று துன்பியல் நாடகப் பகுதிகளாவும் காம நாடகத்தை அந்தத் துன்பியல் நாடகத்தின் தொகுப்பாகவும் தயாரித்து வெளிக்கொணர்ந்தார். இம்மூன்று துன்பியல் நாடகங்களின் தொகுப்புச் சேர்க்கையை துன்பியல் நாடக மூன்றன்தொகுதி (Trilogy) எனவும் காமநாடகம் சேர்ந்த நான்கு தொகுப்புகளும் நான்மைத் தொடர் நாடகம் (Trctalgy) எனவும் அழைக்கப்படலாயிற்று.

கைவசமுள்ள இவரது நாடகங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கிரேக்க நாட்டுச் சட்டம் இன்னும் அமுலில் உள்ள நிலையில் இவர் கி.மு. 456இல் ஜெலா என்ற இடத்தில் அகால மரணமானார்.

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

# சிங்கள இனமும்...

78ம் பக்கத் தொடர்ச்சி...

இதன் நிறம் செம்மை நிறம் கொண்டதாகும். இப்பகுதியின் மணற்பகுதி செந்நிறம் கொண்டதனால், தாமிரம் நிறம் கொண்டதனால் காரணப்பெயராக அழைக்கப்பெற்றிருக்கலாம். இதே பெயரான தாமிரபரணியென்ற பெயர் இலங்கை முழுவதற்கும் அழைப்பதற்கான காரணம் ஏதோ தமிழ் நாட்டுடன் தொடர்பு பட்ட வெளிநாட்டு வணிகர்களாலேயே இலங்கைக்குச் சூட்டப்பட்டிருக்க வேண்டும். வெளிநாட்டவர் இலங்கையினை பச்சைபசேல் என்றுதான் அறிய முடியுமே தவிர தாமிர நிறம்போல் அறிய எந்த வாய்ப்பும் இல்லை. லம்க என்று இராமாயணத்தில் குறிப்பிடும் பெயரின் வடமொழி அர்த்தமானது பச்சைபசேல் என்பதாகும். இதனாற்றான் பிற்காலத்தே லம்க என்பது திரிபடைந்து லங்காவாக மாறியிருக்கவேண்டும். மன்னார் மற்றும் புத்தளம் பகுதியே தம்பபன்னி என்றும் இங்கு தான் விஜயன் வந்திறங்கியதாகவும் மகாவம்சம் கூறுகின்றது. ஆகவே தாமிரம் போன்றநிறம் இந்த இரண்டு இடத்திற்கும் இல்லை இங்கு காணப்படும் மணல் பழுப்பு நிற வெண்மையானவையாகும். ஆகவே இக்காரணப்பெயர் இலங்கைக்குப் பொருந்தாது.

சேரன்தீவு என்பதும் முற்காலத்தே அரேபியர் இலங்கைக்கு வழங்கிய பெயராகும். சிங்களத்தில் செரன்திவ என அழைக்கப்படுகின்றது. இதனையே Serandib என ஆங்கிலத்தில் வழங்கப் பெறுகிறன்றது. சேரன்தீவு என்பது ஒரு காரணப் பெயராகவே அமைந்ததென்றே கொள்ளவேண்டும். இலங்கையினை தமிழ் மூவேந்தர்களும் மாறிமாறி ஆட்சிசெய்துள்ளார்கள். அராபியர்கள் வணிகத்தொடர்பு வைத்திருந்தபோது சேர அரசர்கள் அப்போது ஆட்சியில் இருந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும். சேரநாடு என்பது மூவேந்தர்களில் ஒருவரான சேரர்கள் என்றழைக்கப்பட்ட தமிழரசர்களால் ஆளப்பெற்று வந்த தற்போதைய கேரள மாநிலமாகும். மிக முற்காலத்தே சேரர்கள் வடநாட்டையும் பிற்காலத்தே கேரளத்தையும் ஆண்டதாக வரலாறு கூறுகின்றது. சேரர்களோடு வணிகம் செய்த அராபியர்கள் இந்தியாவில் உள்ள பகுதியை சேரநாடென்றும் தீவான இலங்கையினை சேரனதீவு என்று அழைத்ததில் எந்த வியப்பும் இல்லை. இலங்கையினை சோழர், பாண்டியர் தொடர்ச்சியாக ஆண்டதுபோல் சேரர்களும் ஆண்டுள்ளார்கள். இதனடிப்படையிலேயே மலையாள மொழி, மலையாள கலை, காலாசாரங்கள், மலையாள உடை போன்றன சிங்களத்தில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியதென்றே கூறவேண்டும். இது பற்றி கட்டுரையின் அடுத்த பகுதியில் விரிவாக நோக்குவோம்.

## சிங்கள மொழி ஆரியமொழியின் வழிவந்ததா?

சிங்கள மொழி உண்மையில் ஆரியத்திலிருந்து தோன்றிய மொழியா? சிங்களவர்கள் ஆரியர்களின் வழிவந்தவர்களா? அப்படியாயின் அதற்கான ஆதாரங்கள் என்ன? ஒரு மொழி தோன்றும் போது அது வேறொரு மொழியினை அடியொற்றியோ அன்றி அதற்கு முன்பு வழக்கத்திலிருந்த அந்த மொழியின் குடும்பத் தாய் மொழியிலிருந்தோ பிறந்திருக்க வேண்டும். ஒரு மொழியின் தோற்றத்திற்கு அம்மொழி பேசுவோரின் பிரதேச அமைவிடம் அவர்களுக்கு அருகில் வாழ்ந்த வேறு இன மொழியின் தாக்கம் அம்மொழியின் தோற்றத்தில் செலவாக்குச் செலுத்துகின்றது.

ஒரு மொழி தோன்றும்போது அதற்கு நிறைந்த சொல்வளம் இருந்தாலே அம்மொழியானது செழுமையானதாக வளர்ச்சியடைய முடியும். மேலும் அது வளர்ச்சியடைய அதற்கான வரிவடிவம் அத்தியாவசியமாகும். நிறைந்த சொல்வளமும் வளமான வரிவடிவமும் இருப்பின் அம்மொழிக்கான எதிர்கால இலக்கிய ஆக்கங்கங்கள் அம்மொழிக்கு வளம் சேர்க்கும்.

மகாவம்சம் கி.பி 6ஆம் நூற்றாண்டிலிருந்து 1877 காலப்பகுதி வரைக்கும் அதன் ஆரம்ப வடிவத்தினை மகாநாம தேரரும் பிற்காலங்களில் பின்வந்த பிக்குகளாலும் பாளி மொழியில் எழுதப்பெற்றதாகும். கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாவம்வம் எழுதப்படும் போது சிங்களத்திற்கு எழுதுவதற்கான ஒரு வரிவடிவம் இருக்கவில்லை. மகாவம்சம் என்ற நூலானது சிங்கள பௌத்த மேன்நிலையினை மேம்படுத்திக் காட்டும் வகையான ஒரு அரசியல் சார்ந்த நூலாகவே கொள்ளப்பட வேண்டும். அதில் கூடுதலாக அரசியல் வரலாறே கால வரிசைப்படி கூறப்படுகின்றது. இந்நூலானது யதார்த்தற்கு மாறான பல கற்பனைக் கதைகளைப் புனைந்து சொல்வதனை அங்கு காணமுடியும். அத்துடன் ,அமானுஷ பாத்திரங்கள் படைக்கப்பெற்று சிங்களவர்களின் வரலாற்றை நிறுவுவதற்கு எழுதப்பட்ட நூலென்றே கொள்ளவேண்டும். இது கிமு 3ம் நூற்றாண்டில் பரவிய பௌத்தமத துறவிகளால் செவிவழி வந்த கதைகளைக் கொண்டு “அத்தகதா” என்று சிங்களத்தில் அழைக்கப்படும் உண்மைக்கதை என்ற பொருளைக் கொண்டு கி.பி 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று சிங்கள வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். கிட்டத்தட்ட 1000 ஆண்டு கால வரலாறு செவிவழியாகப் பாதுகாக்கப்பட்டு அதன்பின்பு அதன் உண்மைத் தன்மையினை எழுதுவதனை எப்படி நம்ப முடியும்.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■



# வேலிக்குக் கிட்ட வரிசையாய் தென்னைமரம்

- பொ. கனகசபாபதி -

சித்திரை வருசம் பிறந்தால் நமது ஊரிலே இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள். சிறுவர்களுக்கு அன்ன ஊஞ்சல் கட்டி ஆடுதல். இளைஞர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் போர்த் தேங்காய் அடித்தல். வீடுகளிலே கை விசேசம் வேறு. விவசாயிகள் நாள் வேலை என கிராமம் முழுவதும் அல்லோல கல்லோலப்படும்.

கன்னை பிரித்துத்தான் போர்த்தேங்காய் அடிப்போம். அனேகமாக கோவில் உள்வீதியில் தான் போட்டி நடைபெறும். ஒவ்வொரு பக்கத்துக்கும் நூறு தேங்காய் வரையில் இருக்கும். இது தவிர கைத் தேங்காய் ஒன்றோ இரண்டோ. உருட்டிவிட்ட தேங்காயினை அடித்து உடைப்பதற்காகப் பாவிப்பதுதான் கைத் தேங்காய் எனப்படும். அது கோளவடிவானதாக இல்லாமல் சற்று நீள்வட்டமாகவும் கைக்கு அடக்கமாகவும் இருக்கும்.

ஒரு பக்கத்தினர் தேங்காயினை உருட்டிவிட மறுபக்கத்தில் ஒருவர் தனது கைத் தேங்காயால் அடிப்பார். ஒரே அடியில் உடைத்து விடவேண்டும். உடைக்காவிட்டால் மறுபுறத்துக்கு அத்தேங்காய் மிச்சம். முடிவில் மிச்சமாயிருக்கிற தேங்காய்களின் எண்ணிக்கையை வைத்து வெற்றி தோல்வி தீர்மானிப்பார்கள். பொதுவாக தோல்வியுற்றவர்கள் வெற்றியீட்டியவர்களைக் கீரிமலைக்கு அழைத்துச் சென்று நீராடியபின் கடையில் தேனீரும் வடையும் வாங்கிக் கொடுப்பார்கள். கைத்தேங்காய் வைரம் உடைய ஓட்டினைக் கொண்டதாக இருக்க வேண்டும். உள்ளேயும் இளநீர் கொண்டதாக சற்றுப் பாரமானதாகவே இருக்க வேண்டும். சிலரிடம் கருமையான ஒரு தேங்காய் உண்டு. அதனைக் காலி தேங்காய் என்பார்கள். காலியில் இருந்து வருவிக்கப் பட்டதாகச் சொல்வார்கள். உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் சிலர் அந்தத் தேங்காயினை சூழப் பொச்சுக் கட்டிக் கிணற்றில் போட்டு ஊறவிட்டபின் நட்டு உண்டாக்க முயற்சி செய்துள்ளார்கள். வெற்றி அடைந்தார்களோ தெரியாது.

செல்லண்ணை தேங்காய் அடிப்பதில் மன்னன். அவரிடமும் ஒரு காலி தேங்காய் இருந்தது. கன்னை பிரிக்கும் போது செல்லண்ணைக்குத்தான் ஏக போட்டி இருக்கும். அண்ணைக்கு அப்ப ஒரு ஐம்பது வயதிருக்கும். தலையில் முன்பக்கம் மயிர் இல்லை. பின்பக்கம் ஒரு சிறு குடுமி. தலையைச் சுற்றி ஒரு துண்டினால் தலைப்பா கட்டியிருப்பார். அதற்கூடாகக் குடுமி வெளியே நீட்டியபடி இருக்கும். தேங்காய் அடிக்கும் போது அதிகமாகக் குடுமி குலைந்து விடும். தலைப்பாகைக்கு வெளியே நீட்டும். பாம்பு படமெடுத்து ஆடுவது போன்று அது தாளம் போடும். செல்லண்ணை காலையில் வீட்டில் இருந்து கிளம்பும் போது நெற்றி நிறைய விபூதியுடன் தான் கிளம்புவார். பின்னர் இரவு படுக்கைக்குத் தான் வீடேகுவார்.

வெள்ளை வேட்டிதான் அண்ணை கட்டியிருப்பார் ஆனால் அது எந்த நேரமும் மடித்து சண்டிக்கட்டாகக் கட்டப்பட்டிருக்கும். நிலத்தில் இரண்டு கால்களிலும் குந்தியிருந்தபடிதான் அண்ணன் கைத்தேங்காயால் எதிராளியின் தேங்காயை நொறுக்குவார். வேட்டி மடித்துக் கட்டியிருப்பதால் பிற்புறத்தில் நின்று பார்ப்போருக்கு அண்ணனின் கோவணமும் அரைக்குண்டியும் தரிசனம். கைப்பலமோ தேங்காயின் வைரமோ தெரியாது அண்ணன் அடிக்கின்றபோது எதிராளியின் தேங்காய் சிதறித்தான் போகும். ஆனால் ஆள் ஒன்றும் திடகாத்திரமானவராயில்லை. விலா எலும்புகள் அவரது வெற்றுடலில் புடைத்துக் காணப்படவே செய்தன. அண்ணனுக்கு உடல் வலுவிலும் பார்க்க மன வலு அதிகம் என்பார்கள். அண்ணனுக்குக் குடும்ப பாரம் இல்லை. பிள்ளை குட்டிகள் இல்லை. 'எனக்கு நீ உனக்கு நான் என வாழ்ந்த கணவன் மனைவியை காலன் திடீரென பிரித்து விட்டான். மார்புப் புற்று நோய் என்றார்கள். பற்றிப் பரந்து விட்டது என்றார்கள். காலன் கொண்டு போய்விட்டான். அண்ணை மாய்ந்து விட்டார். செல்லண்ணை எமது உள்ளூர் சங்கக் கடையினில் சாமான் நிறுத்துக் கொடுக்கும் தொழில் பார்த்தார். ஏதோ சம்பளம் அவருக்கும் அவரது மனைவிக்கும் குடும்பம் நடத்துதற்குப் போதுமானதாகி இருந்தது. மனைவி இறந்ததும் செல்லண்ணை கடைத் தொழிலையும் துறந்து விட்டார். ஆனால் அவர் உணவுக்கு என்றுமே திண்டாடியதில்லை. ஊரவர்கள் வீடுகளில் தொட்டாட்டு வேலைகள் செய்வார்.

ஆகவே அவர்கள் அந்த வேளைச் சாப்பாட்டுடன் ஐந்தோ பத்தோ கொடுப்பார்கள். அதெல்லாம் இருக்காவிட்டால் இருக்கவே இருக்கிறது சின்னத்தம்பி கடை. வெறும் தேத்தண்ணிக்கும், காய்ந்த வடைக்குமா பஞ்சம். காலம் ஓடுகிறது.

தனித்த மரமாகிவிட்ட அண்ணை இப்படி இளமட்டங்களுடன் தாச்சி, போரடித்தல் என்று காலத்தைக் கழிக்கிறார். இப்படியான போட்டிகள் நடைபெறும் நாட்களில் மாத்திரம் அண்ணை ஒரு சிறிதளவு உசார் ஏற்றிக் கொள்வார். ஆனால் என்றுமே அளவுக்கு மிஞ்சியதுமில்லை. அநாகரிகமாக நடந்ததுமில்லை. ஆகவே அண்ணை ஊரவர் மதிப்பில் உயர்ந்து நின்றார். எல்லோர் வீடுகளுக்கும் அவர் செல்லப் பிள்ளை

அவரது கைத்தேங்காயைப் பற்றித்தான் சிலருக்குச் சந்தேகம் எழுந்தது. வேறு பலர் மரக்கட்டையைத் தேங்காய் போலச் செதுக்கிப் பாவிக்கிறார்கள் என்ற கதை எழுந்ததால் அண்ணையும் அத்தகைய ஏமாற்று வித்தை செய்கிறாரோ என்ற ஐயம் எதிராளிகளுக்கு ஏற்பட்டதுண்டு. அண்ணை "எனது தேங்காயைத் தாராளமாகப் பாருங்கள் சந்தேகத்தினைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று கொடுத்து விடுவார். நாக்கினை ஒரு பக்கமாக நீட்டி இரண்டு தாடைகளாலும் அதனைக் கடித்தபடி அண்ணன் எதிராளியின் தேங்காயினைக் குறி வைத்து ஓங்கி அடித்தார் என்றால் அத்தேங்காய் கதி அதோ கதிதான்.

தென்னை (Cocos nucifera) ஒரு தனிப் பிரகிருதி. கமுகு சார்ந்த குடும்பத்தினைச் சேர்ந்தாலும் Arecaceae குடும்பத்தினைச் சேர்ந்தாலும் கூட அதற்கு நெருக்கமான பந்தமோ பாசமோ உள்ள வேறொரு தடி மரத்தினைச் ( Palm) காண முடியாது. பல்வேறு இனங்களைக் காணக் கூடியதாக இருந்தாலும் சாதாரணமாக 30 அடி உயரம் வளரக் கூடிய மரம் எனலாம். பனை மரத்திற்கு அடுத்ததாக தென்னையின் பகுதிதான் ஒவ்வொன்றுமே உபயோககரமானது என்பார்கள். வடமொழியில் தென்னையைக் கற்பக விருஷ்சம் என்கிறார்கள்.

*நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் எனவேண்டா - நின்று*
*தளரா வளர் தெங்கு தானுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்*

என்பது ஔவையார் வாக்கு. தான் உண்ட நீரை வட்டியும் முதலுமாகத் தென்னை தருவதை அன்றைய ஔவையார் கூறுவதற்கு அவருக்கு விஞ்ஞான அறிவு போதியது இருந்திருக்கவில்லை.


தேங்காயின் உள்ளே காணப்படும் இளநீர் குடிப்பதற்கு மிக அருமையானது. அதில் கொழுப்பு இல்லை நைதரசன்(N), பொஸ்போரஸ் (P) மக்னீசியம்( Mg), கல்சியம் (Ca) போன்ற மூலகங்கள் கரைசலாகக் கரைந்து உள்ளன.

- இளநீர் பாலிலும் பார்க்க அதிக போசாக்குத் தன்மையுடையது (கொழுப்பு இல்லை, கொலஸ்ரறோல் இல்லை).
- இளநீர் தோடம்பழச் சாற்றிலும் அதிகம் போசாக்குடையது (கல்சியம் குறைவு).



90ம் பக்கம் பார்க்க...


## கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# வேலிக்குக் கிட்ட...

89ம் பக்கத் தொடர்ச்சி...

- குருதிப் பரிமாற்றத்தில் குருதிக்குப் பதிலாக இதனை உபயோகிக்கலாம் (குருதியின் நீர்ப்பாயமும் இளநீரும் ஒரே தன்மையானவை).
- இளநீர் சமச்சீரான நீரினைக் கொண்டது. குருதியினது நீர்ப்பாயத்தினை ஒத்தது.

தென்னை பொலினேசியா (நியூசீலாந்திற்கும் அமெரிக்காவின் ஹவாய் பகுதிக்கும் இடையேயானது) பகுதியில் இருந்துதான் இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும் என்கிறார்கள். Coconut என்ற ஆங்கிலப் பெயர் வந்தது சற்று விசித்திரமான கதை. போர்த்துக்கேசிய தேசாந்தரிகள் இந்தியாவிற்கு வந்த பொழுது காய்ந்த மண்ணிறத் தேங்காயப் பொச்சினைச் சிலிப்பியபடி கண்டார்களாம். தமது ஊரின் 'கொக்கோ' என்ற பேய் ஒன்றினை நினைவூட்டியதால் தேங்காயைக் கொக்கோ என அழைத்தார்களாம். தேங்காயின் விதையைக் கண்ட வெள்ளைக்காரர் கொக்கோவுடன் 'நட்'டினைச் சேர்த்து விட Coconut என்ற பெயர் அதற்குச் சூட்டப்பட்டு விட்டது.

தென்னை மரத்தினை olygamomonoeceous என்பார்கள். அதாவது பல்புணரி ஒற்றைத் தாவரம் எனலாம். தென்னம்பூவினிலே பூக்கள் மஞ்சரிகளாகக் காணப் படுகின்றன. பூக்கள் ஓரிலிங்கப் பூக்களாக உள்ளன. அதாவது ஆண்பூ வேறாகவும் பெண்பூ வேறாகவும் காணப்படுகின்றன. ஆனால் ஒரே மஞ்சரியில் ஆண்பூவும் பெண்பூவும் காணப்படும் அடிப்பகுதியில் பெண்பூ இருக்க அதற்கு மேற் பகுதி முழுவதும் ஆண்பூக்கள் காணப்படும்.

எண்ணை தரும் விதைகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே தேங்காயில் கொழுப்புக் காணப்படுகின்றது. என்றாலும், அதில் பெருமளவு நிறைவான கொழுப்பு (Saturated fat) இருப்பது அதனை சமையலில் குறைத்து உபயோகிக்கவைக்கிறது. தேங்காயில் வாழைப்பழம், அப்பிள், தோடம்பழம் ஆகியவற்றிலும் பார்க்க குறைவாகவே வெல்லம் உண்டு. கூடுதலாகப் புரதம் உண்டு. அதில் இரும்புச் சத்து பொஸ்போரஸ் மற்றும் துத்தநாகம் ஆகியவை கூடுதலாகக் காணப் படும். ஆகவே தேங்காயினை முற்றாகவே ஒதுக்கத் தேவையில்லை. எண்ணையை விட்டுவிடலாம். பிட்டுக்குப் பாவிக்கலாம்.

தென்னையின் உபயோகம் பற்றி இங்கே குறிப்பிட வேண்டிய தேவையில்லை. ஆனால் பல நாடுகளில் தென்னை வீதியை அழகு செய்வதற்காக கரையோரங்களில் நாட்டப்பட்டுள்ளன. உப்பு தன்மையுடைய மண்ணினையும் சகிக்கும் தன்மை தென்னைக்கு உண்டு என்பதால் கடற்கரையோரங்களிலும் தென்னை நட்டு அழகுபடுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் பழுத்த பழம் விழுந்து மண்டையைப் பதம் பார்க்க விடாமல் காய்களையே வெட்டி வீழ்த்தி விடுகிறார்கள்.

குள்ளமான பல வகைகள் இப்போது தெரு ஓரங்களை அழகுபடுத்துகின்றன. Dwarf Yellow (மஞ்சள் மாலை தீவு), Dwarf Orange (செவ்விளனீர்) Dwarf Green (பச்சை மாலைதீவு) King Coconut (சூரியகாந்தி) Fiji Dwarf (வத்தாவி).

தேங்காயினைப் பற்றிய இலாபகரமான செய்திகள் யாவும் உங்களுக்குத் தெரியும் என இறுமாப்படையாதீர்கள். சிலருக்குத் தெரியாத ஒன்றினை இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். அது தென்னந்தும்புக்கிடையில் உள்ள தூசு பற்றிய செய்தி. தென்னையின் உபயோகம் இதன் மூலமாக மேலும் அதிகரிக்கிறது. தூசுப் பாசி பற்றிக் (Peat Moss) கேள்விப் பட்டிருப்பீர்கள். பாவித்துமிருப்பீர்கள். பலவிதமான கிழங்குகளை குளிர் காலத்தில் பாதுகாப்பதற்கு இந்தத் தூசுப் பாசியே கை கொடுக்கிறது. சாதாளை போன்ற தாவரம். சதுப்பு நிலங்களிலே காணப்படுகிறது. இதனை வாரி எடுத்துப் பொடியாக்கி விற்கிறார்கள். பலவகையான கிழங்குகளை குளிர்காலத்தில் பாதுகாக்கவும், பின்னர் அவற்றினை முளைக்க வைப்பதற்கான தளமாகப் பாவிப்பதற்கும் இந்த தூசுப் பாசி மிகவும் உபயோகமானது. ஆனால் கையாளும்போது நமது நாசியைத் துண்டால் மறைக்கவேண்டும். இல்லாவிட்டால் நுரையீரலில் போய்த்தான் அது தங்கும். அத்தனை துல்லியமானது. காறித் துப்பினீர்கள் என்றால் சளி மண்ணிறமாக இருப்பதைக் காணமுடியும். இதன் நீர் கொள்தன்மை, காற்றுக் கொள்தன்மை மிகவும் உச்சம் என்பதால் விதைகளை முளைக்க வைக்கும் ஊடகமாக இதனை விரும்பிப் பாவிப்பார்கள். நிலத்தினது தன்மையைக் கூட இதனால் மாற்றிக் கொள்ள முடியும். விதைகளின் வேர்கள் சுலபமாக ஊடே போகக்கூடியவாறு மண்ணினை மென்மையாக்குகிறது. நீர் கொள்தன்மை உள்ளமையால் போஷாக்கினைத் தேக்கி வைப்பதுடன் உலரும் தன்மையும் குறைகிறது. ஆனால் இதனை அறுவடை செய்ய வேண்டுமே போதியளவு பெறுவது கஷ்டம். தென்னந் தும்புத் தூசு இப்போது விவசாயிகளுக்குக் கை கொடுக்கிறது. பொச்சு மட்டையிலிருந்து கயிறு திரிப்பதற்காக தும்புகளை எடுத்த பின்னர் மிஞ்சுவது தான் இந்த தூசு. அதனை பாசித்தூசுக்குப் பதிலாக உபயோகிக்கலாம் என விவசாயவியலாளர்கள் (Agriculturalists) அறிவித்துள்ளார்கள். இதன் நீர் கொள்தன்மையும் போஷாக்கு மூலகங்களைப் பேணும் தன்மையும் நீர் மற்றும் காற்றுக் கொள்தன்மையும் பாசித் தூள் போலவே உள்ளதாம். மேலும் இது கெதியில் உக்கி விடமாட்டாதாகையால் இதனை உபயோகிப்பதால் ஏற்படும் அனுகூலம் நீண்டகாலம் நிலைத்திருக்கும் என்பதுடன் பாசியைப் பெரும் அளவினிலே அறுவடை செய்து அதனை முற்றாகவே ஒழித்து விடுவதிலிருந்து மீளமுடிகிறது.

எனது ஊர் சண்டிலிப்பாய். பெரிய வயல் வெளி. சில வயல்களில் கிணறு இருக்கும் பெரிய குளம் ஒன்று வழுக்கை ஆற்றின் செல்வழியில் உண்டு. மாரிகாலம் என்றால் மழை கொட்டிற்றென்றால் வயல் முழுவதுமே நிரம்பி பெரிய கடல் போன்று காட்சி தரும். கிணறுகளின் தொப்பிக் கட்டுகளையும் தண்ணீர் மூடிவிடும். ஆடுகால்களையும் துலாக்களையும் கொண்டு தான் கிணறுகள் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். அண்ணர் தரவளிக்குக் கொண்டாட்டம். துலாவின் உச்சியில் நின்று கிணற்றுள் குதித்துக் கும்மாளம் அடிப்பார்கள். என் தரவளிகள் ஆ! எனப் பார்த்துக் கொண்டு நிற்போம். அப்போ எங்களுக்கு நீந்தத் தெரியாது. இங்கேயும் செல்லண்ணை எமது உதவிக்கு வந்தார். நாம் ஒரு நான்கைந்து பேர்கள். ஒவ்வொருவரும் இரண்டு ஓல்லித் தேங்காய் சம்பாரித்தால் எங்களை கண்ணகை அம்மன் கோவில் பூவலுக்குக் கூட்டிச் சென்று நீச்சல் அடிக்க பழக்கி விடுவதாகக் கூறினார். ஒல்லித் தேங்காய் தேடுவது ஒரு பிரச்சினை. அம்மாவிடம் பூவலில் போய் நீந்தப்பழகுவதற்கு உத்தரவு பெறுவது அதனிலும் மேலான பிரச்சினை. சாப்பிடமாட்டேன் என அடம் பிடிப்பது நான் கையாளும் போராட்ட முறை. ஆரம்பத்தில் அம்மா அதற்கு மசியாமல் இருப்பது போல நடித்தாலும் அவருக்கு வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாமல் போனது. அடிபோட்டால் நான் ஊர் முழுவதையும் ஓலம் வைத்துக் கூட்டி விடுவேன் ஆகவே இறுதியில் அம்மா தான் இளகிக்கொடுக்க வேண்டிய நிலை. செல்லண்ணையும் எத்தனையோ உத்தரவாதம் கொடுத்த பின்னர் 'உன்னை நம்பித்தான் பிள்ளையை விடுகிறேன்' என்ற அம்மாவின் எச்சரிக்கையுடன் கூடிய அனுமதி. அடுத்ததாக ஒல்லித் தேங்காயுக்கு எங்கே போவது? ஏப்படியோ எல்லார் வீட்டுக் கோடியையும் தேடி எல்லோருக்கும் இல்லா விட்டாலும் ஒரு சிலருக்காவது ஒல்லித் தேங்காய் சம்பாரித்துச் செல்லண்ணனிடம் கொடுத்தோம். அவர் அழகாய் இரண்டு இரண்டு தேங்காய்களை நாரினால் இணைத்து மிதப்பிகள் தயார் செய்தார். வெற்றி வீரர்களாக அவர் பின்னே நாங்கள் ஐவர் கண்ணகை அம்மன் பூவலை நோக்கி அணியாகச் சென்றோம். ஆந்தப் பூவல் கண்ணகை அம்மனுக்குத் தான் உரியது. ஆனால் கண்ணகை அம்மன் வீதிவலம் வருவதில்லை. அங்கே திருவிழாவும் நடப்பதில்லை. அருகே உள்ள மீனாட்சி அம்மன் கோவிலில்தான் திருவிழா நடக்கும். தீர்த்தத்தின் அன்று அம்மனை இந்தப் பூவலில் தான் கொண்டு வந்து குளிப்பாட்டுவார்கள். பூவலின் நடுவிலே ஒரு இளைப்பாறு மண்டபம் உள்ளது. படிக்கட்டிலிருந்து மண்டபம் செல்லும் வரைதான் தெளிவாயிருக்கும். ஏனைய பகுதிகள் எல்லாம் தாமரைக்கொடிகள். ஆகவே நீந்துபவர்கள் அந்தத் தெளிவான பகுதிக்குள் தான் நீந்தலாம். 'நம் தரவளி' கத்துக் குட்டிகள் மாத்திரம் தான் இங்கே நீந்துவார்கள். அண்ணன்மாருக்குத் தாராளமாக நீச்சல் அடிப்பதற்கு வயல் வெளிக் கிணறுகள் உள்ளன.

பூவலை அடைந்ததும் எல்லோரும் நீச்சல் அடிப்பதற்கான உடுப்பு மாற்றிக் கொண்டு வந்தோம். அண்ணன் எங்களுக்கு முதல் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விளக்கம் கொடுத்தார். முதலில் நாரின் மேல் நெஞ்சை வைத்தபடி இருபுறமும் ஒல்லித் தேங்காய் இருக்க காலால் தண்ணீரை உதைத்து கைகளால் நீரினை இருபுறமும் வாரவேண்டும் என்றார். ஓல்லித் தேங்காய்கள் போதுமானது இல்லாமையால் அண்ணனின் நேரடிப் பார்வையிலே இதனை ஒவ்வொருத்தராகச் செய்து காண்பித்தோம். இரண்டு மூன்று நாட்களில் நாம் உதவி இல்லாமலே நீச்சல் அடிக்கத் தொடங்கி விட்டோம். ஆனால் அண்ணன்மாரைப் போல் கிணற்றுக்குள் குதிப்பதற்கான உத்தரவு மாத்திரம் கிடைத்தபாடில்லை. அடுத்த வருட மழைகாலம் மட்டும் பொறுத்திருக்கலாம். அதற்கு முன்னர் சித்திரை வருடத்துப் போரடித்த பின்னர் கீரிமலையில் ஒரு கலக்குக் கலக்கலாம் தானே என்று மனதினைச் சமாதானம் செய்தோம்.

சித்திரை வருஷமும் வந்தது. இம்முறை ஒரு கட்சிக்கு செல்லண்ணை தலைமை ஏற்றார். மறுகட்சிக்கு நமது வெள்ளை வேட்டித் தம்பையா வந்து சேர்ந்துவிட்டார் நாகமணியின் பாளை சீவும் கத்தி விழுந்து அவரது வலது தோள் மூட்டு வெட்டப்பட்டது ஞாபகம் இருக்கும் என எண்ணுகிறேன். ஆகையால் தம்பையா வலக்கையால் அடிக்க மாட்டார். இடக் கையால் தான் போரடித்தார். போட்டி நடந்தது ஆனால் வழக்கத்துக்கு மாறாக இந்த முறை செல்லண்ணையின் பக்கம் தோல்வியுற்றது. தம்பையா இரண்டு ஊரித் தேங்காய்களைக் கொண்டு வந்து உருட்டிவிட்டதே தோல்விக்குக் காரணம். ஒல்லித் தேங்காயில் உள்ள ஊரியை எப்படியோ தம்பையா உரித்தெடுத்துவிட்டார். அதை உருட்டிவிட செல்லண்ணை அடிக்கும் போது அது மண்ணுள் புதைந்து விடும். உடையமாட்டாது. செல்லண்ணை "அது தப்பு, உண்மையில் அது தேங்காய் இல்லை" என்றார். தம்பையாவோ "அது தேங்காய் தான் வெளிப்புறத்தினைப் பாருங்கள் தும்பு நரம்பு காணப்படவே செய்கிறது" என்றார். வெற்றி தம்பையா பக்கமாய் போனது.

செல்லண்ணைக்குத் தாங்கவில்லை. இருவருக்கும் பேச்சு வார்த்தை முற்றியது தம்பையா மிகவும் கீழ்தரமாக செல்லண்ணையைப் பேசிவிட்டார். வீடு வீடாகச் சென்று கோப்பை நக்குவதாக இழித்துப் பேசிவிட்டார். செல்லண்ணைக்கு மாத்திரமல்லாமல் அங்கு நின்றோருக்கும் அது பொறுக்கவில்லை. செல்லண்ணை வாயடைத்து நின்றார். தம்பையா இப்படிப் பேசுவது அநாகரிகம் என்றார்கள். தம்பையாவோ இன்னும் உரத்த குரலில் "நான் சொன்னதில் என்ன தப்பு அவன் வீடு வீடாக கோப்பை நக்குபவன் தானே" என்று சொல்லியபடி போய்விட்டார். நின்றவர்கள் செல்லண்ணையைத் தேற்றினார்கள். எல்லோரும் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர் செல்லண்ணையும் வீட்டுக்குச் சென்றார்.

மறுநாட் காலை ஊரெல்லாம் சாரி சாரியாக எங்கள் தோப்பினை நோக்கி ஓடிச்சென்றது. அங்கே, செல்லண்ணையுடைய உடல் எங்கள் இலுப்பை மரக் கொப்பு ஒன்றில் தொங்கிக் கொண்டிருந்தது. "அவன் மானஸ்தன். இந்தக் குடிகாரன் அப்படி இழிவாகப் பேசியதைத் தாங்கமுடியாமல் இப்படிப் பண்ணி விட்டான்" எனப் பலர் பேசினார்கள். தம்பையாவுக்குச் செய்தி எட்டியதோ தெரியவில்லை. அவரை அந்தப் பக்கம் காணவில்லை.



kanagasabapathy.p@thaiveedu.com

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
- 2005 ஆண்டு JANUARY க்குப்பின் EI பெற்றவர்கள் ✔
- 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்

INSTRUCTORS
★ PUSHPA ★ SP
MORE THAN 20 YEARS OF TEACHING EXPERIENCE

CERTIFICATE COURSES
Buy One Get One Free
Windows, Key Boarding, Data Entry, Word, Excel, Power Point
Access, Outlook, Quick Books, Simply Accounting, Accpac
Certificate Will Be Issued On Successful Completion

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208 ( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH

www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


Atticare
atticare.com
சக்திவலு கட்டணங்களில்
40% வரை மிச்சப்படுத்துங்கள்
உங்கள் வீட்டின் அட்டிக் ஏன் மிக முக்கியமானது?
ஒழுங்காக இன்சுலேசன் செய்யப்பட்ட அட்டிக் மூலம் வெப்ப மற்றும் குளிராக்கல் கருவியின் செயல்பாட்டு செலவினைக் குறைக்கலாம். இத்துடன் அக்கருவின் ஆயுளையும் உங்கள் வீட்டின் பெறுமதியையும் அதிகரிக்கின்றது
அட்டிக் உங்கள் வீட்டில் மிகச்சரியாக இன்சுலேஷன் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு பகுதியாகும். ஒழுங்காக இன்சுலேஷன் செய்யபட்ட அட்டிக் குளிர்காலத்தில் வெப்பத்தையும் வெப்பகாலத்தில் குளிரையும் வெளிவிடாது பாதுகாக்கும்
Atticare
atticare.com
Hot in winter. Cool in summer
Attic Insulation
416.556.6115
info@atticare.com
Reduce heat loss through attic
உங்கள் வீட்டின் சக்தி சிக்கனத்தை தரம் உயர்த்துவதன்மூலம் உங்கள் வீட்டின் சக்திவலு கட்டணங்களை குறைப்பதுடன் வீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும்
உடனே அழையுங்கள்
Attic Insulation
416.556.6115
info@atticare.com
உங்கள் சக்திவலு செலவை கட்டுபடுத்துவதற்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் வீடு சக்தி சிக்கனம் மிக்கதாக இருப்பதற்கு அட்டிக் இன்சுலேஷனே சிறந்தது
அட்டிக்கூடாக வெப்பம் வெளியேறுவதை குறையுங்கள் | வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவை குறையுங்கள் | கூரை உக்குவதையும் பூஞ்சனம் பிடிப்பதையும் தவிருங்கள்
சிறந்த அட்டிக் - சொகுசான வாழ்க்கை
Hot in winter. Cool in summer

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 14

K.S. பாலச்சந்திரன்



# எதிர்பார்க்காத 'பளார்'

ஆனந்தவிகடன் சஞ்சிகையில் சிறுகதைகள், முத்திரைக்கதைகள் என்று வெளிவந்து வாசகர்களை கவர்ந்த காலம். ஜெயகாந்தன், தாமரை மணாளன், அனுராதா ரமணன், சிவசங்கரி, இந்துமதி, போன்ற பிரபலங்களுடன் சமகாலத்தில் எழுதிக் கொண்டிருந்தவர்தான் பிலஹரி என்ற பிரபல எழுத்தாளர்.

எழுத்தாளர் - நடிகரான வரணியூரான் எஸ்.எஸ். கணேசபிள்ளை இந்த பிலஹரியின் சிறுகதையொன்றை நாடகமாக்கி, அதற்கு 'பாசச்சுமை' என்று பெயரிட்டு தனது நாடகமன்றமான யாழ்கலையரங்கத்தின் தயாரிப்பாக மேடையேற்ற முடிவு செய்தார். நானும் யாழ்கலையரங்கத்தின் நாடகங்களில் அப்போது தவறாமல் நடித்துக்கொண்டிருந்தேன்.

'பாசச்சுமை' நாடகத்திற்கான நடிகர்களைத் தேர்வுசெய்தலில்தான் ஒரு பிரச்சினை எழுந்தது. வழக்கமாக யாழ்கலையரங்கத்தின் நாடகங்களில் 'தகப்பன்' வேடங்களில் இரண்டு கலைஞர்களே நடித்துவந்தார்கள். ஒருவர் எஸ்.எஸ்.கணேசபிள்ளை.

அநேகமான நாடகங்களில் முதியவராக நடித்து அலுத்துப்போன கணேசபிள்ளை, இந்த நாடகத்தில் சற்று இளமையான பாத்திரத்தில் (அதுவும் அண்ணன் பாத்திரம்தான்) நடிக்க ஆசைப்பட்டார். அவருக்கு அப்பாவாக நடிக்க ஒருவர் வேண்டும். ஆனால் மற்ற 'அப்பா' நடிகரோ "நானாவது இவருக்கு தகப்பனாக நடிப்பதாவது" என்று நிர்த்தாட்சணியமாக மறுத்துவிட்டார்.

நான் அப்போது நகைச்சுவை வேடங்களில்தான் நடித்துவந்தேன். ஆரம்பகாலத்தில் இது சந்தோசமானதாகத்தான் இருந்ததென்றாலும் மாறுபட்ட பாத்திரங்களில் என் ஆற்றலைக் காட்டவேண்டுமென்ற விருப்பத்துடன், சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன்.

யார் கணேசபிள்ளைக்கு தகப்பனாக நடிப்பது? என்ற சிக்கல் பற்றி அறிந்தவுடன், நானே அவரிடம் நேரில்போய், "நான் உங்களுக்கு தகப்பனாக நடிக்கிறேன்" என்றேன். கணேசபிள்ளை ஆரம்பத்தில் அதற்கு சம்மதிக்கவில்லை. எனக்கு அப்போது 29 வயதுதான். கணேசபிள்ளை என்னைவிட 7 வயது மூத்தவர். அதுதான் தயக்கத்திற்கு காரணம். நான் விடாப்பிடியாக நின்று அவரைச் சம்மதிக்கவைத்தேன்.

'பாசச்சுமை' நாடகத்தில் எனக்கு வருவாய் குறைந்த முதிய தபாற்காரர் பாத்திரம். மூத்தமகன் (கணேசபிள்ளை) ஒரு கூலித் தொழிலாளி. இரண்டாவது மகன் ஒரு பட்டதாரி. பணக்காரகுடும்பத்தில் திருமணம் செய்து கொண்டவர். (பின்னாளில் இலண்டன் பிபிசி வானொலியில் அறிவிப்பாளராக பணியாற்றிய விமல்சொக்கநாதன் இந்தப் பாத்திரத்தில் நடித்தார்) மூன்றாமவர் ஒரு மகள். சாரதா என்பவர் நடித்தார்.

பணக்கார மாப்பிள்ளையாகிவிட்ட இளைய மகன் அண்ணனையும், அப்பாவையும் உதாசீனப்படுத்தும் காட்சிகள் வந்தபோது, எதிர்பார்த்தமாதிரியே, வெள்ளவத்தை ராமகிருஷ்ணமண்டபத்தில் நாடகம் பார்த்த ரசிகர்கள் அடிக்கடி கண்ணீர் விட்டு, தங்கள் கைக்குட்டைகளை நனைத்துக்கொண்டார்கள். (நாடகம் முடிந்தபின், "நாடகம் எப்படியிருந்தது" என்று என் அலுவலக நண்பரிடம் கேட்ட பொழுது, அவர் நனைந்த கைக்குட்டையையே காட்டினார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்)

'பாசச்சுமை' நாடகத்தில் ஒரு முக்கியமான கட்டம். (வழக்கமாக அந்தக்காலத் தமிழ்ப் படங்களில் வருவதைப்போல) பணக்காரனாகிவிட்ட திமிரில் மிதக்கும் இரண்டாவது மகன், தனது தங்கையை தனது கார்டிரைவர் காதலிக்கிறான் என்றறிந்து, டிரைவரை 'கண்டபடி' திட்டிபேசி, டிரைவர் கோபமாக பதிலுக்கு பேசி, கார்சாவியை எறிந்துவிட்டு போகும் காட்சி.

ஒத்திகையின்போது இரண்டாவது மகனாக நடித்த விமல் சொக்கநாதன் ஒழுங்காகக் கோபித்து, தனது வசனங்களை ஒழுங்காகப் பேசி, தனது பங்கை சரிவரவே செய்தார். ஆனால் கார் டிரைவராக நடித்தவர் நாடக மேடைக்கு புதுமுகம். சிறியவர். சிவந்த தோற்றத்துடன், அந்த இளைஞர் எந்நேரமும் சிரித்தமுகத்துடன் காட்சியளித்தார். கோபம் என்ற சங்கதியே அவருக்கு தெரியாது போலிருந்தது.

இயக்குனர் கணேசபிள்ளையும் சாடைமாடையாக சொல்லித்தான் பார்த்தார். ஆனால் அந்த இளைஞர் கஷ்டப்பட்டு 'உச்சஸ்தாயி'ல் வசனங்களைப்பேச முயற்சித்தாலும் கோபத்தின் சாயலே அவர் முகத்தில் வரவில்லை.

நாடகத்தின் முக்கியமான கட்டம் இப்படி 'டல்லாகி' போய்விடுகிறதே என்ற கவலை எனக்கும், விமல் சொக்கநாதனுக்கும் இருந்தது. அப்போதுதான் எனக்கு ஒரு யோசனை வந்தது. அதை ரகசியமாக விமலிடம் சொல்லி வைத்தேன்.

இதுதான் எனது யோசனை. ஒத்திகைகளின் போது அவர் நடிக்கிறமாதிரி நடிக்கட்டும். விட்டுவிடுவோம். ஆனால் ராமகிருஷ்ண மண்டபத்தில் மேடையேற்றத்தின்போது விமல் அந்தக்காட்சியில் கோபமாக வசனங்களைப் பேசிக்கொண்டே, டிரைவராக நடித்த அந்த இளைஞருக்கு அருகில் போகவேண்டும். வசனங்களை பேசிமுடித்ததும், அவர் எதிர்பார்க்காதவகையில் அவரது கன்னத்தில் ஒரு 'பளார்' (அறைதான்) கொடுக்கவேண்டும். அதற்குப்பிறகு அவர் நிச்சயமாக கோபத்துடன் நடிப்பார் என்று தீர்மானித்துக்கொண்டோம். எங்கள் இருவரைத்தவிர இந்தத் திட்டம் இயக்குனர் உட்பட யாருக்கும் தெரியாது.

இந்த 'பளார்' சங்கதியை தென்னிந்திய பிரபல இயக்குனர்கள், (பாரதிராஜா போன்றவர்கள்) நடிப்புவராத புதுமுகங்களுக்கு வழங்கி நடிக்க வைத்ததாக செய்திகள் பின்னாளில் அறிந்தோம். ஆனால் அப்போது இது எங்கள் 'சுயகண்டுபிடிப்பு' தான். நம்புங்கள்.

நாடகமேடையேற்ற நாளும் வந்தது. நானும், விமலும் 'சதிகாரர்களைப்'போல நடக்கப் போவதை மீளாய்வு செய்து கொண்டோம். நாடகம் தொடங்கியது. மூத்தமகன் கஷ்டப்பட்டு மூட்டைதூக்கி, கூலிவேலைசெய்து, தம்பியை படிக்கவைக்கிறார். நான் (தகப்பன்) சோகவசனங்கள் பேசிக்கொண்டே, கிழிந்த பெனியனுடன் மேடையில் தோன்றி, முன்னர் குறிப்பிட்டதைப்போல பார்வையாளர்களைக் கண்ணீரால் கைக்குட்டைகளை நனைக்க வைத்துக்கொண்டிருந்தேன். என்மகளாக நடித்தவரும், கார்டிரைவராக நடித்தவரும் தனியாக (மேடையில்தான்) சந்தித்து காதல் வசனங்களை ஒழுங்காகப்பேசினார்கள். காட்சிகள் மாறின. கரகோஷங்கள் அவையிலிருந்து விட்டு, விட்டுக் கேட்டன.

இத்தனைக்கும் மத்தியில் எனக்கும், விமலுக்கும் ஒரு குறுகுறுப்பு இருந்துகொண்டேயிருந்தது. (உங்களுக்கு புரிந்திருக்கும்)

எப்போது அந்தக் காட்சி வரும்? எங்கள் திட்டம் சரிவருமா? எதிர்விளைவு என்னவாக இருக்கும்? இப்படிச்செய்ததற்காக இயக்குனர் கோபித்துக்கொள்வாரா? இப்படியெல்லாம் நாங்கள் இருவரும் நினைத்துக்கொண்டிருந்தோம்.

அந்தக்காட்சியும் வந்தது. இளையமகனாக நடித்த விமல் சொக்கநாதன், தங்கையையும், டிரைவரையும் ஒன்றாக பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, தங்கையைப் போகச் சொல்லிவிட்டு, டிரைவரை பேசத்தொடங்கினார். இந்தக்காட்சியில் வேறோருவரும் மேடையில் இல்லை. நான் உட்பட மற்ற நடிகர்கள் எல்லோரும் மேடையின் பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தோம்.

விமல் சொக்கநாதன் பேசிக்கொண்டே அந்த டிரைவருக்கு அருகில் போனார். நடக்கப் போவதை அறியாத அப்பாவியாக அந்தப் புதுமுக நடிகர் நின்றிருந்தார். அப்போதும் அவர் முகத்தில் அதே சிரிப்பு.

வசனம் முடிந்தது. கை 'வளமாக' இருக்கும்படி விமல் சற்றுத்திரும்பிக்கொண்டார். நான் கண்களை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அடுத்த கணம் 'பளார்'

என்னைத்தவிர எல்லோருமே திகைத்துப் போய் நின்றார்கள். "நான் இப்படி அடிக்கச் சொல்லவில்லையே" என்பதுபோல இயக்குனர் வினோதப்பார்வை பார்த்தார். பிறகு நாங்கள் திட்டமிட்டபடியே நடந்தது.


அந்தப்புதுமுக நடிகர் முகம் 'செக்கச்செவேல்' என்று சிவந்துபோக, கண்கள் கலங்கிப்போய், கோபம் முகத்தில் கொப்பளிக்க, வசனம் பேசக்கூட முடியாமல், "நீரும் உம்மடை காரும்... இந்தாரும் வைத்துக்கொள்ளும்" என்று எதையோ பேசி, கார்ச்சாவியை முழு வேகத்துடன் மேடையில் விட்டெறிந்தார். சாவிகள் சிதறிப்பறந்தன. அரங்கில் ஒரே கரகோஷம். ஆரவாரம். அவரின் நடிப்புக்காகத்தான்.

அதற்குப்பிறகு நான் அந்த இடத்தில் நிற்கவில்லை. மேடையின் பின்பக்கத்தில் உள்ள ஒப்பனையறையொன்றுக்குள் புகுந்துகொண்டு, ஒப்பனையைச் சரிசெய்துகொள்வதுபோல 'பாவனை' செய்து கொண்டிருந்தேன். சில வினாடிளுக்குள் விமல் ஓடிவந்து, அந்த அறைக்குள் ஒளித்துக்கொண்டார். கதவு தட்டப்பட்டது.

திறந்து பார்த்தேன். அந்த நடிகர்தான். சிவந்த கன்னத்தில் விமல் கைவிரல் அடையாளம் பதிந்திருந்தது. "எனக்கு ஏன் அடித்தவன்.. நான் இன்றைக்கு விடமாட்டன்" என்று கண்கலங்க நின்ற இளைஞனை சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தேன்.

நல்லகாலமாக அதற்குப்பிறகு அவருக்கு காட்சியிருக்கவில்லை. ஒருமாதிரி இருவரையும் சந்திக்கவிடாமல் பார்த்துக்கொண்டு, நாடகத்தை நடத்திமுடித்தோம். விமல் உணர்ச்சிவசப் பட்டு அடித்துவிட்டார் என்றுதான் இயக்குனரும், மற்ற நடிகர்களும் நினைத்துக்கொண்டார்கள்.

இந்தச்சதியில் என் பங்களிப்பு யாருக்கும் தெரியாமல் போய்விட்டது. அதனால் தப்பினேன். அந்தப்புதுமுக நடிகர் யார் என்று கேட்கிறீர்களா? இலங்கைவானொலியிலும்,, ரூபவாகினி தொலைக்காட்சியிலும் அறிவிப்பாளராக பணியாற்றி முக்கிய பதவிகளையும் வகித்தவர், கனடாவில்
ரி.வி.ஐ செய்தி
அறிவிப்பாளர்
வி.என்.மதியழகன்
தான் அந்த நடிகர்.




ksbala@thaiveedu.com


DON'T MISS
THE HONDA YEAR-END
SALES EVENT
The Honda YEAR-END $ SALES EVENT
LOW LEASE & FINANCE RATES
$
ACT NOW!
$
CASH REBATES
ON SELECT MODELS UP TO
$6,000†
$
அதீசன் (SHAN) சர்வானந்தன்
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465
†$2,500.00 price reduction available on new 2010 Civic Sedan and Coupe models (excluding Civic DX Sedans, model FA1E2AEX, FA1F2AEX, FA1E2AE4X); $3,000.00 price reduction available on new 2010 Civic LX Coupe and Sport Sedan models; $1,500.00 price reduction available on new 2010 Civic Si Sedan and Coupe; $3,000.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe 4-cylinder models (excluding Accord LX Sedan, model CP2E3AE); $2,500.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe V6 models; $2,500.00 price reduction available on new 2010 Accord Crosstour models (excluding Accord Crosstour EX-L 4WD Navi, model TF2H5AKN); $3,000.00 price reduction available on new 2010 CR-V models (excluding CR-V LX 2WD, model RE3H3AEY); $4,000.00 price reduction available on new 2010 Insight models; $5,000.00 price reduction available on new 2010 Ridgeline and Pilot models; $6,000.00 price reduction available on new 2010 Odyssey models (excluding Odyssey DX, model RL3H1AE which is available with a $2,000.00 price reduction). Price reduction amounts valid only on cash purchase transactions, and may not be combined with any other offer. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. Lease example based on new 2010 Civic DX-A MT Sedan, model FA1E2AE4X available through Honda Financial Services on approved credit. 2.4% lease APR for 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148.44. Down payment or equivalent trade of $4,950.00, first monthly payment and $0 security deposit due at lease inception. Total lease obligation is $13,779.89. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Offers valid from August 4th, 2010 through August 31st, 2010, at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers locations. Offers subject to change or cancellation without notice. Visit www.hondaontario.com or see your Honda retailer for full details.

from the firm foundations of creative photos

la photographie est un art



Karuna Photography

digimedia Creations Photography

- Wedding Photography
- Complete Online Workflow
- Online Slideshows
- DVD Slideshows
- Custom Designed Digital Albums
- Parent Albums/ iPhone Galleries
- Online Digital Proofs and Online albums Proofs
- E-Com Site
- Canvas and Metal Printing

facebook
www.facebook.com/digimediaphoto

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



செப்ரெம்பர் 18, 2010 - முருகன் கோவில் மண்டபத்தில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய வித்துவான் வேந்தனாரின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவில்.



செப்ரெம்பர் 25, 2010 - **2761 Markham** வீதியில் கட்டப்படும் **Sun City Plaza**வில் நடைபெற்ற **BBQ Party**யில்.




செப்ரெம்பர் 19, 2010 - கனடியத் தமிழர் பேரவையினரால் நடத்தப்பட்ட புற்றுநோய் ஒழிப்பு தமிழர் நிதிசேர் நடை நிகழ்வில்.



செப்ரெம்பர் 5, 2010 - **L'Amoreaux** பூங்காவில், ஈழம் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் **Under 6, Under 8** பிரிவில் வெற்றிபெற்ற **Cheetahs** வீரர்கள்.



செப்ரெம்பர் 24, 2010 - **JRS** கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில்.



நல்லூர் முருகன் மண்டபத்தில் இடம்பெற்ற 'தமிழ் இணையம்' கருத்துப் பரிமாறல் நிகழ்வில்



செப்ரெம்பர் 19, 2010 - நடைபெற்ற **PUMA 2010 - Track & Field Outdoor** நிகழ்வில்



செப்ரெம்பர் 19, 2010 - **Malvern Community Centre**ல் நடைபெற்ற வானவில் இராப்போசன விழா 2010 நிகழ்வில்.



செப்ரெம்பர் 04, 2010 - **Agincourt Community Centre**ல் இடம்பெற்ற தமிழ்ப்பிரியாவின் இரு சிறுகதைத்தொகுதிகள் வெளியீட்டு விழாவில்.



செப்ரெம்பர் 12, 2010 - நீதன் சண் தேர்தல் பரப்புரை அலுவலகத் திறப்புவிழாவில்.

**உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**


சுவை–தரம்–புத்துணர்வு
Hattan Tips Tea
416-548-8020
Quality & taste....
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


S.P.IMPORTERS
Furniture
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# குழந்தைகள் பாவம்

ஏதாவது ஒரு காலத்தில் இலங்கைக்கு போகும் போது, நான் சந்திக்க ஆசைப்படுகின்றவர்களின் பட்டியலில் முதலில் இருப்பவர்கள் இரண்டு பெண்கள். நான் அவர்களை முதலும், கடைசியுமாக பார்த்த போது அவர்கள் சின்னஞ்சிறு குழந்தைகளாக இருந்தார்கள். முதலாதவளுக்கு மூன்று மாசமும், இரண்டாதவளுக்கு மூன்று வயதும் இருந்திருக்கலாம். ஒருத்தி யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ்ச் சிறுமி, மற்றையவளோ தென்னிலங்கையை சேர்ந்த சிங்களச் சிறுமி. இவர்களது வாழ்வுகளை தலைகீழாக புரட்டிப் போட்ட, இரு வேறு சம்பவங்களின் மௌன சாட்சியாய் நான் இருந்திருக்கிறேன். அடிக்கடி நினைவில் வந்து போகின்ற அந்த துயர நிகழ்வுகளில் முதலாவது நடந்து போய் இந்த மாதத்துடன் சரியாக இருபத்து மூன்று வருடங்கள்.

அது 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்.

இந்திய படையினருக்கும், போராளிகளுக்கும் போர் மூண்ட மாதம். யாழ்ப்பாணம் எங்கும் குண்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்த காலம். மக்கள் கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்திருந்த நேரம். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஏறக்குறைய மூவாயிரம் மக்கள் அடைக்கலமாகியிருந்தனர். மக்களின் மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக St. John Ambulance தொண்டர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அதில் நானும் ஒருவனாய் இருந்தேன். உணவுத் தேவைகளை கொக்குவில் வாசிக சாலையைச் சேர்ந்த இளைஞர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். காலையில் தேநீர் தொடக்கம் இரவுச் சாப்பாடு வரைக்கும் மிகவும் ஒழுங்குமுறையாக பரிமாறிக் கொண்டிருந்தார்கள். சில பொது மக்களும் அந்த இளைஞர்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். அவர்களுள் உயரமான, பருத்த ஆகிருதி படைத்த ஒருவரும் அடக்கம். அவர் சுதுமலையைச் சேர்ந்த வில்லுப்பாட்டு குழுவொன்றில் கடம் வாசிப்பவர் என்று யாரோ சொல்வதை கேட்டிருக்கிறேன்.


ஒக்ரோபர் 25ம் திகதி, தீபாவளி நாளன்று, இந்தியப் படையினர் முகாமுக்கு அருகில் நகர்ந்து கொண்டிருந்தார்கள். மிக மிக அருகாமையில் துவக்குச் சூடுகளும், குண்டு சத்தங்களும் எல்லோரையும் பயப்படுத்திக் கொண்டிருந்த போதும், இந்தியப் படையினரை பற்றிய ஒரு நன்மதிப்பு பெரும்பாலோரிடத்தில் இருந்திருந்தது. கொக்குவில் புதுக்கோவில் வீதியால் இந்திய இராணுவ டாங்கி ஒன்று நகர்ந்து வந்து கல்லூரியின் வாசலின் முன்பாக நின்றது. இரு இராணுவ சிப்பாய்கள் அதிலிருந்து இறங்கி டாங்கியின் அருகே நின்று கொண்டனர். உள்ளே கல்லூரி கட்டட வாசலில் சில பொதுமக்கள் வாங்குகளில் இருந்து இராணுவத்தினரை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிப்பாய்களோ உள்ளே வருவதாக இல்லை. நல்லூர் கோயில் முகாமுக்கு இந்தியப் படையினர் சென்ற போது, அது அகதிகள் முகாம் என்பதை St. John Ambulance தொண்டர்களே தெளிவு படுத்த வேண்டும் என உத்தரவு போட்டார்கள் என்பது எங்களுக்கு முதலே தெரிந்திருந்தது. அதன்படி St. John Ambulance சீருடையில் இருந்த நானும், அப்போதைய ஈழநாடு பிரபல பத்திரிகையாளர் ஒருவரும் இராணுவத்தினருடன் கதைப்பதற்காக நடக்க ஆரம்பித்த தருணத்தில், அந்த இரு சிப்பாய்களும் டாங்கியினுள் மீண்டும் ஏறிக் கொண்டனர். அதன் பிறகு நடந்தது தான் மிகப் பெரிய துயரம். கொக்குவில் இந்துக் கல்லூரி குண்டுகளால் அதிர்ந்தது. வாசலில் வாங்குகளில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் அப்படியே இறந்து போயினர். என்னுடன் வந்த பத்திரிகையாளர் கையில் காயப்பட்டுப் போனார். கல்லூரி அதிபரின் காரியாலய சுவரொன்றின் பாதுகாப்பில் மரணத்தின் அழைப்பிலிருந்து தப்பினேன். வீழ்ந்து கிடந்த படி கண்முன்னே செத்து விழுந்து கொண்டிருந்த முகம் தெரிந்தவர்களையும், தெரியாதவர்களையும் பார்த்துக் கொண்டிருப்பதை விட எதுவும் செய்ய முடியாத நிலை. எட்டு மணித்தியால தொடர்ச்சியான கோரத்தின் பின் குண்டு மழை குறைந்த போது காயம்பட்டவர்களை கொண்டு வந்து இருக்கின்ற வசதிகளை கொண்டு சிகிச்சை அளிக்க தொடங்கினோம். எங்கள் குழுவில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணர், சில மருத்துவபீட மாணவர்கள், பத்து முதலுதவி தொண்டர்கள் இருந்தோம். இரவிரவாக காயப்பட்டவர்களை கவனித்து விட்டு, விடிந்தவுடன் ஒவ்வொரு வகுப்பறையாக சென்ற போது தான் அந்த அவலத்தை எங்கள் மருத்துவ குழுவினர் கண்டார்கள். வகுப்பறையின் கரும்பலகை இருந்த இடம் பெரிய ஓட்டையாக இருந்தது. அறையினுள் அத்தனை பேரும் இறந்து போய், எரிந்து போய் கிடந்தார்கள். அவர்களில் ஒருவர் நான் முதலில் சொன்ன சுதுமலையை சேர்ந்த வில்லுப்பாட்டுக்காரர். அவர் மட்டுமல்ல, கூடவே அவருடைய மனைவியும், ஐந்து சிறுபிள்ளைகளும். எல்லோரும் திகைத்துப் போனார்கள். மொத்தமாக அந்த இரவில் 40 பேர் வரை இறந்து போயிருந்தார்கள். திடீரென்று ஒரு குழந்தையை தூக்கிக் கொண்டு மருத்துவ அறைக்கு ஓடி வந்தார்கள். மூன்று மாதக் குழந்தை அது. உடல் முழுவதும் குருதியுறைந்து போய், அழுது கொண்டிருந்த அந்தக் குழந்தை வில்லுப்பாட்டுக்காரரின் கடைசி மகள் என்று சொன்னார்கள். அவள் மட்டும் எப்படி அந்த கோரத்திற்குள்ளால் தப்பினாள் என்று தெரியவில்லை. தாயோ, தந்தையோ தங்களின் உடல் மறைவில் அவளை பாதுகாத்திருந்திருக்க வேண்டும். ஓரிரவில் தனது சொந்தங்களை முற்றிலும் இழந்து போன சின்னக் குழந்தையை பார்க்கும் போதெல்லாம் கண்ணில் குருதி கொட்டும். நல்ல வேளையாக சின்னவளுக்கு காயம் ஒன்றுமில்லை. அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சை அடுத்த பதினாறு நாட்களுக்கு நாங்கள் பராமரித்தோம். அவளுக்கு உறவென்று ஒருவரும் இருப்பதாக தெரியவில்லை. இறுதியில் தூரத்து உறவு முறையான, மலையகத்திலிருந்து விடுமுறையை கழிக்க யாழ்ப்பாணம் வந்திருந்த இளம்பெண் ஒருவர் குழந்தையை ஏற்றுக் கொள்ள முன்வந்தார். அந்த இளம் பெண்ணுக்கு அதிகம் போனால் வயது இருபது தான் இருக்கும். மிகவும் சந்தோசத்துடன் குழந்தையை அவர் ஏந்திக் கொள்ளும் போது, அவர் கண்களில் மின்னி மறைந்த ஒரு சோகக் கீற்றை நான் கண்டேன். தான் கையில் ஏந்திக் கொள்ளும் பொறுப்பு, அவருடைய வயதுக்கு மீறியதாய் இருப்பதாய் அவர் காட்டிக் கொள்ளவே இல்லை. மனிதாபம் மிக்க தமிழ்நாட்டு இராணுவச் சிப்பாய் ஒருவர், கொக்குவில் சந்தியிலிருந்த கடைகளை இந்திய சிப்பாய்கள் உடைத்த போது தனக்கு கிடைத்த 1700 ரூபாயை எங்களிடம் தந்திருந்தார். அந்தக் காசை அந்த இளம்பெண்ணுக்கு நாங்கள் வழிச்செலவுக்காக கொடுத்தோம். அவ்வளவு தான் எங்களால் அப்போது செய்யக் கூடியதாயிருந்தது.

இது நடந்து சரியாக இரண்டு வருடங்களின் பின் கொழும்பு பொரளை இற்கு அண்மையிலுள்ள, எல்விட்டிகல தொடர்மாடி கட்டடத்திற்கு முன்னால் இருந்த பஸ் தரிப்பு நிலையமொன்றில் நின்று கொண்டிருந்தேன். தென்னிலங்கையில் JVP பிரச்சினை உச்சமாக இருந்த நேரம் அது. நான் நின்றிருந்த இடத்திற்கு அருகாமையில் தான் அந்த நேரம் சிங்கள இளைஞர்களை மிகவும் பயமுறுத்திய பொல்கொயங்கொட இராணுவ முகாம் அமைந்திருந்தது. நான் ஏறவேண்டிய பஸ் வந்த போது திடீரென ஒரு வெள்ளைநிற டெலிக்கா வான் பஸ்ஸிற்கு முன்னால் வேகமாக வந்து பிரேக் அடித்து நின்றது. அதிலிருந்து இருவர் அவசரமாக இறங்கி பஸ்ஸை நோக்கி ஓடி வந்தார்கள். பஸ்ஸின் பின் வாசலின் அருகில் உள்ள சீற்றில் ஒரு இளைய குடும்பம் அமர்ந்திருந்தது. கணவன், மனைவி, ஒரு மூன்று வயது மதிக்கத்தக்க சின்னஞ்சிறு சிறுமி. தனது கையில் ஒரு பொம்மையை வைத்து சிறுமி விளையாடிக் கொண்டிருந்தாள். வானிலிருந்து இறங்கி வந்த இருவரும் கணவனை இழுக்கத் தொடங்கினர். அபாயத்தை உணர்ந்து கொண்ட அவனோ பஸ் சீற்றினுடைய இரும்பு கம்பியை இறுக்கமாக பிடித்துக் கொண்டான். தன் உயிர் காக்கும் மரணப் பிடி அது. இருவராலும் அவனை இழுக்க முடியவில்லை. நேரம் போவதைக் கண்டு இன்னுமொருவன் வானிலிருந்து ஓடி வந்தான். அவனுடைய கையில் கைத்துப்பாக்கி மின்னியது. மூவரும் அந்த மனிதனை முரட்டுத்தனமாக பஸ்ஸிலிருந்து இழுத்தெடுத்தனர். திறந்திருந்த டெலிக்கா வானின் கதவிற்குள்ளால் தூக்கி உள்ளே எறிந்தனர். வான் ஒரு உறுமலுடன் பறந்தது. மனைவியோ கதறியபடி பஸ்ஸிலிருந்து இறங்கி எதிர்புறமாக ஓடினாள். சிறுமிக்கு எதுவும் புரியவில்லை. அழுகையோடு தாயின் பின்னால் தன் சின்னக் கால்களால் ஓடினாள். ஓடும் போது பொம்மை அவளது கைகளில் இருந்து நிலத்தில் வீழ்ந்தது. அதையும் கவனிக்காமல் அவள் ஓடினாள். ஐந்து நிமிடத்திற்குள் எல்லாம் முடிந்து விட்டது. பஸ் புறப்பட்டு சென்று விட்டது. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள், தங்கள் வழியே போய்விட்டார்கள். சற்று நேரத்திற்கு முன் குழந்தையின் கைகளிலிருந்த பொம்மை நிலத்தில், புழுதியில் கிடந்தது. எதிர்காலத்தில் துயரங்களால் இழுபட போகின்ற அந்தக் குழந்தையின் வாழ்வை பொம்மை பிரதிபலிப்பதாய் எனக்குப் பட்டது. கொண்டு செல்லப்பட்ட அந்த மனிதன், மீண்டும் திரும்பி வருவான் என நம்புவது மிகப்பெரிய முட்டாள்தனம் என்பது எல்லோருக்கும் தெரியும். அடுத்த நாள் ஆறுகளில் மிதந்து போய்க் கொண்டிருக்கும் எண்ணற்ற சடலங்களில் ஒருவனாய் அவன் மாறியிருப்பான்.

நினைவுகள் தெரிய முன்பே தங்கள் தோள்களில் இழப்புகளின் சுமைகள் ஏற்றப்பட்ட எண்ணற்ற இலங்கை குழந்தைகளில் இவர்கள் இருவர். இப்போது இவர்கள் இளம்பெண்களாயிருப்பார்கள். இவர்களின் எண்ணற்ற கேள்விகளுக்கு காலம் ஒருபோதும் பதில் சொல்லப் போவதில்லை. இவர்களின் சந்தோசங்கள் பறித்தெடுக்கப்பட்ட துயர நிகழ்வுகள் எந்தவொரு வரலாற்றுப் பக்கங்களிலும் எழுதப்பட்டிருக்கப் போவதில்லை. ஆனாலும் யார் கண்டது? சில நேரங்களில் இவர்கள் இருவரும் ஏதாவதொரு இடத்தில் சந்தித்துக் கொண்டிருக்கலாம். இழப்பின் மொழி பேசும் தங்கள் அனுபவங்களால் நெருங்கிய தோழிகளாகிக் கூட இருக்கலாம்.

> *“வாசல் வாங்குகளில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் அப்படியே இறந்து போயினர். என்னுடன் வந்த பத்திரிகையாளர் கையில் காயப்பட்டுப்போனார். கல்லூரி அதிபரின் காரியாலய சுவரொன்றின் பாதுகாப்பில் மரணத்தின் அழைப்பிலிருந்து தப்பினேன்.”*

- நிமால் நாகராஜா -



nimal.nagaraj@thaiveedu.com

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasambureealty.com

COLDWELL BANKER




நீங்களும் அதிஸ்டசாலி ஆகலாம்
1st பரிசு
2nd பரிசு
3rd பரிசு
SOLD
நலம் நாடுவதும் அதுவே
Kathir
Call:416 856 6900
$ 109,900
Kennedy / 401
$ 129,900
Markham/ Eglinton
$142,600
Mccowan/Sheppard
$ 151,900
Midland/Lawrence
$ 151,900
Meadowvale/401
$ 188,000
Midland/ Lawrence
$ 167.900
Midland/Eglinton
$ 199.990
Birchmount/Ellesmere
$ 250,000
Mccowan/Eglinton
$ 289,900
Finch/ Warden
$ 304,500
Kennedy/ Eglinton
$ 329,900
Mccowan/ Eglinton
$ 330,000
Meawvale/aSheppard
$ 309,000
Midland/Sheppard
$ 230,000
Sheppard/Meadow
$ 419,900
Markham/ Steeles
$ 299,900
Brimley/Finch
$ 249,900
Markham/Sheppard
$ 324,900
Middlefield/Finch
$ 346,800
Bur Oak/ 16th Ave
$ 334,900
Warden/St.Clair
$ 439,000
Bur Oak/9th line
$ 469,900
Bur Oak/Markham
HomeLife/GTA Realty Inc.
Independently owned and operated
Cell.: 416 856 6900
Bus.: 416 321 6969
Kathir
S Kathirgamanathan P. Eng.
Sales Representative

# நம்பமுடியாது!

"நம்பமுடியாது" என்றேன்.

சுரேஷ் என் வீட்டுக்கு வந்திருந்தார். அவருடன் பேசிய ஒரு மணி நேரத்தில் "நம்பமுடியாது" என்ற வார்த்தையை 16 தடவை சொல்லி விட்டேன். எதிர்பார்த்ததிலும் பார்க்க அவர் இளமையாகத் தோற்றமளித்தார். உபசரிப்பவரிடம் போதும் என்று சொல்லும்போது ஒரு சிரிப்பு சிரிப்போமே அப்படி சுரேஷ் சிரித்தார். என்னைப்போல "நம்பமுடியாது" என்று சொல்லும் பலரை அவர் சந்தித்திருப்பார். ஒவ்வொரு முறையும் அவர் இமைகளுக்குள்ளால் சிரிக்கும்போது அதற்கு முன்னர் இருந்ததைவிட அழகாகத் தெரிந்தார்.

சுரேஷ் ஜோகிம் கனடாவில் வசிக்கும் தமிழர். உலகத்தில் அதிகமாக விற்கும் புத்தகம் பைபிள் அதற்கு அடுத்தபடி விற்பனையாவது 'கின்னஸ் சாதனைகள்' புத்தகம். நூறு நாடுகளில், 25 மொழிகளில் வெளியாகும் அந்தப் புத்தகத்தில் அவருடைய பெயர் 63 தடவை வருகிறது. அத்தனை உலக சாதனைகளை படைத்துவிட்டார். மீரா ஜாஸ்மினுடன் அவர் நடித்து வெளிவந்த 'சிவப்பு மழை' அவருடைய 59வது சாதனை. அதன்பின்னரும் நிறுத்தாமல் சாதனைகள் செய்துவருகிறார். கடந்த ஜுலை மாதம் கனடா ஸ்காபரோ நகரில் தனது 63வது சாதனையை, தொடர்ந்து 200 மணித்தியாலங்கள் நிறுத்திவிருக்கும் சைக்கிளை ஓட்டி, நிலைநாட்டினார். இந்தச் சாதனையால் Operation Eyesight தொண்டு அமைப்பு மூலம் இந்திய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஆயிரம் மக்களுக்கு கண் பார்வை கிடைக்கிறது. இதுவரை இவர் செய்தது சின்னச்சின்ன சாதனைகள். இவர் பிரம்மாண்டமான சாதனை ஒன்றுக்கு தயாராகி வருகிறார். அதைச் சொன்னபோதுதான் நான் "நம்பமுடியாது" என்று சொன்னேன்.

சின்ன வயதில் சுரேஷ் யாழ்ப்பாணத்தில் மாமா வீட்டில் வளர்ந்தார். அவருடைய மாமா ஒரு பாதிரியார் என்பதால் அவரை பார்க்க வருபவர்கள் எல்லோரும் ஏதாவது காரணத்திற்காக அழுதுகொண்டு வருவார்கள். "ஐயா, என்ரை மகனை ராணுவம் பிடிச்சுக்கொண்டு போட்டுது." "ஐயா, என்ரை மகளைக் காண வில்லை." இப்படி தொடர்ந்து முறைப்பாடுகள். அந்தச் சின்ன வயதிலேயே இந்த மக்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் எழுந்தது, ஆனால் எப்படி உதவலாம் என்பது தெரியவில்லை.

இளைஞனாக முதன்முறை கொழும்புக்கு சென்றபோது அங்கே ஒரு புத்தகத்தை பார்த்தார். அதிலே மைக்கேல் ஜாக்சன், மொகமட் அலி, மடோனா போன்றவர்களின் பெயர்கள் எல்லாம் இருந்தன. அது உலக சாதனைகள் கின்னஸ் புத்தகம். உலகத்தின் கவனத்தை கவர்வதற்கு இப்படி ஒரு வழி இருப்பது அவருக்கு தெரியாது. உலகத்தின் பார்வையை தன்பக்கம் திருப்பினால் தானும் தன் பங்குக்கு ஏதாவது உதவி செய்யலாமே என்ற எண்ணம் தோன்றியது. அதன் விளைவாக அவருடைய முதல் சாதனை கொழும்பில் நடந்தது. 1996ம் ஆண்டு, 42 நாட்கள், அதாவது 1000 மணித்தியாலங்கள் தொடர்ந்து 3495 கி.மீட்டர் தூரம் ஓடி சாதனை படைத்தார். அவருடைய பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தது. அதைத் தொடர்ந்து நிறைய சாதனைகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருகிறார்.

"இந்த சாதனைகளுக்கு பயிற்சி எடுப்பதில் லையா?" என்று கேட்டபோது இல்லை என்றார். "அவுஸ்திரேலியாவில் கையிலே செங்கல்லைத் தூக்கிக்கொண்டு 126.675 கி.மீட்டர் தூரம் தொடர்ந்து ஓடி சாதனை படைத்திருக்கிறேன். இது உடலை வருத்தும் போட்டி. கையிலே ரத்தம் சொட்டும். இரண்டு தடவை கையை வருத்துவதில் என்ன பிரயோசனம். சாதனை அன்றுதான் முதன்முதல் செங்கல்லைத் தூக்கிக்கொண்டு ஓடினேன். சாதனைக்கும் உடலுக்கும் சம்பந்தமே இல்லை. எல்லாம் மனதுதான்" என்றார்.

'சிவப்பு மழை சாதனை?'

"இதுவரை 13 நாட்களில் சினிமா படம் எடுத்ததுதான் உலக சாதனை. அந்த சாதனையைத்தான் 11 நாள், 23 மணித்தியாலம், 45 நிமிடத்தில் படத்தை எடுத்து முடித்து சென்னையில் முறியடித்தோம். இதில் நடித்த மீரா ஜாஸ்மின், சுமன், விவேக் மற்றும் இயக்கிய கிருஷ்ணமூர்த்தி, பாடல் எழுதிய வைரமுத்து, இசையமைத்த தேவா எல்லோரும் கொடுத்த ஒத்துழைப்பு மறக்கமுடியாதது. மூன்று செட், மூன்று காமிரா என்று வைத்து மாறி மாறி படப்பிடிப்பு நடந்தது. இரவிரவாக சூட்டிங் முடிந்து அதிகாலை 5 மணிக்கு தூங்கப் போவேன். ஆனால் 6.30க்கு என்னை மறுபடியும் எழுப்பிவிடுவார்கள். உடனே மேக்கப் போட்டு தயாராக வேண்டும். பல இரவுகள் நித்திரை இல்லாமல் தொடர்ந்து வேலை செய்து முடிக்க வேண்டியிருந்தது. ஒரு தருணத்தில்கூட தோற்றுவிடுவேன் என்று நான் நினைத்ததில்லை. இதை நான் சாதனைப் படமாக மட்டும் பார்க்கவில்லை. ஈழத்துப் போரின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் மூன்றையும் சொல்லிய ஒரு படமாகவும் பார்க்கிறேன்."

தடங்கல்கள் வந்திருக்குமே?

"நிறைய. படம் தொடங்க முன்னர் உதவி டைரக்டராக நியமிக்கப்பட்ட ஒருவர் விபத்தில் இறந்துவிட்டார். படம் சூட்டிங் நடந்தபோது ஒரு பையன் ராட்சத காற்றாடியில் கையை விட்டு விரல் துண்டாகிவிட்டது. அபசகுனம் என்றெல்லாம் சொன்னார்கள். படம் முடிய முன்னர் பணம் முடிந்துவிட்டது. எல்லாத்தையும் தாண்டித்தான் சாதிக்கவேண்டியிருந்தது."

நடிப்பு அனுபவம் எப்படி?

"உலகத்தின் பல காமிராக்களுக்கு முன் நான் நின்றிருக்கிறேன். அமெரிக்காவின் சி.என்.என், இங்கிலாந்து பி.பி.சி, கனடா டிவி, அவுஸ்திரேலியா டிவி, ஆனால் அவை எல்லாமே செய்தி சானல்கள். சினிமா காமிரா என்பது வேறு. புகழ் உச்சியில் இருக்கும் நடிகர்கூட 14 தடவைகள் ஒரே காட்சியை மீண்டும் மீண்டும் நடிக்கவேண்டியிருக்கும். நேரம் என்ற வசதி எங்களுக்கு கிடையாது. எனக்கு வசனம் பிரச்சினையாக இருந்தது. ஒருத்தர் பின்னுக்கு நின்று சொல்ல நான் நடித்தபடி வசனத்தை சொல்லவேண்டும். ஆரம்பத்தில் தடுமாறினேன், ஆனால் சில நாட்களில் பிடித்துக்கொண்டேன். மீரா தேசிய விருது வாங்கிய நடிகை. ஓர் இடத்தில் நான் நடித்து முடிந்த பிறகு அவர் கைதட்டினார். அதுதான் இந்தப் படத்தில் எனக்கு கிடைத்த ஆகப்பெரிய விருது.

ஏதாவது மறக்க முடியாத சம்பவம்?

"விவேக்குடன் நடித்ததுதான். அவருடன் சேர்ந்து வரும் இடங்களில் எல்லாம் நான் நடிக்கவேண்டியதை மறந்து சிரித்துவிடுவேன். இயக்குநர் 'என்ன சார், இருக்கிறதே கொஞ்ச நேரம். நீங்களே சிரித்து கெடுத்துவிடுவீர்கள் போல இருக்கே' என்பார். அவருடன் சிரிக்காமல் நடித்து முடித்ததுதான் என்னுடைய பெரிய சவால்."

சுரேஷ் அவருடைய திட்டங்களை விவரிக்கத் தொடங்கியபோது பல இடங்களில் "நம்ப முடியாது" என்று நான் சொல்லிக்கொண்டே வந்தேன். சின்ன வயதில் அவர் நினைத்தது போல இன்று பல மில்லியன் டொலர்கள் அவருடைய சாதனைகள் மூலம் அநாதரவான சிறுவர் சிறுமிகளுக்கு போய்ச் சேர்ந்திருக்கிறது. இதுவரை அவர் ஒரு சாதனையிலும் தோல்விடைந்தது கிடையாது. 'சிவப்பு மழை' தனியொருவர் சாதனை அல்ல, ஒரு குழு செய்யவேண்டியது, ஆகவே தோல்வியில் முடியும் என்றே பலர் நினைத்தார்கள் ஆனால் 12 நாட்களுக்கிடையில் படத்தை முடித்து கின்னஸ் சான்றிதழ் பெற்றுவிட்டார்.

அவருடைய அடுத்த பெரிய சாதனை ஹொலிவுட் ஆங்கிலப் படம். கனடாவில் எடுக்கப்படும் இந்தப் படத்தில் சுரேஷ் 35 வேடங்களில் நடிக்கிறார். மூன்று இயக்குநர்கள், ஒருவர் கனடியர், இன்னொருவர் அமெரிக்கர் மூன்றாவது தமிழர். அது சுரேஷ் தான். கதையும் அவர்தான், ஆனால் வசனம் ஒரு ஹொலிவுட் எழுத்தாளர் எழுதுகிறார். அமெரிக்கா, பிரான்ஸ், ரஸ்யா, சீனா, ஜப்பான் என ஐந்து கதாநாயகிகள். பிரதானமான ஆறாவது கதாநாயகி பிரபல ஹிந்தி நடிகை. பெயரை இப்போதைக்கு வெளியிடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். படத்தில் மூன்று பாடல்கள் இடம் பெறும். அவையும் பிரபல இசையமைப்பாளர் ஒருவர் அமைத்ததாகத் தான் இருக்கும்.



- அ. முத்துலிங்கம் -

அவர் சொன்ன கதையும் அபூர்வமானது. விறுவிறுப்பும், திருப்பங்களும், எதிர்பாராத முடிவும் கொண்டதாக கதை அமைந்திருந்தது. கின்னஸ் சாதனை மட்டுமல்ல ஒன்றிரண்டு ஒஸ்கார் விருதுகள் பெறுவதும் நோக்கம். ஏற்கனவே ஒஸ்கார் விருதுபெற்ற சிலர் படத்தில் ஒப்பந்தமாக இருக்கிறார்கள். 63 உலகசாதனை படைத்த ஈழத்தமிழர் ஒருவர் ஒஸ்கார் மேடையில் நின்று ஒரு விருதை பெறுவார் என்பதை நாங்கள் ஏன் நம்பத் தயங்கவேண்டும்.

அவருடைய நாளாந்த வாழ்க்கையிலும் பல விடயங்கள் நம்பமுடியாததாகத்தான் இருக்கின்றன. அவர் தினசரி தேகப்பயிற்சி செய்வதில்லை. உணவுக்கட்டுப்பாடு சுத்தமாகக் கிடையாது. என்ன வேண்டுமானாலும், எப்போ வேண்டுமானாலும் சாப்பிடுகிறார். அவர் எங்கேயிருந்தாலும் சோறும் கறியும் முக்கியம். ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு முட்டைக் கோப்பி குடிக்கிறார். இரவு ஒரு மணிக்கு பின்னர் தூங்கப் போகும் அவர் காலையில் குறித்த நேரத்துக்கு எழும்புவதென்பது கிடையாது. ஆனால் அவர் மூளையில் புது சிந்தனைகள் முளைத்தபடியே இருக்கின்றன.

பெரிய பெரிய திட்டங்கள் நடக்கும்போது சின்னச்சின்ன சாதனைகள் அது பாட்டுக்கு தொடரும். அவருடைய அடுத்த பெரிய திட்டம் உலக சமாதானத்திற்காக உலகத்தைச் சுற்றிய ஓட்டப் பயணம். 55 நாடுகளில், 88 நகரங்களைத் தொட்டு 6,000 கி.மீட்டர் தூரம் ஓடுவது. இந்த ஓட்டம் டிசெம்பர் 25, 2012ல் கிறிஸ்மஸ் அன்று ஜெருசலம் நகரில் தொடங்கி ஜுன் 24, 2013 அன்று மாலை கனடாவின் மிஸிசாகா நகரில் கனடிய பிரதமர் முன்னிலையில் முடிவுக்கு வரும். இந்த ஓட்டத்தின் மூலம் உலக சமாதானத்துக்காக நூறு கோடி கையெழுத்துக்கள் பெறுவதோடு ஒரு பில்லியன் டொலர்களும் திரட்டப்படும். இதன் நோக்கம் 24 ஜுன் நாளை உலக சமாதான நாளாக உலக முழுவதும் அறிவிப்பது.

"கனடிய பிரதமர் ஹார்ப்பரை சந்திப்பதில் பிரச்சினை இல்லையா?" என்று கேட்டேன். "இல்லையே. முதலில் என்னை அவருடைய மனைவிதான் சந்தித்தார். ஹார்ப்பருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் நான் ஹீரோ. அவர்களுடைய கின்னஸ் புத்தகத்தில் நான் கையெழுத்து வைத்தேன். பின்னர் பிரதமர் வந்து என்னுடன் பத்து நிமிடம் பேசினார். அடுத்து நான் ஒபாமாவை சந்திப்பதாக இருக்கிறேன்." நான் பிரச்சினை இல்லையா என்று கேட்கவில்லை.


"அதற்குப் பிறகு என்ன பெரிய திட்டம்?"

"தற்போது துபாயில் உள்ள புர்ஜ் காலி.்.பா தான் உலகத்தில் ஆக உயர்ந்த கட்டிடம். அதைத் தாண்டி சீனா ஒன்று கட்டி வருகிறது. அதையும் மீறும் வகையில் கனடாவில் ஒரு கட்டிடம் எழும்பவேண்டும்."

"யார் செய்யப் போகிறார்கள்?"

"நான்தான்" என்றார்.

"ந ம் ப மு டி யா து" என்றேன்.



muththulingam.a@thaiveedu.com

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'


www.thaiveedu.com

காதல் வாழ்க்கை - 22

# மணம் செய்வதே மருந்து!

- வி. கந்தவனம் -

‘காதல் வாழ்க்கை எப்பொழுதுமே சீராகச் செல்வதில்லை. பிரச்சினைகள் இடையிடையே ஏற்படுவது இயல்பு. அவை வரவுந்தான் வேண்டும். அவைதாம் காதலைச் சோதிக்கும் உரைகல். அவையே காதலை வளர்த்துச் செல்லும் ஏணிப் படிகள். ஊடலுக்குப் பின் கூடல் என்பார்களே, அதுபோல் காதலை முழுமையாக அனுபவிக்க வழிகோலும் வகையில் துன்பங்கள் அமைவதுமுண்டு. காதலர் சண்டை சச்சரவுகளை வளரவிடுவதில்லை.




அவற்றைச் சமாளித்து இன்பம் துய்ப்பதே அன்பு உள்ளங்களின் இயல்பாகும்.

காதலருக்கிடையில் வரக்கூடிய துன்பங்களில் பிரிவுத் துன்பம் தலையாயது. பிரிவு பாலை நிலத்துக்குரிய ஒழுக்கமாயினும் பிற திணைகளிலும் வருவதற்குரிய சூழ்நிலைகள் அவ்வப்போது தோன்றுவதுண்டு.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் மக்கள் நுனையர், நுளைச்சியர் எனவும் அவர்களின் தலைவர்கள் சேர்ப்பன், துறைவன், கொண்கன் எனவும் அழைக்கப்பட்டனர். மீன் பிடித்தலும் உப்பு விளைத்தலும் அவர்களின் பிரதான தொழில்கள்.

மீன் பிடித்தற்பொருட்டுப் பிரிவு நேரினும் அவை நெடுங்காலம் நீடிப்பதில்லை. எனினும் தலைவன் மீன் பிடிக்கச் சென்றபின் ஏற்படும் புயல், கடல் கொந்தளிப்பு போன்ற கடும் வானிலை மாற்றங்கள் தலைவிக்கு ஆற்றாமையை ஏற்படுத்தும். போர், வணிகம் போன்ற காரணங்களால் நிகழும் பிரிவு நீடிக்க வாய்ப்புகள் உண்டு. அந்நிலைமைகளும் தலைவிக்கும் தலைவனுக்கும் ஆற்றாமையைத் தோற்றுவிக்கும். அதனால் ‘இரங்கல்’ நெய்தலில் பொது ஒழுக்கமாயிற்று.

இந் நிலத்துத் தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் ஒருவனுக்கு இரங்கல் ஏற்படும் வகையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பின் வரும் கலித்தொகைப் பாடல் விளக்குகின்றது:

*மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்*
*கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்*
*சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த*
*நீர்மலி கரகம்போல் பழந்தூங்கு முடத்தாழைப்*
*பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவ கேள்,*

*ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பெனப் படுவது தன்கிளை செறாமை*
*அறிவெனப் படுவது பேதையர் சொல்நோன்றல்*

*செறிவெனப் படுவது கூறியது மறாஅமை*
*நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை*
*முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்*
*பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்*

*ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின் என் தோழி*
*நல்நுதல் நலன் உண்டு துறத்தல் கொண்க*
*தீம்பால் உண்பவர் கொள்கலமட் வரைதல்*
*நின்றலை வருந்தியாள் துயரம்*
*சென்றனை களைமோ பூண்கநின் தேரே.*

- கலித்தொகை: நெய்தற்கலி 16

முண்டகம் - கழிமுள்ளி, தில்லை - தில்லை மரம், எக்கர் - மணல் திட்டி, சீர்மிகு சிறப்பினோன் - தட்சிணாமூர்த்தியாகிய சிவன், மரம் - சிவன் இருந்த ஆல மரம், கரகம் - கமண்டலம், முடம் - கோணல், புள்ளல் - குருகினம், அலந்தவர் - வறியவர், செறாமை - கெடுக்காமை, நோன்றல் - பொறுத்தல், செறிவு - உறவு, மறை - மறைவான, முறை - நீதி, கண்ணோட்டம் - கருணை, வெளவல் - கொள்ளுதல், நுதல் - நெற்றி, கொண்க - கொள்க.

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமையால் வருந்தினாள். அது கண்டு பொறுக்காத தோழி, தலைவியின் துயரைத் தலைவனுக்கு எடுத்துச் சொன்னாள்.

‘பெரு மலரையுடைய கழிமுள்ளியும் தில்லை மரமும் ஒருசேரச் சூழ்ந்த கடற்கரைக்கு அணியாகவுள்ளது பரந்த மணற் பரப்பு. அதன் ஒரு பக்கத்தே குவிந்த மணல் திட்டியிலே சீர்மிகுந்த சிறப்பினையுடைய தட்சிணாமூர்த்தியாகிய சிவன் இருந்த ஆலமரம் நிற்கின்றது. அவர் அதன்கீழ் இருப்பதற்கு முன்னதாக தூக்கி வைத்த நீர்நிறைந்த கமண்டலத்தைப் போன்ற பழங்களையுடையன அப்பால் உள்ள தாழை மரங்கள். அத் தாழைகள் பூத்தாற்போல நாரைகள் தாழைகள்மீது தங்கும். அத்தன்மைகளையுடைய நிலத்துத் துறைவனே, யான் கூறுவதைக் கேட்பாயாக!

‘இல்வாழ்க்கை நடத்துதல் என்பது வறியார்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுதல். பேணுதல் என்பது கூடினாரைப் பிரியாது இருத்தல். மக்கட் பண்பு என்பது உலக இயல்பை அறிந்து ஒழுகுதல். அன்பு என்பது அறியாதார் சொல்லும் சொல்லைப் பொறுத்தல். உறவு என்று கூறப்படுவது கூறுயதொன்றை மறவாதிருத்தல். நிறை எனப்படுவது பிறர் குறைகளை மற்றவர்களுக்கச் சொல்லாது ஒழுகுதல். நீதி எனப்படுவது நமர் என்று கண்ணோட்டஞ் செய்யாது செய்த கூற்றத்துக்கு ஏற்ற தண்டனை அளித்தல். பொறுமை எனப்படுவது பகைவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

‘அவ்விதமே அவற்றையெல்லாம் அறிந்து அதன்படி ஒழுகிவந்தீராயின் அவ்வொழுக்கத்துக்குத் தகுந்தாற்போல ஒன்று கூறுவேன், அறிந்து கொள்க!

‘என் தோழியின் அழகிய நெற்றியின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல் என்பது இனிய பாலை அருந்திவிட்டு அருந்திய பால் பாத்திரத்தைக் கவிழ்த்துவிடுதல் போன்றது. ஆகையினாலே, உன் பிரிவால் வருந்துகின்றவளை மணம்புரிந்து அவளின் துயரத்தைக் களைவாயாக. அதற்கு இப்பொழுதே உனது தேரில் குதிரைகளைப் பூட்டுவீராக!’

இவ்விதம் தலைவியை மணம் புரிந்துகொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்துகின்றாள். இத்தகைய அகத்துறை ‘வரைவு கடாதல்’ எனப்படும்.

தோழியின் பேச்சிலே உள்ளுறை உவமையாகவுள்ள கருத்துக்கள் இலக்கிய நயத்தையுடையன. தலைவன் நெடுங்காலம் தலைவியைப் பிரிந்திருப்பதால் ஊர் அலர் தூற்றும். அவ்விதம் அலர் தூற்றுகின்றவர்களுக்கு உவமையாக முள்ளுடைய கழிமுள்ளியையும் கொடிய தில்லை மரத்தையும் கொள்ளலாம். அடுத்து, குருகினமும் தலைவனுக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. மீன்களுக்கு (அவைகளைக் கொன்று தின்பதால்) தீமை செய்ய வல்ல கொடிய நாரைகள் தீமைற்ற தாழம் பூக்களைப்போற் காட்சியளிக்கின்றன. அவை போல் தலைவிக்கு வருத்தம் உண்டாக்குகின்ற தலைவன் பிறருக்கு நல் மகனைப் போல் தென்படுகின்றான்.

மேலும், இப்பாடல் நல் வாழ்க்கைக்கு வேண்டிய அரிய கருத்துக்கள் பலவற்றைக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம். வாழ்க்கை வாழ்வதற்கே, எனின் தனி மனிதன் நடத்தை பிறருக்குத் துன்பம் விளைத்தல் ஆகாது. எல்லோரும் இன்பற்றிருக்கும் வகையில் மக்கள் கட்டுப்பாட்டுடனும் கடமை உணர்வுடனும் நடந்துகொள்ளல் வேண்டும் என்பனபோன்ற அறிநெறிகளைப் புகட்டும் இப்பாடல், நம் முன்னோர் வாழ்கைபற்றிக் கொண்டிருந்த கொள்கைகளைத் தொகுத்துக் கூறுவதாகவுள்ளது.



kandavanam.v@thaiveedu.com





Buy & Sell Homes,Business,Farms..
416- 490-7653
Mortgage 2.3 % ..Refinance also.
SOLD
SOLD
SOLD
SOLD
NEED MORE HOMES FOR BUYERS
selling commission only 1.25%
Save 9900/-*
sell your home
with less commission
Scarborough
$285 000.00
3 bm/ home
Salem/taunton
Detached newer home
4bm/ 3 wsrm 349k
V.Park/ St.clair
$217 000.00
2 bm/ 2 wsrm
Bayview/ St.John
319 000.00
3 bm/ 3 wsrm by arista home
email: rpushpakanthan@trebnet.com
CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07
Pat Pushpakanthan
Real Estate BROKER
Century 21
Brokerage*
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
Dir 416-894-1187
Top Producer
7 Years*
email: rpushpakanthan@trebnet.com
For lease auto Garage
markham/steeles
For Sale/ Investment
Fully Occupied,Industrial/Multi
Unit/Automobile Repair Legal
Zoning/Newer 6 Units
Free standing bldg for sale
9 th line
Detached home 3bm/ 3
wsrm
399 000.00
Scarborough
3 bm det home ttc, school,
mall $290 000
Brimly/Denison
3 bm/ 3 wsrm
Detached HOME
Albion/Islington
3bm detached bungalow
w/garage sep entrance
$399
RichMond hill
New Condo
Opening
Invest....
Now Selling....Toronto
Be the First.. Yorkville
EXPERIENCE!
COMMITMENT!
RESULTS!
Brimly /denison
Detached home 3 bm
Fin bsmnt, excellent home
Business for sale
2 Cafetaria fr sale from 39k
5 Restaurant for sale from 20k
2 Variety store from 41k
2 dollar store from 129K
4 Hair Salon from 23K
MOTEL, Farms, land, Cottag-
Business for sale
in Richmond hill excellent
location
Coffee Time
241-0-241
V.Park/ St.clair
$217 000.00
2 bm/ 2 wsrm
Markham/ Steeles
Condo apt 2+1 Bdrm large
unit could be 3 bm
Pay Like Rent
** not intended to solicit property currently listed for sale

# Thinking of Buying or Selling!!

**KINGSTON & EGLINTON**




3+1 Bed Rooms, 3 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**WARDEN/FINCH**




3 Bed Rooms, 2 Wash Rooms Very Demand Area,Close To Schools, Hospital, Parks, Shopping, Ensuite Laundry, All Utilities Included In Rent. Just Walk To Finch/Warden.Very Clean Unit. Fridge, Stove, Washer & Dryer

**BIRCHMOUNT & ST.CLAIR**




3+1 Bed Rooms, 2 Wash Rooms Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**SHEPPARD & BRIMLEY**





2+1 Bed Rooms, 2 Wash Rooms Spacious 2 Bedroom + Den Unit. Close To All Amenities, Ttc, Go Train, School, Shopping And Many More. Property Sold 'As Is' Buyer To Confirm All Measurements, Taxes And Maintenance Fees.

**KENNEDY/EGLINTON**




Spacious 2 Bedroom + Den Unit. Close To All Amenities, Ttc, Go Train, School,Shopping And Many More. Property Sold 'As Is' Buyer To Confirm All Measurements, Taxes And Maintenance Fees.

**BIRCHMOUNT/HUNTINGWD**




3+1 BR, 3WR, Large End Unit Well Maintain Townhouse In Desirable Location, Wood Floors, Throughout Upper Level, Walk To Schools Plaza, Golf Course And Ttc, Private Fenced Backyard With Beautiful View, Newly Painted.

**HUNTINGWOOD/MIDLAND**




3+1 BR, 3 WR Great Floor Plan, Hardwood Floor Throughout. Extra Sq. Ft. With Enclosed Front Porch. Kitchen Upgraded. Newer Roof & Garage Door. Close To Ttc, Walk To Elementary & Secondary Schools, Kitchen & Full Bath In The Basement

**WESTNEY/HWY #2**




4+1 Bed Rooms, 4 Wash Rooms. Gorgeous Hardwood Floors & Solid Oak Staircase.Great Location.Close To Shopping,Rec. Center,401 & Go Station Within Walking Distance To Schools And Parks.Nicely Finished Basement With Wet Bar,An Extra Bedroom And A4 Pc Bathroom.

**MCCOWAN/SHEPPARD**




3+3 Bed Rooms, 2 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**HURONTARIO/BARONDALE**




3+1 Bed Rooms, 4 Wash Rooms Bright Family Size Eat-In Kitchen W/ Breakfast Area! W/O From Living Room To Entertainer's Deck & Fenced Yard! Spacious Bedrooms & Closet, Incl Master W/2Pc Ensuite & Walk-In Closet! Close To Schools, Shopping, Transit, Highways & Conservation Area!

**KINGSTON/EGLINTON**




3+1 Bed Rooms, 3 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property.Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**BRIMLEY/STEELES**




4+1 Bed Rooms, 4 Wash Rooms Located In A Highly Demanded Area. Well Maintained, Clean House & Nice Curb Appeal To It. Renovated Kitchen Windows. Replaced All 2nd Floor Windows (2009). Roof Reshingled (2006). Upgraded 200 Amps Breaker Panel. Bsmt Will Provide Additional Income Potential.

* Sell your House for Top $$$$$ within shorter period
* Consistently Award Winners
* Top Negotiators
* Call us for Free Home Evaluation
* Buyers OR Sellers get Incentives
* We approach with correct marketing tools
* Friendly Service provided.



**HomeLife/Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**B: 905.201.9977 F: 905.201.9229**

## Raja V.S. Rajagopal
Sales Representative
**416.727.8647**

சகலவிதமான வீட்டுக்கடன் தேவைகளுக்கும்,
ஆலோசனைகளுக்கும்

**Re-Financing / Debt Consolidation**
**Self Employed, New Immigrant, Pre Approval**




printed in apex 416-297-0707

**Also Contact in Regards to Investing in Newly Built**
**HOMES - CONDOS - COMMERICAL**

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## ஆடித்து முத்துக்கள் 34

# 'நடிக மன்னன்' P. சண்முகலிங்கம்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

நான் அரியாலை ஊரைச் சேர்ந்தவன். பல கல்விமான்களையும், வைத்தியநிபுணர்களையும், மாவீரர்களையும், விளையாட்டுவீரர்களையும், அரசியல்வாதிகளையும், கலைஞர்களையும் குறிப்பாக நாடகக்கலைஞர்களையும் தந்த பெருமைக்குரிய ஊர். நாடகத்தின் மீதான ஈடுபாடு காரணமாக நானும் நண்பர் உருத்திரேஸ்வரனும் எமது வேர்களைத் தேடும் முயற்சியில் 1978இல் ஈடுபட்டோம். இதன் காரணமாக, 1919இல் ஆரம்பிக்கப்பட்ட அரியாலை சுதேசிய விழாவில் மேடையேறிய நாடகம்முதல் பலதரப்பட்ட தகவல்களைச் சேகரித்தோம்.



இதன் நீட்சியாக, அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இப்பகுதியில் கலைஞர்களை பற்றி எழுதி வருகிறேன். அந்த வகையில் 60, 70களில் புகழின் உச்சத்தில் இருந்த 'நடிகமன்னன்' P. சண்முகலிங்கம் அவர்களின் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு சில மாதங்களாகப் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டிருந்தேன். சாத்தியப்படவில்லை. துரதிஷ்டவசமாக கடந்தமாதம் அவர் காலமாகிவிட்டார். வாழும் போதே வாழ்த்திவிடுவோம் என்ற எனது முயற்சிக்கு காலமும், காலனும் கைகொடுக்கவில்லை.

அந்தக் துயரோடு அவர் பற்றி...

இவர் யாழ் கனகரத்தினம் ம.ம வித்தியாலத்தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) பயிலும் நாட்களில் சக மாணவர்களுடன் சேர்ந்து 'சோக்கிரட்டீஸ்' நாடகத்தை மேடையேற்றி அதில் சோக்கிரட்டீசாக நடித்துப் பலரின் பாராட்டைப் பெற்றிருந்தார். இதுவே இவரது நாடகப்பிரவேசமாகும். நடிப்புத்திறன், நல்ல குரல்வளம், தோற்றப் பொலிவு எல்லாம் வரப்பெற்ற இவர் எல்லோராலும் சிறந்த நடிகனாக இலகுவில் அடையாளம் காணப்பட்டார்.

சண்முகலிங்கம் அவர்கள் இளைஞனாக இருந்த நாட்களில் நாடகம், நடிப்பு என்பவற்றில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு இரு விடயங்களை இங்கு குறிப்பிடலாம்.

ஒன்று, நாடகம் பழகும் நாட்களில் ஓய்வு நேரங்களின் போது தனது பாத்திரத்தை மூத்த கலைஞர்களான காலஞ்சென்ற ஜ.எஸ். சண்முகநாதன், இ.கே. குமரய்யா, சி. குலத்துங்கம் போன்றோர் நடித்திருந்தால் எவ்வாறு நடித்திருப்பார்கள் என்பதை மிகவும் தத்ரூபமாக நடித்துக்காட்டும் வல்லமை கொண்டிருந்தார்.

மற்றது, எமது ஊரில் காத்தான் கந்தையா என்ற பழம்பெரும் கலைஞர் இருந்தார். 1929இல், காந்தவராயன் என்ற 6 மணித்தியால சிந்துநடை இசை நாடகத்தை 20 கலைஞர்களுடன் மேடையேற்றி இருந்தார். ஒலிபெருக்கி இல்லாத அந்நாட்களில் Gas லைற் வெளிச்சத்தில் 20 தடவைகள் அந்நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் சின்னக் காத்தானாக மறைந்த கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை அவர்கள் நடித்திருந்தார்கள். காத்தான் கந்தையா அவர்களால் ஈர்க்கப்பட்ட எமது கலைஞர் சண்முகலிங்கம், அவரிடம் அனைத்துக் காத்தவராயன் பாடல் களையும் பழகி, ஒப்புவித்து அனைவரதும் பாராட்டைப் பெற்றுக்கொண்டார். இதுவே பின்னாளில் இவர் 'மயானத்தில் மன்னன்' நாடகத்தில் அரிச்சந்திரனாகப் பாடி, நடிக்க அடிகோலியது.

வருடா வருடம் வருடப்பிறப்பை முன்னிட்டு அரியாலையில் நடைபெறும் சுதேசிய திருநாள் விழாவில் அரியாலை நாடகமன்றம், தயாரித்த 'அலாவுதீன்' குத்புதீன், 'மந்திரிகுமாரி' வீரமோகன், 'இராஜராஜசோழன்' இராஜேந்திரசோழன் போன்றவை இவர் நடித்த குறிப்பிடத்தக்க பாத்திரங்களாகும். 1961இல், 43வது சுதேசிய விழாவில் மேடையேறிய 'கர்ணன்' நாடகம் இவருக்கு "நடிகமன்னன்" என்ற மகுடத்தைச் சூட்டியது. இதே ஆண்டு அரியாலை சனசமூக நிலையத்தில் மேடையேறிய 'சித்தூர் ராணி பத்மினி'இல் கதாநாயகனாக நடித்து மிகவும் பிரபல்யமான கலைஞரானுர்.

1969இல் நடைபெற்ற சுதேசிய பொன்விழாவில் மேடையேறிய 'திருவிளையாடல்' புராண நாடகத்தில் சிவபெருமான் மேற்கொண்ட மானுடவேடங்களில் இவர் நடித்து அந்நாடகத்தின் வெற்றிக்குக் காரணமானார்.

அமரர் சண்முகலிங்கம் அவர்கள் பரதனாக நடித்த 'பாதுகை' நாடகம் யாழ். கம்பன் கழகம் நடாத்திய நாடகப்போட்டியில் முதற் பரிசு பெற்றதோடு, சண்முகலிங்கம் அவர்கள் சிறந்த நடிகருக்கான விருதினையும் பெற்றுக்கொண்டார். இந்நாடகத்தை அமரர் சதாசிவம் ஆசிரியர் (சாண்டோ மாஸ்ரர்) அவர்கள் எழுதி, நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தில் தசரதனாக அண்ணாவியார் மரியதாஸ், கைகேயியாக சோமசேகரம், கூனியாக அமரர் ம. இராமநாதன், இராமராக கனகரத்தினம் ஆகியோர் நடித்திருந்தனர்.

இனி, நான் பார்த்த, இவருக்குப் புகழ் சேர்ந்த மூன்று நாடகங்கள் பற்றி இங்கு சுருக்கமாக எழுதுவது பொருத்தமாக இருக்கும்.

இவர் கர்ணனாக நடித்த 'கர்ணன்' நாடகத்தில் சிற்பக்கலைஞர் மணியம் மாஸ்ரர் செய்த இரு தேர்களில் கர்ணனும் அர்ச்சுனலும் போர் செய்யும் காட்சி, இறுதியில் கிருஷ்ணனிடம் (அருள்பிரகாசம்) தன் கவச குண்டலங்களைக் கொடுக்கும் உருக்கமான காட்சியும், கர்ணனும் குந்திதேவியும் (பிரான்சிஸ் ஜெனம்) சந்திக்கும் காட்சியைப் பார்த்த மக்கள் அழுததும் என்றும் பேசப்படுபவை.

இந்நாடகத்தை 1977இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் உருத்திரேஸ்வரன், சடகோபன், அமரர் விஜயரட்னம் ஆகிய கலைஞர்களையும் இணைத்து மீண்டும் இவர் மேடையேற்றியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சரித்திர வசன நாடகங்களில் பிரசித்தமான சண்முகலிங்கம் அவர்கள் 'மயானத்தில் மன்னன்' என்ற இசை நாடகத்தைத் தயாரித்து அதில் அரிச்சந்திரனாகத் தோன்றிப் பாடி நடித்து அனைவரையும் அசரவைத்தார். உயர்ந்த தோற்றம், கறுத்த அரைத் துண்டு, தாடி என்று அவர் சந்திரமதியை அடையாளம் காணும் காட்சியில் அவரது அங்கங்கள் எல்லாம் அசையும். நடுங்கும். நரம்புகள் ஆடும். திறந்த மேனியில் அவை எல்லாம் தெளிவாகத் தெரியும்.

அற்புதமான நடிகர்.

இதில் அமரர் செல்வம் அவர்கள் சந்திரமதியாக நடித்திருந்தார். இந்நாடகம் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப் பட்டது.

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் இசை நாடக உலகில் கோலோச்சிய காலகட்டத்தில், அவரது 'மயான காண்டம்' ஆயிரம் மேடையேற்றங்கள் கண்ட நிலையில் நடிகமன்னன் சண்முகலிங்கம் அவர்களது 'மயானத்தில் மன்னன்' நாடகம் ஒரு துணிச்சலான முயற்சியாகக் கருதப்பட்டது. அதுமட்டுமல்ல, நல்லூர், நாயன்மார்கட்டு கல்வியங்காடு கொழும்புத்துறை, பாசையூர் போன்ற இடங்களிலிருந்து வந்த பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் மைதானம் முழுவதும் நிறைந்து இருக்க, அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் நடிகமணியினதும், நடிகமன்னனினதும் இவ்விரு நாடகங்களும் போட்டிக்காக மேடையேறியமை என்றும் மறக்க முடியாத நிகழ்வு.

வெவ்வேறு விதமான நாடகங்களை மேடையேற்ற வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகவும், நடிப்பில் புதிய பரிமாணத்தைத் தொடும் வகையிலும் சண்முலிங்கம் அவர்கள் ஆங்கில நாடகாசிரியர் சேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகமான 'ஒதல்லோ' நாடகத்தை 1978ஆம் ஆண்டு யாழ். விரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினார். இதில் அவர் ஒதல்லோவாகவும், அமரர் த.பஞ்சலிங்கம் யாகோவாகவும், N.T. குணம் டெஸ்டிமோனாகவாகவும், உருத்திரேஸ்வரன் கேஷியோவாகவும் நடித்திருந்தனர்.


இந்நாடகத்துக்கு கொப்பி பார்க்கும் பொறுப்பை என்னிடம் அவர் ஒப்படைத்திருந்தார். அந்த CR கொப்பியும், அவரின் நடிப்பில் மெய்மறந்ததால் பக்கத்தைத் திருப்ப மறந்து அவரிடம் பேச்சு வாங்கியதும் நினைவில் இருக்கிறது.

வலையால் மூடப்பட்ட கட்டிலில் டெஸ்மோனா வெள்ளை நிற இரவு உடையில் படுத்திருக்க ஒதெல்லோ வந்து கழுத்தை நெரித்துக் கொல்லும் காட்சியில் அரங்கமே உறைந்து நிற்கும்.

இவ்வாறு குறுகிய காலத்தில், சில குறிப்பிட்ட நாடகங்கள் மூலமாக பலதரப்பட்ட நடிப்பாற்றலை வெளிப்படுத்தி 'நடிகமன்னன்' என்ற பட்டத்தை அனைவர் மனதிலும் ஆழப் பதிய வைத்தவர் அமரர் P. சண்முகலிங்கம் அவர்கள். இனி, அரங்குகளில் அரிச்சந்திரன், கர்ணன், ஒதெல்லோ போன்ற பாத்திரங்கள் தோன்றும் போதெல்லாம் இவரது நினைவு வருவது தவிர்க்க இயலாதது.



sriskandan@thaiveedu.com

உங்களின் வியாபாரத்திற்கான
WEB DESIGNER
416-840-9510 www.excelgra.com


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Wanless/Hurontario
For Sale
$449,900
Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms
Warden/407
SOLD
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$399,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

## ஆழத்து முத்துக்கள் 35

# கலைஞர் S.C. துரைசிங்கம்

**வண்ணை கலைவாணர் நாடகமன்றம்.**

**கலைஞர் – S.C. துரைசிங்கம்.**

இவர் 19-01-1936 ஆண்டு யாழ் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியில். பிறந்தவர். யாழ் பெரிய புலம் வேதப்பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, பள்ளிக் கூட ஆண்டு விழாவில், தனது ஆறாவது வயதில் வழிப்போக்கன் என்னும் நாடகத்தில் பாதிரியாராக முதன் முதல் நடித்தார்.

அந்த நாட்களில் M.K. தியாகராஜா பாகவதரின் படங்கள் பலவற்றையும் பார்த்ததினால் பாகவதரின் பாட்டுக்களை விரும்பிப்பாடுவார் என்கிறார். 1946ல் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் வேளையில் தான் சங்கீதவித்வான் திருமதி M.S. சுப்புலஷ்மி பரமேஸ்வரக் கார்ணிவலில் பங்கு பற்றி இன்னிசை பொழிந்தார் அதிலிருந்து இசையில் நாட்டம் கொண்டு சில காலம் நாச்சிமார் கோவிலடி நடன, சங்கீத ஆசிரியர் திரு கீதாஞ்சலி V.K. நல்லையாவிடம். சங்கீதம் நடனம் கற்றிருக்கிறார். 1948ல் யாழ் இந்துக் கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கும் பொழுது 1950ல் கல்லூரியில் நடைபெற்ற களியாட்டுவிழாவுக்காக திரு. V.K. நல்லையாவும், மருமகன் திரு. K.N. நவரத்தினமும் (சின்னமணியின் அண்ணன்) சேர்ந்து. T.R. மகாலிங்கம் நடித்த நாம் இருவர் என்னும் திரைப்படத்தின். நாடகப்பிரதியை வைத்துக் கொண்டு நடிக்க மாணவர்களைத் தயார் செய்தார்கள் அதில் இவருக்கு கதாநாயகி பாத்திரம் கிடைத்தது. அப்போது இவருக்கு வயது 14. இவருக்கு நடனம் பாட்டுத் தெரியுமாகையால் நன்றாகப்பாடி, நடனமாடி நடித்ததனால் பாராட்டுப் பெற்றார் என்கிறார்.


1956ம் ஆண்டில் மேக்கப் தியாகராசாவின் தூண்டுதலில் தனது 20 வயதில் கலைஞர் பற்குணம் தயாரித்த நாடகம் ஒன்றில் நடித்திருக்கிறார். இந்த நாடகம், நடிகர் M.G.R. இன் 'இன்பக்கனவு' நாடகமாகும். 'தொழில் அதிபரின் மகனாக – முதன் முதல் பெண் நடிகையைத் தொட்டு நடித்தேன். கை, கால் முதல் முதலில் உதறல் எடுத்தது.' என்று தன் அனுபவத்தை கூறுகிறார். இந்த நாடகம் இவர்களுக்கு வெற்றியையும், ஆர்வத்தையும் தந்தது. இந்த நாடகத்தினை நெறிப்படுத்தியவர் செல்லம் ஸ்ருடியோவில் வேலை பார்த்த நடிகர் S.T. அரசு. உதவி நெறியாள்கை செய்தவர் தாவடி நடிகர் வடிவேலு.

அடுத்த வருடமே, நாச்சிமார் கோவிலடியில் 'வண்ணை கலைவாணர் நாடக மன்றம்' பற்குணம், துரைசிங்கம், சோமசுந்தரம், 'வில்லுப்பாட்டு' சின்னமணி, S.T. அரசு, மேக்கப் தியாகராசா, ஈழத்துச் சௌந்தரராசன், ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி, C.T.B. பாலசிங்கம், மேலை பொன்னம்பலம் ஆகியேரரால் செல்லம் அதிபர், ஏரம்பமூர்த்தி ஆசிரியர், திரு. நிக்கலஸ். திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியவர்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் நாடகம் 'வீரமைந்தன்' (சரித்திர நாடகம்) இந்நாடகம் தமிழ் மண்ணின் ஆட்சியையும், துரோகங்களையும் வெளிக்கொணரும் நாடகம் பெரும் வரவேற்பு பெற்று 100 தடவைக்கு மேல் மேடையேறியதாம். 1957ல் யாழ் மனோகரா திரை அரங்கில் எம்.பி ஏ. அமிர்தலிங்கம், கலையரசு சொர்ணலிங்கம், ஆகியோரின் ஆதரவுடன் அரங்கேறிய வீரமைந்தன் நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்களான கதாநாயகனாக இரா.பற்குணம். கதாநாயகி சரசு.



கதாநாயகியின் தந்தையாக வட நாட்டின் மன்னனாக வில்லன் பாத்திரமேற்று துரை சிங்கம் நடித்திருக்கிறார். இதே நாடகத்தில் தமிழ் நாட்டுத்தளபதியான வில்லன் பாத்திரத்தில் வில்லுப்பாட்டு சின்னமணியும் சிறப்பாக நடித்திருந்தார். வீரமைந்தன் நாடகத்திற்குப் பின்பு, சிவன்கோவிலடி – சரவணபவா நாடகமன்றத்தின் 'சோழனின் செல்வன்' நாடகத்தில் சாணக்கிய தளபதியாக நடித்ததாகவும், இந்த நாடகம் யாழ்ப்பாணம். மனேகரா திரையரங்கு, திறந்த வெளியரங்கு, கொழும்பு சரஸ்வதி மண்டம் ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டதாகவும் சொல்கிறார் திரு.துரைசிங்கம். கொட்டடி தவலிங்கத்தின் 'தாலிமேல் ஆணை' நாடகத்தில் நாட்டிய கலைஞர் வேல் ஆனந்தனுடன் நடித்திருக்கிறார். இடையிடையே யாழ் திறந்த வெளி அரங்கில் பவுர்ணமி தினங்களில் திடீர் நாடகங்கள் தயாரித்து வளங்கியிருக்கிறார்கள். 1964ம் ஆண்டு இவரது மைத்துணர் லோகநாதன் இவருடன் இணைந்து நடித்த நாடகங்கள் 'திப்பு சுல்தான்', 'சரியா? தப்பா?', இரண்டும் யாழ் மனேகரா திரையரங்கில் தான் மேடையேற்றப்பட்டன. அன்றைய கால கட்டத்தில் வண்ணை - கலைவாணர் நாடக மன்றம் பெரும்புகழுடன் தலை நிமிர்ந்து நின்றது என்பதையாராலும் மறுக்க முடியாது என்று கூறும் திரு.துரைசிங்கம், இதன் புகழுக்கு முக்கிய காரணம் கலைஞர் இரா. பற்குணம், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, மேக்கப் தியாகராசா, இயக்குனர் S.T. அரசு. எழுத்தாளர் சோமு, வீரமணி ஐயா, sellams நீக்கிளாஸ் போன்றோறின் விடாமுயற்சியே யாகும் என்று நன்றி கூறுகிறார்.



1960ல் கொக்குவில் D.R.O ஸ்ரீனிவாசன், குப்பிளான் செல்லத்துரை மற்றும் பலருடன் சேர்ந்து யாழ் நகர மண்டபத்தில் 'பக்த நத்தனர்' நாடகம் அரங்கேறியது. அதில் இவர், சின்னமணி, சரஸ்வதி, பாக்கியராஜா, வடிவேலு ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். S.T அரசு, சங்கீதபூசணம் சண்முகரத்தினம் ஆகியோர் நெறிப்படுத்த G.A. ஸ்ரீகாந்தா தலைமை வகித்தார். ஸ்ரீனிவாசன், ஐயராகவும், செல்லத்துரை நந்தனராகவும் பாடி நடித்தார்கள்.

தனது திரைப்பட அனுபவத்தை கூறும்பொழுது "1965ல் நான் மாநகர சபையில் தண்ணீர் பகுதி தொழில் நுட்ப உத்தியோகம் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது திரு. P.M. வேதநாயகம் (சங்கீதபூசணம்) என்னை அழைத்து. தான் 'கடமையின் எல்லை' என்ற திரைப்படம் தயாரிக்க இருப்பதாகவும். அதில் என்னையும், பங்குபற்றி, நடிகர்களையும் அறிமுகம் செய்யும்படி கூறினார். நானே S.T அரசுவை அறிமுகம் செய்தேன். அவர் தான் உதவி நெறிப்படுத்தினர். அதில் எனக்கும் ஒரு வில்லன் பாத்திரம் கிடைத்தது. தற்பொழுது இங்கு விளம்பரங்களில் நடிக்கும் திரு. திருமதி காசிநாதன் சுப்புலக்குமி தம்பதியரும் என்னுடன் நடித்தவர்கள் சிலோன் ஸ்டுடியோவில் தான் படம் தயாரித்தார்கள்." என்கிறார்.

1970ல் உடுவில் மகாநாட்டை முன்னிட்டும் பாராளுமன்றத்தேர்தலை முன்னிட்டும் 'தமிழன் கதை' என்னும் அரசியல் நாடகம் (1947 to 1970) திரு. மு. ஆலாலசுந்தரத்தினால் எழுதப்பட்டது. தமிழ், சிங்கள, அரசியல்வாதிகள் எல்லோருக்கும் பாத்திரம் அமைக்கப்பட்டது. இவருக்கு ஜி.ஜி.யின் பாத்திரம். உடுவில் மகாநாட்டில் முதல் அரங்கேற்றம் ம.பொ.சிவஞானகிராமணியார் தலைமை வகித்தார். அடுத்து மே முதலாந்திகதியன்று யாழ் முற்றவெளியில் நடந்தது. தேர்தலை முன்னிட்டு வடமாகாணத்தின் பலபகுதிகளில் மேடையேற்றியிருக்கிறார்கள்.

தனது 75 வயதிலும் C.S. ஜெயராமன், கண்டசாலா ஆகியோரின் பாடல்களை குடும்ப விழாக்களில் பாடிவருவதாகக் குறிப்பிடும் திரு.துரைசிங்கம், தற்போது கனடாவில், பிராம்டனில் வசித்து வருகிறார்.

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**Driving School**

ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி
General Driving School (Ministry of Transportation Approved Instructor)

பேரின்பநாதன் வேந்தன்

**416-731-2829**

**Tution Classes**

**(Morningside & Sheppard)**

ஆங்கிலம் (English), கணிதம் (Math),

தரம் 8 முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

**Puran**

**416 819 7923**

# ஆயுட் காப்புறுதி! தேவைகளும் தீர்வுகளும்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட் காப்புறுதியினை ஒருவர் எவ்வளவு தொகைக்கும் பெற்றுக் கொள்ள முடியுமா? ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதித் திட்டங்களை வேவ்வேறு நிறுவனங்களில் வைத்திருக்க லாமா? இப்படி பலரும் கேட்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொருவரும் எவ்வளவு தொகைக்கும் எந்த நிறுவனத்திலும் காப்புறுதி பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பல்வேறு நிறுவனங்களிலும் பல திட்டங்களையும் வைத்திருக்கவும் முடியும். ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது ஒவ்வொரு நிறுவனமும் சில நிபந்தனைகளுக்கு அமையவே காப்புறுதி விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வார்கள்.

ஒவ்வொருவரின் வயதும் ஆயுட் காப்புறுதியின் தொகையையும் பொறுத்து காப்புறுதியின் விண்ணப்பத்துக்கான நிபந்தனைகள் மாறுபடும். அத்துடன் ஒருவரின் வருமானம் அவரின் பொருளாதார நிலை போன்றவையும் ஒருவரின் ஆயுட் காப்புறுதியின் தொகைக்கான கட்டுப்பாட்டைத் தீர்மானிக்கும். ஒரு நிறுவனத்தில் ஆயுட்காப்புறுதி வைத்திருப்பவர்கள் வேறு ஒரு நிறுவனத்தில் மேலும் ஒரு காப்புறுதித்திட்டத்தை பெறமுடியும். ஆனால் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்கனவே உள்ள ஆயுட்காப்புறுதி மற்றும் கொடிய நோய்களுக்கான காப்புறுதிகள் போன்றவற்றின் தொகை, எந்த ஆண்டில் பெற்றுக் கொண்டதிட்டம் பற்றிய தகவல்களை ஆயுட்காப்புறுதி விண்ணப்பத்தில் குறிபிடவேண்டும்.

## ஒருவர் காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்து காபுறுதி நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தால் அதன்பின்பு காப்புறுதி பெறமுடியுமா?

ஒருவர் ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பித்து ஏதாவது நிறுவனம் காப்புறுதி தரமுடியாது என்று நிராகரிக்கப்பட்டிருந்தால் அதன்பின்பு ஆயுட்காப்புறுதிக்கு அல்லது கொடிய நோய்களுக்கான காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது காப்புறுதி நிராகரிக்கப்பட்டதற்கான காரணம், காப்புறுதி நிறுவனம், காப்புறுதி நிராகரிக்கப்பட்ட ஆண்டு போன்ற தகவல்கள் புதிதாக காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டும்.

ஒருவர் அதிகூடிய தொகைக்கு காப்புறுதிக்கு விண்ணப்பித்தால் அதற்கான மாதாந்தக் கட்டணத்தை கட்டுவதற்கான வருமானம், பொருளாதார வசதி இருக்கின்றதா என்பதையும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள் கவனிக்கும். அதனால் தான் ஆயுட்காப்புறுதி விண்ணப்பத்தில் உங்கள் வருட வருமானம் எவ்வளவு என்று குறிப்பிடவேண்டும். அத்துடன் காப்புறுதி எந்த தொகைக்குப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதும் குறிப்பிட வேண்டும்.

மிகவும் பெரிய தொகைக்கு காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது அக்காப்புறுதியை வழங்குவதற்கு முன்பு செய்யப்படும் மருத்துவ பரிசோதனைகளும் அதிகமாகவே இருக்கும்.

> “ஆயுட்காப்புறுதித் திட்டமானது ஒருவரின் மரணத்திற்கு பின்பு அவரின் குடும்பத்தினரின் எதிர்கால வாழ்வைத் தொடர்வதற்கான ஓர் உபகரணம்.”

ஒருவர் $500,000க்கு அதிகமாக காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது $1 மில்லியன் டொலாருக்கு அதிகமான தொகைக்கு ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது மருத்துவ பரிசோதனைகள் அதிகமாக இருப்பதுடன் பொருளாதார நிதிநிலை சம்பந்தமான கேள்விகளுக்கு விண்ணபத்தில் பதிலளிக்க வேண்டும். அதிகமான தொகைக்கு ஆயுட் காப்புறுதி பெறுபவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் பெற்றுக்கொள்வதன் மூலம் காப்புறுதிக்கான சில கட்டுப்பாடுகளை குறைக்க முடியும்.

உதாரணமாக வயதானவர்கள் மருத்துவ பரிசோதனை இல்லாத திட்டங்கள் பெறும் போது ஒரு நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டுமே பெறமுடியும். அதற்கு அதிகமான தொகை தேவைப்படின் வேறு நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம். பல நிறுவனங்களிலும் காப்புறுதி செய்வதனால் பாதிப்பு எதுவும் இல்லை.

பெற்றோர்களுக்கு காப்புறுதி பெறும்போது ஒவ்வொரு பிள்ளைகளும் வேறு வேறு திட்டங்கள் பெறமுடியுமா என்று பலர் கேட்டிருக்கின்றார்கள்.

மருத்துவ பரிசோதனைகளுடன் கூடிய காப்புறுதி எவ்வளவு தொகைக்கும் எத்தனை நிறுவனத்திலும் பெற்றுகொள்ள முடியும். மருத்துவ பரிசோதனைகள் இல்லாத காப்புறுதி பெற்றிருந்தால் காப்புறுதியின் தொகைக்கு ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் கட்டுப்பாடு வைத்திருப்பதால் ஒரு நிறுவனத்தில் தேவையான தொகையை பெறமுடியாமல் இருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களில் ஆயுட்காப்புறுதி பெறுவதன் மூலம் அதிகமாக தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு நிறவனத்தில் பெற்றுக் கொண்ட காப்புறுதியை இன்னொரு காப்புறுதி நிறுவனத்திற்கு மாற்ற முடியுமா! இத்தக்கேள்வியை பலரும் கேட்டுள்ளார்கள். அத்துடன் பலர் நாங்கள் 10 வருடமாக ஒரு காப்புறுதி நிறுவனத்தில் வைத்திருந்தோம். தற்போது வேறு நிறுவனத்திற்கு மாற்றிவிட்டோம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

உங்களிடம் இருக்கும் காப்புறுதித் திட்டத்தில் மாற்றங்கள் செய்வதானால் நீங்கள் காப்புறுதியினைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தில் அம்மாற்றங்களைச் செய்வதனால் உங்களுக்கு புதிதாக மருத்துவ பரிசோதனைகள் செய்யவேண்டியதில்லை. அத்துடன் காப்புறுதியினை ஆரம்பித்த நாள் புதிதாக இல்லாமல் பழைய திகதியாகவே இருக்கும்.

ஒரு காப்புறுதித்திட்டத்தில் மாற்றங்கள் செய்வதானால் அதே நிறுவனத்தில் மட்டுமே மாற்றங்கள் செய்யமுடியும். வேறு நிறுவனத்தில் பழைய திட்டத்திற்கு மாற்றங்கள் செய்ய முடியாது.

புதிதாக ஒரு காப்புறுதி செய்யும் போது எந்த நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். பழைய காப்புறுதித் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் ஒருவித தொடர்பும் இல்லை உங்களிடம் இருக்கு காப்புறுதித் திட்டம் தவணைக் காப்புறுதியாக இருந்தால் அதில் ஆயுட்காப்புறுதியாக மாற்றக்கூடிய தகமையும் இருந்தால் அந்தத் திட்டத்தை அதே நிறுவனத்தில் ஆயுட் காப்புறுதியாக மாற்ற முடியும் எல்லா நிறுவனங்களிலும் இந்த சலுகை இல்லை. அதாவது தவணைக் காப்புறுதிகள் மட்டுமே விற்பனை செய்யும் நிறுவனங்களில் இந்த வசதி இல்லை. ஆயுட்காலம் வரை நீடிக்கும் ஆயுட்காப்புறுதியை விற்பனை செய்யும் எல்லா நிறுவனங்களிலும் இந்த சலுகை உள்ளது.

எனவே காப்புறுதியில் மாற்றங்கள் செய்வதானால் அதே நிறுவனத்தில் தான் மாற்றம் செய்ய முடியும். வேறு நிறுவனத்தில் மாற்றம் செய்யமுடியாது. குறைந்த செலவில் தவணைக் காப்புறுதி செய்து பின்பு ஆயுட்காப்புறுதியாக மாற்றுவதனால் ஆயுட்காப்புறுதியை ஆயுட்காலம் வரை நீடிக்கும் காப்புறுதி செய்யும் நிறுவனங்களில் பெற்றுக் கொள்வது சாலச்சிறந்தது.

உங்களிடம் இருக்கும் திட்டத்தை மாற்றி வேறு நிறுவனத்தில் நல்லதொரு திட்டம் பெறமுடியும் என்று யாராவது சொன்னால் அதன் அர்த்தம் உங்களிடம் இருக்கும் காப்புறுதித் திட்டத்தை ரத்து செய்துவிட்டு ஒரு புதிய திட்டத்தை ஆரம்பிக்கின்றீர்கள். அப்போது உங்களுக்கு புதிதாக மருத்துவ பரிசோதனைகள் செய்ய வேண்டும். அத்துடன் ஏதாவது உடல் ஆரோக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டடிருந்தால் அல்லது நோய்கள் ஏற்பட்டிருந்தால் காப்புறுதி பெற முடியாத நிலையும் ஏற்படும்.

காப்புறுதியில் மாற்றம் செய்வதானால் அதே காப்புறுதி நிறுவனத்தில் தான் மாற்றம் செய்யமுடியும். ஆனால் புதிதாக பெறுவதானால் எந்த நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். காப்புறுதி முகவர்கள் காப்புறுதியை உங்களுக்கு மாற்றித் தருவதாக சொல்லி வேறு நிறுவனங்களில் திட்டங்களை மாற்றம் செய்வதால் முகவர்களுக்கு மீண்டும் மீண்டும் பணம் கிடைக்கும். உங்களுக்கு மீண்டும் மீண்டும் பணம் செலவாகும் காரணம் கட்டுப்பணம் அதிகரிக்கும். அரசனை நம்பி புருஷனை கைவிட்டது போல காப்புறுதி பெறமுடியாத நிலையும் ஏற்படலாம்.

## ஆயுட் காப்புறுதி சம்பந்தமாக தெரிந்து கொள்ள வேண்டிய சில தகவல்கள்.

- ஆயுட் காப்புறுதித் திட்டமானது ஒருவருக்கு எதிர்பாராத மரணம் ஏற்படும் போது அதனால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை தவிர்ப்பதற்காக செய்யப்படும் ஒரு முன்னேற்பாடாகும்.
- ஒருவரின் எதிர்காலத் திட்டங்களையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதற்கு ஆயுட்காப்புறுதி திட்டம் மிகவும் சிறந்தது.
- ஒருவர் ஆயுட் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெறும்போது அவருக்குக் கிடைப்பது வெறும் ஆயுட்காப்புறுதி மட்டும் அல்ல மாறக, அவரின் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான பணம். அவரது கணவன் அல்லது மனைவிக்கு தேவைப்படும் ஆயுட்கால வருமானம். ஒருவரின் வீட்டுக் கடனுக்கான பணம். ஒருவரின் இறுதிச் சடங்குகளுக்கு தேவைப்படும் பணம். காரணம், ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டம், ஒருவர் இறந்தவுடன் அவரால் அக்குடும்பத்திற்கு ஏற்பட்ட வருமான இழப்பை ஈடுசெய்யும்.
- ஆயுட்காப்புறுதித் திட்டமானது கடையில் பணம் கொடுத்து வாங்கும் ஒரு பொருள் அல்ல. மாறாக ஒருவரின் மரணத்திற்கு பின்பு அவரின் குடும்பத்தினரின் எதிர்கால வாழ்வைத் தொடர்வதற்கான உபகரணம்.
- ஆயுட் காப்புறுதி திட்டம் ஒரு தேவையற்ற பண விரயம் என்று கருதினால். தற்போது நாம் உண்ணும் உணவு அணியும் உடை வசிக்கும் வீடு போன்றவையும் தேவையற்ற விடயங்கள் ஆகிவிடும். காரணம் ஆயுட் காப்புறுதி திட்டமனது ஒருவரின் மரணத்திற்கு பின்பு அவரின் குடும்பத்திற்கு தேவையான உணவு, உடை, வதிவிடம் போன்ற அத்தியா அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

sritharan.t@thaiveedu.com

இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life™



# நீங்கள் அதிஷ்டசாலி

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

## நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

- கொடிய நோய்களால் ஏற்படும் வருமான இழப்பை தவிர்ப்பதற்கான காப்புறுதி.
- புற்றுநோய் (Cancer), மாரடைப்பு (Heart attack), பாரிசவாதம் (Stroke) போன்ற 25 விதமான கொடிய நோய்களுக்கு காப்புறுதி.
- ஆரோக்கியமாணவர்களுக்கு அதிகுறைந்த கட்டணத்தில் அதிகூடிய பாதுகாப்பு.
- 1 மில்லியன் டொலருக்கு ஆயுட்காப்புறுதி :

**10 year term life - age 30 non - smoker - male**

1 000,000.00 - **$41.40**

100,000.00 - **$11.25**

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் 20-40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009**

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**


759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · IA Industrial Alliance Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life · LiLand Insurance Inc.

**Million dollar advice from #1 advisor**

- sig Media -












BCE Place down town Toronto


Old city hall of Toronto



இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**பொன் பாலராஜன்**

ஒன்ராறியோ அரச நிறுவனமொன்றில் கணினி வல்லுநராகக் கடமையாற்றும் இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.





